பக்கங்கள்: முப்பத்துஇரண்டு

# உதயன்

விலை ரூபா 20.00

www.uthayan.com

சுடர் 26 வள்ளுவர் ஆண்டு 2042 சித்திரை 09 வெள்ளிக்கிழமை (22.04.2011) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 147



02
இங்கிலாந்து டெஸ்டில் மலிங்க இல்லை




03
ஐ.பி.எல். வேண்டாம்



16
பொங்கி எழுந்தனள் பொறுமைத் தாய்



25
ஊழலுக்கு எதிராகப் போராட மத்திய அரசு



26
எமது பிரதேசங்களுக்கு ஏற்புடையதான சட்டங்கள்

# ஐ.நா. அறிக்கையை ஏற்கமுடியாது இலங்கை திட்டவட்டமாக அறிவிப்பு

## பகிரங்கப்படுத்த வேண்டாம் என்று பீரிஸ் வலியுறுத்து



கொழும்பு, ஏப்ரல் 22

ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் பான் கீ-மூன் நியமித்த நிபுணர் குழுவின் அறிக்கையை ஏற்றுக்கொள்ள முடியாது என்று அடியோடு மறுத்துள்ளது இலங்கை அரசு. அந்த அறிக்கையை பகிரங்கமாக வெளிப்படுத்தவோ அவற்றில் அடங்கியுள்ள விடயங்களை நடைமுறைப்படுத்தவோ கூடாது என்றும் ஐ.நாவைக் கோரியுள்ளது. நிபுணர் குழு ஐ.நாவின் முறையான அமைப்பு இல்லை என்பதால் இலங்கை தொடர்பாக விசாரணை நடத்த அதற்கு அதிகாரம் ஏதும் இல்லை என்றும் இலங்கை அரசு மேலும் கூறுகிறது.

இலங்கை வெளிவிவகார அமைச்சில் இந்த அறிக்கை தொடர்பாக இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் மேற்படி கருத்துகளை அரசின் சார்பில் வெளியிட்டார். அவர் அங்கு மேலும் கூறியவை வருமாறு:-

**நிபுணர் குழுவை ஏற்க முடியாது**

இந்த மாதம் 12ஆம் திகதி ஐ.நா. நிபுணர் குழுவின் அறிக்கை எம்மிடம் கிடைத்தது. இந்த நிபுணர் குழு விசாரணை செய்யும் குழுவல்ல. தனக்கு ஆலோசனை வழங்கும் குழு என்று ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ-மூன் தொடர்ச்சியாகக் கூறிவந்தார்.

இந்தக் குழுவை எம்மால் ஏற்க முடியாது. இது ஐ.நாவின் ஆணையைப் பெற்ற - ஐ.நாவால் உருவாக்கப்பட்ட முறையான குழு அல்ல. இந்தக் குழுவின் அறிக்கையை அடிப்படையாக வைத்து எந்த நடவடிக்கையும் எடுக்க முடியாது.

எமது நாடு தொடர்பாக முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுகள் சரியா அல்லது பிழையா என்று தேடிப்பார்த்து விசாரணை செய்யும்

(29ஆம் பக்கம் பார்க்க)



ஐ.நா. நிபுணர் குழுவின் அறிக்கைக்கு ஆட்சேபனையைத் தெரிவித்து 10லட்சம் கையெழுத்துக்களைச் சேகரிக்கும் நடவடிக்கை நேற்று கொழும்பில் ஆரம்பிக்கப்பட்டது. சிரேஷ்ட அமைச்சர் எம்.எச்.எம். பௌஸி மகஜரில் கையெழுத்திடுகிறார்.

## செல்வா நினைவு தினத்தில் தீர்வு பற்றிய அறிவிப்பு

கொழும்பு, ஏப்.21

எதிர்வரும் செவ்வாய்க்கிழமை 26ஆம் திகதி கொழும்பு பம்பலப்பிட்டி புதிய கதிரேசன் மண்டபத்தில் நடைபெற உள்ள தந்தை செல்வா நினைவுதின நிகழ்வுக்கு இலங்கையில் உள்ள வெளிநாட்டு ராஜதந்திரிகளுக்கும், தூதுவர்களுக்கும் அழைப்பு அனுப்பப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிகழ்வில் இனப்பிரச்சினை தொடர்பாக தமிழ்க் கூட்டமைப்பின் நிலைப்பாடு, இலங்கை தொடர்பாக ஐ.நா.நிபுணர் குழு விடுத்துள்ள அறிக்கை ஆகியவை தொடர்பாக கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் உரை ஆற்ற இருப்பதால் இந்த நிகழ்வு முக்கியத்துவம் உடையதாகக் கருதப்படுகிறது.

தந்தை செல்வாவின் 34ஆவது சிரார்த்த

(29ஆம் பக்கம் பார்க்க)

## ‘சனல்-4’ வெளியிட்ட வீடியோ காட்சிகளுக்கு இலங்கை கண்டனம்

லண்டன், ஏப்.22

இலங்கையின் போர்க் குற்றச்சாட்டுகள் தொடர்பான வீடியோக்களை சனல் -4 வெளியிட்டு வருவதை லண்டனிலுள்ள இலங்கைத் தூதரகம் கண்டித்து அறிக்கை வெளியிட்டுள்ளது. அந்த அறிக்கையில் தெரிவித்திருப்பவை வருமாறு:-

செனல் -4 இன் வீடியோ உட்பட செய்தி அறிக்கையானது ஆதாரமற்ற வெறும் வதந்திகளை அடிப்படையாகக் கொண்டது. இச்செய்தியில் வெளியிடப்பட்டுள்ள விடயங்கள் வெளிப்படைத்தன்மையற்றவை; உறுதிப்படுத்த முடியாதவை.

முன்னர் பல சந்தர்ப்பங்களில் சனல் - 4 ஒளிபரப்பியதைப் போன்று பொதுப்படையான வதந்திகளை உள்ளடக்கிய மற்றொரு வீடியோவையே சமீபத்தில் சனல்-4 வெளியிட்டுள்ளது. இலங்கை அரசின் மீது கொடூரமாகக் குற்றம்

(29ஆம் பக்கம் பார்க்க)

## அறிக்கையை ஐ.நாவே கசியவிட்டது: இலங்கை

நியூயோர்க், ஏப். 22

ஐ.நா. நிபுணர் குழுவின் அறிக்கையை ஊடகம் ஒன்றுக்கு சிறிலங்கா அரசே கசிய விட்டது என்ற சாரப்பட நியூயோர்க்கில் ஐ.நா. அதிகாரிகள் தெரிவித்துவரும் நிலையில் அந்த அறிக்கை ஐ.நா. செயலகத்தில் இருந்தே கசிந்திருக்க வேண்டும் என்று இலங்கை கூறியுள்ளது. ஆனால் ஐ.நா. இதனைத் திட்டவட்டமாக மறுத்துள்ளது.

''தம்மிடம் இருந்தே அறிக்கை (29ஆம் பக்கம் பார்க்க)

## அறிக்கை வெளியாகும்; கோரிக்கை நிராகரிப்பு

நியூயோர்க், ஏப். 22

நிபுணர் குழுவின் அறிக்கையை பகிரங்கப்படுத்த வேண்டாம் என்று இலங்கை அரசு விடுத்த கோரிக்கையை ஐ.நா. உடனடியாகவே நிராகரித்தது. அறிக்கை திட்டமிட்டபடி

(29ஆம் பக்கம் பார்க்க)

# விகாரை கட்ட இடமளித்தால் வீடமைக்க ரூ. 6 லட்சம் உதவி

யாழ்ப்பாணம், ஏப். 22

காணியில் விகாரை கட்டுவதற்கு இடமளித்தால் அதே காணியில் வீடமைக்க 6 லட்சம் ரூபா நிதி உதவி அளிக்கும் திட்டம் ஒன்றை ஆரம்பித்துள்ளது, யாழ். குடாநாட்டில் தமிழ் - பௌத்த சங்கம் என்ற பெயரில் இயங்கும் அமைப்பு.

இந்தத் திட்டத்தின் கீழ் ஏற்கனவே 5 பயனாளிகள் தெரிவுசெய்யப்பட்டு அவர்களுக்கு நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது என்றும் அமைப்பின் தலைவர் அ.ரவிக்குமார் தெரிவித்தார்.

யாழ். மாவட்டத்தில் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் குடும்பங்களுக்கு வீடமைத்துக் கொடுக்கும் அரச திட்டத்துடன் சேர்த்து இந்தப் புதிய திட்டத்தை தமிழ் - பௌத்த சங்கம் ஆரம்பித்துள்ளது. யாழ்ப்பாணம் நாகவிகாரையும் இராணுவமும் இந்தத் திட்டத்துக்கு அனுசரணை வழங்கி வருகின்றன.

திட்டத்தின் முதல் கட்டமாக உடுவில் கிழக்குப் பகுதியில் மூன்று பயனாளிகளும் நயினாதீவில் இரண்டு பயனாளிகளும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இவர்களின் காணிகளில் வீடுகளை அமைத்துக் கொடுக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இந்தப் பயனாளிகளுக்கு வீடமைப்பு அதிகார சபையின் மூலம் ஒரு லட்சம் ரூபா வழங்கப்படுகிறது. மேலதிகமாக 6 லட்சம் ரூபாவை தமிழ்-பௌத்த சங்கம், யாழ். நாகவிகாரை, இராணுவம் என்பன இணைந்து வழங்குகின்றன என்று ரவிக்குமார் தெரிவித்தார்.

இந்தத் திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்

(29ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பஞ்சாப் பொழிந்தது ஓட்ட மழை
# வாலைச் சுருட்டியது ராஜஸ்தான்

-டிலீப்-

மார்ஷ், வல்த்தாட்டி பொழிந்தனர் ஓட்ட மழை. மண்டியிட்டது ராஜஸ்தான். கலக்கல் வெற்றியை தனதாக்கியது பஞ்சாப்.

23 ஆட்டம் ஐ.பி.எல் தொடரில் நேற்று. மொஹாலியில் நடந்தது ஆட்டம். வோர்ன் வென்றார் நாணயச் சுழற்சியில். பணித்தார் கில்லிக்கு துடுப்பெடுத்தாட. பணிப்பின் விளைவு வோர்னுக்கு புரிந்திருக்கும் பின்னர்.

கில்லி - வல்த்தாட்டி வந்தனர் களத்துக்கு. மூன்று ஓவர்கள் மெதுவாய் நகர்ந்தது. ஓவருக்கு பவுண்டரி ஒன்று. ஆரம்ப இணைப்பாட்டத்தின் அதிரடி தொடங்கியது நான்காவது ஓவர். ரிடிவேடி வீசினார். வல்த்தாட்டி வெளுத்தார் பந்துகளை. சிக்ஸருடன் தொடங்கிய ஓவர் பவுண்டரியுடன் முடிவுக்கு வந்தது. ரிடிவேடியின் ஓவரில் பெறப்பட்டது 24 ஓட்டங்கள். அடங்கின இரண்டு சிக்ஸர்கள், மூன்று பவுண்டரிகள். நொந்து போனது ராஜஸ்தான்.

அடுத்த ஓவரிலேயே சரிந்தார் கில்லி. 26 பந்துகளில் பகிரப்பட்டது 67 ஓட்டங்கள். வொட்ஸனின் பந்தில் முடிவுக்கு வந்தது கில்கிறிஸ்ட் ஆட்டம். 16 பந்துகளில் பெற்றுக் கொடுத்தார் 28 ஓட்டங்கள். மார்ஷ் வந்தார் அடுத்து களத்துக்கு. வல்த்தாட்டியின் முழக்கம் தொடர்ந்தது. வோர்ன் அமைத்துப் பார்த்தார் களத்தடுப்பு வியூகங்கள். வீழவில்லை விக்கெட்டுக்கள். ஏறிச் சென்றது ஓட்டங்கள்.

வோர்ன் வீசினார் 10 ஆவது ஓவர். வல்த்தாட்டியின் துடுப்பில் பட்டது பந்து. தாண்டிச் சென்றது எல்லையை. பெற்றுக் கொடுத்தது 6 ஓட்டங்கள். வேதாளம் மீண்டும் முருங்கை மரம் ஏறவும் சற்றும் மனம் தளராத விக்கிரமாதித்த மன்னன் போல் பந்தை தொடர்ந்து வீசினார் வோர்ன். சாதித்தது அவரது பந்து. வீழ்த்தியது வல்த்தாட்டியின் விக்கெட்டை அரைச் சதத்தை பெறாது 46 ஓட்டங்கள் களத்தைவிட்டுப் போனார் வல்த்தாட்டி.

வோர்ன் வீசினார் 14 ஆவது ஓவர். மார்ஷ்ஷின் அதிரடி தொடக்கம். மூன்று சிக்ஸர்கள் விளாசினார் அந்த ஓவரில். கடந்தார் அரைச்சதம். டினேஸ் கார்த்திக் - மார்ஷ் 28 பந்துகளில் பகிர்ந்தனர் 51 ஓட்டங்கள். பஞ்சாப் விடவில்லை அதிரடியை. கார்த்திக் 16 ஆவது ஓவரில் தொடர்ந்தார் தனது சாகஸத்தை. மூன்று பவுண்டரிகள் தொடர்ந்து அனுப்பினார்,


வொட்ஸனின் விக்கெட்டை வீழ்த்திய மகிழ்ச்சியில் குமார்

வோர்ன் அழைத்தார் ரைட்டை. மாறத் தொடங்கியது ஆட்டத்தின் போக்கு. வீழத் தொடங்கியது விக்கெட்டுக்கள். அதிரடிகள் அடக்கப்பட்டன. சரிக்கப்பட்டன விக்கெட்டுக்கள். இறுதியில் முடிவுக்கு வந்தது 195 ஓட்டங்களுடன் ஆட்டம்.

பந்து வீச்சில் அள்ளிக் கொடுத்தனர் ஓட்டம். ரிடிவேடி 59 ஓட்டங்கள் வஞ்சகமில்லாது வாரி வழங்கல். வோர்ன் 50 ஓட்டங்கள் கொடுப்பு. ரைட் 22 ஓட்டங்கள் கொடுத்து எடுத்தார் 3 விக்கெட்டுக்கள்.

எட்டாக்கனியான இலக்கை விரட்டத் தொடங்கியது ராஜஸ்தான். இந்தியாவின் தடுப்புச் சுவர் வீழ்ந்தது 12 ஓட்டங்களில். ராவிட்டை வெளியேற்றினார் ஹரிஸ். அசத்தினார் பிரவீன் குமார். மறுமுனையில் சரித்தார் விக்கெட்டுக்கள். அஸ்னொட்கர் வெளியேறினார் 9 ஓட்டங்களுடன். நிதானம் அதிரடி கலந்து கொடுத்தனர் வொட்ஸன் - பின்னி ஜோடி. சரிவிலிருந்து மீளத் தொடங்கியது ராஜஸ்தான். பிரவீன் குமார் விட்டு வைக்கவில்லை வொட்ஸனை. வீழ்த்தியனுப்பினார் 24 ஓட்டங்களுடன். வந்தார் 'ரெயிலர். வெளியேறினார் 'டக்'கில். மெனேரியா இணைந்தார் பின்னியுடன். வீழ்ச்சியிலும் எழுச்சி. அதிரடிகளில் முழங்கியது.

எகிறியது ராஜஸ்தானின் ஓட்ட வேகம். திணறியது பஞ்சாப் பந்து வீச்சு. மக்லெரன் வீழ்த்தினார் பின்னியின் விக்கெட்டை. 24 பந்துகளில் பெற்றுக் கொடுத்தார் 30 ஓட்டங்கள். மெனேரியாவின் தாக்குதல் தொடர்ந்தது. வேகமாய் குவிக்கப்பட்டது ஓட்டங்கள். அதற்கு விடை கொடுக்கப்பட்டது பகாட்டின் பந்தில். 26 பந்துகளில் பெற்றார் 34 ஓட்டங்கள் மெனேரியா. பின்வரிசையின் கைக்கு தோல்வியுடன் கை மாறியது ஆட்டம். றோட் முடிந்தவரை காட்டினார் அதிரடி. பெற்றுக் கொடுத்தார் 21 பந்துகளில் 25 ஓட்டங்கள்.

இறுதியில் பறிகொடுத்தது 7 விக்கெட்டுக்கள். பெற்றுக் கொண்டது 147 ஓட்டங்கள். பிரவீனின் பந்து வீச்சில் சரிந்தது இரண்டு விக்கெட்டுக்கள்.

ஆட்டநாயகனாய் மார்ஷ் தெரிவு.

### ஐ.பி.எல் இருபத்தி மூன்றாவது ஆட்டம்

பஞ்சாப் கிங்ஸ் லெவன்

| பெயர் | ஆட்டமிழப்பு முறை | R | B | 4 | 6 |
|---|---|---|---|---|---|
| கில்கிறிஸ்ட் | c ரைட் b வொட்ஸன் | 28 | 16 | 04 | 1 |
| வல்த்தாட்டி | c ரைட் b வோர்ன் | 46 | 31 | 04 | 3 |
| மார்ஷ் | c & b வொட்ஸன் | 71 | 42 | 06 | 3 |
| டினேஸ் கார்த்திக் | c யாக்நிக் b ரைட் | 21 | 16 | 03 | 0 |
| அபிஷேக் நாயர் | run out(பின்னி/வொட்ஸன்) | 01 | 03 | 00 | 0 |
| மக்லரன் | c றோட் b ரைட் | 02 | 07 | 00 | 0 |
| சனி சிங் | ஆட்டமிழப்பில்லை | 06 | 05 | 01 | 0 |
| ஹரிஸ் | b ரைட் | 04 | 03 | 01 | 0 |
| சாவ்லா | துடுப்பெடுத்தாடவில்லை | | | | |
| பிரவீன் குமார் | துடுப்பெடுத்தாடவில்லை | | | | |
| பகாட் | துடுப்பெடுத்தாடவில்லை | | | | |
| உதிரிகள் | (w 7, lb 6, nb 3, b 1) | 17 | | | |

| பெயர் | O | R | W | M |
|---|---|---|---|---|
| ரிடிவேடி | 04 | 59 | 0 | 0 |
| ரைட் | 04 | 22 | 3 | 0 |
| வோர்ன் | 04 | 50 | 1 | 0 |
| வொட்ஸன் | 04 | 24 | 2 | 0 |
| பின்னி | 02 | 18 | 0 | 0 |
| மெனேரியா | 01 | 07 | 0 | 0 |
| றோட் | 01 | 08 | 0 | 0 |

TOTAL - 195/7 (20)
1-67 (கில்கிறிஸ்ட்), 2-105 (வல்த்தாட்டி), 3-175 (டினேஸ் கார்த்திக்), 4-178 (அபிஷேக் நாயர்), 5-183 (மார்ஷ்), 6-190 (மக்லரன்), 7- 195 (சாவ்லா)

ராஜஸ்தான் ரோயல்ஸ்

| பெயர் | ஆட்டமிழப்பு முறை | R | B | 4 | 6 |
|---|---|---|---|---|---|
| அஸ்னொட்கர் | b பிரவீன் குமார் | 09 | 09 | 01 | 0 |
| ராவிட் | b ஹரிஸ் | 08 | 07 | 02 | 0 |
| வொட்ஸன் | c சாவ்லா b பிரவீன் குமார் | 24 | 16 | 04 | 0 |
| பின்னி | c சாவ்லா b மக்லரன் | 30 | 24 | 02 | 1 |
| ரெயிலர் | lbw b சாவ்லா | 00 | 05 | 00 | 0 |
| மெனேரியா | c மார்ஷ் b பகாட் | 34 | 26 | 02 | 1 |
| றோட் | c மார்ஷ் b பகாட் | 25 | 21 | 03 | 0 |
| யாக்நிக் | ஆட்டமிழப்பில்லை | 10 | 09 | 01 | 0 |
| வோர்ன் | ஆட்டமிழப்பில்லை | 05 | 03 | 01 | 0 |
| ரைட் | துடுப்பெடுத்தாடவில்லை | | | | |
| ரிடிவேடி | துடுப்பெடுத்தாடவில்லை | | | | |
| உதிரிகள் | (w 1, lb 1) | 02 | | | |


| பெயர் | O | R | W | M |
|---|---|---|---|---|
| பிரவீன் குமார் | 04 | 22 | 2 | 0 |
| ஹரிஸ் | 04 | 34 | 1 | 0 |
| பகாட் | 03 | 20 | 2 | 0 |
| சாவ்லா | 04 | 24 | 1 | 0 |
| வல்த்தாட்டி | 02 | 10 | 0 | 0 |
| மக்லரன் | 02 | 24 | 1 | 0 |
| அபிஷேக் நாயர் | 01 | 03 | 0 | 0 |

TOTAL - 147/7(20)
1-12 (ராவிட்), 2-18 (அஸ்னொட்கர்), 3-47 (வொட்ஸன்), 4-49 (ரெயிலர்), 5-99 (பின்னி), 6-124 (மெனேரியா), 7-140 (றோட்)

c - பிடியெடுப்பு b - பந்துவீச்சியவர் st - ஸ்ரொம்

# இங்கிலாந்து டெஸ்ட் ஆட்டங்களில் மலிங்க இல்லை

இங்கிலாந்து சுற்றுலாவுக்கான இலங்கைக் கிரிக்கெட் குழாம் விவரத்தை இலங்கைக் கிரிக்கெட் தேர்வுக் குழுவினர் நேற்று அறிவித்துள்ளனர். 16 பேர் கொண்ட இந்தக் குழாமில் வேகப்பந்து வீச்சாளர் லசித் மலிங்க, சகலதுறை வீரர் அஞ்சலோ மத்தியூஸ் ஆகியோர் இடம்பெறவில்லை.



அஞ்சலோ மத்தியூஸ் காயம் காரணமாக உலகக் கிண்ண இறுதி ஆட்டத்திலும் ஐ.பி.எல். போட்டிகளிலும் பங்குபற்றவில்லை.

லசித் மலிங்க சிறப்பாக விளையாடி வருகிறார். எனினும் டெஸ்ட் போட்டிகளில் அவரின் ஆற்றல் நீடிக்குமா என்பது சந்தேகமாகவுள்ளது. இறுதியாக கடந்த வருடம் இந்தியாவில் நடைபெற்ற இந்தியாவுடனான டெஸ்ட் தொடரில் அவர் பங்குபற்றினார். அப்போது இரண்டாவது போட்டியின்போது அவருக்கு ஓய்வு வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. 7 வருட காலத்தில் 30 டெஸ்ட் போட்டிகளில் மாத்திரமே மலிங்க விளையாடியுள்ளார்.

திலகரட்ன டில்ஷான் களத்தில் இல்லாதபோது அவருக்கு மாற்றாக குமார் சங்கக்கார செயற்படுவார் என்று தேர்வுக் குழுவினர் தெரிவித்துள்ளனர். இங்கிலாந்து சுற்றுலாவுக்கான குழாமில் இளம் வீரர்களான லாஹிரு திரிமன்ன, தினேஸ் சந்திமால் ஆகியோரும் சேர்க்கப்பட்டுள்ளனர்.

முத்தையா முரளிதரன் சர்வதேச போட்டிகளிலிருந்து ஓய்வு பெற்ற பின்னர் இலங்கை அணி முதல் தடவையாக வெளிநாட்டுச் சுற்றுலா மேற்கொள் கின்றமை குறிப்பிடத்தக்கது. இலங்கை அணி இங்கிலாந்துடன் 3 டெஸ்ட் போட்டிகள் 5 ஒருநாள் போட்டிகள் மற்றும் 20ஓவர் போட்டி யொன்றில் பங்குபற்றவுள்ளது. டெஸ்ட் போட்டிகளுக்கான குழாம் விவரம்:

திலகரட்ன டில்ஷான் (தலைவர்), தரங்க பரண வித்தன, லஹிரு திரிமன்ன, குமார் சங்கக்கார, மஹேல ஜயவர்தன, திலான் சமரவீர, தினேஷ் சந்திமால், பிரசன்ன ஜயவர்தன திசேர பெரேரா, சுராஜ் ரந்தீவ், அஜந்த மெண்டிஸ், ரங்கன ஹேரத். தில்ஹார பெர்ணாண்டோ, சானக வெலகெதர, சுரங்க லக்மால், நுவான் பிரதீப். (15)

# 5 கோடி ரூபா வேண்டுமாம்!

உலகக் கிண்ணத்தை வென்றதால் ரூ. 5 கோடி பரிசு தர வேண்டும் என்ற இந்திய கிரிக்கெட் வீரர்கள் வேண்டுகோளை ஏற்க முடியாது என பி.சி.சி.ஐ. தெரிவித்துள்ளது.

பத்தாவது உலகக் கிண்ணத்தை வென்ற இந்திய அணியில் இடம் பெற்றிருந்த 15 வீரர்களுக்கும் இந்திய கிரிக்கெட் சபை (பி.சி.சி.ஐ.) ரூ. 1 கோடி பரிசு வழங்கியது. இது தங்களுக்கு போதாது என்று வீரர்கள் எதிர்ப்புத் தெரிவித்ததாக தெரிகின்றது.

இதுகுறித்து வெளியான செய்தியில், பெயர் குறிப்பிட விரும்பாத முன்னணி வீரர் ஒருவர் கூறியது, உலகக் கிண்ணத் தொடரால் பி.சி.சி.ஐ. க்கு அதிக லாபம் கிடைத்தது. இதனால் வீரர்களுக்கு ரூ. 5 கோடி பரிசு தர வேண்டும். எங்களைப் போன்ற மூத்த வீரர்களுக்கு எந்த பேராசையும் இல்லை. இந்த பணம் ஒரு பொருட்டல்ல. ஆனால் முனாப் படேல் போன்ற புதியதாக வந்த வீரர்கள் நிலை பரிதாபம் தான். இந்த வீரர்களால் பி.சி.சி.ஐ. அதிக லாபம் தான் கிடைத்துள்ளது.

இந்தத் தொடரில் ரூ. 1000 கோடிக்கும் மேல் லாபம் வந்துள்ளது. ஆனால் புதிய வீரர்களின் வாழ்க்கை தான் உறுதியில்லாமல் உள்ளது. ஏனெனில் அடுத்து அணியில் யார் இருப்பார்கள் என்று யாருக்கும் தெரியாது. இதே போல பயிற்சியாளர்களுக்கும், அணித் தேர்வாளர்களுக்கும் 50 லட்சம் ரூபாய் கொடுத்தது தவறு. கிறிஸ்டன் போன்றவர்களுக்கு அதிக தொகை கொடுக்க வேண்டும். இவ்வாறு அந்த வீரர் தெரிவித்துள்ளார்.

ஆனால் வீரர்களின் இந்தக் கருத்தை ஏற்க பி.சி.சி.ஐ. மறுத்துள்ளது. இதுகுறித்து அதன் நிர்வாகி ஒருவர் கூறுகையில், ஒரு கோடி என்பது சிறிய தொகை அல்ல. வீரர்களுக்கு ஏற்கனவே போதிய அளவு பணம் வழங்கப்பட்டுவிட்டது. தவிர பல மாநில அரசுகள் அவர்களுக்கு நிலம், வீடு மற்றும் பணம் வழங்கியுள்ளது. இதனால் வீரர்கள் வேண்டுகோளை ஏற்க முடியாது என்றார். (15)

# பறிபோகும் இலங்கை வீரர்களின் சம்பளம்

ஐ.பி.எல். சுற்றுப் போட்டியில் பங்குபற்றும் இலங்கைக் கிரிக்கெட் வீரர்களை மே 5 ஆம் திகதி திரும்பி வருமாறு இலங்கை கிரிக்கெட் சபை உத்தரவிட்டதையடுத்து இலங்கை கிரிக்கெட் சபைக்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்ள இந்திய கிரிக்கெட் சபை தயாராகி வருவதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

மே 15 ஆம் திகதிவரையாவது ஐ.பி.எல். போட்டிகளில் இலங்கை வீரர்கள் விளையாட அனுமதிக்குமாறு இந்திய கிரிக்கெட் சபை விடுத்த கோரிக்கையை இலங்கை அதிகாரிகள் நிராகரித்துவிட்டனர்.

இந்த நிலையில் வீரர்கள் ஆரம்பத்தில் இணங்கியபடி மே 22 ஆம் திகதி வரை விளையாடாமல் அதற்கு முன்னதாக வெளியேறினால் அவர்களுக்கான சம்பளத்தை வழங்க வேண்டாம் என்று ஐ.பி.எல். அணிகளை




இந்திய கிரிக்கெட் சபை கோரியுள்ளதாக என்.டி.ரி.வி. தொலைக்காட்சி தெரிவித்துள்ளது. அத்துடன் இலங்கை கிரிக்கெட் சபைக்குரிய வீரர்களின் வருமானத்தின் 10 சதவீத கொடுப்பனவையும் நிறுத்திவைக்குமாறும் இந்திய கிரிக்கெட்சபை கோரியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மலிங்க நாடு திரும்பாவிடின் நடவடிக்கை



காயம் காரணமாக இங்கிலாந்துடனான டெஸ்ட் போட்டிகளில் தன்னால் விளையாட முடியாது என்று லசித் மலிங்க தெரிவித்திருந்தார். இவர் சிகிச்சையை முடித்துக் கொண்டு ஐ.பி.எல்லில் இருந்து நாடு திரும்ப வேண்டும் என்று இலங்கை தேர்வுக் குழு கேட்டுக் கொண்டுள்ளது.

இங்கிலாந்து சுற்றுப்பயணத்துக்கு தன்னால் வரமுடியாது எனக் கூறியிருந்த லசித் மலிங்க, ஐ.பி.எல்லில் தொடர்ந்து விளையாட விருப்பதாகக் குறிப்பிட்டிருந்தது இலங்கை கிரிக்கெட் வாரிய அதிகாரிகளுக்கு சந்தேகத்தை உண்டாக்கியுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

மே 26 ஆம் திகதி முதல் தொடங்க உள்ள டெஸ்ட் போட்டிகளில் தன்னால் விளையாட முடியாது என்று இலங்கை கிரிக்கெட் வாரியத்துக்கு மலிங்க கடிதம் எழுதியிருப்பதாக தேர்வுக் குழுவின் புதிய தலைவர் துலீப் மென்டிஸ் தெரிவித்தார்.

காயம் ஏற்பட்டதாகக் கூறுபவர், ஐ.பி.எல்லில் தொடர்ந்து விளையாடுவது முறையானதாகத் தெரியவில்லை. எனவே தான் சிகிச்சை பெற்றவுடன் நாடு திரும்புமாறு மலிங்கவுக்கு கடிதம் எழுதத் தீர்மானித்துள்ளோம் என்றார் அவர். காயம் ஏற்பட்டதால் சிகிச்சை பெற வேண்டும் என மலிங்க கூறுகிறார். ஐ.பி.எல்லில் தொடர்ந்து விளையாடாமல் உடனடியாக சிகிச்சை பெற்று, பின்னர் நாட்டுக்காக விளையாட வேண்டும் என்ற ஆர்வம் இருந்தால் இலங்கையில் கிரிக்கெட்டுக்குத் தயாராக வேண்டும் என்று மென்டிஸ் குறிப்பிட்டார்.

இதனிடையே அடுத்தகட்ட நடவடிக்கை எடுக்கும் முன்னர் மலிங்கவின் பதிலுக்காக காத்திருக்கப் போவதாக தலைமைத் தேர்வுக் குழுவினர் தெரிவித்தனர்.(15)

## மீண்டும் நான் தலைவராக வேண்டும்

இங்கிலாந்து அணியின் தலைவராக மீண்டும் பொறுப்பேற்க விருப்பம் தெரிவித்துள்ளார் கெவின் பீட்டர்சன். இப்போதைய அணித்தலைவர் அன்ட்ரூ ஸ்ரோஸ் ஒரு நாள் போட்டிக்கான அணித் தலைவர் பதவியில் இருந்து விலக நேரிட்டால் அதை ஏற்கத் தயாராக இருப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

இங்கிலாந்து அணியின் டெஸ்ட் மற்றும் ஒரு நாள் போட்டி அணித்தலைவராக இருந்த பீட்டர்சன், அப்போதைய பயிற்சியாளர் பீட்டர் மூர்ஸியுடன் ஏற்பட்ட கருத்து வேறுபாடு காரணமாக அணித்தலைவர் பதவியில் இருந்து விலகினார். இந்த நிலையில் அவர் மீண்டும் அணித்தலைவராக விருப்பம் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் கூறியதாவது:

கடந்த இரண்டு வாரங்களாக ஒரு நாள் போட்டிக்கான அணித்தலைமைப் பதவியில் இருந்து ஸ்ரோஸ் விலகவுள்ளதாக செய்திகள் வெளியாகி வருகின்றன. அவர் விலக நேரிட்டால் அந்தப் பதவியை ஏற்கத் தயாராக உள்ளேன். இரண்டாவது முறையாக அணித் தலைவராகும் பட்சத்தில் அந்தப் பணியை சிறப்பாக செய்ய முடியும். சிறப்பான முறையில் அணியை வழிநடத்த முடியும். அணித்தலைமைப் பதவியை ஏற்குமாறு அணி நிர்வாகம் என்னை கேட்டுக் கொண்டால் ஏற்றுக் கொள்வேன் என்றார்.

கடந்த சில வாரங்களாக இங்கிலாந்து அணித் தலைவர் ஸ்ரோஸ் டெஸ்ட் போட்டிகளில் கவனம் செலுத்துவதற்காக ஒரு நாள் போட்டிக்கான அணித்தலைவர் பதவியிலிருந்து விலகவுள்ளார் என்று செய்திகள் வெளியாகி வருகின்றன.(15)

## ஐ.பி.எல்.வேண்டாம்

\- டில்ஷான்

ஐ.பி.எல். போட்டிகளைவிட நாட்டுக்காக விளையாடுவது முக்கியமானது எனவும் தற்போது ஐ.பி.எல். போட்டிகளில் பங்குபற்றும் இலங்கை வீரர்கள் மே 5 ஆம் திகதி திரும்பி வருவார்கள் எனவும் இலங்கைக் கிரிக்கெட் அணியின் தலைவர் திலகரட்ன டில்ஷான் தெரிவித்துள்ளார்.

இங்கிலாந்து சுற்றுலாவுக்கான பயிற்சிகளுக்காக மே 5 ஆம் திகதி ஐ.பி.எல். போட்டிகளிலிருந்து இலங்கை வீரர்கள் திரும்பிவர வேண்டுமென விளையாட்டுத்துறை அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே உத்தரவிட்டிருந்தார்.

இதேவேளை குறைந்தபட்சம் மே 15 ஆம் திகதிவரையாவது இலங்கை வீரர்களை ஐ.பி.எல். போட்டிகளில் விளையாட அனுமதிக்குமாறு இந்திய கிரிக்கெட் சபை விடுத்த கோரிக்கையை விளையாட்டுத்துறை அமைச்சரும் இலங்கை கிரிக்கெட் சபையும் நிராகரித்துள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன. (15)



## வருகிறார் கிறிஸ்கெய்ல்

நான்காவது ஐ.பி.எல். தொடரில் விளையாட சகலதுறை ஆட்டக்காரர் கிறிஸ் கெய்லுக்கு மேற்கிந்தியத் தீவுகளின் கிரிக்கெட் சபை அனுமதி வழங்கி உள்ளது.

இந்தியாவில் நான்காவது ஐ.பி.எல் 'ரி-20' கிரிக்கெட் தொடர் நடக்கின்றது. இதில் பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் அணியில் இடம் பெற்றுள்ள ஆஸ்திரேலிய வேகப்பந்துவீச்சாளர் நனிஸ் காயம் காரணமாக எஞ்சிய ஐ.பி.எல். போட்டிகளில் பங்கேற்க மாட்டார்.

இவருக்கு பதிலாக மேற்கிந்தியத்தீவுகளின் சகலதுறை ஆட்டக்காரர் கிறிஸ் கெய்லை தேர்வு செய்ய பெங்களூர் அணி நிர்வாகம் முடிவு செய்தது. இதற்காக கெய்ல், மேற்கிந்தியத் தீவுகள் கிரிக்கெட் சபையிடம் அனுமதி கேட்டிருந்தார். இவருக்கு மேற்கிந்தியத்தீவுகளின் கிரிக்கெட் சபை தடையில்லா சான்று வழங்கி அனுமதி அளித்துள்ளது.

கடந்த ஜனவரி மாதம் நடந்த வீரர்கள் ஏலத்தில் 1.81 கோடி கொடுத்து கிறிஸ் கெய்லை ஒப்பந்தம் செய்ய எந்த ஒரு அணியும் முன்வரவில்லை. தற்போது அதே விலைக்கு பெங்களூர் அணி இவரை ஒப்பந்தம் செய்துள்ளது. தவிர இவர் கடந்த மூன்று தொடர்களில் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியில் இடம் பெற்றிருந்தார். (15)


களைகட்டும் ஐ.பி.எல்.

## கங்குலியின் பாகம் இரண்டு!

கங்குலியின் ஐ.பி.எல். கனவு இன்னும் தீரவில்லை மாறாக அது விரைவில் நனவாகும் சூழ்நிலை உருவாகியுள்ளது.

ஐ.பி. எல்லின் நான்காவது தொடரில் கங்குலியை ஏலத்தில் எடுப்பாரில்லை. இதைச் சற்றும் எதிர்பாராத கங்குலி அதிர்ச்சி அடைந்தார். அவர் அணித்தலைவராக இருந்த கொல்கத்தா அணியே கைவிட்டுவிட்டது.

இந்த நிலையில் கங்குலியிடம் இந்த ஐ.பி.எல் போட்டிகளில் விளையாடுவீர்களா என்று கேட்டதற்கு, நீங்களே பார்ப்பீர்கள் என்று புன்னகைத்தார்.

இலங்கை வீரர்களை வரும் மே மாதம் 5 ஆம் திகதிக்குள் நாடு திரும்புமாறு இலங்கை அரசு உத்தரவிட்டுள்ளது. மஹேல ஜெயவர்த்தன தற்போது கொச்சி ருஸ்கேர்ஸ் கேரளா அணித் தலைவராக இருக்கின்றார். அவர் நாடு திரும்புகையில் கங்குலி அந்த இடத்திற்கு வருவார் என்று கூறப்படுகிறது.

ஐ.பி.எல் போட்டிகளை பாதியில் விட்டுவிட்டு கிளம்பும் இலங்கை வீரர்கள் மே மாதம் மேற்கொள்ளும் இங்கிலாந்து சுற்றுப்பயணத்திற்கு பயிற்சி பெறப்போகிறார்கள். (15)




## இந்தியாவுக்குப் பணிந்தது இலங்கை கிரிக்கெட் சபை

ஐ.பி.எல். போட்டிகளில் பங்குபற்றும் இலங்கை கிரிக்கெட் வீரர்கள் கொழும்பில் இங்கிலாந்து சுற்றுலாவுக்காக மே 5 ஆம் திகதி முதல் நடைபெறும் பயிற்சி முகாமில் பங்குபற்றத் தேவையில்லை எனவும் அவர்கள் எதிர்வரும் மே 18 ஆம் திகதி லண்டனில் இருந்தால் போதுமானது எனவும் விளையாட்டுத்துறை அமைச்சு அறிவித்துள்ளது.

இங்கிலாந்து சுற்றுலாவுக்கான பயற்சி முகாமில் பங்குபற்றுவதற்காக மே 5 ஆம் திகதி தாயகம் திரும்ப வேண்டுமென ஐ.பி.எல். தொடரில் பங்குபற்றும் இலங்கை வீரர்களுக்கு கிரிக்கெட் சபை மூலம் விளையாட்டுத்துறை அமைச்சு முன்னர் உத்தரவிட்டிருந்தது. இலங்கை வீரர்கள் இங்கிலாந்துக்குப் புறப்படுவர் எனவும் அறிவிக்கப்பட்டிருந்தது.

இது தொடர்பாக இரு நாடுகளின் கிரிக்கெட் சபைகளுக்கும் இடையில் மோதல் ஏற்படும் அறிகுறி தென்பட்டது. இந்த நிலையில் இலங்கை விளையாட்டுத்துறை அமைச்சு தனது நிலைப்பாட்டை மாற்றிக் கொண்டுள்ளது.

இதன்படி சில வீரர்கள் கொழும்பில் பயிற்சிகளில் பங்குபற்றாமல் நேரடியாக லண்டன் வருவதற்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளது. 'இந்திய கிரிக்கெட் சபையிடமிருந்து நான் ஏராளமான மின்னஞ்சல்களைப் பெற்றேன்.

இது தொடர்பாக தேர்வுக்குழுவினரையும் கிரிக்கெட் சபை அதிகாரிகளையும் நான் சந்திப்பேன் என அமைச்சர் அளுத்கமகே ஊடகங்களுக்குத் தெரிவித்துள்ளார். இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையை நாம் அசௌகரித்துக்குள்ளாக்க விரும்பவில்லை. இந்தியாவுடன் எமக்கு நல்லுறவுள்ளது. அது தொடர வேண்டுமென நாம் விரும்புகிறோம்' எனவும் அவர்கூறினார். (15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித உரிமை மீறலில் ஈடுபட்டது புலிகளே தவிர படையினர் அல்லர்

## அமைச்சர் விமலுக்கு ஹரின் எம்.பி. பதிலடி

கொழும்பு, ஏப். 22

புலிகள் மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டனர் என்று ஐ.நா. நிபுணர் குழு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதை தாம் ஏற்றுக்கொள்வதாக ஐக்கிய தேசியக் கட்சி நேற்றுக் கூறியது.

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய ஐ.தே.கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ஹரின் பெர்னாண்டோ இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கூறியவை வருமாறு:-

ஐ.நா. நிபுணர் குழு அறிக்கையை நாம் நிபந்தனைகளுடன் ஏற்போம். எமது இந்த நிலைப்பாடு தொடர்பில் அமைச்சர் விமல் வீரவன்ஸ தலைகீழாக - முட்டாள்தனமாகப் பேசுகின்றார்.

புலிகள் மனித உரிமை மீறல் நடவடிக்கைகளில் ஈடுபட்டனர் என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதை நாம் ஏற்கின்றோம். அதே வேளை, எமது படையினர் மனித உரிமை மீறல் நடவடிக்கைகளில் ஈடுபட்டார்கள் என்று சொல்வதை ஏற்கமாட்டோம்.

அதாவது, நிபந்தனைகளுடன்தான் நாம் இந்த அறிக்கையை ஏற்போம். அமைச்சர் விமல் வீரவன்ஸ இந்த அறிக்கையை கடுமையாக எதிர்ப்பதாகக் கூறியுள்ளார். அப்படி என்றால் புலிகள் மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டார்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளதையும் அவர் எதிர்க்கின்றாரா?

அந்த அறிக்கையை முழுமையாகப் படித்துவிட்டுத்தான் கருத்துக் கூற வேண்டும். அவ்வாறு செய்யாமல் தலையில் ஒன்றுமில்லாமல் பேசக் கூடாது - என்றார்.

(ஒ-சி)



# பாண் விலை 2 ரூபாவால் நள்ளிரவு முதல் அதிகரிப்பு

கொழும்பு, ஏப்.22

பாணின் விலை நேற்று நள்ளிரவு முதல் இரண்டு ரூபாவினால் அதிகரிக்கப்பட்டுள்ளது என பேக்கரி உரிமையாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

அண்மையில் பிறிமா நிறுவனம் ஒரு கிலோ கோதுமை மாவின் விலையை நான்கு ரூபா 10 சதத்தாலும், செரண்டிப் நிறுவனம் மூன்று ரூபாவினா லும் அதிகரித்திருந்தன.

இதனைத் தொடர்ந்தே பேக்கரி உற்பத்திப் பொருள்களின் விலையை அதிகரிப்பதென பேக்கரி உரிமையாளர் சங்கம் நேற்றுமாலை கூடி தீர்மானித்ததாகச் சங்கத்தின் தலைவர் எம்.கே.ஜயவர்தன தெரிவித்தார்.


## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம்
27
★
10
★
1944



மறைவு
23
★
03
★
2011

### அமரர் சிவகுரு இராசரத்தினம்

கடந்த 23.03.2011 இறைபதம் அடைந்த எமது அன்புத் தெய்வம் நோயுற்றபோது அவரை காப்பாற்றுவதற்காக பாடுபட்ட வைத்தியர்கள், உறவினர்கள், நண்பர்களுக்கும் அவர் இறந்த பின்பு நேரில் வந்து உதவி புரிந்தவர்களுக்கும், தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தியோருக்கும், மரணச் சடங்கில் கலந்துகொண்டோருக்கும் எமது நன்றியைத் தெரிவிப்பதோடு, இன்று (22.04.2011) வெள்ளிக்கிழமை மு.ப. 11.00 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும். அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**இந்த அழைப்பினை தனிப்பட்ட அழைப்பாகவும் ஏற்றுக்கொள்ளவும்.**

டச்சு றோட்,
பெரியவிளான்,
இளவாலை.

(32-25-27)

குடும்பத்தினர்.


# சாயி பாபாவுக்கு சிகிச்சை அளிக்க அமெரிக்காவிலிருந்து மருந்துவர் குழு

## பாதுகாப்புக்காக 600 பொலிஸார் குவிப்பு



புட்டபர்த்தி, ஏப்.22

ஸ்ரீ சத்தியசாயி பாபாவின் உடல் நிலை மோசமடைந்து வருவதை அடுத்து அவருக்கு அவசரமாக மின் பிசியோதெரபி சிகிச்சை அளிக்கப்பட உள்ளது. அமெரிக்காவில் இருந்து டாக்டர் யோக்யா ராமன் தலைமையிலான சிறப்பு நிபுணர்கள் குழு புட்டபர்த்தி வந்துள்ளது.

சாயிபாபாவின் கல்லீரல் செயல் இழந்து போயிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. இதனால் அவருக்கு மஞ்சள் காமாலை ஏற்பட்டுள்ளது. இதற்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. இந்த நிலையிலேயே சாயிபாபா ஜீவ சமாதி அடையப்போவதாக ஒரு வதந்தி பரவியது. இது பக்தர்களிடம் அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

இதையடுத்து புட்டபர்த்திக்கு அருகில் உள்ள தர்மாவரம், இந்துப்பூர் ஆகிய நகரங்களில் கூடுதல் தடுப்புகள் ஆங்காங்கே ஏற்படுத்தப்பட்டு வருகின்றன. புட்டபர்த்தியில் அசம்பாவிதம் ஏற்பட்டு விடக்கூடாது என்பதற்காக கூடுதலாக 600பொலிஸார் அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

புட்டபர்த்திக்கு அருகில் உள்ள கடப்பா மாவட்டத்தில் ஜெகன் மோகன் ரெட்டி போட்டியிடும் இடைத்தேர்தல் நடக்க உள்ளதால் சட்டம் - ஒழுங்கை நிர்வகிப்பதில் பொலிஸாருக்கு கடும் சவால் ஏற்பட்டுள்ளது.

இதற்கிடையே சாயிபாபாவுக்குப் பின்னர் சத்யசாயி அறக்கட்டளையின் பல்லாயிரம் கோடி ரூபா சொத்துகள் யார் கட்டுப்பாட்டுக்குள் வரும் என்பதில் கடும் போட்டி ஏற்பட்டுள்ளதாக ஒரு செய்தி கூறுகிறது. இதனால் சாயிபாபா அறக்கட்டளை சொத்துகளைக் கையகப்படுத்தி கண்காணிக்க ஆந்திர அரசு ஒரு குழு அமைத்து இருப்பதாகக் கூறப்படுகிறது.

புட்டபர்த்தியில் தினமும் ஒரு வதந்தி பரவியபடி உள்ளது. பிரசாந்தி நிலையத்தில் இருந்த விலை மதிப்பு மிக்க ஏராளமான பொருள்களை அறக்கட்டளை நிர்வாகிகள் கடத்திச் சென்றுவிட்டனர் என்ற ஒரு வதந்தியும் பரவி உள்ளது. இதனால் பக்தர்கள் மத்தியில் கொந்தளிப்பு ஏற்பட்டது.

(மற்றொரு செய்தி 25ஆம் பக்கத்தில்)

# சாவகச்சேரியில் ஞாயிறன்று புதுவருட விளையாட்டு விழா

தென்மராட்சி, ஏப்.22

தென்மராட்சி பிரதேச பொது மக்கள் மற்றும் விளையாட்டு வீர, வீராங்கனைகளுக்கான புதுவருட விளையாட்டு விழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 6.30 மணிக்கு ஆரம்பமாகும்.

நெஸ்லே நிறுவன அனுசரணையுடன் 523ஆவது படையணியினரின் ஏற்பாட்டில் சாவகச்சேரி நகரசபை பொது விளையாட்டு மைதானத்தில் பாரம்பரிய விளையாட்டுக்கள் நடத்தப்படவுள்ளன.

ஆண், பெண்களுக்கான சைக்கிளோட்டம், மரதன் உட்பட 24 வகையான போட்டிகள் நடத்தப்படவுள்ளன என்றும் போட்டிகளில் வெற்றி பெறுவோருக்கு பெறுமதியான பரிசில்கள் வழங்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.இரவு இசை நிகழ்வுகளும் இடம்பெறும்.

(ஒ-207)

# கிரிக்கெட் போட்டி

வடமராட்சி, ஏப்.22

பருத்தித்துறை மாவட்ட நீதிமன்ற நீதிவான் நீதிமன்ற ஊழியர்கள், உத்தியோகத்தருக்கு இடையே சிநேகபூர்வ கிரிக்கெட் போட்டி நாளை சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நடைபெறவுள்ளது.

கரவெட்டி வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் இடம்பெறும். இப்போட்டிக்கு மாவட்ட நீதிபதி சட்டத்தரணிகள் பார்வையாளர்களாகக் கலந்து கொள்வார்கள்.

(ஒ-236)


## தவறிவிட்டது

218, பலாலி வீதி, கந்தர்மடம் எனும் முகவரியையுடைய புவனேஸ்வரி பரமானந்தராஜா என்பவரின் தேசிய அடையாள அட்டை (595022347 V), விசேட அடையாள அட்டை (0902036214) என்பன அடங்கிய பேர்ஸ் மட்டுவில் அம்மன் கோயிலில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு ஒப்படைத்துதவவும். சன்மானம் வழங்கப்படும்.

**தொடர்பு - 021 222 6402.**

## தவறிவிட்டது

கைதடி பாலத்துக்கும் சந்திக்கும் இடையில் கைச்செயின் ஒன்று புதன்கிழமை தவறிவிட்டது. தயவு செய்து கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

**தொடர்பு -021 222 6303, 0771742804.**

## கேள்வி கோரல்

மத்திய கல்வி அமைச்சின் நிதியீட்டத்தின் கீழ், கிளிநொச்சி கல்வி வலயத்திலுள்ள பரந்தன் ஆசிரியர் மத்திய நிலையத்தின் திருத்த வேலைக்குத் தகுதி வாய்ந்த ஒப்பந்தாரரிடமிருந்து கேள்வி கோரப்படுகின்றது.

| இல. | பாடசாலை | வேலை | ஒப்பந்தகாரரின் தகைமை | கேள்வி பிணை |
|---|---|---|---|---|
| 01 | ஆசிரியர் மத்திய நிலையம் பரந்தன் | கட்டடத்திருத்தம், கிணறு தண்ணீர்த்தாங்கி அமைத்தல், வேலி அடைத்தல் SW/5/2011/73 | C9 | 31,000.00 |

01. மேற்படி வேலைகளுக்கு இக்ராட் பதிவுள்ள C9 தரத்தினையும், அதற்கு மேற்பட்ட தரத்தையும் கொண்ட ஒப்பந்தகாரர்கள் விண்ணப்பிக்கமுடியும்.
02. கேள்விதாரர்கள் கேள்விப்பத்திரங்களை வேலைநாள்களில் வலயக் கல்வி அலுவலகப் பாடசாலை வேலைகள் பரிசோதகருடன் தொடர்பு கொண்டு பார்வையிடமுடியும்.
03. கேள்விப்பத்திரங்களை 25.04.2011 தொடக்கம் ஆம் திகதி முற்பகல் 10.00 மணி வரை வேலை நாள்களில் கணக்குக்கிளையில் வேலைக்குரிய கேள்விப்பத்திரத்தைப் பெறுவதற்கான 1000.00 பணத்தைச் செலுத்தி அதற்கான பற்றுச்சீட்டுடன், பாடசாலை வேலைகள் கிளையில் தொடர்புகொண்டு கேள்விப்பத்திரங்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.
04. பூரணப்படுத்திய கேள்விப்பத்திரங்களை 06.05.2011 ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு முன்னதாக மூலப்பிரதி, இணைப் பிரதி என்பவற்றை தனித்தனி தபாலுறைகளிலிட்டு முடிச்சிலிட்டு **வலயக் கல்விப்பணிப்பாளர், கிளிநொச்சி என முகவரியிட்டு பாடசாலை வேலைகள் கிளையிலுள்ள கேள்விப் பெட்டியில் இடுதல் வேண்டும்.**
05. கேள்விப்பத்திரங்கள் 06.05.2011 முற்பகல் 10.00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்பட்டு அன்றைய தினம் மு.ப. 11.00,மணியளவில் வலயக் கல்வி அலுவலக கேள்விச்சபையால் ஆய்வு செய்யப்படும். அத்தருணம் ஒப்பந்தகாரரோ அல்லது அவரின் பிரதிநிதியோ கலந்துகொள்ளமுடியும்.

**த. குருகுலராஜா.**
**தலைவர் கேள்விச் சபை / வலயக்கல்விப் பணிப்பாளர்,**
**வலயக் கல்வி அலுவலகம்,**
**கிளிநொச்சி.**

(சி-577779)(32-27-25)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# அரசுக்கு ஏன் இந்த அவசரம்?

இலங்கை அரசாங்கம் எதிர்கொள்ளும் ராஜதந்திர நெருக்கடிகளால் தமிழ் மக்களின் உரிமைகள் பாதிக்கப்படக்கூடாது.

ஐ.நா. நிபுணர்குழுவின் சிபார்சுகள் மற்றும் அது சுட்டிக்காட்டியுள்ள குற்றச்சாட்டுக்களில் உண்மையானவற்றை அரசு சீர்செய்ய முன்வர வேண்டும். தான் எந்தக் குற்றமும் செய்யவில்லை என்று அடம்பிடிப்பது நீதியான ஓர் அரசின் இலட்சணமே அல்ல.

இவ்வாறு அர்த்தமுள்ள ஒரு கருத்தை முன்வைத்திருக்கிறார் கிழக்கு மாகாண சபையின் உறுப்பினர் இரா.துரைரத்தினம். ஒரு நாட்டின் இறைமை அங்கு வாழும் சகல இன, சகல தரப்பு மக்களினதும் ஒட்டு மொத்த உரிமை; பெரும்பான்மை இன மக்களுக்கு மட்டும் உரியதல்ல என்பதனையும் அவர் தெளிவுபடுத்தியிருக்கிறார்.

ஆனால் அதனை ஏற்றுக்கொள்ளும் பக்குவம் இலங்கை அரசுக்கு இல்லை என்பதே உண்மை நிலை. ஐ.நா. நிபுணர் குழுவின் அறிக்கை, இலங்கை அரசுக்குக் களங்கம் விளைவிக்கும் நோக்கத்துடனேயே தயாரிக்கப்பட்டது; அதில் உண்மை எதுவும் இல்லை என்று நிலைநாட்டும் அதீத முயற்சியில் இறங்கியுள்ளது இலங்கை அரசு.

அவ்வாறன்றி, அரசு நிதானத்துடன் செயற்படுமாயின் நிபுணர் குழுவின் அறிக்கை ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்பு சபையிலோ, ஐ.நா. மனித உரிமைகள் சபையிலோ சமர்ப்பிக்கப்படாமல் தடுப்பதற்கு முழு வீச்சில் முயற்சி செய்யாது. அதனைத் தடுக்குமாறு ரஷ்யாவின் காலில் விழாது ஏனைய நாடுகள் மற்றும் அணி சேரா நாடுகள், அரபு நாடுகளிடம் இந்த விடயத்தில் இலங்கையை ஆதரிக்குமாறு கெஞ்சாது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்களிடம் லஞ்சம் பெற்றுக் கொண்டே, அவர்களின் செல்வாக்குக்கு உட்பட்டே, நிபுணர் குழு பொய்யான அறிக்கையை வெளியிட்டிருக்கிறது என்று வழக்கம் போன்று குதர்க்கம் பேசுகிறார் முன்னாள் போராளியும் இந்நாள் அமைச்சருமான விமல் வீரவன்ச.

பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியோ, நிபுணர் குழு அறிக்கை தொடர்பாகத் தனது நிலைப்பாடு குறித்து உருப்படியான கருத்து எதனையும் தெரிவிக்கத் தயங்குகிறது. கட்சியின் உத்தியோக பூர்வமான கருத்து இன்னும் வெளியிடப்படவில்லை. அக்கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் ஒருவருக்கொருவர் வெவ்வேறு விதமான கருத்தை முன் வைப்பதை அவதானிக்க முடிகிறது.

நிபுணர் குழுவின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்ட போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமைக் குற்றச்சாட்டுகள் குறித்து இலங்கை அரசாங்கம் உடனடியாக உள்ளக விசாரணைகளை நடத்த வேண்டும் என்று கூறுகிறார் ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர்களில் ஒருவரான லஷ்மன் கிரியல்ல.

ஒரு சந்தர்ப்பத்தில் இஸ்ரேலிய அரசு, ஐ.நாவின் விசாரணைக்குழு ஒன்றினால் தன்மீது சுமத்தப்பட்ட நாநூறு குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக தானே உள்ளக விசாரணையை நடத்தி ஐ.நா. சபைக்கு அறிக்கை சமர்ப்பித்தது. அதன் பின்னர் இஸ்ரேல் மீதான நல்லெண்ணம் சர்வதேசத்தில் அதிகரிக்கத் தொடங்கியதாக அரசுக்கு மாற்றுவழி சொல்லிக் கொடுக்கிறார் கிரியெல்ல.

முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவை அரசாங்கம் விடுதலை செய்தால், ஐ.நா. நிபுணர் குழுவின் அறிக்கை தொடர்பாக அரசுடன் இணைந்து செயற்பட நாம் தயாராக இருக்கிறோம் - என்று மற்றொரு ஐ.தே. கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகரா சந்தர்ப்பவாத அரசியல் பேசுகிறார்.

ஐ.நா. நிபுணர் குழு அறிக்கைக்கு எதிராகக் குரல் கொடுக்க அனைவரும் அணிதிரள வேண்டும் என்கிறார் முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசாவின் மகன் சஜித்.

இலங்கைப் படையினர் சர்வதேச நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படுவதைத் தடுத்து நிறுத்த அனைவரும் இணைந்து குரல் கொடுக்கவேண்டும்.

அரசியல் நோக்கங்களுக்காகப் படையினரை எந்தச் சந்தர்ப்பத்திலும் நாம் காட்டிக் கொடுத்ததில்லை. இந்தக் கருத்து எனது சொந்த நிலைப்பாடு. இதனை கட்சியின் நிலைப்பாடாகக் கருதமுடியாது என்று ஐ.தே.கட்சியின் இணைப்பிரதித் தலைவர் சஜித் பிரேமதாஸா தெரிவித்திருக்கிறார்.

இவ்வாறு, பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியினர் ஆளுக்கொரு கருத்துச் சொல்லி அரசாங்கத்தின் பக்கம் சாயும் நிலையிலேயே காணப்படுகின்றனர்.

வெளிநாடு சென்றிருக்கும் அக்கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நாடு திரும்பிய பின்னர் நிலைமை மாறும் என்று சொல்வதற்கில்லை. இராணுவத்தைக் காட்டிக் கொடுத்தவர்கள் என்று அரசாங்கம் தமது கட்சி மீது பழி சுமத்தவும் அதனை வைத்து தெற்கு மக்களிடம் தனக்குள்ள ஆதரவைப் பெருக்கவும் அதற்கு இடம் கொடுத்ததாகிவிடும் என்ற அச்சம் ஐ.தே. கட்சிக்கு உண்டாகும் என்று எதிர்பார்க்கலாம், அரசு எவ்வழி ஐ.தே. கட்சியும் அதே வழி என்று ஊகிக்கலாம்;

இலங்கை நாட்டை இராணுவ பலத்தால் ஒன்றுபடுத்திவிட்டதாக அரசாங்கமும் அதன் தலைவர்களும் அடிக்கடி உச்சரித்து வருகிறார்கள். ஐ.நா. நிபுணர் குழு வின் அறிக்கை இராணுவம் போர்க் குற்றம் புரிந்ததாகத் தெரிவிக்கிறது.

இத்தகைய ஒரு பின்புலத்தில் நிபுணர் குழுவின் அறிக்கையை பொய் என்றாக்குவது அல்லது அறிக்கையை மையமாக வைத்து சர்வதேச விசாரணை எதுவும் நடத்தாமல் தடுப்பது என்ப திலேயே அரசு கண்ணும் கருத்துமாக உள்ளது; தீவிரமாகச் செயற்படுகிறது.

நிபுணர் குழு அறிக்கையில் தெரிவிக்கப்பட்ட குற்றச்சாட்டுகள் பொய் என்றால், அரசு ஏன் இந்தளவுக்கு உணர்ச்சி வசப்படுகிறது? அதுங்கமுற்று அவசரப்படுகிறது? - என்ற தர்க்க ரீதியான கேள்வி எழுவது நியாயமானதே.

# பருத்தித்துறை நீதிமன்றின் புனரமைப்பு ஜூன் மாதத்துக்குள் முடிவடைய வேண்டும்

## நீதியமைச்சின் செயலாளர் தெரிவிப்பு

வடமராட்சி, ஏப். 22

பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றக் கட்டடத்தின் புனரமைப்புப் பணிகள் எதிர்வரும் ஜூன் மாதத்துக்குள் நிறைவு செய்யப்பட்டு, அக் கட்டடத்தில் நீதிமன்றங்களை இயங்க வைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும் என நீதியமைச்சின் செயலாளர் ஹம்லத் தெரிவித்துள்ளார்.

கடந்த 1940 ஆம் ஆண்டு நிறுவப்பட்ட பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றம், நீதிவான் நீதிமன்றம் என்பன கொண்ட கட்டடத் தொகுதி கடந்த கால பெரும் யுத்தத்தில் சேதமடைந்து, கடந்த 30 ஆண்டுகளுக்கு மேலாக இயங்காமல் இருந்து வந்தது.

சேதமடைந்த இந்நீதிமன்றக் கட்டடத் தொகுதியில் இருந்த கட்டடம் பெரிதாக சேதமடையாமல் இருந்தபோதிலும், கூரைகள், நிலங்கள், கதவுகள், ஜன்னல்கள் என்பன சேதமடைந்திருந்தன.

இக்கட்டடத்தொகுதியை புனரமைக்கலாம் என பொறியியலாளர் குழு, நீதியமைச்சுக்குழு சிபார்சு செய்ததையடுத்து ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி ஒதுக்கீட்டில் 67 பில்லியன் ரூபா செலவில் நீதிமன்ற கட்டடப் புனரமைப்புப் பணிகள் நடைபெற்றுவருகின்றன. இதற்கான நிதிக்கொடுப்பனவுகள் காலதாமதம் ஏற்படவே சிறிது காலம் கட்டடப் புனரமைப்புப் பணிகள் ஸ்தம்பிதமடைந்திருந்தன.

இந்த நிலையில் பருத்தித்துறை சட்டத்தரணிகள் சங்கச் செயலாளர் சபா ரவீந்திரன் தலைமையிலான சட்டத்தரணிகள் குழு ஒன்று கொழும்பில் வைத்து நீதி அமைச்சின் செயலாளரைச் சந்தித்து நீதி மன்றக் கட்டடப் புனரமைப்புப் பணிகளை விரைவு படுத்தவேண்டும் எனக் கோரிக்கை விடுத்திருந்தது.

இக் கோரிக்கையை ஏற்றுக்கொண்ட நீதியமைச்சின் செயலாளர் புனரமைப்புக்கான நிதி தாமதமின்றி வழங்கப்படுவதோடு, புனரமைப்புப் பணிகள் எதிர்வரும் ஜூன் மாதத்துக்குள் நிறைவேற்றப்படவேண்டும். அதனைத் தொடர்ந்து கடந்த 30 ஆண்டு காலத்துக்கு முன்னர் இயங்கிய அதேவளாகத்தில் நீதிமன்றங்கள் இயங்க வேண்டும் என அவர் தெரிவித்தார்.

இக்குழுவில் பருத்தித்துறை சட்டத்தரணிகள் சங்க பொருளாளர் சட்டத்தரணி ஏ.கே.நடராசா, கொழும்புக்கான பிரதிநிதி சட்டத்தரணி பொ.குமரசாமி, இலங்கை சட்டத்தரணிகள் சங்க யாழ்.பிரதிநிதி சட்டத்தரணி சாந்தா அபிமன்னசிங்கம் ஆகியோரும் கலந்து கொண்டனர். (த-236)

# வடமராட்சி கிழக்கில் 25 மீனவருக்கு கட்டு மரங்கள், மீன்பிடி வலைகள்

## 'பாசிக்' நிறுவனம் வழங்கியது

வடமராட்சி, ஏப். 22

வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட ஆழியவளை, வத்திராயன் ஆகிய கிராம சேவையாளர் பிரிவுகளைச் சேர்ந்த தலா 25 மீனவர்களுக்கு 'பாசிக்' நிறுவனத்தின் சிறு தொழிலுக்கான உதவித் திட்டத்தின் கீழ் தலா 85 ஆயிரம் ரூபா பெறுமதியான கட்டுமரங்கள், வலை உபகரணங்கள் வழங்கப்பட்டன.

மருதங்கேணியில் உள்ள உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் இடம்பெற்ற நிகழ்வில் வைத்து உதவி அரசாங்க அதிபர் ந.திருலிங்கநாதன் யாழ். மாவட்ட கடற்றொழில் நீரியல்வளத் திணைக்கள உதவிப் பணிப்பாளர் எஸ்.இரவீந்திரன் மற்றும் இத் திட்டம் தொடர்பான அதிகாரிகளினால் இவ்வுதவிகள் வழங்கப்பட்டன.

'பாசிக்' நிறுவனத்தின் இந்த உதவித்திட்டத்துக்கு ஜப்பான் பிளாற்போம் நிறுவனம் நிதி உதவியை வழங்கியிருந்தது. (த-236)

# சண்டிலிப்பாய் - உடுவில் டச்சு வீதி கடும் சேதம்

சண்டிலிப்பாய் சந்தியிலிருந்து சங்குவேலி ஊடாக உடுவிலுக்குச் செல்லும் டச்சு வீதி குன்றும் குழியுமாகக் காட்சியளிக்கிறது. இதனால் இப்பாதையால் பயணம் செய்யும் மக்கள் பெரும் சிரமங்களுக்கு உள்ளாகிறார்கள்.

கட்டுடையிலுள்ள ஐந்து கண் மதவு திருத்த வேலைகள் ஆரம்பிக்கப்பட்டதைத் தொடர்ந்து பாலத்தின் ஊடான போக்குவரத்து நிறுத்தப்பட்டிருந்தது. இதனால் சண்டிலிப்பாய் சந்தியிலிருந்து கந்தரோடை ஊடாக உடுவிலுக்குச் செல்லும் டச்சு வீதி வாகனப் போக்குவரத்துக்குப் பயன்படுத்தப்பட்டு வந்தது.

ஏற்கனவே குன்றும் குழியுமாகப் போக்குவரத்துச் செய்ய முடியாமல் இருந்த மேற்படி வீதி பருவமழையைத் தொடர்ந்தும் வாகனப் போக்குவரத்து அதிகரித்ததை தொடர்ந்தும் மேலும் பலத்த சேதத்திற்குள்ளானது. போக்குவரத்துச் செய்ய முடியாமலிருக்கும் இவ்வீதியைப் புனரமைத்துத் தருமாறு பொது மக்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளைக் கோரியுள்ளனர். (த-115)

# மங்கல நிகழ்வுகளில் பண்பாட்டைப் பேணுவோம்

''பாவி துச்சாதனன் செந்நீர் - அந்தல்
பாழ்த்துரி யோதனன் ஆக்கை இரத்தம்
மேவி இரண்டும் கலந்து - குழல்
மீதினிற் பூசி நறுநெய் குளித்தே
சீவிக் குழல்முடிப் பேன் யான் - இது
செய்யு முன்னே முடியேன்''

இது பாஞ்சாலியின் சபதக் குரல். கூந்தலை விரித்து விடுகிறேன் என்ற சத்தியத்தை பாரதக் கதையில் பாஞ்சாலி என்கிற திரௌபதை நிறைவேற்றுகிறாள். துன்புற்றவர்கள் அன்றிச் சபத மிட்டவர்கள் குழல் (கூந்தல்) முடியாது விரித்து விடுவது மரபு. இது பாரதியார் கண்ட இருபதாம் நூற்றாண்டுக்குரிய செய்கை மட்டுமல்ல சங்ககாலத்திற்குமுரியதுமாகும்.

கல்லாடனார் என்ற புறநானூற்றுப் புலவர் தலையாலங்கானத்துச் செரு வென்ற நெடுஞ்செழியனின் வெற்றியைப் பாராட்டிப் பாடுகிறார்.

தம் கணவர் போரில் இறந்ததனால் கைம்மை பூணும் பெண்கள் கரிய தம் கூந்தலைக் கலைத்து விட்டனராம்.

ஞானக்கதிர்

ஒன்றுதல் மகளிர் கைம்மை கூர
அவர் அறல் கடுக்கும் அம்மென்
குவையிரும் கூந்தல் கொய்தல் கண்டே

என்ற அடிகள் புறநானூற்றின் 25 ஆவது பாடலில் உள்ளன.

கூந்தலைப் புனையாது விரித்து விடும் வழக்கம் துன்பியல் நிகழ்வுகளின் அடையாளமே என்பது மேற்குறிப்பிட்ட இலக்கிய ஆதாரங்களூடாகப் புரிகிறது.

தற்காலத்தில் விரித்த கூந்தலே அழகுக் கோலம் எனப் பலர் நினைக்கின்றனர். மூலைக்கு மூலை அழகுக் கலையகங்கள் முளைத்தமையால் ஏற்பட்டதன் விளைவு இது.

விரித்த கூந்தல் மகளிர் - இக்கோலத்துடன் மங்கல நிகழ்வுகளில் பங்கேற்கின்றனர். இந்துக்களின் திருமணச் சடங்கு தெய்வீக உணர்வுடன் கூடிய சடங்காகப் போற்றப்படுகிறது. இத்தகைய நிகழ்வுகளில் நம் பண்பாட்டுக்கு ஒவ்வாத முறையில் விரித்த கூந்தலுடன் பெண்கள் தோன்றுவது ஆரோக்கியமானதல்ல.

எமது பண்பாட்டுக்குரிய உடைகளைச், சடங்காசாரங்களின் போதாவது பேணிக் கொள்ளும் மனோபாவம் எம்மிடையே ஏற்பட வேண்டும்.

மங்கல நிகழ்வுகளில் பங்கேற்கும் மகளிர் எமக்குரிய பண்பாட்டுத் தடத்தைப் பேணிக் கொள்வதே ஆரோக்கியமானது.

ச.லலீசன், *விரிவுரையாளர், கோப்பாய் ஆசிரிய கலாசாலை.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேச சமூகத்தின் கண்ணில் இலங்கையின் தோற்றம்

''உண்ணாவிரதத்துக்கு ஆயத்தமாகுங்கள்'' என்ற தலைப்பில் நேற்று (வியாழன்) டெய்லிமிரர் பத்திரிகை எழுதியிருந்த ஆசிரியர் தலையங்கத்தின் விவரம் இது.

இலங்கை தொடர்பாக ஒரு தோற்றப்பாடு உலகக் கண்களில் உருவாக்கப்பட்டிருப்பது கவலை தருவதாகும்.

உலகக் கோப்பை கிரிக்கெட் ஆட்டம் தொடங்கியபோது இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் அர்ஜுன ரணதுங்க தேர்தல் ஆணைக்குழுவுக்கு ஒரு கோரிக்கை விடுத்து உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டிகள் நடைபெறும் பகுதிகளில் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களை பின்போடுமாறு கேட்டுக்கொண்டார். தேர்தல் வன்முறைகள் சமூகத்தை விலகியிருக்கச் செய்யும் தன்மையானது வழமையாகியிருப்பது எமது சமூகத்தின் மீதான ஒரு வெட்கத்துக்குரிய விடயம் என்று நாம் அப்போது கூறியிருந்தோம்.

அதேபோல எங்காவது ஒரு குற்றச் செயல் இடம்பெற்றுவிட்டால் அதைப் பற்றிக் கவனம் செலுத்துமாறு பொலிஸ் தலைவருக்கு ஜனாதிபதி உத்தரவிடுகிறார்.

ஒரு நெருக்கடி ஏற்படுகிறதென்றால் அரசியல்வாதி ஒருவர் அதிகாரிகளை அழைத்து அது பற்றி ஆராயும்படி அல்லது கவனிக்கும்படி உத்தரவிடுகிறார்.

உண்மையில் இதெல்லாம் பொலிஸ் மா அதிபரின் அல்லது பொறுப்பாக உள்ள அதிகாரிகளின் வழமையான கடமைகள். இவை எல்லாம் அவர்களின் வேலைகள் அல்லவா?

இப்பொழுது ஐ.நா. அதன் அறிக்கை தொடர்பாக எமது வெளியுறவு அமைச்சைத் தனது அலுவலர்களை பாதுகாக்கும்படியாக கோரிக்கை (எச்சரிக்கை) விடுத்துள்ளது.

உண்மையில் அந்த அறிக்கையானது மிகத் தாக்கமான கருத்தைக் கொண்டுள்ளது.

அது தொடர்பான செய்தி பின்வருமாறு அமைந்திருந்தது.

**ஐ.நாவின் எச்சரிக்கை**

ஐ.நாவின் போர்க்குற்ற அறிக்கையின் பின்னர் ஐ.நாவுக்கு எதிராகப் போராட்டம் நடத்தும்படியாக அந்த நாட்டு ஜனாதிபதி அழைப்பு விடுத்துள்ளதை அடுத்து ஐக்கிய நாடுகள் சபை இலங்கை அரசுக்கு விடுத்த எச்சரிக்கையில் ஐ.நா அலுவலர்களுக்கு பாதுகாப்பு அளிக்கும்படி கேட்டுள்ளது.

இலங்கை அரசுக்கு நாம் மிக மிகத் தெளிவாகக் கூறியிருக்கிறோம். நாம் அதனை மிகப் பாரதூரமாக எடுத்துக் கொள்கிறோம். இலங்கையிலுள்ள ஐ.நா. அலுவலர்களின் பாதுகாப்பும் கவனமும் அவர்களுடைய பொறுப்பாகும். ஐ.நாவின் பிரதிப் பேச்சாளர் பர்ஹான் ஹக் இவ்வாறு கூறியுள்ளார்.

அறிக்கை தொடர்பாக அவர்களின் நிலைப்பாடு எதுவாகவும் இருக்கலாம். எமது அலுவலர்களின் பாதுகாப்புக் குறித்த அவர்களின் கடப்பாடுகளின் படி அவர்கள் நடந்துகொள்ளவேண்டும் என்பதை மீளவும் வலியுறுத்தியுள்ளோம் என்று ஹக் செய்தியாளர்களிடம் கூறியுள்ளார். இது கவலையளிப்பதாகும்.

சுருக்கமாக ஐ.நா. என்ன சொல்கிறது என்றால் இலங்கையிலுள்ள ஐ.நா. உறுப்பினர்கள் மீது அரசு அனுசரணையுடனான வன்முறைகள் கட்டவிழ்த்துவிடப்படலாம் என்பதை ஐ.நா. அறியும் என்பதே. எதிர்பார்க்கும் சம்பவங்கள் தொடர்பாக ஐ.நா. இவ்வாறான அறிக்கைகளை விட்டுக்கொண்டிருக்க முடியாது. ஆனால் எமது வழித்தடத்தின் பதிவுகளைப் பார்க்கும்போது, ஐ.நாவைக் குறைகூறவும் முடியாது.

**அரசு இப்போதாவது உணருமா?**

அரசு இப்போதாவது உணருமா, உலகம் இவ்வாறுதான் இலங்கையை எடைபோடுகிறது என்பதை?

தேர்தல் செயற்பாடுகள் யாவும் வித்தியாசம் கூறமுடியாதளவுக்கு வன்முறைகள் நிறைந்து காணப்பட்டன.

அதிகாரிகள் தமது பணிகளை செய்கிறார்களில்லை, அதனால் அரசியல் தலைவர்களும் ஜனாதிபதியும் புலனாய்வு செய்யுங்கள், நடவடிக்கை எடுங்கள் என்று அறிவுறுத்தவேண்டியிருக்கிறது.

சமூக நடைமுறைகளாக வஞ்சகமும் ஊழல்களும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன. அவைகளை ஒழித்துக்கட்டமுடியாமல் இருக்கிறது. அதனால் சர்வதேச தொண்டர் நிறுவனங்கள் பலவும் உதவித் திட்டங்களுக்கு நிதி வழங்குவதற்கு மாறாக பொருள்களையே வழங்கவிருக்கின்றன.

இப்பொழுது ஐ.நா. ஓர் எச்சரிக்கையை அல்லது கோரிக்கையை இலங்கைச் சமூகங்களின் மீது அவதூறு அறிக்கையாக வெளியிட்டிருக்கின்றது. நாம் இங்கு நிபுணர் குழுவின் கண்டுபிடிப்புகள் பற்றிக் கூற முற்படவில்லை. ஆனால் சர்வதேச சமூகத்தின் முன்னால் நமது தோற்றத்தை எவ்வளவு ஒழுங்கீனமாக அராஜகமான வன்முறையாக சமூகமாக கட்டிவளர்த்திருக்கின்றோம் என்பதை அதிகார பதவியிலிருப்பவர்கள் கவனிப்பார்களா என்பதே கேள்வி.

உண்மைதான், இலங்கை மீது தீர்ப்புகள் வழங்குவதற்கு சர்வதேச சமூகத்துக்கு தார்மீக உரிமை கிடையாது. இருந்தாலும் நாம் எவ்வாறு நடந்து கொள்கின்றோம் என்பதில் வெட்கப்படவேண்டாமா? 2010 ஜூலை மாதம் இங்குள்ள ஐ.நா. கட்டடத்தின் முன்னால் ஒழுங்கீனமான ஓர் அரசியல்வாதி எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் செய்தவரின் நேரடி விளைவே இதுவாகும்.

அந்தத் தலைவர் ஐ.நா. அலுவலர்களுக்கு எதிராக உணர்ச்சியைத் தூண்டும் வகையில் உரைகள் நிகழ்த்தியிருந்தபோதிலும் அரசானது நம்பகத்தனமான எந்தவித நடவடிக்கையையும் அவருக்கெதிராக எடுக்கவில்லை.

சீனாவில் எவ்வளவோ அழுத்தங்கள் இருந்தபோதிலும் இவ்வாறான நிகழ்வுகள் எதுவும் இடம்பெறக் காணவில்லை.

(ப)

## நெடுந்தீவில் இருந்து சேவையை இன்று ஆரம்பிக்கிறது குமுதினி

யாழ்ப்பாணம்,ஏப்.22

நெடுந்தீவுக்கான அரச படகு குமுதினி இன்று வெள்ளிக்கிழமை முதல் நெடுந்தீவில் இருந்து தனது சேவையை ஆரம்பிக்கும்.இன்று காலை 7 மணிக்கு நெடுந்தீவில் இருந்து புறப்படும் படகு மீண்டும் குறிகாட்டுவானில் இருந்து காலை 9 மணிக்கு நெடுந்தீவுக்குச் செல்லும்.

பி.ப 2 மணிக்கு நெடுந்தீவில் இருந்து குறிகாட்டுவானுக்கும் பின்னர் 4 மணிக்கு நெடுந்தீவுக்குமான சேவையை நடத்தும் என்று கூறப்பட்டது.

நெடுந்தீவுக்கான குமுதினி சேவை சீராக இடம் பெறாமையால் நெடுந்தீவுக்கான போக்குவரத்தை மேற்கொள்ள மக்கள் பெரும் நெருக்கடிகளை எதிர்கொண்டு வந்தனர்.

இந்த விடயம் தொடர்பாகப் பல தடவைகள் சுட்டிக்காட்டப்பட்ட போதும் இதற்கான விடிவுகாலம் தற்போது கிடைத்துள்ளது என்று நெடுந்தீவு மக்கள் கூறுகின்றனர். (ம-7)

## வரி செலுத்துவோரின் விவரம் யாழ். அலுவலகத்துக்கு வந்து சேர்ந்தது

யாழ்ப்பாணம்,ஏப்.22

தேசத்தைக் கட்டியெழுப்புவதற்கான வரி செலுத்துவோரில் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்தோரின் விவரங்கள் உள்நாட்டலுவல்கள் திணைக்களத்தின் யாழ். மாவட்ட அலுவலகத்துக்கு வந்து சேர்ந்துள்ளன.

இது தொடர்பாக இந்த அலுவலகம் அனுப்பி வைத்துள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

கணினித் தரவுச் செயல்முறையில் ஏற்பட்ட தாமதம் காரணமாக சில வரி செலுத்துவோருக்கு விவரத் திரட்டு கிடைக்கவில்லை.

கணினியில் தரவு உள்ளீடு செய்வதில் சில தவறுகள் ஏற்பட்டுள்ளன எனவும் அறியப்படுகிறது.

இது தொடர்பில் வரி செலுத்துவோர் பின்வரும் முக்கிய விடயங்களை அனுசரிக்குமாறும் கேட்டுக் கொள்கின்றோம்.

* வரி விவரத்திரட்டும் மற்றும் கொடுப்பனவுப் படிவங்களும் கிடைக்காத தனிப்பட்ட வியாபாரிகள் தண்டப்பணம் செலுத்துவதிலிருந்து தவிர்க்கும் பொருட்டு உடனடியாக எமது பிராந்திய அலுவலகத்துக்கு நேரில் வருகை தந்து ஆவன செய்யுமாறும் இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

* பங்குடமை வியாபாரமானது பங்குடமையின் பெயரில் அல்லாது தனிப்பட்ட ஒரு பங்காளரின் பெயரில் பதிவு செய்யப்பட்டிருக்குமாயின், எவ்வித கொடுப்பனவும் மேற்கொள்ளாது உடனடியாக எமது அலுவலகத்திற்கு வியாபாரப் பெயர்ப் பதிவுச் சான்றிதழ் மற்றும் பாங்காளர்களின் தேசிய அடையாள அட்டைப் பிரதிகளுடன் சமுகம் தரவும்.

* இந்த வரி மாதாந்தம் செலுத்தப்படுவதுடன் வரி விவரத்திரட்டு காலாண்டு அடிப்படையில் செலுத்தப்படவேண்டும். மேலே தெரிவிக்கப்பட்ட தாமதம் காரணமாக ஜனவரி, பெப்ரவரி, மார்ச் மாதங்களுக்குரிய கொடுப்பனவுப் படிவம் கிடைத்தவர்கள் மார்ச் மாதத்துக்குரிய கொடுப்பனவுப் படிவத்தில் (வரிக்காலக் குறியீடு-11033) முதல் மூன்று மாதத்திற்குரிய வரிக் கொடுப்பனவையும் செலுத்த முடியும்.

* வரி விவரத் திரட்டை பூரணப்படுத்துவதில் ஏதாவது சிக்கல்கள் இருக்குமாயின் எமது அலுவலகத்துக்கு நேரில் வருகை தந்து எமது அலுவலர்களின் சேவையைப் பெற்றுக்கொள்ள முடியும் என்றுள்ளது.

(ம)

**கோழிக்குஞ்சு விநியோகம்**

35 நாளில் 2 கிலோவுக்கு மேல் வளர்ச்சியடையக் கூடிய NO-1 BAHIRAHA புறொயிலர் குஞ்சுகள் 27.04.2011 விநியோகிக்கப்படும். விலை 90/=. மொத்தமாக கொள்வனவு செய்பவர்களுக்குக் கழிவு வழங்கப்படும். இறைச்சிக் கோழிகள் கொள்வனவு செய்யப்படும்.

*றாஜீவ், நவாலி வீதி, ஆனைக்கோட்டை - 021 222 2867, 0776090926

*துர்க்கா பாம், ஸ்ரேசன் றோட், சுன்னாகம்.

**வவுனியா, மன்னார் மாவட்ட பிரதேச செய்தியாளர்கள்**

கீழ்க்காணும் பிரதேசங்களுக்கு செய்தியாளர்கள் இணைத்துக் கொள்ளப்படவிருக்கின்றனர். முன்னனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.



★செட்டிகுளம் ★ நெடுங்கேணி
★கனகராயன் குளம் ★ ஓமந்தை
★வவுனியா நகரம் ★ பூவரசங்குளம்
★முருங்கன் ★ மடு
★நானாட்டான் ★ அடம்பன்
★மன்னார் ★ தலைமன்னார்

தகுதியானவர்கள் விவரங்களுடன் கீழ்க் காணும் விலாசத்துக்கு 10.05.2011 ஆம் திகதிக்கு முன் விண்ணப்பிக்கவும்.

பிரதம ஆசிரியர்
உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

**காணி விற்பனைக்கு**

கைதடி,நூணாவில் வைரவர் கோயிலடிச் சந்தியில் கண்டி றோட்டுக்கு அண்மையாக இரண்டு பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு: 0776146434

**வீடு விற்பனைக்கு**

சுண்டுக்குளி, ஈச்சமோட்டை, கடற்கரை வீதியில் இரண்டு பரப்புக் காணியுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு.
தொடர்பு: 0776146434

**பட்டதாரி உத்தியோகத்தர் ஆட்சேர்ப்புப் பரீட்சை**

பொது அறிவு
வே.தபேந்திரன் B.Com,M.A.
இலங்கை, சர்வதேச நடைமுறை விடயங் கள் கடந்த ஒரு வருடத்துக்குரிய குறிப்புக்கள் வழங்கப்படும்.
2011.04.23,24 (சனி,ஞாயிறு)
12மணி - 3மணிவரை
[illegible] கல்லூரி
[illegible] சந்தி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 8148

**விற்பனைக்கு**

Airtel,Dish T.V. Receiver புதியது உண்டு. தேவையானவர்கள் தொடர்புகொள்ளவும். வீடு வந்து பூட்டப்படும்.
தொ.பே: 0729469839

**தவறிவிட்டது**

ஆறுமுகம் ஜீவரட்ணம் ஆகிய எனது விசேட அடையாள அட்டை (0901024313) மற்றும் சிம் காட்கள் பேர்சுடன் மிருசுவிலுக்கும் யாழ். நகருக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு தந்துதவவும். தொடர்பு:-0779399910

**NET CABS**

நெற் கப்ஸ் சேவை.
அழையுங்கள்:
021-3202202 அல்லது
077-5934168.
திருமண கார், வான்கள் மிகவும் குறைந்த விலையில் வாடகைக்கு.
தரமான சேவை. திருமண கார் ஒரு நாளுக்கு ரூ.6000/=, வான் ஒரு கி.மீ ரூ.30/= மட்டுமே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விழிப்புணர்வு.....



மக்கள் சேவை: கண்ணிவெடி விழிப்புணர்வுக்கும் உதவிக்குமான சர்வதேச தினத்தை முன்னிட்டு மிதிவெடி சம்பந்தமான விழிப்புணர்வை ஏற்படுத்தும் பொருட்டு மக்களின் அமைதி ஊர்வலம் ஒன்று நேற்று யாழ்.நகரில் இடம்பெற்றது. யாழ்.பஸ்நிலைய முன்றிலிருந்து கஸ்தூரியார் வீதி ஊடாக யாழ்.இந்துக் கல்லூரியை நோக்கி ஊர்வலம் செல்கிறது. யாழ்.இந்துக் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற அரங்க நிகழ்வுக்கு விருந்தினர்கள் அழைத்துச் செல்லப்படுகின்றனர். (4)

# மனிதாபிமான மீட்புப் பணியே இலங்கையில் இடம்பெற்றுள்ளது

### இப்படிக் கூறுகிறார் சுசில் பிரேமஜயந்த

கொழும்பு, ஏப்.22

இலங்கையில் இடம்பெற்றது போர் அல்ல. மனிதாபிமான மீட்புப் பணியே இடம்பெற்றுள்ளது.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் சுசில் பிரேமஜயந்த இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

நாட்டில் போர் நடைபெற்றதாக தெரிவிக்கப்பட்ட போதிலும் உண்மையில் அரச படையினர் மனிதாபிமான மீட்புப் பணிகளிலேயே ஈடுபட்டனர்.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான மோதல்களின் போது எதிரிகளுக்கும் அரசு உணவு, பாணங்களைவழங்கியுள்ளது.

ஐக்கிய நாடுகளின் செயலாளர் நாயகம் பான் கீ - மூனின் நிபுணர் குழு உண்மைத் தகவல்களின் அடிப்படையில் அறிக் கையை தயாரிக்கத் தவறியுள்ளது.

ஊடகங்கள் மற்றும் ஏனைய அறிக்கைகளின் அடிப்படையில் இலங்கைக்கு எதிராக நிபுணர் குழு போர்க்குற்றச் சாட்டுக்களைச் சுமத்தியுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்களின் தரவுகளை அடிப்படையாகக் கொண்டு ஒரு தலைப்பட்சமாக இந்த அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது - என்று அவர் மேலும் கூறினார். (ம)

# நிபுணர் குழு அறிக்கையின் அடிப்படையில் இலங்கைக்கு தண்டனை வழங்க முடியாது

### சிரேஷ்ட சட்டத்தரணி கோமின் தயாசிறி

கொழும்பு, ஏப்.22

நிபுணர்குழுவின் அறிக்கையின் மூலம் இலங்கையருக்குத் தண்டனை வழங்க முடியாது என்று சிரேஷ்ட சட்டத்தரணி கோமின் தயாசிறி தெரிவித்துள்ளார்.

ஐ.நா. நிபுணர் குழுவின் அறிக்கைஒருதலைப்பட்சமானது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எவ்வாறெனினும், நிபுணர் குழு அறிக்கை தொடர்பில் விளக்கமளிப்பதற்கு இலங்கை நீதிமன்றத்துக்கு சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டுமென்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அரசுடனோ அல்லது பாதுகாப்புப் படையினருடனோ பேச்சு நடத்தாது பான் கீ- மூனின் நிபுணர் குழு அறிக்கை தயாரித்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

எவ்வாறெனினும், மனித உரிமைப் பேரவையில் இலங்கைக்கு எதிராக தீர்மானம் நிறைவேற்றுவதன் மூலம் இலங்கைப் படையினருக்கு எதிராக சர்வதேச நீதிமன்றில் வழக்குத் தொடர சந்தர்ப்பம் இருப்பதாகவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

போர்க் குற்றச் செயல்கள் இடம்பெறவில்லை எனவும் நியாயமான முறையில் போர் நடைபெற்றதாகவும் தெரிவிப்பது மிகவும் சுலபமானது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இதற்காக நீதிமன்றத்துக்கு அதிகாரம் வழங்கப்பட வேண்டுமெனவும் அவர் வலியுறுத்தியுள்ளார். (ம)

# நான்காம் மாடியின் கட்டட உட்கட்டமைப்பை ஆஸ்பத்திரி நிர்வாகம் மேற்கொள்ள வேண்டும்

### 'ஜெய்க்கா' நிறுவனம் நிபந்தனை

யாழ்ப்பாணம், ஏப்.22

'ஜெய்க்கா' திட்டத்தின் கீழ் யாழ். போதனா வைத்தியசாலையில் அமைக்கப்படவுள்ள நான்கு மாடிக் கட்டடத்தின் நான்காம் மாடிக் கட்டடத்தின் உட்கட்டமைப்பு வேலைகளை வைத்தியசாலை நிர்வாகமே மேற்கொள்ள வேண்டும். 'ஜெய்க்கா' நிறுவனம் திட்டவட்டமாக அறிவித்துள்ளது என்று யாழ்.செயலகத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக மேலும் தெரியவருவதாவது:

யாழ்.போதனா வைத்தியசாலையில் 4 மாடிக்கட்டடத்தை அமைப்பதற்குக் கடந்த 2006 ஆம் ஆண்டு 'ஜெய்க்கா' நிறுவனம் முன்வந்தது. நான்கு மாடிக் கட்டடத்தை யும் முழுமையான அமைத்துக் கொடுப்பதாக இணங்கியி ருந்தபோதும் தற்போது நான்காம் மாடிக் கட்டடத்தின் உட்கட்டமைப்பு வேலைகளை வைத்தியசாலை நிர்வாகத்தை மேற்கொள்ளுமாறு 'ஜெய்க்கா' நிறுவனம் அறிவித்துள்ளதாக யாழ். போதனா வைத்தியசாலையின் உதவிப் பணிப்பாளர் ஆர். பவானந்தராஜா தெரிவித்தார்.

வைத்தியசாலையின் தேவைக்கேற்றவகையில் அந்த 4ஆம் மாடிக் கட்டடத்தின் உட்கட்டமைப்பு வேலைகள் மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் அவர் அங்கு மேலும் தெரிவித்தார். (ம-9-14)

# வெளிநாடு சென்றோரின் காணிகள் போலி உறுதி முடித்து விற்பனை

கொழும்பு, ஏப்.22

யுத்த காலத்தில் வெளிநாடுகளில் தமது வாழ்க்கையை அமைத்துக் கொள்வதற்காக குடிபெயர்ந்து சென்ற கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த மக்களின் காணிகளுக்குப் போலி உறுதிகள் தயாரிக்கப்படுவதாகக் கூறப்படுகின்றது.

இவ்வாறு அந்தக் காணிகளை விற்பதற்கு மேற்கொள்ளப்படும் முயற்சிகள் தொடர்பாகத் தகவல் கிடைத்து வருவதாக மாகாண காணி நிர்வாகத் திணைக்களம் தெரிவிக்கின்றது.

இது சம்பந்தமாக அம்பாறை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களிலிருந்து பெருமளவு தகவல்கள் கிடைப்பதாகக் கூறப்பட்டது. திருகோணமலை மாவட்டத்திலும் இது குறித்த தகவல்கள் கிட்டுவதாகவும் மாகாண காணி ஆணையாளர் டீ.சி.அனுர தர்மதாச தெரிவித்துள்ளார்.

இவ்விதம் போலி உறுதி களைத் தயாரித்து அந்தக் காணிகளை விற்கும் செயற்பாட்டுக்கு சில சட்டத்தரணிகளும் ஒரு சில அதிகாரிகளும் ஒத்துழைப்பு வழங்குவதாகக் கூறப்படுகின்றது. (ம-22)

# புலிகளுடன் தொடர்புடைய அமைப்புகள் தடைசெய்யப்பட வேண்டும் - அரசு

கொழும்பு, ஏப்.22

புலிகளுடன் தொடர்புடைய சகல அமைப்புகளும் தடை செய்யப்பட வேண்டும்.

இலங்கை அரசு ஐரோப்பிய நாடுகளிடம் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளது.

இது தொடர்பாக மேலும் தெரிவித்துள்ளதாவது:-

ஐரோப்பிய ஒன்றியம் தமிழீழ விடுதலைப் புலிகளைத் தடை செய்யப்பட்ட இயக்கமாக அறிவித்துள்ளது. எனினும் , புலி ஆதரவு அமைப்புக்களைத் தடை செய்யவில்லை .

அண்மையில் அரசு தமிழீழ விடுதலைப் புலிகளை தோற்கடித்த போதிலும், ஐரோப்பிய நாடுகளில் புலி ஆதரவு அமைப்புக்கள் சட்டவிரோத நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வெளிநாடுகளில் இயங்கி வரும் தமிழீழ விடுதலைப் புலி ஆதரவு அமைப்புக்களைத் தடை செய்வது குறித்து அரசின் சிரேஷ்ட அமைச்சர்கள் அண்மையில் பேச்சு நடத்தியுள்ளனர். எதிர்வரும் வாரத்தில் உத்தி யோகபூர்வமான முறையில் இந்தக் கோரிக்கை விடுக்கப்படவுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக இயங்கி வரும் அமைப்புக்களின் பெயர் விவரங்கள் வெளியிடப்படவில்லை. (ம)

# இன்று கண் மருத்துவ முகாம்

யாழ்ப்பாணம்,ஏப்.22

சர்வமதக் குழுவினரின் ஒருங்கிணைப்பில் கண் மருத்துவ முகாம் ஒன்று நடத்தப்படவுள்ளது.

இன்று வெள்ளிக் கிழமை பிற்பகல் 3 மணிக்கு வைத்திய நிபுணர்களால் இலவச கண் சிகிச்சை முகாம் நடத்தப்படவுள்ளது.

சிசிக்சை பெற விரும்புபவர்கள் இல 657/01, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# பூநகரி - சங்குப்பிட்டிப் பாலம் புனரமைப்பு; அந்த வீதியின் நிலையோ பரிதாபகரம்

யாழ்ப்பாணம், ஏப்.22

பூநகரி, சங்குப்பிட்டிப் பாலம் அழகாகப் புனரமைக்கப் பட்டு அதனைப் படம்பிடித்து உலகமெங்கும் காட்டிவிட்டார்கள்.

ஆனால், அந்த வீதியின் பரிதாப நிலையினை எவரும் கண்டு கொள்ளவில்லை என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் தெரிவித்துள்ளார்.

கடந்த செவ்வாய்க்கிழமை யாழ்.செயலகக் கேட்போர் கூடத்தில் நடைபெற்ற ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்திலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:

யாழ்ப்பாணத்தில் இருந்து கிளிநொச்சி செல்வதற்குப் பூநகரி - சங்குப்பிட்டிப் பாலம் மிகவும் சுலபமானது. ஆனால், அந்த வீதியில் பாலம் மட்டும் பிரமாண்டமான முறையில் அமைக்கப்பட்டுள்ளது.

அந்த வீதியால் செல்வோர் மூக்கையும் கண்களையும் பொத்திக் கொண்டு செல்ல வேண்டிய பரிதாப நிலை காணப்படுகின்றது.

இதுகுறித்து உரிய திணைக்களங்கள் நடவடிக்கை எடுத்து வீதியைச் செப்பனிடுவதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என்றும் அவர் அங்கு மேலும் தெரிவித்தார். (ம-9-14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காக்கை தீவில் கலங்கரை விளக்கம் அமைக்கும் பணி கைவிடப்பட்டது

## பிரதேச சபையின் அசட்டையே காரணம்

ஆழ்கடல் தொழிலில் ஈடுபடும் கடற்றொழிலாளர்களின் நன்மைகருதி காக்கைதீவுக் கடற்பிரதேசத்தில் பொருத்தப்படவிருந்த கலங்கரை விளக்கம் வலி.தென்மேற்குப் பிரதேச சபையின் அசட்டையினால் கைவிடப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

இது குறித்துக் கவலையும் விசனமும் தெரிவித்துள்ள சாவற்கட்டு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தலைவர் என். பொன்னம்பலம், கலங்கரை விளக்கம் பொருத்துவதற்கான நடவடிக்கையை எடுக்கச் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் முன்வரவேண்டுமென்று கேட்டுள்ளார்.

காக்கைதீவு மீன்பிடித்துறையிலிருந்து சாவற்கட்டு, ஆனைக்கோட்டை, நவாலி, உயரப்புலம், நாவாந்துறை ஆகிய இடங்களைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான மீனவர்கள் ஆழ்கடலுக்குச் சென்று மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர்.

இரவு நேரங்களில் தொழில் செய்யும் இவர்கள் மழை காலங்களிலும் காற்று வீசும் நேரங்களிலும் திரும்பி வருவதற்குத் திசை தெரியாமல் பெரும் சிரமங்களுக்குள்ளாகின்றார்கள்.

கடற்றொழிலாளர்களுக்கு ஏற்படும் கஷ்டங்களைத் தீர்க்கும் வகையில், சாவற்கட்டு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத் தலைவர், யாழ்ப்பாணம் கடற்றொழில் திணைக்களத்துடன் தொடர்பு கொண்டு கலங்கரை விளக்கம் பொருத்துவதற்கான ஒழுங்குகளை மேற் கொண்டிருந்தார்.

ஆனால் கலங்கரை விளக்கத்தைப் பராமரிப்பதற்கான பொறுப்பை ஏற்க வலி.தென் மேற்குப் பிரதேசசபை மறுத்துவிட்டது. இதனால் இந்தப் பணி கைவிடப்பட்டுள்ளது.

மீனவர்களின் நன்மை கருதி கலங்கரை விளக்கம் பொருத்துவதற்கான நடிவடிக்கையைச் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் எடுக்க வேண்டுமெனத் தெரிவித்துள்ளனர். (த-115)

## புதிய நுட்பத்தில்...



கையடக்கம்: இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் யாழ்ப்பாணப் பிராந்திய அலுவலகத்தால் மோட்டார் வாகனக் காப்புறுதிகளுக்கு குறைந்த கட்டணத்தில் அதிநவீன தொழில் நுட்ப கையடக்கக் காப்புறுதி அட்டை முறை (CARD SYSTEM) அண்மையில் அறிமுகப்படுத்தப்பட்டது. கூட்டுத்தாபனத்தின் உதவிப் பொதுமுகாமையாளர் பராக்கிரம அம்பான்பொல வாடிக்கையாளர் ஒருவருக்கு காப்புறுதி அட்டையை வழங்கி நிகழ்வை ஆரம்பித்து வைக்கிறார். அருகில் கூட்டுத்தாபனத்தின் உத்தியோகத்தர்கள் நிற்கின்றனர். (த)

# தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளில் துரித கற்றல்

பருத்தித்துறை, ஏப்.22

கடந்த கால அசாதாரண சூழ்நிலை காரணமாகத் துரித கற்றல் செயல் திட்டம் யாழ். மாவட்டத்திலுள்ள தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளில் 'யுனிசெவ்' நிறுவனத்தின் அனுசரணையுடன் இரண்டாம் தவணை முதல் மேற்கொள்ளப் படவுள்ளது.

இதற்கான கற்றல் ஏடுகள் தயாரிக்கப்பட்டுள்ளன. இந்தத் திட்டத்தினை நடைமுறைப் படுத்துவதற்கான செயலமர்வு வலயக்கல்விப் பணிப்பாளர்கள், திட்டமிடல் பிரதிக்கல்விப் பணிப்பாளர்கள், கோட்டக் கல்வி அலுவலர்கள் ஆகியோர்களுக்கு ஏற்கனவே ஹபறணையில் நடத்தப்பட்டுள்ளது. (த-19)

# வடமராட்சிப் பாடசாலைகளில் ஆங்கில ஆசிரியர் பற்றாக்குறை

பருத்தித்துறை, ஏப்.22

வடமராட்சிக் கல்வி வலயப் பாடசாலைகளில் ஆங்கில பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு பற்றாக்குறை நிலவுகின்றது. இந்த ஆசிரியர்களின் பற்றாக் குறையை நிவர்த்தி செய்வதற்காகப் பகுதி நேர ஆங்கில ஆசிரியர்களை ஒப்பந்த அடிப்படையில் நியமனம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது.

பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களுக்கு வடமராட்சி வலயக் கல்வித் திணைக்களத்தினால் விண்ணப்பம் கோரப்பட்டு நேர்முகப் பரீட்சை நடத்தப்பட்டுள்ளது.

இரண்டாம் தவணையின் முதல் வாரத்தில் பகுதி நேர ஆங்கில ஆசிரியர்கள் தட்டுப்பாடு நிலவும் பாடசாலைகளுக்கு நியமிக்கப்படவிருப்பதாகத் தெரியவருகின்றது. (த-190)

# பருத்தித்துறை வைத்தியசாலையில் வைத்தியர், தாதியர் விடுதிகள்

பருத்தித்துறை,ஏப்.22

பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலைக்கு வைத்தியர்களுக்கான விடுதியும், தாதியர்களுக்கான விடுதியும் அமைக்கப் படவுள்ளது. இந்த விடுதிக்கான நிதியை அடுத்த ஆண்டு ஒதுக்கீடு செய்வதற்கு வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் இ.ரவீந்திரன் இணக்கம் தெரிவித்துள்ளார்.

விடுதிகள் இல்லாமையால் அங்கு கடமை புரியும் வைத்தியர்களும், தாதியர்களும் பெரும் சிரமங்களை எதிர்நோக்குவது சுட்டிக் காட்டப்பட்டுள்ளதை அடுத்தே இந்த இரு விடுதிகளும் அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. ஏற்கனவே இந்த வைத்தியசாலையில் வைத்திய நிபுணர்களுக்கான விடுதிகள் அமைக்கப்பட்டுள்ளன. (த-190)

# கிளிவெட்டி ம.வி. மாணவர்கள் யாழ்ப்பாணத்துக்கு கல்விச் சுற்றுலா

திருகோணமலை மாவட்டத்தின் மூதூர், கிளிவெட்டி மகா வித்தியாலய மாணவர்கள் கல்விச் சுற்றுலா ஒன்றை மேற்கொண்டு யாழ்ப்பாணத்திலுள்ள வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பல இடங்களை நேரில் சென்று பார்வையிட்டனர்.

மூன்று நாள்கள் கொண்ட கல்விச் சுற்றுலாவில் மாணவர்கள் அனுராதபுரம், வவுனியா மாவட்டங்களிலுள்ள பிரசித்தி பெற்ற இடங்களையும் சென்று பார்வையிட்டனர். அதனைத் தொடர்ந்து நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்துக்கு அவர்கள் வருகை தந்தனர்.

பாடசாலை அதிபர் கே.பேரின்பநாதன் தலைமையில் 52 மாணவர்களும் 09 ஆசிரியர்களும், பெற்றோர்கள் இருவரும் இந்தக் கல்விச் சுற்றுலாவில் பங்கேற்றுள்ளனர். இவர்கள் யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த ஏழு ஆலயங்களுக்கும் யாழ். நகரிலுள்ள கோட்டை, யாழ். பொதுசன நூலகம் உள்ளிட்ட இடங்களுக்கும் சென்று அவற்றின் சிறப்புக்களைப் பார்த்தும் கேட்டும் அறிந்து கொண்டனர்.

உதயன் வெளியீட்டகத்துக்கு நேற்றுக்காலை வருகை தந்த இந்த மாணவர்களும் ஆசிரியர்களும் அதன் செயற்பாடுகளைப் பார்வையிட்டனர். உதயன்- சஞ்சீவி பிரதம ஆசிரியர் கல்வி சுற்றுலா மேற்கொண்ட மாணவர்களை சந்தித்துக் கலந்துரையாடினார்.

யாழ்ப்பாணத்துக்கு மேற்கொண்ட கல்விச் சுற்றுலா தொடர்பாகப் பாடசாலை அதிபர் கருத்துத் தெரிவிக்கையில் :

எமது பாடசாலைச் சமூகம் முதன் முறையாக கல்விச் சுற்றுலா மேற்கொண்டு யாழ்ப்பாணத்துக்கு வந்துள்ளது. யாழ்ப்பாணத்தில் மிகப் பெரிய ஆலயங்களையும் வளம் நிறைந்த விவசாய நிலங்களையும் பார்த்து வியந்திருக்கிறோம். மலைநாட்டுப் பகுதிகளுக்கும் நாட்டின் ஏனைய பகுதிகளுக்கும் சென்றுள்ளோம். ஆனால் அவற்றை விட வித்தியாசமான பகுதியாக யாழ்ப்பாணம் இருக்கிறது. எமக்கு மிகவும் பிடித்துள்ளது - என்றார். (த-14)

# மிதிவெடி விழிப்புணர்வுக் கண்காட்சியில் பெரும் எண்ணிக்கையானோர் பங்கேற்பு

யாழ்ப்பாணம், ஏப். 22

மிதிவெடிச் செயற்பாட்டின் விழிப்புணர்வுக்கும் உதவிக்குமான சர்வதேச தினத்தை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்வுகளின் கண்காட்சி யாழ். இந்துக் கல்லூரியில் நேற்று முன்தினம் ஆரம்பமாகி நேற்று வரை நடைபெற்றது. இதனைப் பெரும் எண்ணிக்கையானோர் பார்வையிட்டனர்.

முதல் நாள் நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட மிதிவெடி செயற்பாட்டு அலுவலக உதவிப்பணிப்பாளர் இ. பகீரதன் கலந்து கொண்டார். சிறப்பு விருந்தினர்களாக இராணுவப் பொறியியல் படைப் பிரிவு அதிகாரி மேஜர் குபுல் தெனிய, யாழ். இந்துக் கல்லூரி அதிபர் வீ. கணேசராசா, மிதிவெடி செயற்பாட்டு அலுவலகங்களின் தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள், உதவியாளர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.


இந்தக் கண்காட்சியில் பல நாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட நிலக்கண்ணி வெடிகள், அமுக்க வெடிகள் மற்றும் விடுதலைப் புலிகளின் தயாரிப்புக்களான கண்ணிவெடிகள் என்பவையும் காட்சிக்கு வைக்கப்பட்டன.

கண்ணிவெடிகளைக் கண்டு பிடித்து மீட்கும் உபகரணங்கள், கண்ணிவெடியகற்றும் போது அது வெடித்தாலும் வாகனத்துக்கோ அதனை இயக்குபவருக்கோ சேதம் ஏற்படுத்தாத பாதுகாப்புடன் கூடிய வாகனம், 'றிமோட் கொன்றோலர்' மூலம் இயக்கி கண்ணிவெடி அகற்றப் பயன்படும் வாகனம் என்பனவும் காட்சிக்கு வைக்கப்பட்டன.

இராணுவத்தினரின் கண்ணிவெடி மீட்கும் பிரிவும் இதில் கலந்துகொண்டது. புதைக்கப்பட்ட கண்ணி வெடியைக் கண்டு பிடிக்கவென அமெரிக்காவிலிருந்து ஏற்கனவே கொண்டு வரப்பட்ட மிதி வெடிகளை மோப்ப சக்தி மூலம் கண்டு பிடிக்கும் நாய் ஒன்றும் இதன் போது தனது பணியைச் செய்து காட்டியது.

மிதிவெடி புதைக்கப்பட்ட இடங்களில் மோப்ப சக்தி மூலம் அதனைக் கண்டு பிடித்தவுடன் அதன் அருகே நாய் உட்கார்ந்து விடும். உடனே அந்த இடத்துக்கு நேரே அடையாளப் படுத்தப்பட்டு கண்ணிவெடி உரியவர்களால் மீட்கப்படும். அது போன்ற செயற்பாடு கண்காட்சியில் செய்து காட்டப்பட்டது.

தொடர்ந்து கண்ணிவெடி அகற்றும் ஒவ்வொரு நிறுவனத்தினருக்கும் இடையில் இந்துக் கல்லூரி மைதானத்தில் சிநேக பூர்வ கிரிக்கெட் போட்டி இடம் பெற்றது. இதில் இராணுவ வீரர்களின் விளையாட்டு அணி



யும் பங்கு பற்றியது.

நேற்றுக் காலை கண்காட்சி ஆரம்பமாவதற்கு முன்னர் யாழ். பஸ் நிலையத்திலிருந்து யாழ். இந்துக் கல்லூரி நோக்கி மிதிவெடி விழிப்புணர்வை ஏற்படுத்தும் பேரணி ஒன்றும் நடத்தப் பட்டது. இதில் பெரும் எண்ணிக் கையான மக்கள் கலந்து கொண்டனர். (த-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்மராட்சியின் பல பகுதிகளில் மீளக்குடியமர்வுக்கு அனுமதி இல்லை

## வாழ்வாதாரம் முடங்கியுள்ளதாக மக்கள் விசனம்

யாழ்ப்பாணம்,ஏப்.22

தென்மராட்சிப் பிரதேசத்தின் பல பகுதிகளில் மக்கள் மீளக்குடியமர அனுமதிக்கப்படவில்லை. இதனால் விவசாயம் மற்றும் வாழ்வாதார நடவடிக்கைகள் முடங்கிப் போயுள்ளதால் வருமானமின்றி வறுமையில் வாழ்வதாக அந்தப் பகுதி மக்கள் தெரிவித்தனர்.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற தென்மராட்சிப் பிரதேச ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தின் போதே அந்தப் பகுதி மக்களால் இவ்வாறு எடுத்துரைக்கப்பட்டது.

தனங்கிளப்பு, எழுதுமட்டுவாள் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் மக்கள் மீளக்குடியமர இன்னமும் அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக நூற்றுக்கணக்கான ஹெக்ரேயர் வயல் நிலங்களைப் பயன்படுத்த முடியாதுள்ளன.

அத்துடன், இராணுவத்தின் பயன்பாட்டிலிருந்து விடுவிக்கப்பட்ட பகுதிகளிலும் கிணறுகள் மூடப்பட்டுள்ளன. இதனால் விடுவிக்கப்பட்ட பகுதிகளிலும் விவசாய நடவடிக்கைகளை ஆரம்பிக்கமுடியாதுள்ளதாக மக்கள் அங்கு தெரிவித்தனர். (எ-14)

# மோசமாகச் சேதமடைந்துள்ள மானிப்பாய் இந்துக்கல்லூரி வீதி

நவாலி, ஏப்.22

ஆனைக்கோட்டை - நவாலி பிரதான வீதியிலிருந்து சங்குப்பிள்ளை வீதி - இந்துக்கல்லூரி வீதியூடாக மானிப்பாய் செல்லும் வீதி படு மோசமாகச் சேதமடைந்துள்ளதால் மக்கள் பிரயாணம் செல்வதில் பெரும் சிரமங்களை அனுபவித்து வருகின்றனர்.

சிறு சிறு கிடங்குகளாக இருந்த இவ் வீதியில் தற்போது பெரிய குழிகள் தோன்றியுள்ளதால் இதனூடாகச் செல்லும் வாகனங்கள் மெதுவாகவும் குழிகளில் விழுந்தெழும்பியும் செல்கின்றன. அத்துடன் பாதசாரிகள், சைக்கிளோட்டிகள் வீதியோரங்களால் செல்ல வேண்டியுள்ளது.

சிறிய மழை பெய்தாலும் இந்தக் குழிகளில் வெள்ளம் தேங்கி வீதியை மூடி நிற்பதால் அதனூடாக வாகனங்கள் செல்லும் போது மக்கள் வெள்ளத்தால் நனைகின்றனர்.

சம்மந்தப்பட்டவர்கள் இதனை நேரடியாகப் பார்வையிட்டு உடன் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (த-100)

# ஓடும் பஸ்ஸில் இருந்து கொண்டு ஜன்னல் வழியே கை கழுவிய பயணிகள்

## வீதியால் சென்றோர் நீரில் நனைந்தனர்

யாழ்ப்பாணம், ஏப். 22

யாழ்ப்பாணத்திலிருந்து கோப்பாய் இராச வீதியில் நேற்றுமுன்தினம் பிற்பகல் 5 மணியளவில் சென்று கொண்டிருந்த பஸ்ஸில் இருந்த பயணிகள் ஜன்னல் வெளியே கையை நீட்டி போத்தல் தண்ணீரில் கையைக் கழுவிக்கொண்டு சென்றமையால் அந்த வீதியில் சென்ற அனைவரும் தண்ணீரில் நனைந்தனர்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்றது.

பயணிகள் பஸ்ஸின் உள்ளே உணவருந்திய பின்னர் பஸ் ஜன்னலின் வெளியே கையைக் கழுவும் போதே இவ்வாறான சம்பவம் நடைபெற்றது எனப் பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவித்தனர்.

இதனால் வீதியில் பயணித்தவர்கள் உடல் முழுவதும் தண்ணீரில் நனைந்தமையால் அலுவல்கள் நிமித்தம் சென்று கொண்டிருந்த பலர் வீடு திரும்பிச் சென்றனர் எனவும் தெரிவிக்கப்பட்டது.

அதுமட்டுமல்ல யாழ்-கொழும்பு பஸ்ஸில் பயணிப்பவர்களும் கழிவுப் பொருள்களை பஸ்ஸின் ஜன்னல் ஊடாக வெளியே எறிவதால் வீதியில் செல்பவர்கள் பாதிக்கப்படுகிறார்கள் எனவும் பலர் தெரிவிக்கின்றனர்.

எனவே, இந்த விடயத்தில் பஸ் செலுத்துநர்கள் கவனம் எடுத்து பஸ்ஸில் பயணம் செய்யும் போது பயணிகள் கழிவுப் பொருள்களை வெளியே வீசவிடாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். பஸ் பயணத்தின் போது பயணிகள் சாப்பிட்ட பின்னர் ஓர் இடத்தில் பஸ்ஸை நிறுத்திப் பயணிகளை இறக்கிக் கைகளைக் கழுவ அனுமதிக்க வேண்டும் எனவும் பாதிக்கப்பட்ட மக்கள் தரப்பில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (எ)

# யாழ்.நகர் வர்த்தகர்களின் குறைகளை கேட்டறிந்தார் சரவணபவன் எம்.பி.

யாழ்ப்பாணம்,ஏப்.22



யாழ்.நகர் நவீன சந்தைக் கட்டடத் தொகுதியிலுள்ள வர்த்தக நிலையங்களின் உரிமையாளர்கள் எதிர்நோக்கிவரும் பிரச்சினைகள் குறித்துத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் கேட்டறிந்தார். நவீன சந்தைக் கட்டடத் தொகுதிக்கு நேற்றுமுன்தினம் மதியம் சென்ற நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் வர்த்தக நிலைய உரிமையாளர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை நேரில் பார்த்தும் கேட்டும் அறிந்தார்.

வர்த்தக நிலைய உரிமையாளர்களைத் தனியாகவும் கூட்டாகவும் சந்தித்தே அவர் பிரச்சினைகளை அறிந்து கொண்டார்.

வர்த்தக நிலையங்களின் முன்பாகப் பொருள்கள் வைக்கப்படும் போது தாம் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக வர்த்தக உரிமையாளர்கள் நாடாளுமன்ற உறுப்பினருக்குச் சுட்டிக் காட்டினர். அத்தோடு யாழ்ப்பாணப் பொலிஸாரின் நடவடிக்கைகள் சில சந்தர்ப்பங்களில் வர்த்தகச் செயற்பாடுகளுக்கு இடையூறாக இருக்கின்றன எனவும் அவர்கள் அதிருப்தி தெரிவித்தனர்.

நவீன சந்தைக் கட்டடத் தொகுதியின் நடுவே அமைக்கப்பட இருக்கும் பூந்தோட்டத்தின் ஆரம்பக்கட்ட வேலைத் திட்டங்கள் தொடர்பாகவும் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் வர்த்தகர்களிடம் கேட்டறிந்தார் (எ-14)

# கீரிமலை நகுலேஸ்வரா ம.வியில் சேதமடைந்த கிணறு புனரமைப்பு

சண்டிலிப்பாய்,ஏப்.22

கீரிமலை நகுலேஸ்வரா மகா வித்தியாலயத்தில் சேதமடைந்த நிலையிலுள்ள கிணற்றைத் திருத்தியமைக்கும் பணி தற்பொழுது ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

சேவாலங்கா நிறுவனம் இந்தப் புனரமைப்பு வேலையை மேற்கொண்டுள்ளது.

உயர் பாதுகாப்பு வலயத்திலுள்ள கீரிமலை நகுலேஸ்வரா மகாவித்தியாலயம் அமைந்துள்ள பிரதேசம் விடுவிக்கப்பட்ட பிரதேசமாகக் கடந்த மாதம் பாதுகாப்புப் படையினரால் அறிவிக்கப்பட்டிருந்தது.

இதைத் தொடர்ந்து மகாவித்தியாலயத்தைச் சேர்ந்த மாணவர்கள், பழைய மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் முழுமையாகச் சேதமடைந்த நிலையில் ஒரு சில தூண்களுடன் மட்டும் இருந்த இந்த மகாவித்தியாலயத்தைச் சிரமதானம் மூலம் துப்புரவு செய்வதில் ஈடுபட்டனர்.

மகாவித்தியாலயத்திலிருந்த கிணறு போர்க்காலச் சூழ்நிலையைத் தொடர்ந்து பாவிக்க முடியாதவாறு பலத்த சேதத்துக்கு உள்ளானது.

இது குறித்து வலி.வடக்குப் பிரதேச செயலரின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டமையைத் தொடர்ந்து சேதமடைந்த கிணற்றை சேவாலங்கா நிறுவனம் திருத்தியமைக்க முன்வந்தது. தற்பொழுது கிணறு புனரமைக்கும் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கீரிமலையில் இயங்கி வந்த மேற்படி மகாவித்தியாலயம் இராணுவ நடவடிக்கையைத் தொடர்ந்து பல வருடங்களாக சண்டிலிப்பாயில் இயங்கி வருவது குறிப்பிடத்தக்கது. (த-115)

# அரச ஊழியர், மாணவரிடையே வீட்டுத் தோட்டப் போட்டிகள்

பருத்தித்துறை,ஏப்.22

மரக்கறி உற்பத்திக்கான துரித நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் யாழ்.மாவட்ட அரச அலுவலகங்கள், பாடசாலைகள் மற்றும் அரச ஊழியர்கள் மாணவர்களுக்கிடையே வீட்டுத் தோட்டப் போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

இந்தப் போட்டிகள் ஓகஸ்ட் மாதம் நடைபெறவுள்ளன. இதற்கான விண்ணப்பம் அரச அலுவலகங்களூடாகக் கோரப்பட்டுள்ளது.

அரச அலுவலகங்களுக்கிடையிலான வீட்டுத் தோட்டப் போட்டி, பாடசாலைகளுக்கிடையிலான வீட்டுத் தோட்டப் போட்டி, மாணவர்களுக்கிடையிலான வீட்டுத் தோட்டப் போட்டி, அரச உத்தியோகத்தர்களுக்கு இடையிலான வீட்டுத் தோட்டப் போட்டி என நான்கு போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

ஜனாதிபதி செயலகத்தால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள 'பயிர் வளர்ப்போம்; தேசத்தை முன்னேற்றுவோம்' என்ற கருப்பொருளுக்கமைய இந்தப் போட்டி நாட்டின் சகல பகுதிகளிலும் மாவட்ட ரீதியாக நடத்தப்படவுள்ளது. (த-190)

# ஆஸ்பத்திரிக்கு வந்த சிறுமியிடம் நகைகளை உருவினார் ஆசாமி

## தாயார் சிகிச்சைக்குச் சென்ற வேளை

யாழ்ப்பாணம், ஏப். 22

யாழ். போதனா வைத்திய சாலையில் சிறுமி ஒருவரை தந்திரமாக அழைத்துச் சென்ற இனந்தெரியாத நபர் ஒருவர் சிறுமி அணிந்திருந்த ஒன்றே கால் பவுண் பெறுமதியான ஒரு சோடி காப்பைப் பறித்துக் கொண்டு தப்பினார்.

அழுது கொண்டு நின்ற சிறுமியை அவ்வழியே வந்தவர்கள் அழைத்துச் சென்று தாயிடம் ஒப்படைத்தனர்.

இந்தத் துணிகரச் சம்பவம் நேற்றுமுன்தினம் முற்பகல் 10.30 மணியளவில் யாழ். போதனா வைத்தியசாலையில் இடம்பெற்றது.

கிளிநொச்சியைச் சேர்ந்த ச. மாலினி (வயது - 8) என்ற சிறுமியே அழைத்துச் செல்லப்பட்டு நகைகளை உருவிய பின்னர் விடுவிக்கப்பட்டவராவார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது:-

கிளிநொச்சியிலுள்ள குறித்த சிறுமியின் தாயார் கண் நோய்க்குச் சிகிச்சை பெறுவதற்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு நேற்று முன்தினம் வந்தார். சிகிச்சைக்கு அதிகம் பேர் வந்திருந்தமையால் சிறுது நேரம் காத்திருந்த பின்னர் அவர் உள்ளே அழைக்கப்பட்டார். இதனால் தனது 8 வயதுச் சிறுமியை அதுவரை தான் இருந்த இடத்தில் நிற்கும்படி கூறி விட்டுத் தாயார் உள்ளே சென்றுவிட்டார்.

இவற்றையெல்லாம் அவ்விடத்தில் நின்று அவதானித்துக்கொண்டிருந்த ஒருவர் சிறுமியின் தந்தையாரின் நண்பர் எனக்கூறி சிறுமியின் கையைப் பிடித்துள்ளார். சிறுமி அழத் தொடங்கியதனால் உடனேயே அவ்விடத்திலிருந்து சிறுமியை வைத்தியசாலையின் பிரதான வாயிலினூடாக வெளியே கொண்டு சென்றுவிட்டார்.

வெளியே ஆஸ்பத்திரி வீதியில் உள்ள யாழ்ப்பாணக் கல்லூரியின் பட்டப்படிப்புகள் அலகு அமைந்துள்ள ஒழுங்கையினுள் சிறுமியை கொண்டு சென்ற அந்த நபர், சிறுமியின் கையில் இருந்த ஒன்றேகால் பவுண் நிறையுடைய ஒரு சோடிக் காப்பை நெரித்து உடைத்துக் கழற்றிக் கொண்டு தப்பி ஓடிவிட்டார்.

அந்த நேரம் அவ்வழியே வந்தவர்கள் அநாதரவான நிலையில் சிறுமி அழுது கொண்டிருந்தமையைக் கண்டு விசாரித்த போது சம்பவம் தெரியவந்தது. அவர்கள் உடனடியாக அந்தச் சிறுமியை வைத்தியசாலைக்குக் கொண்டு சென்று அவரது தாயிடம் ஒப்படைத்தனர்.

இந்த சம்பவம் தொடர்பாக சிறுமியின் தாய் யாழ்ப்பாண பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார். பொலிஸார் இது குறித்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். (எ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூநகரி வைத்தியசாலையில் தொடர்ந்தும் இராணுவமா?
# ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் கேள்வி

பூநகரி, ஏப்.22

பூநகரி வைத்தியசாலைக்குப் புதிய இடத்தில் புதிய கட்டட மென்றால் பழைய இடத்தில் இராணுவம் தொடர்ந்தும் குடியிருக்கப் போகிறதா? நாடாளு மன்ற உறுப்பினர் சி.சிறீதரன் இவ்வாறு கேள்வியெழுப்பி னார்.

யாழ்.செயலகத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களின் ஒருங்கிணைப் புக்குழுக் கூட்டத்தில் மேற் கண்டவாறு கேள்வி எழுப்பினார் நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன்.

யுத்தம் முடிவடைந்து இரண்டு ஆண்டுகளைக் கடந்த நிலை யில் பூநகரி வைத்தியசாலை தொடர்ந்தும் இராணுவ முகா மாகவே இருக்கிறது. இதனால் அந்தப் பகுதி மக்கள் வைத்திய சேவையைப் பெறுவதில் பல் வேறு இடர்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இந்த நிலையில் பூநகரி வைத்தியசாலையைப் புதிய இடத்தில் அமைப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டு வருவதாக அறிகிறோம். மக்களின் வைத்தியசேவை யைப் பூர்த்தி செய்யும் கட்டட மொன்றில் தொடர்ந்தும் இராணு வம் குடியிருக்கப் போகிறதா? இதுகுறித்து சுகாதார அமைச் சின் வடமாகாணச் செயலாளர் ஆர். ரவீந்திரனை விளக்கம் தரு மாறு அவர் கேட்டுக் கொண் டுள்ளார்.

இதற்குச் செயலாளர்ஆர்.ரவீந்தி ரன் பதில் கூறுகையில்:-

இந்த வைத்தியசாலையை மக்களின் தேவை கருதி விடு விக்குமாறு பல தடவைகள் பல் வேறு தரப்பினிடமும் வேண்டு கோள் விடுத்தோம்.

ஆனால், உரிய பதில் எது வும் கிடைக்கவில்லை. இதன் காரணமாக மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு வைத்திய சாலையைப் புதிய இடத்தில் அமைப்பது குறித்துத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

இதுதொடர்பாக நாடாளு மன்ற உறுப்பினர்கள் நாடாளு மன்றில் தமது கருத்துக்களை முன்வைத்துப் பூநகரி வைத்திய சாலையைப் பழைய இடத்தில் இயங்குவதற்கான ஏற்பாடு களைச் செய்து தந்தால் எமக்கு வசதியாக இருக்கும் என்றும் அவர் தெரிவித்தார். (9-14)

## மிதிவெடி அபாயம்

அக்கராயன், ஏப்.22

கிளிநொச்சி வன்னேரிக் குளத்தைத் தேவன் கட்டுடன் இணைக்கும் பணிகளை முன் னெடுப்பதற்கு இந்தப் பகுதி யில் புதைக்கப்பட்டுள்ள மிதி வெடிகள் பெரும் தடையாக உள்ளன என இந்தப் பகுதியில் வசிக்கும் மக்கள் தெரிவிக் கின்றனர்.

வன்னேரிக் குளத்தையும் தேவன்கட்டையும் இணைத்து நீர்த்தேக்கம் ஒன்றை உருவாக் கும் பணிகளை முன்னெடுப் பதற்கு முயற்சிகள் ஆரம்பிக்கப் பட்டன. ஆனால், இந்தப் பகுதி யில் மிதிவெடிகள் புதைக்கப் பட்டுள்ளன என்று இந்தப் பகுதி விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

மேலும் இது தொடர்பாக இவர் கள்அரசஉயரதிகாரிகளிடம்முறைப் பாடும் செய்துள்ளனர். (க-410)

## வைத்தியரை நியமிக்க முடியாத நிலைமை; வட்டக்கச்சியில் மக்கள் பெரும் அவலத்தில்

வட்டக்கச்சி வைத்தியசாலைக்கு நிரந்தர வைத்தியரை நியமிப்பதற்கு நான்கு தடவைகள் விண்ணப்பம் கோரப் பட்டும் எவரும் விண்ணப்பிக்கவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த செவ்வாய்க்கிழமை யாழ். செயலகக் கேட்போர் கூடத்தில் நடை பெற்ற யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களுக்கான ஒருங்கிணைப் புக்குழுக் கூட்டத்தில் மேற்படி விடயம் பிரஸ்தாபிக்கப்பட்டது.

தர்மபுரம், முழங்காவில், வட்டக்கச்சி ஆகிய வைத்தியசாலைகளில் நிரந்தர வைத்தியர் நீண்டகாலமாக நியமிக்கப் படாமலிருந்தமையால் அந்தப் பகுதி யில் உள்ள மக்கள் பல்வேறு சிரமங் களை எதிர்நோக்கியிருந்தனர்.

இருப்பினும், கடந்த மாதம் முதல் தர்மபுரம், முழங்காவில் வைத்தியசாலை களில் நிரந்தர வைத்தியர்கள் நியமிக்கப் பட்டுள்ளனர்.

ஆனால், வட்டக்கச்சி வைத்தியசாலைக்கு இதுவரை வைத்தியர் எவரும் நியமிக்கப் படவில்லை. அந்தப் பதவிக்கான வெற்றி டத்தை நிரப்புவதற்கு நான்கு தடவை கள் விண்ணப்பங்கள் கோரப்பட்ட போதும் இதுவரை எவரும் விண்ணப் பிக்கவில்லையென்று தெரிவிக்கப்பட்டது.

இந்த வைத்தியசாலையில் நிரந்தர மாக வைத்தியர் ஒருவரை நியமிப்பதற் கான நடவடிக்கை மேற்கொள்ளப்படு மென கிளிநொச்சி மாவட்ட நாடாளு மன்ற உறுப்பினர் சி.சிறீதரன் அந்தக் கூட்டத்தில் தெரிவித்திருந்தார். (க-9-14)

## வர்த்தக நிலையங்களின் பாதுகாப்புக்கு இராணுவத்தினரின் புதிய பொறிமுறைகள்

கிளிநொச்சி, ஏப்.22

கிளிநொச்சி, பரந்தன், முரசு மோட்டை, தருமபுரம் போன்ற இடங்களில் அமைந் துள்ள வர்த்தக நிலையங்களின் பாதுகாப்புத் தொடர்பாக இராணுவத்தினர் கலந்துரை யாடல்களை மேற்கொண்டு வருவதுடன், புதிய பொறிமுறைகளையும் ஏற்படுத்தி வருகின்றனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

முரசுமோட்டை, பரந்தன் ஆகிய இடங் களில் அண்மையில் எட்டு வணிக நிலை யங்கள் உடைக்கப்பட்டுப் பெறுமதியான பொருள்கள் களவாடப்பட்டுள்ளன. இதைத் தொடர்ந்து இவ்வாறான களவுச் சம்பவங்கள் எதிர்காலத்தில் இடம் பெறா திருக்க இராணுவத்தினர் வர்த்தகர்களைச் சந்தித்துக் கலந்துரையாடி வருகின்றனர்; புதிய பொறிமுறைகளையும் உருவாக்கி வருகின்றனர்.

பரந்தன் பகுதியில் இரவு வேளை களில் படையினர் காவல் கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்; இவர்களு டன் இரு வர்த்தகர்களும் காவல் கடமை களில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதேபோன்று கிளிநொச்சி நகர வணிக நிலையங்களிலும் சந்தை வர்த்தக நிலை யங்களிலும் வர்த்தகர்கள் காவல் கடமை யில் ஈடுபட வேண்டும். அத்துடன் கடைத் தொகுதிகள் பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு சுழற்சி முறையில் வர்த்தக நிலைய உரிமை யாளர்கள் காவல் கடமைகளில் ஈடுபட வேண்டும் எனவும் சந்தேகத்துக்குரிய முறை யில் எவரது நடமாட்டங்கள் இருக்குமாயின் தங்களுக்குத் தகவல் தருமாறும் இராணு வத்தினர் தெரிவித்துள்ளனர். (க-6)


# ஐந்தாம் ஆண்டு நீங்காத நினைவுகள்

## திருமதி
# மகாலட்சுமி குலவீரசிங்கம்

திதி: 27.04.2011 புதன்கிழமை

**தோற்றம்**
**13.11.1944**

**மறைவு**
**22.04.2006**



22.04.2006 சனிக்கிழமை அபரபக்க தசமித் திதியில் லண்டனில் சிவபதமடைந்த
**திருமதி மகாலட்சுமி குலவீரசிங்கம்** அவர்களின்
**ஐந்தாம் ஆண்டு நினைவுகள்**
இவர் வேலணை வடக்கு சோளாவத்தையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்டு, இறுதிக்காலம் லண்டனில் வசித்தவரும் செல்லையா குலவீரசிங்கம் அவர்களின் பிரிய பத்தினியும் காலஞ்சென்றவர்களான இராசரத்தினம்- மனோன்மணி தம்பதியரின் சிரேஷ்ட புதல்வியும் செல்லையா- இராசலட்சுமி தம்பதியரின் மருமகளுமாவார்.
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

குலவிளக்கு அணைந்த பிரிவால் வாடும்:
**அன்புக் கணவர்,**
**பிள்ளைகள்** :- மோகன், குலச்செல்வன், ஸ்ரீகௌரி, ஜெயஸ்ரீ, வாணிஸ்ரீ,
**மருமக்கள்** :- சிவகௌரி, ரேணுகா, மகேஸ்வரன், பகீரதன், சிவரஞ்சன்,
**பேரப்பிள்ளைகள்** :- தபினா, கரிஷ்மா, யுபாசனா, வேணிஷா, ராகுல், வருண், ஷானுஜா, கிஷ்னவி,
**சகோதரர்கள்** :- பரநிருபசிங்கம், அருந்தவநாதன், உஷாதேவி, யோகலட்சுமி, ஜெயலட்சுமி. மற்றும் உறவினர்கள்.

தகவல்:
செ.குலவீரசிங்கம் (லண்டன்). கு.சரவணநாதன் (மருமகன்-யாழ்ப்பாணம்).


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேய்ப்பாறைப்பிட்டியில் கண்ணி அகற்றப்படவில்லை அப்பகுதியில் தொழில் செய்யவேண்டாம் என அறிவுறுத்து

கிளிநொச்சி, ஏப்.22

மீன்பிடித் தொழிலில் ஈடுபடுவதற்குப் பாதுகாப்புப் படையினரால் தடைவிதிக்கப்பட்டுள்ள பேய்ப்பாறைப்பிட்டிக் கடற்பிரதேசத்தில் விதைக்கப்பட்ட கண்ணிவெடிகள் அகற்றப்படாமலிருப்பதனால் அந்தப் பகுதியில் மீன்பிடிப்பதைத் தவிர்க்குமாறு கரைச்சி வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசச் செயலாளர் கேட்டுக் கொண்டுள்ளார்.

இதனை மீறித் தொடர்ந்துதொழிலில் ஈடுபடுபவர்கள் மீது பொலிஸாரின் உதவியுடன் சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமென்றும் அவர் அறிவித்துள்ளார்.

வன்னிப் பிரதேசத்தில் பாதுகாப்புப் படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் ஏற்பட்ட யுத்தத்தைத் தொடர்ந்து பேய்ப்பாறைப்பிட்டிப் பிரதேசத்தில் விதைக்கப்பட்ட கண்ணிவெடிகள் அகற்றப்படுவதில் ஏற்பட்ட தாமதம் காரணமாக அந்தப் பகுதியிலுள்ள கடற்பிரதேசத்தில் மீன் பிடிப்பதற்குப் பாதுகாப்புப் படையினர் தடைவிதித்துள்ளனர்.

இந்த நிலையில் இந்தப் பிரதேசத்தில் மீள் குடியமர்த்தப்பட்ட மீனவர்கள் வறுமையின் காரணமாகப் பாதுகாப்புப் படையினரின் அறிவித்தலையும் பொருட்படுத்தாமல் கடலுக்குச் சென்று மீன் பிடித்தொழிலில் ஈடுபட்டு வருகின்றார்கள். இதனால் உயிருக்கு ஆபத்து ஏற்படும் வாய்ப்பு அதிகமாகவுள்ளது.

இந்த நிலையைக் கருத்தில் கொண்டு மீனவர்களின் நலன் கருதி தடைசெய்யப்பட்ட பிரதேசங்களில் மீன்பிடிப்பதைத் தவிர்க்குமாறு தெரிவித்துள்ள மேற்படி சமாசம் தொடர்ந்து மீன்பிடிப்பவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமென்றும் அறிவித்துள்ளது.

இதேவேளை, அரசால் தடைசெய்யப்பட்ட மீன் பிடி வலைகளைப் பாவித்து மீன் பிடிப்பவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமென்றும் மேலும் அறிவிக்கப்பட்டுள்ளது..

(க-115)

# இந்து ஆலயங்களின் நிர்வாகிகளுடன் மேலதிக அரச அதிபர் சந்திப்பு

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள இந்து ஆலயங்களின் நிர்வாகிகளுடான சந்திப்பொன்றை மேலதிக அரச அதிபர் செ. ஸ்ரீநிவாசன் நடத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த புதன்கிழமை மு.ப. 10 மணியளவில் கிளிநொச்சி மாவட்டச் செயலக மண்டபத்தில் இந்தச் சந்திப்பு நடைபெற்றது.


இதில் மாவட்ட உதவித் திட்டமிடல் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரனும் கலந்து கொண்டார்.

இந்தக் கலந்துரையாடலின் போது வடக்கின் வசந்தம் திட்டத்தின்கீழ் 14 இந்து ஆலயங்களுக்கு அவற்றின் புனரமைப்பு வேலைகளுக்கென வழங்கப்பட்ட நிதி தொடர்பாக முதலில் ஆராயப்பட்டது. மக்களின் மீள் குடியமர்வு காரணமாக இந்த ஆலயங்களின் புனரமைப்பு வேலைகள் சரியான முறையில் மேற்கொள்ளப்படவில்லையெனஇங்கு தெரிவிக்கப்பட்டது. இந்த வேலைகளை உடனடியாகப் பூர்த்தி செய்து உரிய நிதியைப் பெற்றுக் கொள்ளுமாறு ஆலய நிர்வாகிகள் கேட்டுக்கொள்ளப்பட்டனர். மேலும் ஆலயங்களின் புனரமைப்பு வேலைகளைப் படிப்படியாகப் பூர்த்தி செய்வதன் மூலம் ஒதுக்கப்பட்ட முழு நிதியையும் பெற்றுக்கொள்ள முடியுமெனவும் இந்தக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

37 இந்து ஆலயங்களின் புனரமைப்பு வேலைகளுக்கென பிரதேச கலாசார உத்தியோகத்தர், தொழில்நுட்ப உத்தியோகத்தர், ஆலய பரிபாலன சபையினர் ஆகியோர்இணைந்து மதிப்பீடு களைத் தயாரித்து இந்த மாதம் 30ஆம் திகதிக்குமுன்னர் சமர்ப்பிக்க வேண்டுமெனவும் இந்தக் கூட் டத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டது.

(க-6)

## பக்தி ஒலி எழட்டும்...



*முருகன் அருள் கிடைக்கும்:* க.விநாயகமூர்த்தி குடும்பத்தினர் கிளிநொச்சி ஸ்கந்தபுரம் முருகன் ஆலயத்துக்கு ஒருதொகுதி ஒலி பெருக்கிச் சாதனங்களை வழங்கிய நிகழ்வில் ஆலயப் பரிபாலன சபையினரும் காணப்படுகின்றனர். (410)

# போட்டிகள் பிற்போடப்பட்டன

கிளிநொச்சி,ஏப்.22

கிளிநொச்சி மாவட்டப் பாடசாலைகளுக்கிடையில் நாளை 23 ஆம் திகதி நடைபெறவிருந்த கரப்பந்தாட்டப் போட்டியும் நாளை மறுதினம் 24 ஆம் திகதி நடைபெற இருந்த சதுரங்கப் போட்டியும் தவிர்க்க முடியாத காரணத்தினால் பிற்போடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பிற்போடப்பட்ட கரப்பந்தாட்டப் போட்டிகள் எதிர்வரும் 26 ஆம் திகதி கிளிநொச்சி மத்திய கல்லூரி மைதானத்திலும் சதுரங்கப் போட்டிகள் எதிர்வரும் 27ஆம் திகதி கிளிநொச்சி மகாவித்தியாலயத்திலும் நடைபெறுமென கிளிநொச்சி வலய உடற்கல்வி உதவிக்கல்விப் பணிப்பாளர் பி. விஷ்ணு அறிவித்துள்ளார்.(க-405)

# அவலமான நிலையில் பேருந்து நிலையம்

முல்லைத்தீவு நகரப் பேருந்து நிலையம் அடிப்படை வசதிகள் இன்றிக் காணப்படுவதனால் பயணிகள் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

முல்லைத்தீவுப் பேருந்து நிலையம் போதிய அடிப்படை வசதிகள் எதுவும் இன்றிக் காணப்படுகின்றது. பயணிகளுக்கான கழிப்பறை வசதிகள், குடிதண்ணீர் வசதிகள் எவையும் இங்குஇல்லை.

அத்துடன் பயணிகள் தங்குவதற்கான கட்டட வசதிகள் கூட இல்லாத நிலையே காணப்படுகின்றது.

இவ்வாறு வசதிக்குறைபாடுகளுடன் இந்தப் பேருந்து நிலையம் காணப்படுவதனால் இதனைப் பயன்படுத்தும் ஆயிரத்துக்கும் மேற்பட்ட பயணிகள் தினமும் சிரமங்களை எதிர்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

(க-6)

# சுகாதாரத் தொண்டர்களின் பணி நிறுத்தம்

கிளிநொச்சி,ஏப்.22

சுகாதார விழிப்புணர்வுச் செயற்பாடுகளுக்கென சர்வதேச மருத்துவக் குழுவினரால் நியமிக்கப்பட்டிருந்த சுமார் அறுபது சுகாதாரத் தொண்டர்களும் எதுவித அறிவித்தலும் இன்றி நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தின் மீள்குடியமர்த்தப்பட்ட பிரதேசங்களில் சுகாதார விழிப்புணர்வுச் செயற்பாடுகளை முன்னெடுக்கும் வகையில் சுகாதார சேவைகள் திணைக்களத்தினால் 60 தொண்டர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர்.

இவர்களுக்குச் சர்வதேச மருத்துவக் குழுவினரால் உதவிக் கொடுப்பனவுகள் வழங்கப்பட்டு வந்தன. தற்போது இந்தத் தொண்டர்கள் நிறுத்தப்பட்டுள்ளனர்.இதனால் சுகாதார விழிப்புணர்வுச் செயற்பாடுகளை முன்னெடுப்பதில் சிரமங்கள் காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (க-6)

# வீட்டுத் திட்டத்தில் புறக்கணிக்கப்பட்டுவரும் மீள்குடியமர்ந்த இராமநாதபுரம் மக்கள்

கிளிநொச்சி, இராமநாதபுரம் கிராமத்தில் இதுவரை எதுவித வீட்டுத்திட்டங்களும் வழங்கப்படவில்லையெனப் பலரும் தெரிவித்துள்ளனர்.

கிளிநொச்சி, இராமநாதபுரம் கிராமத்தில் இதுவரை சுமார் 695 குடும்பங்கள் மீளக்குடியமர்த்தப்பட்டுள்ளன. இந்த நிலையில் பெரும்பாலான குடும்பங்கள் நிரந்தர வீடுகள் இன்றித் தறப்பாள் குடிசைகளிலும் தற்காலிகக் கொட்டகைகளிலும் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டு வாழ்ந்து வருகின்றனர்.

இந்தப் பிரதேசத்தில் நிரந்தர வீடுகளை அமைப்பதற்கான அனுமதிகள் எவையும் இதுவரை கிடைக்கப் பெறவில்லை. ஆனால், அயற்கிராமங்களில் மீள்குடியமர்த்தப்பட்டவர்களில் குறிப்பிட்ட தொகையினருக்[illegible] நிரந்தர வீடுகள் அமை[illegible]கான அனுமதிகள் வழங்க[illegible], அதற்கானகொடுப்பனவுகளும் வழங்கிய நிலையில்வீட்டுத்திட்டப்பணிகள்முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

ஆனால், தங்களுக்கு இதுவரை எவ்வித வீட்டுத் திட்டங்களும் [illegible]க்கவில்லையென இரா[illegible]ம் மக்கள் கவலை தெரி[illegible]ளனர். (க-6)

# கிளிநொச்சி மத்திய ஆரம்ப வித்தியால[illegible]த்தில் சிறப்பாக நடைபெற்ற புத்தாண்டு விழா

கிளிநொச்சி,ஏப்.22

கிளிநொச்சி மத்திய ஆரம்ப வித்தியாலயத்தில் இந்த ஆண்டுக்கான சித்திரைப் புத்தாண்டு விழா பாடசாலை அதிபர் திருமதி காஞ்சனா சிவகரன் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது.

இந்த நிகழ்வுக்கு முன்னதாகப் பாடசாலையில் பொங்கல் நிகழ்வு விசேட பூசை வழிபாடுகளும் சிறப்புற நடைபெற்றன. தொடர்ந்து கைவிசேடம் வழங்கும் நிகழ்வு நடைபெற்றது. இந்த நிகழ்வில் தரம் - 1 மாணவர்கள் அனைவருக்கும் கைவிசேடம் வழங்கப்பட்டது. கைவிசேடத்தினை நிகழ்வில் விருந்தினர்களாகக் கலந்து கொண்ட கிளிநொச்சி வலயக் கல்வி அலுவலக ஆரம்பக்கல்வி சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்களான பொ.விஜயநாதன், திருமதி வசந்தா சுப்பிரமணியம், சு.சிவபாலன், பா.ஸ்ரீஸ்குமார், திருமதி த.லோகநாதன் ஆகியோர் வழங்கினர்.

தொடர்ந்துபுத்தாண்டுவிழாவை முன்னிட்டு வகுப்பு ரீதியாக நடத்தப்பட்ட கோலம் போடுதல், மாலை கட்டுதல், தோரணம் கட்டுதல் ஆகிய போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்குப் பரிசில்கள் வழங்கப்பட்டன. பரிசில்களை கிளிநொச்சி மத்திய கல்லூரியின் பதில் அதிபர் திருமதி கெங்காதேவி ஜெய[illegible] அதிபர் ஆ.ஆலால சுந்[illegible]யோர் வழங்கினர்.

[illegible] சிறப்புரையை ஆசிரிய[illegible]சகர் பொ.விஜயநாதன் நிகழ்த்தினார். வரவேற்புரையை ஆசிரியர் ப.சசிரதனும் நன்றியுரையை ஆசிரியர் ஸ்ரீ. பிறேம்குமாரும் நிகழ்த்தினர்.

(க-405)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்முனை பொது மயானத்தில் சீர்கேடு; சீராக்குமாறு மாநகர மேயரிடம் கோரிக்கை

அம்பாறை,ஏப்.22

கல்முனை பொதுமயானத்தைச் சீராகப் பராமரிக்க ஆவன செய்யுமாறு கல்முனை மாநகர சபையிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அகில இலங்கைப் பொது ஊழியர் முன்னணி இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளது.

பல வருட காலமாகச் சீரான பராமரிப்பு இன்றியும் சுற்று மதில் அமைக்கப்படாத நிலையிலுமுள்ளதால் இந்த மயானம் தொடர்பில் பொதுமக்கள் பெரும் சிரமங்களை அனுபவிக்க வேண்டிய அவலம் இருந்து வருவதாகப் பொது ஊழியர் முன்னணி சுட்டிக் காட்டியுள்ளது.

கல்முனைப் பொதுமயானத்தின் நிலைமை குறித்து அகில இலங்கை பொது ஊழியர் முன்னணியின் சார்பில் அதன் தலைவர் எஸ்.லோகநாதன், செயலாளர் ஐ.எம்.இப்றா வெல்லை ஆகியோர் ஒப்பமிட்டு மகஜர் ஒன்றை அனுப்பி வைத்துள்ளனர்.

கல்முனை மாநகர மேயர் எஸ்.இஸட், எம்.மசூர் மௌலானாவுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள இந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டவை வருமாறு:

கல்முனை மாநகரசபைப் பிரிவிலுள்ள பதினொரு கிராம சேவகர் பிரிவுகளில் வசிக்கும் தமிழ், சிங்கள, கிறிஸ்தவ மக்களுக்குப் பொதுவானதாகக் கல்முனைப் பொதுமயானம் அமைந்துள்ளது.

இந்த மூவின மக்களதும் நல்லடக்கங்கள் சமயக் கிரியைகளுடன் இந்தப் பொது மயானத்திலேயே இடம்பெற்று வருகின்றன.

இந்தப் பொது மயானம் கடந்த பல வருட காலமாகச் சீரான பராமரிப்பு இன்மையால் பற்றைகள், புதர்கள் நிறைந்த காடாகக் காட்சியளிக்கின்றது.

குறிப்பாக இந்த மயானம் சுற்று மதிலின்றிக் காணப்படுவதால் கட்டாக்காலி மாடுகள், நாய்களின் உறைவிடமாகவும் கழிவுகள், குப்பைகள் கொட்டப்படும் இடமாகவும் காட்சியளிக்கிறது.

இந்த மயான நிலைமைகள் குறித்து இங்கு வாழும் மக்களும் பொது அமைப்புகளும் மற்றும் ஆலய நிர்வாகத்தினரும் மக்கள் பிரதிநிதிகளிடமும் மாநகர சபையிடமும் முறையீடு செய்தும் எதுவித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை.

எனவே, மக்களால் தெரிவு செய்யப்பட்ட மாநகர முதல்வர் என்ற வகையில் இந்த விடயத்தில் உடனடி நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

கல்முனைப் பொது மயானத்தைச் சிறந்த முறையில் சீரமைத்து, சீரான பராமரிப்புடன் மக்கள் பயன்பெற ஆவன செய்யுமாறு கோருகின்றோம். இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

மகஜரின் பிரதிகள் கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர், அம்பாறை மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ஆகியோருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (ச-30)

# வருடத்துக்கு ஒரு தடவை நிகழ்வுகளை நடத்துவதால் கலையை வளர்க்க முடியாது

## மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் தெரிவிப்பு

மட்டக்களப்பு,ஏப்.22

வருடத்துக்கு ஒரு தடவை கலை நிகழ்வுகளை நடத்துவதால் கலையை வளர்க்க முடியாது. அந்தக் கலையை தொடர்ச்சியாகப் பயில வேண்டும்.

இவ்வாறு தெரிவித்தார் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சீனித்தம்பி யோகேஸ்வரன்.

வாழைச்சேனை, புதுக்குடியிருப்பு கலைவாணி கலாமன்றம் நடத்திய புதுவருட விளையாட்டு, கலை விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும் போதே இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

இந்த நிகழ்வில் இவர் தொடர்ந்து உரையாற்றுகையில்:

இந்த மண்ணில் பிறந்து, இந்த மண்ணில் வாழ்ந்து நாடாளுமன்றம் சென்றுள்ள நான் கடந்த 10 வருடங்களுக்கு மேலாக இந்த மன்றம் நடத்திய எந்த நிகழ்வுக்கும் சமுகமளிக்கவில்லை. இதற்கு காரணங்கள் உண்டு. ஆனால் இன்று இந்த நிகழ்வில் கலந்து கொண்டதையிட்டு மகிழ்ச்சி அடைகின்றேன்.

இந்தக் கிராமத்தை உருவாக்கியவர்களில் முக்கியமானவர் எனது தந்தையாவார். இன்று எனது தந்தையும், சேதுராசா என்னும் பெரியவருமே உயிருடன் உள்ளனர். இவர்கள் 14 பேர் சேர்ந்தே முதலில் இங்கு குடியேறியுள்ளனர்.

இந்தக் கிராமத்தைப் பல துறைகளிலும் முன்னேற்ற வேண்டிய கடமை எனக்கு உள்ளது. அதற்காக எனது ஊருக்கு மாத்திரம் சேவைபுரியும் சுயநலன் மிக்கவனாக என்னால் செயற்பட முடியாது. எமது மட்டக்களப்பு மாவட்டம் முழுவதும் எனது ஊரே. இந்த மாவட்டத்தின் முன்னேற்றத்துக்காக அயராது சேவையாற்ற வேண்டியது எனது கடமையாகும்.

இன்று எங்களது கலை, கலாசாரத் துறையை மேம்படுத்த மாவட்டத்தின் மூன்று தொகுதியிலும் கலாசார மத்திய நிலையங்களை ஸ்தாபிக்கக் கலாசார அமைச்சுடன் பேசி ஒழுங்கு செய்துள்ளேன். இதன் மூலம் கலைத்துறை சார்பான பல நடவடிக்கைகளை முன்னேற்ற முடியும் என எதிர்பார்க்கின்றேன். எனக்கு வழங்கப்படும் பன்முக நிதிகளை மாவட்டம் முழுவதும் பரவலாகப் பகிர்ந்து வழங்க வேண்டியது எனது கடமையாகும் என்றார். (ச-21)

**வீடு விற்பனைக்கு**

நாவலர் வீதியில் பிறவுண் வீதிக்கும் கஸ்தூரி யார் வீதிக்கும் இடையில் அமைந்துள்ள சகல வசதிகளுமுடைய வீடும் வளவும் விற்பனைக்குண்டு. தரகர் தேவையில்லை.

தொடர்பு: 0774927421

**தேவை**

நிறுவனம் ஒன்றுக்கு AD சாரதி அனுமதிப் பத்திரமுடைய அனுபவமுள்ள சிறிய ரக Sales வாகனம் ஓடுவதற்கு சாரதி தேவை. தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இல: 0750423072



**பட்டம் வழங்கிக் கௌரவிப்பு**



யாழ்ப்பாணம் கோண்டாவில் கிழக்கு
திருவருள்மிகு ஸ்ரீ ஞானப்பழனி முருகன்
ஆலயத்தின்
கர வருஷம் சித்திரைத் திங்கள் 07 ஆம் நாள் (20.04.2011)
புதன்கிழமை அன்று நடைபெற்ற
பஞ்சகுண்டபக்ஷ புனராவர்த்தன
ப்ரதிஷ்டா மஹா கும்பாபிஷேகத்தின் போது

பிரதம சிவாச்சாரியராக கடந்த 25 ஆண்டுகள் வரை நித்திய, நைமித்திய கிரியைகளை சிறப்பாகவும் பயபக்தியுடனும் நடத்தி வந்தமைக்காகவும் அத்துடன் இப்பெரும் சாந்தி விழாவாகிய குடமுழுக்கு விழாவினையும் பிரதம சிவாச்சாரியராக இருந்து சிறப்புற நடத்தியமைக்காகவும் மென்மேலும் இந்த ஆலயத்தில் அவரது தொண்டுகள் நீடித்து நடைபெற வேண்டியும் ஆலய பரிபாலன சபையால் கும்பாபிஷேக குருமார்கள் ஆசியுடன்

**"ஸ்கந்த பூஜா துரந்தரர்"**

எனும் சிறப்புப் பட்டத்தை
சிவஸ்ரீ. த.ரவீந்திரராசாக் குருக்கள் அவர்களுக்கு
ஸ்ரீ ஞானப்பழனி முருகன் திருவருளோடு
வழங்கிக் கௌரவிக்கப்பட்டது

ஆலய பரிபாலன சபை.

(40-22-23)(3376)

# மலையகப் பிரதேசங்களுக்கு மண்சரிவு எச்சரிக்கை

தற்போது காணப்படும் பருவக்காற்று மழை காரணமாக மண்சரிவு ஏற்படும் சாத்தியங்கள் காணப்படுவதால் மலையகப் பிரதேசவாசிகள் கவனமாக இருக்கவேண்டும் என தேசிய கட்டடங்கள் ஆராய்ச்சி நிறுவனம் எச்சரித்துள்ளது.

உயிர் ஆபத்து நிலைமை இதுவரை தோன்றவில்லையாயினும் மண்சரிவு ஏற்படக்கூடிய இடங்களில் வசிப்போர் அவதானமாக இருக்கவேண்டும் - என மண்சரிவு கற்கைகள் மற்றும் சேவைகள் பிரிவின் தலைமை அதிகாரி ஆர்.எம்.எஸ். பண்டார தெரிவித்துள்ளார்.

கண்டி, இரத்தினபுரி, கேகாலை உட்பட மலையகப் பிரதேசங்களில் பெரு மழை பெய்வதால் இவ்வாறான இடங்களில் வாழும் மக்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டுமென்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இடியுடன் கூடிய மழை இன்னும் சில நாள்களுக்குத் தொடரும். காலையில் வானம் தெளிவாக இருக்கும். ஆனால் மாலை வேளைகளில் இடியுடன் கூடிய மழை தொடரும் என வளிமண்டலவியல் திணைக்களம் நேற்று முன்தினம் தெரிவித்துள்ளது.

# உரமூடை கடத்தல்; இருவர் கைது

கல்முனையிலிருந்து நீர்கொழும்புக்கு எடுத்துச் செல்லப்படவிருந்த மானிய உர மூடைகளை வெலிகந்தையில் வைத்து பொலிஸார் பறிமுதல் செய்தனர்.

கடந்த செவ்வாய்க்கிழமை காலை கல்முனையிலிருந்து நீர்கொழும்புக்குச் சென்ற லொறி ஒன்றை வெலிகந்தைச் சோதனைச் சாவடியில் சோதனை செய்தபோது அதிலிருந்த 208 உரமூடைகளைப் பொலிஸார் கைப்பற்றினர். இந்தச் சம்பவத்துடன் தொடர்புபட்ட 2 சந்தேக நபர்களையும் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை கல்முனைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# ஆடையில் தீ பற்றி யுவதி மரணம்

தின்பண்டங்களைத் தயாரித்துக் கொண்டிருந்த 30 வயதுப் பெண்ணொருவரின் ஆடையில் தீப்பற்றியதால் எரிந்து மரணமான சம்பவமொன்று ஒப்பநாயக்க,ஹெலபல்லேயில் கடந்த சனிக்கிழமை நடைபெற்றுள்ளது.

இந்த விபத்தில் திருமணமாகாத தீபிகா ராஜகருணா எனும் யுவதியே மரணமாகியுள்ளார்.

ஒப்பநாயக்க பொலிஸார் மேலதிக விசாரணைகளில் ஈடுபட்டுள்ளனர். (ச-5)

**றோஸ் கன்றுகள் விற்பனைக்கு**

அகோர வெயில் வெக்கையைத் தாங்கி வளரக்கூடிய றோஸ் ஒட்டுக் கன்றுகள் எம்மிடம் விற்பனைக்குள்ளன. றோஸ் கன்றுகள் உற்பத்தியில் 40 வருடகால அனுபவமுள்ளவர்கள் ஸ்ரீ கிருஷ்ணா றோஸ்பாம். எம்மிடம் கன்றுகள் வாங்குபவர்களுக்கு, கன்று வளர்க்கும் முறைகள், வேப்பிலையில் நாம் தயாரித்த மருந்து வகைகள் முதலியன கொடுத்து முறையான விளக்கங்களும் அளிக்கப்படும். எமது இடத்தில் நாம் பெரிதாக வளர்த்து வைத்திருக்கும் றோஸ் கன்றுகளை நீங்கள் பார்வையிட்டு, எமது பிரதேசமான திருநெல்வேலியில் உற்பத்தி செய்யப்பட்ட றோஸ் கன்றுகளை வாங்குவீர். இந்தக் கன்றுகள் கண்டி, நுவரெலியா போன்ற குளிர்ப் பிரதேசங்களிலிருந்து கொண்டுவரப்பட்டவை அல்ல.

ஸ்ரீ கிருஷ்ணா றோசாத் தோட்டம்
தலங்காவற்பிள்ளையார் வீதி, திருநெல்வேலி மேற்கு.
கிராமசேவகர் பிரிவு ஜே/110

(41-20-50)

**கண்ணீர் அஞ்சலி**



யாழ்ப்பாணப் பிரதேச செயலக மேலதிக
மாவட்டப் பதிவாளர்
செல்வி கௌசல்யா
அவர்களின் பாசமிகு தந்தை
**சுப்பன் சிவராசு**
[ஓய்வூதியர், யா.மா.சபை]

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

விவாக, பிறப்பு, இறப்புப் பதிவாளர் சங்கம், யாழ்.மாவட்டம்.

(41-20-50)

**கண்ணீர் அஞ்சலி**

எமது சங்க உறுப்பினரும் விவாக,பிறப்பு,இறப்புப் பதிவாளருமான
திருமதி கௌரி மதனசேகர்
அவர்களின் அன்புத் தாய்
**திருமதி செ.நாகரத்தினம்**

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

விவாக,பிறப்பு,இறப்பு பதிவாளர் சங்கம், யாழ்ப்பாணம் மாவட்டம்.

(40-19-50)(3382)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிழக்குப் பல்கலை.பொலிஸ் நிலையை அகற்றினால் வேறு படையணி அங்கு நிறுத்தும் வாய்ப்பு வரும்

## அமைச்சர் எஸ்.பி. திஸநாயக்கா தெரிவிப்பு

மட்டக்களப்பு,ஏப்.22

கிழக்குப் பல்கலைக்கழகத்தில் உள்ள பொலிஸ் காவலரண் ஒருபோதும் அகற்றப்படமாட்டாது. பொலிஸ் சாவடி அகற்றப்படவேண்டுமானால் அந்த இடத்தில் வேறு ஒருபடைப் பிரிவின் காவலரணை அமைக்க வேண்டி வரும் என உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி. திஸநாயக்கா நேற்று முன்தினம் மட்டக்களப்பில் தெரிவித்துள்ளார். கிழக்குப் பல்கலைக்கழகத்துக்குப் பயணித்த உயர் கல்வி அமைச்சர் அங்கு பல்கலைக்கழகத்தின் ஊழியர்கள், விரிவுரையாளர்கள், மாணவர்களுடனான சந்திப்பின் போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் இங்கு தொடர்ந்து உரையாற்றுகையில், நீங்கள் பிறக்கும் போதே வடக்கு, கிழக்கில் யுத்த சூழ்நிலையில்தான் பிறந்தீர்கள். ஆகவே அந்தச் சூழ்நிலையில் பிறந்து வளர்ந்த பிள்ளைகளாகத் தான் நீங்கள் இருக்கின்றீர்கள்.

அந்தப் பிரச்சினைகளை எமது மனங்களில் இருந்து அகற்றிக் கொள்வதற்குச் சிறிது காலம் செல்லும். ஒரு குழந்தை பிறந்து வளரும் சூழலுக்கு ஏற்றால் போல்தான் அந்தக் குழந்தையின் நடவடிக்கையும் அமையும். அதேபோல் தாங்கள் படித்த, வாழ்ந்த சூழ்நிலையைக் கொண்டு தான் எடுக்கின்ற தீர்மானங்களும் அமைந்திருக்கும்.

எங்களது இராணுவத்தினருடன் நேருக்கு நேர் நின்று போர் புரிந்த பிரதியமைச்சர் முரளிதரன், இராணுவத்தினருடன் போர்புரிந்த தனது உள்ளத்தினை மாற்றிக்கொள்ள முடிந்துள்ளது. ஏனென்றால் கருணா அம்மான் பிறந்தது ஒரு ஐக்கிய இலங்கைக்குள். அவருக்கு இலங்கை தொடர்பிலும் இலங்கை மக்கள் தொடர்பிலும் சிங்கள மக்கள் தொடர்பிலும் நன்றாகத் தெரியும். அதனால் அவரது மனதை அவர் மிக விரைவாக மாற்றிக்கொண்டார்.

ஆனால் அந்த அனுபவம், அந்த உணர்வு சிறிதளவேனும் உங்களிடம் இல்லை. நாங்கள் அனைவரும் இந்தியாவில் இருந்து வந்தவர்கள். இந்தியாவின் தெற்கு மற்றும் கேரளப் பகுதியில் இருந்து எமது மக்கள் இங்கு வரும்போது அனேகமானவர்களை விஜய அரசன் அழைத்துக் கொண்டு வந்தார்- என்றார்.

இந்த நிகழ்வில் பிரதியமைச்சர் வி.முரளிதரன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சீ.யோகேஸ்வரன் உட்படப் பலர் உரை நிகழ்த்தினர். (ச-21)

# 'பாபேகியூ' நிலக்கரி அடுப்பிலிருந்து வெளியான நச்சுவாயுவை சுவாசித்த இளம் தம்பதி மரணம்

## நுவரெலிய சுற்றுலா விடுதியில்

நுவரெலியா,ஏப்.22

'பாபோகியூ' எனப்படும் நிலக்கரி அடுப்பிலிருந்து வெளிப்பட்ட நச்சுவாயுவை சுவாசித்த இளம் கணவனும், மனைவியும் ஒன்றாக மரணத்தைத் தழுவிய பரிதாபச் சம்பவம் நுவரெலிய சுற்றுலா விடுதி ஒன்றில் இடம்பெற்றுள்ளது.

வசந்தகாலக் கொண்டாட்டங்களில் கலந்து கொள்வதற்காக நுவரெலியாவுக்கு வந்திருந்த யக்கல பிரதேச வாசியான விராஜ் சிந்தக்க முதன்நாயக்க(வயது-24) மற்றும் அவரது மனைவியான போனேகல பிரதேச வாசியான அமாலி ராஜபக்ஷ (வயது-23) எனும் இருவருமே இவ்வாறு மரணமாகியுள்ளனர்.

இவர்கள் இருவரும் கடந்த சனிக்கிழமை உறவினர்களுடன் நுவரெலியாவில் உள்ள சுற்றுலா விடுதியில் தங்கியுள்ளனர்.

அன்றிரவு ஹோட்டலில் நடந்த வைபவம் ஒன்றுக்குப்பின் அவர்கள் தமது தனியறைக்குத் திரும்பியுள்ளனர்.

அப்போது அறையில் நிலவிய கடும் குளிரைச் சமாளிப்பதற்காக ஹோட்டலில் இருந்து 'பாபேகியூ' அடுப்பை இரவல் வாங்கிப் பாவித்துள்ளனர்.

நிலக்கரியால் இயங்கும் இந்த அடுப்பிலிருந்து வெளிபட்ட நச்சுவாயுவான 'காபன் மோனோக்ஸ்சைட்' வாயுவை சுவாசித்த இருவரும் படுக்கையிலேயே மரணித்துள்ளனர்.

# இறப்பர் தோட்டத் தொழிலாளர்களுக்கு ரூ.8 கோடி செலவில் மழை அங்கிகள்

எதிர்வரும் மழைக்காலத்தை உத்தேசித்து இறப்பர் தோட்டத் தொழிலாளர்களின் பாவனைக்காக எட்டுக்கோடி ரூபா பெறுமதியான 48 லட்சம் மழை அங்கிகளை வழங்க இறப்பர் அபிவிருத்தித் திணைக்களம் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

அதற்கமைய நாடெங்குமுள்ள 23 பெருந்தோட்டங்களுக்கு இந்த அங்கிகளை வழங்குமாறு பெருந்தோட்டத்துறை அமைச் சர் மஹிந்த சமரசிங்க சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்துள்ளார்.

இதுவரை இந்த மழை அங்கிகள் சிறிய இறப்பர் தோட்டத் தொழிலாளர்களுக்கு மட்டுமே வழங்கப்பட்டு வந்தன. தமிழ் - சிங்களப் புத்தாண்டையடுத்து பெருந்தோட்ட அமைச்சுக்குக் கீழ்வரும் பத்தாயிரம் ஹெக்ரெய விஸ்தீரணமுள்ள 23 இறப்பர் தோட்டங்களுக்கும் இந்த அங்கிகள் விநியோகிக்கப்படவுள்ளன என இறப்பர் அபிவிருத்தித் திணைக்களத்தின் திட்டமிடல் உதவிப் பணிப்பாளர் திருமதி தனுஜா பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

இந்த மழை அங்கிகளை வழங்குவதன் மூலம் திருப்திகரமான இறப்பர் அறுவடையைப் பெற்றுகொள்ள முடியுமென அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ச-5)

## உதவி....



வழங்கல்: காத்தான்குடிப் பிரதேசத்திலுள்ள 127 குடும்பங்களுக்கு நேற்றுமுன்தினம் புதன்கிழமை காத்தான் குடி பள்ளிவாயல்கள் முஸ்லிம் நிறுவனங்கள் சம்மேளனத்தினால் வாழ்வாதார உதவிகள் வழங்கப் படுகின்றது.

# ஆசிரியர்கள் வெளிமாவட்டத்துக்கு இடமாற்றம்; வேலையற்ற பட்டதாரிகளுக்கு இழைக்கப்படும் அநீதி

## தடுத்து நிறுத்தக்கோரி மகஜர் அனுப்பி வைப்பு

அம்பாறை,ஏப்.22

அம்பாறை மாவட்டத்திலுள்ள பாடசாலைகளில் கடமையாற்றும் ஆசிரியர்களை வெளிமாவட்டப் பாடசாலைகளுக்கு இடமாற்றம் செய்வதற்கு கிழக்கு மாகாணக் கல்வித் திணைக்களம் எடுத்து வரும் நடவடிக்கை, கிழக்கு மாகாண வேலையற்ற பட்டதாரிகளுக்கு இழைக்கப்படும் அநீதியாகும்.

இந்த இடமாற்றத் திட்டத்தை நிறுத்துவதற்கு கிழக்கு மாகாண சபை உடனடி நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

இவ்வாறு அகில இலங்கை பொது ஊழியர் முன்னணி, கிழக்கு மாகாண சபை முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தனுக்கு அனுப்பி வைத்துள்ள மகஜர் ஒன்றில் கோரிக்கை விடுத்துள்ளது.

அகில இலங்கை பொது ஊழியர் முன்னணியின் சார்பில் அதன் தலைவர் எஸ்.லோகநாதன், செயலாளர் ஐ.எம். இப்றானெல்வை ஆகியோர் ஒப்பமிட்டு இந்த மகஜரை அனுப்பி வைத்துள்ளனர்.

இந்த மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:

ஆசிரியர் ஆளணி சமப்படுத்தல் என்ற போர்வையில் பாட ரீதியாக அம்பாறை மாவட்டத்திலுள்ள பாடசாலைகளில் மேலதிகமாகவுள்ள ஆசிரியர்களை மே மாதம் முதல் வெற்றிடமுள்ள வெளிமாவட்டப் பாடசாலைகளுக்கு இடமாற்றம் செய்வதற்கான முஸ்தீபு நடவடிக்கைகளை கிழக்கு மாகாணக் கல்வித் திணைக்களம் மேற்கொண்டு வருகின்றது.

குறிப்பாக மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்டக் கல்வி வலயங்களின் கீழுள்ள மட்டக்களப்பு மத்தி, கல்குடா, கிண்ணியா, மூதூர், கந்தளாய் போன்ற பிரதேசப் பாடசாலைகளில் ஆசிரிய வெற்றிடம் உள்ளதாக மாகாணக் கல்வித் திணைக்கள ஆய்வில் தெரியவந்துள்ளது. இந்தப் பாடசாலைகளுக்கே அம்பாறை மாவட்ட ஆசிரியர்கள் இடமாற்றம் செய்யப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத்தகைய ஆய்வு நடவடிக்கைகள் நாடு முழுவதும் மேற்கொள்ளப்படுமானால் முன்னாள் ஜனாதிபதி அமரர் பிரேமதாஸ ஆட்சிக் காலம் தொடக்கம் இன்றுவரை சில வலயங்கள் தவிர சகல வலயங்களிலும் மேலதிக ஆசிரியர்கள் கடமை புரிவதைக் கண்டறிய முடியும்.

இவ்வாறிருந்தும் இந்தப் பிரதேசங்களில் ஆசிரிய நியமனங்கள் வழங்கப்பட்டே வருகின்றன. அங்கு ஒரு மாவட்டத்தில் காணப்படும் ஆசிரிய வெற்றிடத்துக்குப் பிறிதொரு மாவட்டத்திலுள்ள மேலதிக ஆசிரியர்களைக் கொண்டு ஆளணி வெற்றிடம் நிரப்பப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

ஆனால் கிழக்கு மாகாணத்தில் மட்டும் இத்தகைய நடவடிக்கை மிக வேகமாகவும் கரிசனையுடனும் எடுக்கப்பட்டு வருவது மக்கள் மத்தியில் சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது.

அம்பாறை மாவட்ட ஆசிரியர்கள் வெளிமாவட்டங்களுக்கு இடமாற்றம் செய்வதற்கு எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகள் உடன் நிறுத்தப்பட வேண்டும்.

இதுவிடயத்தில் கிழக்குமாகாண சபையில் விசேட பிரேரணை கொண்டு வரப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்டங்களில் காணப்படும் ஆசிரிய வெற்றிடங்கள் வேலையற்ற பட்டதாரிகள், தொண்டர் ஆசிரியர்கள் , தேசியக் கல்வியியற் கல்லூரியில் பயிற்சியை முடித்த ஆசிரிய மாணவர்களைக் கொண்டு நிரப்பப்படவும் மாகாண சபை ஆவன செய்யவேண்டும்.

இத்தகைய நடவடிக்கை எடுக்கப்படாது கைவிடப்படும் போது வேறு வழிகளின் அந்த வெற்றிடங்கள் நிரப்படுவதற்கும் பின்னர் பட்டதாரிகள் நியமனம் தொடர்பின் அறிக்கை கோரும்போது ஆளணி வெற்றிடம் நிரப்பப்பட்டுவிட்டது எனக் கைவிரித்து அறிக்கை சமர்பிப்பதற்கும் கிழக்கு மாகாணக் கல்வித் திணைக்கள அதிகாரிகள் தயார் நிலையிலுள்ளனரென்பதையும் தங்களது கவனத்திற்குத் தெரியப்படுத்துகிறோம்.

இந்த நிலைமை வேலையற்ற பட்டதாரிகளுக்கு இழைக்கப்படும் அநீதியெனவும் சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

அம்பாறை மாவட்டத்திலுள்ள ஆசிரியர்களை வெளிமாவட்டங்களுக்கு இடமாற்றம் செய்யவிருக்கும் நடவடிக்கையால் மக்கள் போராட்டம் வெடிப்பதற்கு முன்னர் கிழக்கு மாகாண சபை ஆக்கபூர்வமான நடவடிக்கை மேற்கொண்டு இந்த இடமாற்றத்திட்டத்தை உடன் நிறுத்துவதற்கு ஆவன செய்ய வேண்டுமெனக் கோருகின்றோம்- இவ்வாறு மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மகஜரின் பிரதிகள் கிழக்கு மாகாண ஆளுநர், கல்வி அமைச்சர், மாகாண சபை உறுப்பினர்கள் மற்றும் அம் பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (ச-30)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனுமதியின்றி கோதுமை மாவின் விலை உயர்வு; இரு நிறுவனங்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல்

கொழும்பு, ஏப். 22

நுகர்வோர் அலுவல்கள் அதிகாரசபையின் அனுமதியின்றி கோதுமை மாவின் விலையை உயர்த்திய செரன்டிப் மற்றும் பிறிமா நிறுவனங்களுக்கு எதிராக நுகர்வோர் அதிகார சபை வழக்குகளைத் தாக்கல் செய்ய நடவடிக்கை எடுத்துள்ளது என சபையின் தலைவர் ரூமி மர்ஸீக் தெரிவித்துள்ளார்.

செரன்டிப் நிறுவனம் கடந்த ஞாயிற்றுக்கிழமை முதல் கோதுமை மாவின் விலையைக் கிலோவொன்றுக்கு 4 ரூபா 10 சதத்தாலும் அதிகரித்துள்ளன.

அத்தியாவசிப் பொருள்களில் ஒன்றான கோதுமை மாவின் விலையை உயர்த்துவதற்கு முன் நுகர்வோர் அதிகார சபையின் முன் அனுமதியைப் பெற வேண்டும் என்பது கட்டாய நிபந்தனையாகும். அவ்வாறு அனுமதியைப் பெறாமல் தன்னிச்சையாக இவ்விரு நிறுவனங்களும் தங்களது விலைகளை உயர்த்தியமை சட்டவிரோதமாகும். இந்த நிறுவனங்களுக்கு எதிராக வழக்குகளைத் தாக்கல் செய்ய சபையின் சட்டப் பிரிவு ஏற்கனவே நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாக ரூமி மர்ஸீக் தெரிவித்துள்ளார். (ச-5)

# பதில் அதிபர் நியமனம் நிறுத்தம்: கல்வியமைச்சு தீர்மானம்

அரச பாடசாலைகளில் பதில் அதிபர்களாகக் கடமையாற்றிக் கொண்டிருப்பவர்கள் அதிபர்கள்களாக நியமனம் பெற்ற பின். பதில் அதிபர்களாக எவரும் நியமிக்கப்படமாட்டார்கள் எனக் கல்வியமைச்சு தெரிவித்துள்ளது.

அதிபர் பதவிகளுக்கான வெற்றிடங்களை நிரப்ப இந்த வருடம் முதல் அதிபர்கள் சேவை சட்டமூலத்தின்படி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

தற்சமயம் அரச பாடசாலைகளில் பிரதி அதிபர்களாகப் பணியாற்றும் 2,118 பேருக்கு இலங்கை அதிபர் தரத்தின் 2-II பிரிவுக்கு 3 ஆம் பிரிவுக்கும் நியமனங்களை வழங்க அமைச்சரவை ஏற்கனவே அங்கீகாரம் அளித்துள்ளது. கல்வியமைச்சர் பந்துல குணவர்த்தன உட்பட நான்கு அமைச்சர்கள் அளித்த பரிந்துரைக்கு அமையவே அமைச்சரவை இவர்களது நியமனத்துக்கு அங்கீகாரம் அளித்ததாகக் கூறப்படுகிறது. (ச-5)

# தபால் திணைக்கள ஊழல்கள் மே முதல் பகிரங்க சாட்சியம்

தபால் திணைக்களத்தில் இடம்பெற்றவை எனக் கூறப்படும் ஊழல்கள் குறித்து விசாரணை செய்ய நியமிக்கப்பட்டுள்ள மூவரடங்கிய குழு முன்னிலையில் பகிரங்கமாக சாட்சியளிக்க முடியும் - என தபால் சேவைகள் அமைச்சு தெரிவித்துள்ளது. இதன்படி மே முதலாம் திகதி முதல் குறித்த விசாரணைக் குழு சாட்சியங்களைப் பெற வுள்ளதாக அமைச்சு அறிவித்துள்ளது.

ஓய்வுபெற்ற நீதிபதி நிஹால் சில்வா, விளையாட்டு மற்றும் பொது பொழுது போக்கு அமைச்சின் முன்னாள் செயலாளர் சட்டத்தரணி எஸ்.விரித்த முல்ல, தபால் மற்றும் தொலைத் தொடர்புகள் அமைச்சின் முன்னாள் செயலாளர் சீ.மாலியத்த ஆகியோர் விசாரணைக் குழுவில் உள்ளடங்குகின்றனர்.

தபால் திணைக்களத்தில் ஊழல்கள் இடம்பெற்றதாகக் கூறி தபால்சேவை ஊழியர்கள் பணிப்பகிஷ்கரிப்பை ஆரம்பித்ததை அடுத்து தபால்மா அதிபரின் அதிகாரங்கள் தற்காலிகமாகப் பறிக்கப்பட்டு தபால் சேவை அமைச்சின் செயலாளரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## வழங்கல்...



ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பங்களாதேஷுக்கான மூன்று நாள் உத்தியோகபூர்வ பயணத்தை முடித்துக்கொண்டு நேற்று முன்தினம் திரும்பினார். பங்களாதேஷிலிருந்து ஜனாதிபதி, தம்முடன் கொண்டு வந்த புத்தரின் புனித கேசத்தை விமானத்தை விட்டு இறங்கியவுடன் புத்த சாசனத்துக்குப் பொறுப்பான பிரதமர் டி.எம்.ஜயரட்னவிடம் கையளிக்கின்றார்.

# திருட்டு வழக்கில் கைதான சிறுவன் நீதிமன்றத்திலிருந்து தப்பியோட்டம்

கொழும்பு, ஏப்.22

திருட்டுச் சம்பவம் ஒன்றுடன் சம்பந்தப்பட்டவர் என்ற சந்தேகத்தின்பேரில் கைது செய்யப்பட்டு மாத்தளை நீதிமன்றில் ஆஜர் செய்யப்படவிருந்த 15 வயதுச் சிறுவனொருவன் சிறைக்காவலர்களின் பிடியிலிருந்து தப்பியோடிய சம்பவம் கடந்த திங்கட்கிழமை நடந்துள்ளது. மாத்தளை மெதவத்த பிரதேசத்தைச் சேர்ந்த இந்தச் சிறுவன் நான்காயிரம் ரூபா வைத்திருடியுள்ளார் என்ற சந்தேகத்தின்பேரில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார். கடந்த திங்கட்கிழமை சிறைக் காவலர்கள் இவரை நீதிமன்றத்தில் ஆஜராக்கக் கொண்டு வந்தபோதே இவ்வாறு தப்பியோடியுள்ளார்.

வாரியப்பொலயில் உள்ள தனது உறவினர் ஒருவரது வீட்டில் தங்கியிருந்த போது இவர் 'நான் காயிரம் ரூபாவைத் திருடினார் எனக் கூறப்படுகின்றது.

தப்பியோடிய சிறுவனைத் தேடிக் கண்டுபிடிக்கும் நடவடிக்கையில் மாத்தளை தலைமையகப் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர். (ச-5)

# ஐ.நா.நிபுணர்குழு அறிக்கை அரசை குற்றவாளிக் கூண்டில் நிறுத்தியுள்ளது

## ஐ.ம.மு.தலைவர் மனோகணேசன் தெரிவிப்பு

கொழும்பு, ஏப்.22

ஐ.நா செயலாளர் நாயகத்தினால் நியமிக்கப்பட்ட நிபுணர் குழுவின் அறிக்கை இலங்கை அரசைக் குற்றவாளிக் கூண்டில் நிறுத்தியுள்ளது.

விடுதலைப் புலிகளுக்கு எதிரான யுத்த வெற்றியைத் தமிழ் மக்களுக்கு எதிரான வெற்றியாக முன்னெடுத்து, சர்வதேசத்தைப் பகைத்துக்கொள்வதா அல்லது ஒன்றுபட்ட இலங்கைக்குள்ளே தமிழ் மக்களுக்கு சுயாட்சியை வழங்குவதன் மூலம் உலகத்துடன் இணக்கமாகச் செல்வதா என்பதை இந்த அரசுதான் தீர்மானிக்க வேண்டும்.

இவ்வாறு தெரிவித்தார் ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோகணேசன்.

ஐ.நா. நிபுணர் குழுவின் அறிக்கை தொடர்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இவர் தொடர்ந்து தெரிவித்தவை வருமாறு:

ஐ.நா. அறிக்கை முதலாம் குற்றவாளியாக இலங்கை அரசையும், இரண்டாம் குற்றவாளியாக விடுதலைப் புலிகளையும், மூன்றாம் குற்றவாளியாக ஐ.நா. அமைப்பையுமே அடையாளம் கண்டுள்ளது.

இலங்கையில் போர் நடைபெற்றபோதும், அதற்கு முன்னரும், பின்னரும் எதுவுமே முறைகேடாக இலங்கையில் நடைபெறவில்லை என்று கூறி எவரும் இனிமேல் தப்பித்துக் கொள்ள முடியாத நிலைமை இன்று உருவாக்கப்பட்டுள்ளது. போர் நடைபெற்ற இறுதி நாள்களில் என்ன நடந்தது என்பது தொடர்பிலே உலகம் கேள்விகளைக் கேட்கத் தொடங்கியுள்ளது.

இதன்மூலம் போரினால் சொல் லொணாத் துன்பங்களுக்கு உள்ளாகியுள்ள மக்களுக்கு முழுமையான நீதியையும், சமாதானத்தையும் ஐ.நா. சபை உடனடியாகக் கொண்டு வந்து தந்துவிடும் என்று நாங்கள் கனவு காண முடியாது. இது ஒருவிதமான ஆரம்பம். இதன் அடுத்து வரும் கட்டங் களை ஐ.நா.சபை தீர்மானிக்காது. அவற்றை இலங்கை அரசும், தமிழ்த் தலைமை களுந்தான் தீர்மானிக்க வேண்டும்.

வடக்கு, கிழக்கிலே வாழும் தமிழ் மக்களின் வாக்குகளைப் பெற் றுள்ள கூட்டமைப்புடன் இன்று பேச்சுக்களை நடத்துகின்றது. இந்தப் பேச்சுக்களை காலங்கடத்தும் தந்திரமாக அரசு கொண்டு நடத்துகின்றதா என்ற சந்தேகம் இன்று தமிழர் மத்தி யில் ஏற்பட்டு வருகின்றது.

விடுதலைப் புலிகளின் இராணுவத் தோல்வியை தமிழ் மக்களின் தோல்வியாகக் காட்டி முழு நாட்டையும் சிங்களப் பௌத்த நாடாக மாற்றிடும் கொள்கையை இந்த அரசு முன்னெடுகின்றதா என்ற கேள்வி எழுந்துள்ளது. [illegible] கள்- என்றார்.

# கப்பம் கோரிய சம்பவத்தில் கைதுசெய்யப்பட்ட அமைச்சரின் செயலாளர் தேடப்பட்டு வந்தவராம்

கொழும்பு, ஏப்.22

கொழும்பு - கிராண்ட்பாஸ் இங்குறுகடை சந்தியில் உள்ள பழைய இரும்புக்கடை உரிமையாளரிடம் ஐந்து லட்சம் ரூபா கப்பம்பெற முயன்றார் என்ற சந்தேகத்தின்பேரில் கைது செய்யப்பட்ட அமைச்சர் ஒருவரின் செயலாளரான ஜே.எம். புத்தி என்பவர் மேலும் 98 லட்சம் ரூபாவை மோசடி செய்துள்ளார் என்று கூறப்படுகிறது.

சந்தேகநபருக்கு எதிரான மோசடி வழக்கொன்று ஏற்கனவே கோட்டை நீதிவான் நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்டு வருவதாகவும், அது தொடர்பில் நேற்று முன்தினம் அவர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டார் எனவும் புலனாய்வுப் பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபரை நீதிமன்றத்தில் ஆஜர் செய்த புலனாய்வுப் பொலிஸ் பரீட்சகர் ரவீந்திர விமலசிறி, போலி ஆவணங்களைச் சமர்ப்பித்து சந்தேக நபர் 98 லட்சம் ரூபாவை மோசடி செய்துள்ளார் என்ற சந்தேகத்தின்பேரில் 2006 ஆம் ஆண்டு இதே நீதிமன்றத்தில் அவருக்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டுள்ளது எனச் சுட்டிக்காட்டினார். அதனைத் தொடர்ந்து சந்தேக நபரைத் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (ச-5)

# மருந்து நிலையங்களுக்கு நடவடிக்கை; சுகாதார அமைச்சு தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 22

மருத்துவரின் சிட்டையின்றி மருந்துகளை விற்பனை செய்யும், அதிக விலைக்கு மருந்துகளை விற்பனை செய்யும் மருந்து விற்பனை நிலையங்களுக்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என சுகாதார அமைச்சு கடந்த செவ்வாய்க்கிழமை தெரிவித்துள்ளது.

இந்தப் புதிய விதிகளைப் பின்பற்றாத மருந்தகங்களுக்கு 3 லட்சம் ரூபா அபராதம் அல்லது அதனுடன் சம்பந்தப்பட்டவருக்கு ஒரு வருடகால சிறைத்தண்டனை விதிக்கப்படும் என அமைச்சு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நல்லை திருஞான சம்பந்தர் ஆதீன குருமகா சன்னிதானத்தின் குருபூசை அண்மையில் நடைபெற்றது. இதில் வலி.கிழக்கு சைவசமய அருள்நெறி மன்றத்தால் சுவாமிகளின் ஆன்மீக சேவைகள் குறித்த பிரசுரம் வெளியிடப்பட்டது. அதன் முதலாவது பிரதியை மன்றத் தலைவர் சிவஸ்ரீ சோ.இ.பிரணதார்த் திஹரக்குருக்கள், ஆதீன முதல்வர் இரண்டாவது குருமகா சன்னிதானத்திடம் கையளிக்கிறார்.

# பெண்களுக்கு எதிரான வன்முறைகள்: இந்தியாவுடன் ஒப்பிடும்போது இங்கு குறைவு

## கல்விப் பணிப்பாளர் கூறுகிறார்

வலி.வடக்கு, ஏப்.22

இந்தியாவில் பெண்களுக்கு எதிரான வன்முறைகள் அதிகரித்துக் காணப்படுகின்றன. அத்துடன் பெண் சிசுக்களின் கொலைகளும் உயர்ந்தே காணப்படுகின்றன. இலங்கையைப் பொறுத்தவரை யில் இத்தகைய நிலைப்பாடுகள்காணப்படவில்லை.

மேற்கண்டவாறு வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் இ.இராஜேந்திரன் குறிப்பிட்டார்.

உடுவில் பிரதேச செயலாளர் பிரிவின் சர்வதேச மகளிர் தின நிகழ்வுகள் மகளிர் அபிவிருத்தி அலுவலர்செல்வி சி.ஜெயா தலைமையில் சுன்னாகம் பொது நூலக மண்டபத்தில் நடைபெற்றன.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றிய வலிகாமம் கல்வி வலயப் பணிப்பாளர் தொடர்ந்து உரையாற்றும் போது தெரிவித்தவை வருமாறு:

இலங்கையில் பெண்கள் தொடர்பான சுட்டிகள் நல்ல நிலைமையை வெளிப்படுத்தி நிற்கின்றன. பெண்கள் தமது பிரச்சினைகளில் இருந்து விடுபட வேண்டுமாக இருந்தால் கூடியளவுக்கு கல்வி அறிவைப் பெற்றுக் கொள்ளவேண்டியது அவசியமாகும். இன்று இந்தியாவில் இருந்து பெண்கள் தொடர்பான சஞ்சிகைகள் பதினைந்துக்கும் மேற்பட்டவை வருகின்றன. இவைகளைப் படிக்கப் பெண்கள் முன்வர வேண்டும்.

இலங்கையில்தான் தென்கிழக்காசியாவிலேயே பெண்கள் அதிகூடிய கல்வி அறிவு உடையவர்களாகக் காணப்படுகின்றார்கள். இத்துடன் பெண்களின் ஆற்றல் ஆண்களைவிட அதிகம் கூடியதாகக் காணப்படுகின்றது.

எமது நாட்டில் இன்று ஆண்களை விடப் பெண்கள் கூடிய உழைப்பாளர்களாகவும் அதிக வருமானம் ஈட்டுபவர்களாகவும் காணப்படுகின்றார்கள். பெண்கள் பற்றிய நல்ல அம்சங்கள் காணப்படுகின்றன. பெண்கள் இன்று கல்வியில் முன்னணியில் நிற்பதுடன், ஏனைய துறைகளிலும் கூடப்போட்டியாளர்களாகக் காணப்படுகின்றார்கள்.

பாடசாலை மட்டத்தில் ஆண்களுக்கு 18 விளையாட்டுக்கள் காணப்படுகின்ற போதிலும் பெண்களுக்கு வலைப்பந்தாட்டத்துடன் 19 விளையாட்டுக்கள் காணப்படுகின்றன. பாடசாலை மட்டத்தில் மாணவர்களின் பிரச்சினைகளைக் கேட்டறிவதற்கும் தீர்வுகளை எட்டவும் என விசேடமாக ஆசிரியர்கள் கூட நியமனம் செய்யப்பட்டுள்ளார்கள்.

ஒவ்வொரு பாடசாலையிலும் மாணவிகள் வீட்டுப்பிரச்சினைகள், சூழல் பிரச்சினைகளிலிருந்து விடுபட உரிய வழிகாட்டல்கள் பாடசாலை மட்டத்தில் கூட அரசினால் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன எனவும் குறிப்பிட்டார். (ஐ-86)

# பொது அறிவுப் போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம்,ஏப்.22

இணுவில் பொது நூலக ஒன்பதாம் ஆண்டு விழாவை முன்னிட்டு நடத்தப்பட்ட பொது அறிவுப் போட்டிகளில் வெற்றிபெற்றோரின் விவரங்கள் வெளியாகியுள்ளன.

**ஆரம்பப் பிரிவு** - க.நவநீதன் (மானிப்பாய் இந்துக்கல்லூரி), த.அபிஷேக்(மானிப்பாய் இந்துக்கல்லூரி), க.விதுர்ஷன் (உடுவில் மகளிர் கல்லூரி), ஞா.பவித்திரா(ஏ.ரி.சி), ஜீ.வினுசியா (இராமநாதன் கல்லூரி).

**கீழ்ப்பிரிவு** - வி.நிதுர்சினி (உடுவில் மகளிர் கல்லூரி), பி.வினுஜா (உடுவில் மகளிர் கல்லூரி), பா.நிரோஜினி (ஏ.ரி.சி), க.தேவஜனா(ஏ.ரி.சி).

**மத்திய பிரிவு**- வி.சுஜீவன் (ஏ.ரி.சி), பி.வத்சாங்கன் (ஏ.ரி.சி), தி.யதுர்சன்(ஏ.ரி.சி).

**மேற்பிரிவு**- சு.சுதர்ஷா (இராமநாதன் கல்லூரி), ஸ்ரீ.அம்பிகா (இணுவில் பொது நூலகம்), ச.மேரி கனுகா (இராமநாதன் கல்லூரி). (ஐ-23)

# சமுர்த்தி சேமிப்பு வாரம் இன்று பூர்த்தி

தென்மராட்சி,ஏப்.22

யாழ்.மாவட்ட சமுர்த்திக் குழுக்களுக்கிடையிலான சமுர்த்தி சேமிப்புவாரம் கடந்த 14 ஆம் திகதி ஆரம்பமாகி இன்று பூர்த்தியாகிறது.

சமுர்த்திச் சேமிப்பு வாரத்தில் அதிகளவு சேமிப்புச் செய்யும் குழுவுக்குப் பரிசில்கள் வழங்கப்படுமெனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-207)

# மக்கள் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த வங்கிச் செயற்பாட்டுக்கு ஒத்துழைக்கவும்

## பிராந்திய முகாமையாளர் தெரிவிப்பு

அச்சுவேலி,ஏப்.22

இலங்கை வங்கி மக்களின் தேவைகளை அடுத்துப் பல்வேறு மட்டங்களிலும் உதவி வருகின்றது. இலங்கை வங்கியின் சேவை முன்னெடுப்புக்களை உரிய முறையில் பயன்படுத்தி மக்கள் தமது வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்திக் கொள்வதோடு வங்கிச் செயற்பாடுகளுக்குத் தொடர்ந்தும் ஒத்துழைப்பு வழங்கவேண்டும்.

இவ்வாறு கூறினார் இலங்கை வங்கியின் வடபிராந்திய செயற்பாட்டு முகாமையார் எஸ்.மாணிக்கசிங்கி.

அச்சுவேலி இலங்கை வங்கியின் வங்கி முகாமையாளர் தபுவனேந்திரன் தலைமையில் நடைபெற்ற சித்திரைப் புத்தாண்டு நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு அவர் தொடர்ந்து உரையாற்றும் போது கூறியவை வருமாறு:

வங்கிச் செயற்பாடுகள் மக்களின் வாழ்கையுடன் நெருக்கமான இணைப்பைக் கொண்டுள்ளன. இந்த வகையில் இலங்கை வங்கி சகல தொழில்துறை சார்ந்த நிலையிலும் தனது சேவை முன்னெடுப்புக்களை மேற்கொண்டு வருகின்றது. மக்களின் வாழ்வாதார மேம்பாட்டைக்கருத்தில் கொண்டு செயற்பட்டு வருகின்றது.

ஒரு காலத்தில் குறித்த ஒரு தரத்தினருக்கு மட்டும் உரியதாக இருந்த வங்கிச் சேவைகள், இன்று சகல மக்களது தேவைகளுடனும் இணைந்ததாக மாற்றமடைந்துள்ளது. இத்தகைய வங்கிகள் மக்களின் தேவைகளைக் கருத்திற் கொண்டு தமது சேவைமுன்னெடுப்புக்களை மேற்கொண்டு வருகின்றன.

இலங்கை வங்கியின் சேவை முன்னெடுப்புக்கள் சமகாலத்தில் பல்வேறு தொழில்துறை முன்னேற்றத்துடன் உதவும் வகையில் விஸ்தரிக்கப்பட்டுள்ளன.

இந்தச் சந்தர்ப்பத்தை மக்கள் உரிய முறையில் பயன்படுத்தித் தமது வாழ்வாதார முன்னெடுப்புக்களை மேற்கொள்ள முன்வரவேண்டும்.

அச்சுவேலி இலங்கை வங்கியின் சேவைகள் அகில இலங்கை ரீதியில் முன்னிலையில் உள்ளன. கடந்த வருடம் தேசிய ரீதியில் சகல வங்கிகளை உள்ளடக்கிய மதிப்பீட்டில் இது முதலிடம் பெற்றுள்ளது.

இதன் மூலம் இலங்கை வங்கி பெருமை பெறுகின்றது. இந்த வகையில் அதன் சேவைகள் எதிர்காலத்திலும் தொடரவேண்டும். மக்கள் வழங்கிய ஆதரவுக்கு நன்றி கூறுகின்றேன்.

அச்சுவேலி இலங்கை வங்கியின் சேவைகள் மேலும் உயர் நிலையில் தொடர்வதற்கு ஏற்ற வகையில் வங்கி மேலிடம் ஏற்பாடுகளைச் செய்துள்ளது. அதனை உரிய முறையில் வாடிக்கையாளர் பெற்றுக்கொள்வதோடு வங்கி நடவடிக்கைகளுக்குத் தமது ஒத்துழைப்பை வழங்கவேண்டும் - என்று கூறினார். (ஐ-11)

# விதை வெங்காயம் விலையுயர்வு

கெருடாவில்,ஏப்.22

வடமராட்சி விவசாயிகள் விதை வெங்காயத்தைப் பெறமுடியாது பெரும் நெருக்கடிகளை எதிர்கொள்கின்றனர்.

வி[illegible] வெங்காயத்தின் விலை சடுதியாக உயர்வடைந்துள்ள[illegible]ால் அவர்கள்பெரும் விசனமடைந்து வருகின்றனர்.

புகையிலைகள் அறுவடை செய்யப்பட்ட நிலையில் அந்த நிலங்களில் வெங்காயத்தைப் பயிரிடுவதற்கு விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

இந்த நிலையில் வெங்காயம் விலை உயர்ந்துள்ளமையால் [illegible]வசாயிகள் செவ்வதறியாது[illegible]ளனர். (ம-253)

# தமிழ்மொழியின் பெருமைகளை மாணவர்களுக்கு ஊட்ட [illegible]ண்டும்

யாழ்ப்பாணம்,ஏப்.22

தமிழ் தனக்கென ஓரிடம் பெற்றுத் திகழும் மொழி ஆகும். சங்க காலம் தொட்டு இன்று வரை தமிழுக்கு முன்மரியாதை உண்டு. செம்மையான தமிழையும், இலக்கணப் பிழையற்றுத் தமிழின் உச்சரிப்பையும், இவ்வாறான தமிழுக்குரிய பெருமைகளைப் பாடசாலைப் பருவத்திலேதான் மாணவர்களுக்கு ஊட்டவேண்டும். இது ஆசிரியர்களின் கடமையாகும்.

யாழ்.பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் ஈ.குமரன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

யாழ்.வைத்தீஸ்வராக் கல்லூரியில் தமிழ்ப் பேரவை நடத்தும் முத்தமிழ் விழாவும் தமிழ் அலைகள்-03 நூல் வெளியீட்டு விழாவும் பாடசாலையின் பிரதான மண்டபத்தில் மாணவன் ஜெ.[illegible] தலைமையில் இடம்பெற்றது.

அந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

பாடசாலைகளில் மாணவர்களுக்கு மூன்று மொழிகளும் கற்பிக்கப்பட வேண்டும். ஆனால், அந்த மொழிகளைச் சந்தர்ப்பத்துக்கு ஏற்றவகையில் பயன்படுத்தவேண்டும். தமிழ்த் தினம் என்னும் போது தமிழில் மட்டும்தான் பேசவேண்டும்.

எமது சமூக முன்னேற்றத்துக்காகப் பிறமொழிகள் உதவும். அதற்காக எமது பண்பாட்டையும் கலாசாரத்தையும் அழித்துவிடக் கூடாது. தமிழ் மொழிகளில் ஆங்கிலச் சொற்பதங்கள் அதிகமாகக் கலக்கப்பட்டுப் பேசப்படுகின்றன. அவ்வாறு பேசப்படுகின்ற போது தமிழுக்குரிய அர்த்தங்கள் வேறுபடுகின்றன. பாடசாலைகளிலே தமிழை வளர்ப்பதற்காகத் தமிழ்த் தின[illegible]கள் வைத்து கவிதை, சிறு[illegible]பாட்டிகளும் வைத்து பரி[illegible]ம் வழங்குவது மாணவர்க[illegible]க்கப்படுத்துவதற்குச் சிறந்த வழியாக அமைகிறது.

தமிழ் நூல்களை வாசிப்பதற்கு நேரம் ஒதுக்குங்கள். அத்துடன் நூலகத்தையும் சரியான முறையிலே பயன்படுத்தி நல்லதொரு பிரஜைகளாக மாணவர்கள் மாற வேண்டும் - எனத் தெரிவித்தார். (ஐ-311)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருவது வித்தியா

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:**
செலவுகளில் சிக்கனம் காட்டவேண்டிய நாள். ஏதாவது ஒரு வேலையாகச் வெளியில் செல்லும் நேரத்தில் உறவினர்கள் யாராவது வந்து தொந்தரவு கொடுக்கலாம். வீட்டைச் சீரமைக்கும் வேலைகளில் அக்கறை காட்டுவீர்கள். உங்களின் கருத்துக்கு குடும்ப உறுப்பினர்கள் எதிர் கருத்துச் சொல்லி எரிச்சலை உண்டாக்கலாம். மறதியால் அவதிப்படலாம்.

**இடபம்:**
சந்தோஷமான செய்திகளைக் கேட்கலாம். அரசியல் தொடர்புடையவர்கள் கடுமையான பேச்சுக்களைத் தவிர்க்க வேண்டும். பொழுதுபோக்கு, உல்லாச விடயங்களில் நாட்டம் செல்லும். நண்பர்கள் சிலர் உங்களுக்காகச் செலவு செய்யலாம். பல நாள்களாக சந்திக்காமல் இருந்த உறவினர் ஒருவரை திடீரென எதிர்பாராமல் சந்திக்கலாம்.

**மிதுனம்:**
கனவுகள் பலிக்கும் நாள். உங்களின் முயற்சிகளுக்கு முட்டுக்கட்டையாக இருந்தவர்கள் விலகுவர். பக்கத்து வீட்டாருடன் ஏற்பட்ட மனக்கசப்புகள் மாறி அன்பு அதிகரிக்கும். போட்டிகள், எதிர்ப்புகளை முறியடிப்பீர்கள். தடைப்பட்ட சில வேலைகளை முடுக்கி விட முற்படுவீர்கள். மதிப்பு, கௌரவம் பார்த்து சில காரியங்களை செய்வீர்கள்.

**கடகம்:**
இல்லத்தில் மகிழ்ச்சி குடிகொள்ளும் நாள். சக ஊழியர்கள் சிலர் உங்களை நம்பி சில வேலைகளை ஒப்படைக்கலாம். பெண்கள் வழியில் உருவான தொல்லைகள் குறைந்து நிம்மதி பெறுவீர்கள். குடும்ப பெரியவர்களின் கோபத்திற்கு ஆளாகாமல் இருக்க, எதையும் ஆலோசித்துச் செய்வது நன்மை தரும். அரசு காரியங்கள் அனுகூலமாகும்.

**சிங்கம்:**
கொடுத்த வாக்கைக் காப்பாற்றி பெருமை கொள்வீர்கள். வியாபாரிகள் வர்த்தக பயணமாக வெளியூர் செல்லலாம். ஆடம்பரப் பொருள்கள் வாங்குவதில் நாட்டம் செல்லும். சிலர் கேட்ட உதவியைச் செய்ய மனம் இல்லாமல் கையை விரிக்கலாம். தொழில் ரீதியான விடயங்களில் முடிவெடுக்க ஒன்றுக்கு மேற்பட்டவர்களிடம் ஆலோசனை கேட்கலாம்.

**கன்னி:**
நல்ல காரியம் ஒன்றைச் செய்ய முற்படுவீர்கள். மாமன், மைத்துனர்களின் ஒத்துழைப்புக் கிடைக்கும். புதிய முயற்சிகளில் எதிர்பார்த்த வெற்றி பெறலாம். பணவரவுகளில் ஏற்பட்ட தடை, தாமதங்கள் விலகி சந்தோஷம் அடைவீர்கள். சொந்த விடயங்களை மற்றவர்களிடம் சொல்வதைத் தவிர்க்க வேண்டும். ஊக்கம், உற்சாகம் கூடும்.

**துலாம்:**
மனதிற்கு இனிய சம்பவங்கள் நடக்கலாம். வழக்கமான பணிகளை செய்ய முடியாமல் தள்ளி வைக்கலாம். தொலைபேசி வழி தகவல்கள் தொல்லை தருவதாக அமையும். வாகனங்களால், வழியில் திடீர் செலவு ஏற்படலாம். சிலரிடம் வாயைக் கொடுத்து வம்பில் மாட்டிக் கொள்ளலாம். நீண்ட நாள்களாகத் தள்ளிவைத்த வெளியூர் பயணம் செல்லலாம்

**விருச்சிகம்:**
இனிமையான அனுபவங்களைச் சந்திக்கலாம். பிறரை நம்பி ஒப்படைத்த காரியங்கள் நல்ல விதமாக முடிவுக்கு வரலாம். பிரார்த்தனைகள் பலித்து பெருமிதம் கொள்வீர்கள். நண்பர்களை நம்பி காரியங்களில் இறங்க வேண்டாம். பழைய சம்பவம் ஒன்றை அசை போட்டுப் பார்ப்பீர்கள். நாளை வரும் என நினைத்த பணவரவு இன்றே வரலாம்.

**தனுசு:**
மாற்றங்களை எதிர்கொள்ளும் நாள். பல நாள்களாக உங்களுடன் பழகிய சிலரைப் பிரிய நேரிடலாம். பிள்ளைகள் வழியில் சுபச்செலவுகளைச் சந்திக்கலாம். தெய்வ வழிபாடுகளில் நாட்டம் செல்லும். அரசியல் தொடர்புடையவர்கள் நினைத்த காரியங்கள் நடப்பது தள்ளிப் போகலாம். குடும்ப உறுப்பினர்கள் சிலருடன் மனஸ்தாபம் ஏற்படலாம்.

**மகரம்:**
செலவுகளைக் குறைத்து சேமிப்பில் அக்கறை காட்டுவீர்கள். பால்ய நண்பர் ஒருவரை திடீரென சந்திக்கலாம். காலை நேரத்தில் கணிசமான பணவரவுகளைப் பெறலாம். விருப்பமான உணவு வகைகளைச் சாப்பிடுவதில் நாட்டம் செல்லும். சக ஊழியர்கள் உங்களின் செயற்பாடுகளைப் பாராட்டலாம். பெரிய மனிதர்களின் சந்திப்பு நிகழும்.

**கும்பம்:**
பொறுப்பில்லாமல் செயல்படும் குடும்ப உறுப்பினர்களுக்கு அறிவுரை சொல்வீர்கள். எப்படி ஆகுமோ என பயந்த காரியம் ஒன்று நல்லவிதமாக முடிவுக்கு வரலாம். புதிய பொறுப்புகளால் போராட்டம் இருந்தாலும் ஆதாயம் பெறுவீர்கள். குடும்பச் செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள். சந்தோஷம் தரும் செய்திகளைக் கேட்கலாம்.

**மீனம்:**
கலகலப்பான அனுபவங்களைப் பெறலாம். நண்பர்கள் மூலம் முக்கியமான தகவல்களைக் கேட்கலாம். சில வேலைகளுக்காக நீங்கள் மட்டுமின்றி, மற்றொருவரையும் கூட்டிக் கொண்டு அலையலாம். நண்பர்களுக்குத் தெரிந்த சிலர் உங்களுக்கும் அறிமுகமாகலாம். ஏமாற்றங்களைத் தவிர்க்க எச்சரிக்கையாக இருக்க வேண்டியது அவசியம்.

# பொங்கி எழுந்தனள்




மீட்புப் பணியாளர்களின் முயற்சிகள் மிக சிக்கலாகவே இருந்தன. ஆயிரக்கணக்கான மக்கள் கூடி தாமாக ஏற்படுத்தி ஆங்காங்கே சிக்குப்பட்டிருந்த முகாம்களுக்குள் கால்நடையாகவே மீட்பு அணியினர் வந்து சேர முடிந்தது.

அவ்வாறு வந்தபோது ரோம் தொலைக்கட்சி செய்தியின்படி Kesennuma வில் 3,400 பேரும் Minamisanriku வில் 2, 300 பேரும் Ishinomaki யில்3, 800 பேரும் அவ்வாறு சிக்குண்டிருந்தனர். Souma நகரத்தை அடையவே முடியவில்லை. அங்கும் பலர் வெள்ளத்தால் சூழப்பட்டு இருந்தனர். இவர்களுக்குள் காயமடைந்தோர் நோயாளிகள், குழந்தைகள், பெண்கள், முதியோர் எனப் பலதிறத்தாரும் அடங்குவர்.

மேலும் இந்த எண்ணிக்கைதான் அந்த அந்த ஊரரில் தப்பியவர்களையும் குறிக்கும் எனக் கருத இடமுண்டு.

இத்தனை பேரின் தேவைகளைக் கால்நடையாக தமது தோளில் பொருள்களை சுமந்து வந்த மீட்பு அணியினரால் எவ்வாறு சமாளிக்க இயலும்?

மீட்பு அணிகள் சில நன்கு பயிற்றப்பட்ட மோப்ப நாய்கள் சகிதம் களமிறங்கியிருந்தன. இதனால் உயிருடன் அகப்பட்டவர்களை அல்லது சடலங்கள் கிடக்கும் இடங்களை அடையாளம் காண்பது சுலபமாக இருந்தது.

என்றாலும் வளங்கள் பற்றாக் குறையை நிவர்த்தி செய்ய இயலவில்லை.

'வேல்ட் விஷன்' சிறுவர் நிதியம் கருத்துத் தெரிவிக்கையில், வழமையாக அபிவிருத்தி வேண்டிய நாடுகளில்தான் தமது பணி தொடர்வதாகவும் ஆனால் இன்று ஜப்பானில் இறங்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டது.

சிறார்கள் தமது பெற்றாரை, வீடு வாசலை, பாடசாலையை, புத்தகங்களை, உடுபுடைவைகளை என்று அனைத்தையும் இழந்து தவிக்கிறார்கள்.

அவர்கள் நிற்கும் தரைகூட கடல்கோளால் சூறையாடப்பட்டுவிட்டது. முதலில் அவர்களின் மனதுக்கு ஒத்தடம் கொடுத்தாக வேண்டும். அதுவும் நீண்ட காலத்துக்கு அவர்களுக்கு ஆதரவு தேவை. தரையிறங்கி விட்டாலும் முன்னெடுக்க வேண்டிய பணி மிகவும் பெரியது என்றார்கள் அவர்கள்.

முதலில் TOYOTA, NISSAN, HONDA நிறுவனங்கள் தமது தொழிற்சாலைகளை ஒருசில தினங்கள் இயக்க இயலவில்லை என அறிவித்து இருந்தன. இது வாகனச் சந்தைக்குள் இதர நாடுகள் மேலும் ஆழமாக ஊடுருவ வழிவகுத்துவிடும். மேலும் அவற்றின் பங்குப் பெறுமதிகளும் சரிய ஆரம்பித்திருந்தன.

ஜப்பானின் முன்னணி கார் நிறுவனமான NISSAN தனது சில தொழிற்சாலைகள் அடிபட்ட நிலமையிலும் கொடிகள் அரைக் கம்பத்தில் பறக்க ஒரு நிமிட மௌன அஞ்சலியுடன் பணிகளை தொடங்கியிருக்கிறது. அதன் தலைமை அதிகாரி காலொஸ் கோஷன் பணியாள்களை நேரடியாக சந்தித்து கைலாகு கொடுத்து உற்சாகப்படுத்தி ஒரு மில்லியன் கார்களைத் தயாரிக்கும் பணியை ஆரம்பித்து வைத்திருக்கிறார்.

ஆனால், மின்வெட்டு எரிபொருள் விலையேற்றம் இழப்புக்கள் எல்லாம் இணைந்து உற்பத்தி செலவீனத்தை அதிகரிக்கவே செய்யும். தரமான தயாரிப்புக்கள் என்பதால் விலையை தக்கவைக்க முடிகிறதே தவிர அண்டை நாட்டு தயாரிப்புக்கள் மலிவாக சந்தையில் ஏற்கெனவே தாராளமாக உலா வருகின்றன.

ஜப்பானின் தொழிற்சாலைகளின் உற்பத்தி வேகத்திற்கு ஏற்ப மின்சாரத்தை வழங்குவது இப்போதைக்கு சாத்தியமாகாது. அதுவும் ஜப்பானிய வரலாற்றில் இதுதான் பெரிய மின்வெட்டு.

மின்சார ரயில்கள் ஓடவில்லை. எரிபொருள் தாராளமாக இல்லை. இயன்றவர்கள் சைக்கிளில் வேலைத்தலம்வரை போய் திரும்புகிறார்கள்.

ரொஹொகு பல்கலைகழக பேராசிரியர் புமிஹிக்கோ கருத்துத் தெரிவிக்கையில், பிரமாண்டமான அலைகள் கொண்ட இந்தச் சுனாமி மிலேனியத்தில் ஒன்று நிகழவே வாய்ப்பு இருக்கிறது என்றார். அதற்காக நாளை நடக்காது என்றில்லை.

அவர் சொல்லிவிட்டார் என்று நிம்மதிப் பெருமூச்சு விட வழியில்லை. தனி மனிதனைக் கொல்ல ஒரு சிறு சுனாமி போதும். இவ்வளவு பெரிதாக அடித்துத்தான் சாக வேண்டும் என்றில்லை. இறக்கும் ஒருவனுக்கு அது பேரிழப்புத்தான். இறக்கும்போது எத்தனைபேர் கூட வருகிறார்கள் என்றெல்லாம் அவன் கவலைப் படவோ எண்ணிக்கொண்டிருக்கவோ ஆறுதலடையவோ போவதில்லை.

றோய் வில்ஷர் என்ற பிரித்தானிய மீட்புப் பணியாளர்களின் தலைவர் கூறுகிறார், நாங்கள் அழிவு இடம் பெற்ற பகுதிகளை பிராந்தியங்களாக, வலயங்களாக பிரித்து வீட்டுக்கு வீடு, வீதிக்கு வீதியாக அணுகுகிறோம். இங்கே வந்து பாருங்கள் காலம் நேரம் மிக அருமையானது. தாமதித்தால் பலன் கிடைக்காது. தப்பியிருக்கிறவர்களைக் கண்டுபிடிப்பது மிக மிக அரிதாகவே நிகழுகிறது. அனைவரிடமும் வேகத்தையும் விவேகத்தையும் எதிர்பார்க்கிறோம் என்கிறார்.

Miyagi யில் 1,000 உடலங்களும் Minamisanriku யில் 1,000 உடலங்களும் கண்டுபிடிக்கப்பட்டதாக செய்தி வெளியான அன்று பீதி பரவியிருந்தது. இது என்ன சிம்பிளாக மட்டமாக ஆயிரம் என்று சொல்கிறார்களே? எண்ணிச் சொல்கிறார்களா? குத்து மதிப்பா குறைத்துச் சொல்கிறார்களா? மனிதப் பெறுமதி இப்படி ஆயிற்றா? இவ்வாறு கலக்கமான செய்தி பரவிக் கொண்டிருந்த போதுதான் இரண்டாவது அணு உலையில் வெடிப்பு ஏற்பட்ட செய்தியும் வெளியாகியது. அணு உலைப் பணியாளர்களில் 7 பேர் காணாமல் போயிருந்தனர். பலர் காயமடைந்திருந்தனர்.

அப்போதும் மக்களை வெளியேறும்படி சொல்லப்பட்ட பிரதேசத்துக்குள் மாற்று வழியின்றி 600 பேர் குடியிருந்தார்கள். கதிரியக்கத்திலிருந்து காப்பாற்ற அவர்களை பலவந்தமாக வெளியேற்றுவதா? இது மனித உரிமை மீறலாகுமா? என்றெல்லாம் புதிய விதமான சர்ச்சைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொறுமைத் தாய்:

# பொறுக்குமா வையகம்?

கதிரியக்கத்தைகக் காற்றில் அளந்து அது கட்டுப் பாட்டில் இருக்கிறது எனப் பெரிதாக பேசப்படும் போது, நிலத்தடி நீரில் அதன் அளவு ஆபத்தான கட்டத்தை தாண்டிவிட்டதாக அறிவிக்கப் பட்டது.

தண்ணீரை கொட்டி உலைகளை குளிர்விக்க முயற்சிகள் தொடர்ந்து இடம்பெறுகையில் இந்த நிலமை ஏற்பட்டுள்ளது.

அதுவும் கடல்நீரைக் கொண்டு குளிர்விக்க இயலாத கட்டத்தில் பெருமளவு நன்னீருடன் அமெரிக்க கப்பல் ஒன்று ஜப்பானை நொக்கி வந்துகொண்டிருக்கிறது.

மக்கள் கூடி அணுமின் திட்டத்தை எதிர்த்து ஆர்ப்பாட்டம் செய்கின்ற அளவுக்கு ஜப்பானில் அச்ச நிலமை வலுவடைந்துவிட்டது.

சீன ஜப்பான் உறவுகள் இரண்டாம் உலக யுத்தத்தை தொடர்ந்து சீராக இருந்ததில்லை. இருவரும் மௌனம் காத்துக் கொண்டனர். ஆனால் இப்போது சீன பிரதமர் வென் ஜியாபோ மௌனம் கலைத்து தனது அனுதாபங்களை தெரிவித்தீருக்கிறார். உதவிகளையும் மீட்பு அணியையும் அனுப்பியுள்ளார். மக்களின் உணர்வுகள் அவர்கள் எங்கு துன்பப் பட்டாலும் ஒரேமாதிரியானவை என்று தெரிவித்தார் அவர்.

சீனாவில் 2008இல் வென்சன் பூகம்பம் பெரியளவில் சேதங்களை விளைவித்தபோது ஜப்பானும் உதவிகளை அனுப்பி இருந்தது.

ரஷ்யாவும் ஜப்பானுடன் கசப்பான உறவுகளையே கொண்டிருந்தன. ஆனால், இப்போது உதவிகளை அனுப்பி இருக்கிறது. மின்சாரத்தைகூட தருவதாக ரஷ்யா கூறியுள்ளது.

உலக நாடுகள் ஒன்றுபட இந்தப் பேரழிவுகள் வழி வகுத்தால் முடிவுகள் நன்மையாகவே அமையும்.

மலேசிய பத்திரிகை Berita Harian ஜப்பானிய ஹீரோ winn_ultraman சுனாமியிலிருந்து தப்பி ஓடுவதாக கார்ட்டூனை முக்கியமான பக்கத்தில் பிரசுரித்து மலேசிய மக்களின் கோபத்தை சம்பாதித்து பின்னர் மன்னிப்பு கேட்டிருந்தது. உலக நாடுகளின் அவமதிப்பையும் பெற்றிருந்தது.

மக்கள் ஆயிரக் கணக்கில் இறந்திருக்கும் வேளையில் இலட்சக் கணக்கானோர் துன்பத்தில் தவிக்கையில் சுனாமியை வைத்து நையாண்டி பண்ணி கார்ட்டுன் போடலாமா? இது மிகவும் பரபரப்பை ஏற்படுத்தி விட்டது.

Bangkok , The Nation பத்திரிகையும் ஜப்பான் தேசப்பட வடிவான படகில் மல்யுத்த வீரனொருவனை சுனாமிக் கடலில் கார்ட்டூனாக காட்டி இருந்தது வரவேற்பை பெறவில்லை. மற்றவர் துன்பத்தில் இன்பம் காணுபவர்கள் இல்லாத உலகமா இது?

ஜப்பானிய மன்னர் Akihito வழமைக்கு மாறாக முதன்முறையாக தொலைக் காட்சியில் தோன்றி தனது அனுதாபத்தையும் கவலையையும் வெளியிட்டார். அவரைத் தொலைக் காட்சியில் கண்டதை புதுமையாக நினைத்தார்கள் ஜப்பானிய மக்கள்.

அவர் பல பாதிக்கப் பட்டவர்களின் முகாம்களுக்கும் நேரடியாக சென்று அவர்களைச் சந்தித்து முழந்தாளிட்டு அமர்ந்திருந்து பொறுமையாக மக்களிடம் பேசிக் கொண்டிருந்தார். அவர்களின் துன்ப துயரங்களில் தானும் பங்கேற்றார்.

ஜப்பானிய முடிக்குரிய இளவரசரும் இளவரசியும் இங்கிலாந்து இளவரசர் வில்லியம் கேற் திருமணத்தில் கலந்துகொள்ளும் முடிவை தமது நாட்டின் அவல நிலைகருதி கைவிட்டிருந்தனர்.

என்ன விலை கொடுத்தும் தனியார் ஜெட் விமானங்களில் ஜப்பானை விட்டு வெளியேற பல வெளிநாட்டவர்கள் முயன்று கொண்டிருந்தனர். அவர்கள் ஆயிரக் கணக்கில் தமது தூதரகங்களை முற்றுகையிட்டு நீண்ட வரிசைகளில் காத்திருந்தனர். இதனால் விமானக் கட்டணங்கள் தாமாகவே உயரத் தொடங்கின. அவை 10 மடங்குவரை உயர்வடைந்ததாக தகவல்கள் கசிந்திருந்தன.

ஒரு அமெரிக்க குடும்பம் புறப்படத் தயாரானபோது அவர்களின் மகன் Kelly Williams தனது ஜப்பானிய காதலியை கைவிட்டு வர மறுத்துவிட்டான்.

அவளைக் குடும்பமாக விமானம் ஏற்ற அவர்கள் நினைத்தாலும் அவர்களிடம் கடவுச்சீட்டு இருக்கவில்லை.

தவிர இப்படியான இக்கட்டான நிலமைகளில் உறவுகளையும் நாட்டையும் விட்டு தாம் மட்டும் தப்பி ஓட ஜப்பானிய மனநிலை இடம் தராது.

பிரதமர் Naoto Kan மிகவும் களைப் படைந்த நிலையில் ஒரு குறுகிய ஓய்வுக்காக எட்டாவது நாள் முதன் முறையாக தனது வாசஸ்தலம் திரும்ப இருந்தார்.

**மு.சிவநேசன்**
**sivanesan@usa.com**

அதற்கு முன்னராக அவர் நாட்டு மக்களுக்கு உரையாற்றி இருந்தார். இடைஞ்சல்களின்போது மிகவும் கண்ணியமாக நடந்து கொண்டமைக்கு அவர் நன்றி தெரிவித்தார்.

ஜப்பானிய பொலிஸாரும் படையினரும் தீயணைப்பு படையினரும் பொறியியலாளர்களும் தம் உயிரை பொறிவைத்து மக்களைக் காக்கும்பணியில் தீவிரமாக மனம்கொண்டு போராடி வருவதை தனது நேரடி விஜயங்களின்போது கண்டு கொண்டதாக அவர் தெரிவித்தார்.

இந்தப் போராட்ட வீரர்கள் குறுகிய ஓய்வின்போது தமது குடும்பங்களுக்கு ஆறுதல் கூறும் குறுஞ் குறுஞ் செய்திகள் வரலாற்றில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டியவை. எவரது அழுத்தமும் இன்றி தமது எல்லைகளுக்கும் அப்பால் அவர்கள் தீரமுடன் மக்களை காக்க போராடி வருகிறார்கள்.

சீனா பத்தாயிரம் தொன் டீசலையும் பத்தாயிரம் தொன் பெற்றோலையும் பாவனைக்கென அனுப்பத் தயாரானது. குளிர் தாங்க இயலாத முகாம்களில் வாழும் சிறார்கள் மண்ணெண்ணெய் விளக்குகளை சூழ கோழிக்குஞ்சுகள்போல அடைவதாக Save the Children நிறுவனம் அறிவித்து இருக்கிறது. அவர்களுக்கு குடிதண்ணீரை வழங்குவதே பெரும் போராட்டமாக இருக்கிறது. தவிர அவர்கள் ஒருமுறையாவது அவசரம் குளித்தாக வேண்டும்.

(தொடர்ந்து அடுத்த...)

## தன்வினை தன்னைச் சுடும்



நாம் செய்கின்ற தவறு எமக்கே இடைஞ்சலாக வந்து முடியும். இதை விளக்குவதற்கு மயூரம் வேதநாயகம் பிள்ளை வேடிக்கையாக ஒரு கதையை சொல்லியிருக்கிறார். தான் எழுதிய ''பிரதாப முதலியார் சரித்திரம்'' என்ற நூலில் இந்தக் கதை உள்ளது.

ஒரு கணவன் - மனைவி இருவரும் அடிக்கடி ஒருத்தரைப் பார்த்து ஒருத்தர் கோபமாகப் பேசிக்கொண்டே இருப்பார்கள்.

அப்படியொருநாள் வாக்குவாதம் நடந்து கொண்டிருந்த ஒரு கட்டத்தில் அவன் அவளைப் பார்த்து ''உன்னைப் பழி வாங்குகிறேன் பார்'' என்றான். ''எப்படிப் பழிவாங்குவாய்?'' என்று அவள் கேட்டாள்.

''தோட்டத்திலிருக்கும் பெரிய ஆழமான குளத்தில் குதித்து விடுவேன்'' என்று அவன் சொல்லியும் அவள் விடவில்லை. நீ அந்தக் குளத்தில் விழுவதை நான் என் கண்ணால் பார்க்க வேண்டும். அந்தக் காரியத்தை இப்போதே செய்'' என்று கூறி அவனைப் பிடித்து இழுத்துக் கொண்டு போனாள்.

இவன் பலி ஆடு மாதிரிப் போய்க் கொண்டிருந்தான். குளத்தினருகில் வந்ததும் ''இதோ இருக்கிறது நீ கூறிய குளம். இதில் குதித்து விடு'' என்றாள் அவள்.

தூரமாகப் போய் நின்று அங்கேயிருந்து வேகமாக ஓடிவந்து அந்த ஆழமான குளத்தில் விழுவதற்கு வந்தவன் அப்படியே நின்று விட்டான். உடனே அவள் சும்மா இருப்பாளா? ''ஏன் குளத்தில் விழவில்லை?'' என்று சத்தம் போட ஆரம்பித்து விட்டாள்.

அதற்கு அவன் ''வேறு ஒன்றுமில்லை. எனக்கு நீச்சல் தெரியும். அதனால் நான் குளத்தில் குதித்ததும் நீந்திக் கரைக்கு வந்தாலும் வந்துவிடுவேன். நான் தப்பித்து வராத அளவுக்கு நீதான் எனக்கு ஓர் உதவி செய்ய வேண்டும்'' என்றான்.

'' என்ன செய்ய வேண்டும் சொல்லு?'' என்றாள். என்னுடைய இரண்டு கைகளையும் சேர்த்துப் பின்னால் கட்டி விடு. அதற்குப் பின்னர் நான் நீந்தித் தப்பிக்கலாம் என்று நினைத்தாலும் அது முடியாது'' என்றான்.

அதுவும் நல்ல யோசனைதான் என்று நினைத்து அவள் அதே மாதிரி அவனைக் குளத்தின் ஓரமாக நிற்க வைத்துக் கை இரண்டையும் பின்பக்கமாகச் சேர்த்துக் கட்டிவிட்டாள்.

இப்போது என்ன செய்வதென்றால் அவன் குளத்தின் ஓரமாக நிற்க வேண்டியது. அவள் தூரத்திலிருந்து வேகமாக ஓடிவந்து அவனைத் தள்ளிவிட வேண்டும்.

அவன் குளத்தின் ஓரமாக நின்றான். தூரத்திலிருந்து வேகமாக ஓடிவந்தாள் மனைவி. திடீரென அவன் விலகிக் கொண்டான். ஓடிவந்து வேகத்தில் அவளால் திடீரென நிற்க முடியவில்லை. நேராகக் குளத்தில் விழுந்து விட்டாள்.

விழுந்ததும் தண்ணீரில் கையைக் காலை அடித்துக் கொண்டு ''ஐயோ! என்னை வந்து கொஞ்சம் கையைத் தூக்கி விடுங்கோ..... காப்பாற்றுங்கள்...'' என்று கத்தினாள்.

கரையில் நின்று கொண்டிருந்த அவன் மிகவும் நிதானமாகப் பேசினான். ''நான் என்ன செய்வது? உன்னைக் காப்பாற்ற வேண்டும் என்றுதான் நினைக்கிறேன். இருந்தாலும் அது முடியவில்லை. ஏனென்றால் நீ தானே பின்பக்கமாக என் கையைக் காட்டிப் போட்டு விட்டாய்; இப்ப நான் என்ன செய்ய முடியும்?'' என்று சொல்லிவிட்டான்.

இந்தக்காலத்தில் கணவன், மனைவிக்கிடையில் பிரச்சினை யென்றால் யாரும் குளத்தைத் தேடிப் போவதில்லை. நேராக நீதிமன்றத்தைத் தேடித்தான் போவார்கள்.

ஒருத்தன் நீதிமன்றம் போய் ''என் மனைவியுடன் குடும்பம் நடத்த முடியாது. விவாகரத்து வேண்டும் என்று மனுக் கொடுத்தான்.

விசாரணையில் அரச சட்டத்தரணி ''உன் மனைவி கோபக்காரியா?''என்று கேட்டார். ''இல்லை'' என்றான். ''அவள் ஊதாரித்தனமாகச் செலவு செய்கிறாளா?'' என்றார். ''இல்லை'' என்றான். ''அவள் உன்னை மதிப்பதில்லையா?'' என்றார். அதற்கும் ''இல்லை'' என்றே பதில்.

அப்படி இருக்கும் போது எதற்கு விவாகரத்துக் கேட்கிறீர்'' என்றார் அவர். இவன் மெதுவாகத் தலை நிமிர்ந்து அவரைப் பார்த்து ''நீங்கள் கேட்ட அத்தனை குறைகளும் எனக்குத்தான் இருக்கிறது. அதனால்தான் விவாகரத்துக் கேட்டேன்'' என்றான்.

மற்றவர்களுக்குத் தீங்கு செய்ய முயற்சித்தால் அது தனக்கே ஆபத்தாக முடியும் என்பதை உணர்ந்து செயற்பட வேண்டும்.

கோ. சுவாமிநாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தண்ணீரில் கைத்தொலைபேசி விழுந்தால்....




எமக்கு அடிக்கடி இடம்பெறும் ஒரு காரியம் நம் கைத்தொலைபேசியைத் தவறுதலாகத் தண்ணீரில் போடுவது. கைத் தொலைபேசியை குளியலறைக்கும் எடுத்துச் செல்லும் பழக்கத்தை நாம் கொண்டிருக்கிறோம்.

கைத்தொலைபேசி தண்ணீரில் விழுந்த பின் கடைப்பிடிக்க வேண்டிய நடவடிக்கைகள்:

1.முதலாவதாகக் கைத்தொலைபேசியில் எவற்றை எல்லாம் பிரித்து எடுத்து வைக்க முடியுமோ அவற்றை எல்லாம் பிரித்து எடுத்திடவும். கைத்தொலைபேசிக் கவர், மின்கலக் கவர், மின்கலம், சிம் கார்ட், மெமரி கார்ட் ஆகியவை இதில் அடங்கும்.


2. அடுத்து கைத்தொலைபேசியில் எங்கெல்லாம் தண்ணீர் இருக்கும் என்று எண்ணுகிறீர்களோ அங்கு சிறிய மெல்லிய துணி, அல்லது ருசுப் பேப்பர் கொண்டு சுத்தம் செய்து நீரை உறிஞ்சி எடுத்து முழுவதுமாக உலரச் செய்திடவும்.

3. ஹேர் ட்ரையர் ஒன்று இருந்தால் அதனை எடுத்து கைத் தொலைபேசி மீதாகப் பயன்படுத்தி ஈரத்தை உலர்த்தவும். குறிப்பாக மின்கலம் வைத்திடும் இடத்தில் உள்ள ஈரத்தை முழுமையாக நீக்கவும்.

இவ்வாறு உலர வைக்கையில் ஹேர் ட்ரையரை கைத்தொலைபேசிக்கு மிக அருகே கொண்டு செல்லக் கூடாது. அது கைத்தொலைபேசியின் சில பகுதிகளைப் பாதிக்கலாம். எனவே சற்றுத் தள்ளி வைத்து 20 முதல் 30 நிமிடம் வரை இவ்வாறு உலர வைக்கும் வேலையை மேற்கொள்ளவும்.

இந்த வேலையை மேற்கொள்கையில் கைத்தொலைபேசியை வெவ்வேறு நிலையில் வைத்து உலர வைக்கவும். இதனால் வெவ்வேறு இடங்களில் ஒட்டியிருக்கும் ஈரம் வெளியேறி உலரும். இதேபோல மின்கலம், சிம் கார்டு ஆகியவற்றில் உள்ள ஈரத்தையும் உலர வைக்கவும்.

நன்றாக உலர்ந்த பின்னர் காற்றோட்டமான இடத்தில் வெகுநேரம் வைத்த பின்னர் மின்கலம், சிம் ஆகியவற்றைப் பொருத்தி இயக்கவும். அப்போது சரியாக இயங்கவில்லை எனில் இன்னும் சில மணி நேரம் காத்திருந்து ஈரம் தானாக உல ரும் வரை பொறுத்திருக்கவும்.



அதன் பின்னரும் இயங்கவில்லை எனில் கைத்தொலைபேசியைச் சரி செய்திடும் பணியாளரிடம் சென்று நீரில் விழுந்ததை மறைக்காமல் கூறி நீங்கள் மேற்கொண்ட செயல்களையும் கூறிச் சரி செய்திடச் சொல்லவும்.

# உங்கள் கணினியின் வேகத்தை அதிகரிக்க

கணினியைத் தொடர்ந்து உபயோகிப்பதால் அதன் வேகம் குறைந்து விடும். மேலும் இணையத்தில் உலா வருகையில் எண்ணற்ற கோப்புக்களை கணினியில் சேமிப்போம்.

அவ்வாறு செய்கையில் Melware, Spyware போன்ற வைரஸ்கள் தோன்ற வாய்ப்பு அதிகம் உள்ளது. பின்வரும் வழிமுறைகளைக் கடைப்பிடித்தால் உங்கள் கணினியின் வேகம் எப்போதும் போலவே சிறப்பாகவே இருக்கும்.

Clean Your Windows Registry: Âs÷hõi Registryகளை சுத்தம் செய்ய வேண்டும்.

Removing Unneeded Files: தேவையில்லாத கோப்புக்களை அழித்துவிட வேண்டும்.

Removing Unneeded Programs: தேவையில்லாத ப்ரோக்ராம்ஸ் களை அழித்துவிட வேண்டும்.

Empty the Recyle Bin: மறுபயன்பாட்டுப் பெட்டியில் உள்ள கோப்புக்களை அழித்துச் சுத்தமாக வைத்திருக்க வேண்டும்.

Perform a Disk Defragmentation: உங்கள் கணினியில் உள்ள வெற்றிடங்களை ஒருங்கிணைக்கும் பணியை இது செய்கிறது. மாதம் இரு முறை இந்தப்பணியை செய்ய வேண்டும்.

Update Your Anti Virus: உங்களுடைய Anti virus Softwareவை இணையத்தில் இணைத்து புதுப்பித்துக் கொள்ள வேண்டும்.

இந்த வழிமுறைகளை செய்து வந்தால் உங்கள் கணினியின் வேகம் அதிகரிக்கும்.

# அனைவரையும் ரசிக்க வைக்கும் ஓர் இலவச மென்பொருள்

இன்று நாம் பார்க்கப் போகும் மென்பொருள் ஒரு சூப்பர் மென்பொருள். நம்முடைய மொனிட்டரில் உயிருள்ள ஈக்கள் உலாவினால் எப்படி இருக்கும்.

திரையில் எப்படி உயிருள்ள ஈக்கள் உலாவும் என்று கேட்டால் நீங்கள் இந்த மென்பொருளை உங்கள் கணினியில் இணைத்துப் பாருங்கள் என்ன நடக்கிறது என்று உங்களுக்கே ஆச்சரியமாக இருக்கும்.

உயிருள்ள ஈக்கள் எப்படி உலாவுமோ அதேபோன்ற செயல் இருப்பதால் இதை நம் குழந்தைகளுக்குக் காட்டி அவர்களைக் குஷி படுத்தலாம்.


கீழே உள்ள தரவிறக்கச் சுட்டி பட்டனை அழுத்தி மென்பொருளை உங்கள் கணினியில் தரவிறக்கம் செய்து கொள்ளுங்கள். மென்பொருளை தரவிறக்கியதுடன் வரும் ZIP பைலை EXTRACT செய்து கொள்ளுங்கள்.

FLY ON DESKTOP என்ற EXE கோப்பை டபிள் க்ளிக் செய்து உங்கள் கணினியில் நிறுவிக் கொள்ளுங்கள். இப்படி மென்பொருளை உங்கள் கணினியில் நிறுவியதுடன், இந்த மென்பொருளை Open செய்தால் உங்கள் டெஸ்க்ரொப்பில் ஈக்கள் ஓடுவதைக் காணமுடியும்.

உண்மையிலேயே நிஜ ஈக்கள் உள்ளது போன்று பார்ப்பதற்கு நன்றாக இருக்கும். இதில் உங்களுக்குக் குறிப்பிட்ட ஈயை நீக்க வேண்டுமென்றால் அந்த ஈயின் மீது கேர்சரை வைத்து இரண்டு முறை க்ளிக் செய்யுங்கள் அது காணாமல் போகும்.

மேலும் ஈக்களைச் சேர்க்க விரும்பினால் கீழே ராஸ்க்பாரில் உள்ள ஈயின் மீது வலது க்ளிக் செய்து ஈக்களைச் சேர்த்தும் கொள்ளலாம் மற்றும் குறைத்தும் கொள்ளலாம்.

# ஒளிப்படக் காட்சிகளை கணினித் திரையிலிருந்து தொலைக்காட்சித் திரைக்கு மாற்ற



இணைய வழியாக வீடியோக்கள், திரைப்படங்கள் கிடைப்பதனால் பலரும் இதுபோல தேவைகளை உணர்ந்து அதற்கான வழிகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

சிறிய மொனிட்டரில் தோன்றும் திரைக் காட்சிகளைப் பெரிய திரையில் பார்த்து மகிழ்வது சிறப்பாகத்தான் இருக்கும். ஆனால் சி.ஆர்.டி மற்றும் எல்.சி.டி தொலைக்காட்சிகளை, கணினியுடன் இணைப்பது எப்படி என்பதுதான் இங்கு எழும் அடிப்படைக் கேள்வி.

கணினியுடன் எல்.சி.டி தொலைக்காட்சிகளை மட்டுமே இணைக்க முடியும் எனப் பலரும் எண்ணுகின்றனர். இது தவறு. சி.ஆர்.டி தொலைக்காட்சிகளையும் இணைக்கலாம். அதற்கான வசதி அந்தத் தொலைக்காட்சியில் அமைக்கப்பட்டிருக்க வேண்டும். அண்மைக் காலத்தில் வரும் சில நிறுவனத் தொலைக் காட்சிகள் இந்த வசதியைப் பெற்றுள்ளன.

1.எச்.டி.எம்.ஐ(HDMI): புதிதாய் வரும் சி.ஆர்.டி தொலைக்காட்சிகளில், இந்த HDMI போர்ட் தரப்படுகிறது. இதன் வழியாக அதற்கான சரியான கேபிள்களை வாங்கித் தொலைக் காட்சியுடன் இணைக்கலாம். கணினியிலும் இந்த போர்ட் இருக்க வேண்டும். தொலைக்காட்சி ரிமோட் அல்லது தொலைக்காட்சியில் HDMI இன்புட் அலைவரிசையைத் தேர்ந்தெடுத்துப் பார்க்கலாம்.

2. டி.வி.ஐ(DVI): இதற்கான அடுத்த சிறப்பான வகை DVI ஆகும். இதன் மூலம் இணைக்கப்படும் போதும் நல்ல டிஜிட்டல் இமேஜ் கிடைக்கும். இது பொதுவாகக் கணினியில் காணப்படும். டி.வி.ஐ கேபிள் ஒன்றின் மூலம் இரண்டையும் இணைக்கலாம். தொலைக்காட்சியில் இந்த போர்ட் இல்லாமல் HDMI மட்டும் உள்ளது என்றால் DVI to HDMI மாற்றக் கேபிள் ஒன்றைப் பயன்படுத்தலாம்.

3.வி.ஜி.H(VGA): இப்போது வரும் சி.ஆர்.டி தொலைக்காட்சிகளிலும், மற்றும் அனைத்து வகைக் கணினியிலும் பொதுவாகத் தரப்படும் இணைப்பு வகை இது. அதேபோல வி.ஜி.ஏ கேபிள்களும் குறைந்த விலையில் எளிதாகக் கிடைக்கும்.

ஒரு முனையைக் கணினியிலும், இன்னொன்றைத் தொலைக்காட்சியிலும் இணைத்துப் பார்க்கலாம். தொலைக்காட்சி அல்லது ரிமோட்டில் அதற்கான அலைவரிசை தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்பதனை மறக்க வேண்டாம்.

4. எஸ்.வீடியோ(Svideo): இதனை இறுதித் தேர்வாகவே வைத்துக் கொள்ள வேண்டும். ஏனென்றால் இதன் மூலம் கிடைக்கும் காட்சி அவ்வளவு சிறப்பாக இருக்காது.

பொதுவாக இந்த வகை இணைப்பு சி.ஆர்.டி தொலைக்காட்சி மற்றும் கணினிகளில் கிடைக்கும். கணினியில் உள்ள எஸ்-வீடியோ போர்ட்டில் கேபிளின் ஒரு முனையை இணைத்து, மற்றொரு முனையை வீடியோ இன் என்று இருக்கும் மஞ்சள் நிற இன்புட் சாக்கெட்டில் இணைக்க வேண்டும்.

பின்னர் இதற்கான சரியான அலைவரிசையைத் தொலைக்காட்சியில் தேர்ந்தெடுக்க வேண்டும். ஒரு சின்ன விடயத்தை மனதில் கொள்ள வேண்டும்.

DVI, VGA அல்லது S Video என்ற வகையில் இணைப்பினை ஏற்படுத்துகையில் படங்கள் மட்டுமே தொலைக்காட்சியில் கிடைக்கும். ஒலி உங்கள் கணினி ஸ்பீக்கரில் கிடைக்கும் மட்டுமே இருக்கும். ஏனென்றால் இந்தக் கேபிள்கள் இமேஜை மட்டுமே கடத்திச் செல்லும். ஆனால் HDMI கேபிள் இணைப்பில் இந்தக் குறை இல்லை.

தொலைக்காட்சியில் ஒலி வேண்டும் என்றால் தனியே 3.5 மி.மீ மினி ஸ்டீரியோ மேல் ஜாக் ஒரு புறமும், ஆர்.சி.ஏ மேல் கேபிள் இன்னொரு புறமும் கொண்ட தனி கேபிள் கொண்டு இணைக்க வேண்டும்.

மின்உபகரணக் கடைகளில் இவை தேவைப்படும் நீளத்தில் கிடைக்கின்றன. இவ்வாறு இணைத்த பின்னர் சில மடிக்கணினிகளில் கட்டளை வழியாக மாற்றங்களை ஏற்படுத்த வேண்டும். பொதுவாக அனைத்து மடிக்கணினிகளிலும் இந்த கட்டளை Fn + F8 RPளை அழுத்தி அமைப்பதாகவே இருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமூகத்தின் வளர்ச்சிக்குக் கைகொடுக்கும் கைதடி மத்தி வளர்மதி சனசமூக நிலையம்

யாழ். மாவட்டத்தின் தென்மராட்சிப் பிரதேசம் வளங்கள் பல நிறைந்து மக்களுக்கான நிறைவான வாழ்க்கையைத் தரும் ஒரு சிறப்புமிக்க பிரதேசமாகும். இந்தப் பிரதேசம் பல அழகான கிராமங்களையும் ஆழ்ந்த அறிவு கொண்ட புத்திஜீவிகளையும் தன்னகத்தே கொண்டுள்ளது. அப்படியான கிராமங்களில் கைதடியும் ஒன்றாகும்.

பல்தொழில் வல்லுநர்களையும் படித்த மேதைகளையும் தன் மக்களாகப் பெற்ற கைதடிக் கிராமம் பல பாடசாலைகளையும், பழைமை வாய்ந்த ஆலயங்களையும் அதற்கு மேலாக சீரிய மனிதர்களை உருவாக்கும் சான்றோர் போற்றும் சனசமூக நிலையங்களையும் கொண்டுள்ளது என்றால் மிகையாகாது. இவ்வாறு கைதடியில் பதின்மூன்று சனசமூக நிலையங்கள் தொடர்ச்சியாக இடையூறின்றி இயங்கி வருகின்றன.

ஏட்டிக்குப் போட்டியாக இந்த சனசமூக நிலையங்கள் பல்வேறு துறைகளில் போட்டி போட்டுச் செயற்பட்டு வருகின்றன. அந்த வகையில் கைதடி மத்தி வளர்மதி சனசமூக நிலையம் கல்வி ரீதியாகவும், விளையாட்டுத்துறை ரீதியாகவும், தொழில் ரீதியாகவும் பலரை உருவாக்கி, உயர்வாக்கி சமூக மட்டத்தில் முன்னிலையில் இருக்கின்றது என்றால் அதை யாரும் மறுக்க முடியாது.

இந்தச் சனசமூக நிலையம் எண்பது வருடங்களுக்கு மேலாகச் செயற்பட்டு வருகின்றபோதும் 1959 ஆம் ஆண்டு வைகாசி மாதம் ஐந்தாம் திகதியே உத்தியோக பூர்வமாகப் பதிவு செய்யப்பட்டதாக நிலைய நிர்வாகிகளாலும் மூத்த உறுப்பினர்களாலும் கூறப்பட்டது.

கல்வியில் மிகவும் பின்தங்கிய நிலையில் தமது பிரதேசம் இருந்தமையை உணர்ந்து சி. திரவியம் தலைமையிலான இளைஞர் குழாம் ஒன்று 1959 ஆம் ஆண்டளவில் எழுச்சி கொண்டு எழுந்தது. அந்த வேளை அவர்களின் செயற்பாட்டுக்கு அந்தப் பிரதேசப் பெரியோர்களும் கைகொடுத்தனர். ஓலைக் கொட்டகையில் உருவாகிய இந்தச் சனசமூக நிலையம் பொருளாதார வசதிக்கேற்ப சிறு சிமெந்துக் கட்டடத்துக்கு இடம் மாறியது. அத்துடன் பாடசாலை செல்லாத சிறுவர்கள் பாடசாலைக்கு அனுப்பப்பட்டனர். கல்வி யோடு விளையாட்டும் அங்கு வளர்ந்தது. தமிழர்களின் தேசிய பாரம் பரிய விளையாட்டான கிளித்தட்டு, தட்டுமறிப்பு என்று அழைக்கப்படும் தாச்சி விளையாட்டு கைதடியில் உயர்ந்த நிலைக்கு வருவதற்கு இந்த வளர்மதி விளையாட்டுக் கழகமே மூல காரணமாக இருந்தமையைப் பலரும் அறிவார்கள். அத்துடன் கரப்பந்து, உதைபந்து, மெய்வல்லுநர் விளையாட்டுக்கள் தற்போதைய துடுப்பாட்டம் ஆகியவற்றிலும் இந்தச் சனசமூக நிலையம் தனி முத்திரை பதித்து வருகின்றது. மேலும் இற்றைக்கு இருபத்தைந்து வருடங்களுக்கு மேலாகத் தென்மராட்சிப் பிரதேச செயலகத்தினால் நடத்தப்பட்டுவரும் விளையாட்டுப் போட்டிகளில் கைதடியில் இருந்து பங்குபற்றும் ஒரே கழகம் கைதடி மத்தி வளர்மதி விளையாட்டுக் கழகம்தான் என்பதனை பிரதேச செயலகமே உறுதி செய்யும்.

மிகவும் சிறந்த முறையில் செயற்பட்டுவரும் இந்தச் சனசமூக நிலையம் 2000 ஆம் ஆண்டு ஏற்பட்ட இடப்பெயர்வு காரணமாகவும் கடும் போர் காரணமாகவும் சேதமடைந்தது. அத்துடன் நாட்டின் சூழ்நிலை காரணமாக இளைஞர்கள் பலர் வெளி நாடுகளுக்குச் சென்றபோதும் தளராத நிலையில் எஞ்சி நிற்கும் ஏனையோர் நிலையச் செயற்பாட்டை வேகமாக முன் னெடுத்து வருவதனை அவதானிக்க முடிகின்றது.

இந்த நிலையில் தமது செயற்பாட்டுக்கு நிலையக் கட்டட வசதி போதாமையாக உள்ளதுடன் சேதமடைந்து இருப்பதனையும் கருத்திற் கொண்ட சனசமூக நிலைய நிர்வாகம் இது சம்பந்தமாக வெளிநாடு களில் வசிக்கும் தமது நிலைய உறவுகளிடம் கோரிக்கை விடுத்தது. அவர்களும் உடனடியாக நிலையக் கட்டடத்தை புதிதாக அமைப்பதற்கு ஆதரவு வழங்கியதோடு நிதியும் அனுப்பினர். தற்போது நிலையக் கட்டடம் மாடிக் கட்டடமாக உருவாகி வருவதனை காணக்கூடியதாக உள்ளது.

மேலும் சுவிற்ஸர்லாந்து நாட்டில் இந்தச் சனசமூக நிலையத்துக்கான நிர்வாகம் ஒன்று ஒவ்வொரு ஆண்டிலும் தெரிவு செய்யப்பட்டு மிகச் சிறப்பாகச் செயற்பட்டு வருவதாகவும் அத்துடன் லண்டனிலும் இந்த நிலையத்தின் நிர்வாகம் உள்ளதாகவும் விரைவில் பிரான்ஸ் மற்றும் ஏனைய நாடுகளிலும் இவற்றைப் போன்று நிர்வாகங்கள் அமைய இருப்ப தனையும் அறிய முடிகின்றது.

சுவிஸ், லண்டன், கனடா, நோர்வே, ஹொலண்ட், பிரான்ஸ், ஜேர்மனி போன்ற நாடுகளில் இருந்துவரும் நிதி மூலம் கட்டடம் அமைக்கப்படுவதுடன் நிலைய அங்கத்தவர்களின் பிள்ளைகளுக்கு காலை, மாலை ஆகிய நேரங்களில் இலவசக்கல்வி வழங்கலும், கற்றல் உபகரணங்கள் வழங்கலும் செயற்படுத்தப்பட்டு வருகின்றன. அத்துடன் வறுமைக் கோட்டுக்குட்பட்ட அங்கத்தவரோ அன்றேல் குடும்ப உறுப்பினரோ மரணமடைந்தால் மரணச் செல வுக்காக உடனடியாக 10 ஆயிரம் ரூபா நன்கொடையாக வழங்கப் படுவதாகவும் நிலைய நிர்வாகத்தினர் கூறுகின்றனர். இத்திட்டம் நீண்ட காலமாக இடம் பெறுவதாகவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை மிகவும் வறிய நிலையில் இருந்து திருமணத்தை எதிர் கொள்ளும் பெண்களின் சீதனத் தேவைக்கு அல்லது திருமணச் செலவுக்கென மேற்படி பெண்களின் பெற்றோர் நிலைய நிர்வாகத்திடம் கோரிக்கை விடும் பட்சத்தில் ஒரு, லட்சம் ரூபாவுக்குள் குறையாத பணத்தை வெளிநாட்டில் வசிக்கும் நிலைய உறவுகளிடம் பெற்று நன்கொடையாக வழங்குவதாகவும் வளர்மதி நிர்வாகத்தினர் தெரிவிக் கின்றனர். இந்த சனசமூக நிலையத்தின் செயற்பாட்டை ஏனைய சனசமூக நிலையங்களும் வரவேற்பதுடன் தாமும் அவ்வாறு செயற்பட முயற்சிப்பதனையும் அவதானிக்க முடிகின்றது.

மேலும் நிலையத்தின் ஏற்பட்டில் முன்பள்ளி ஒன்று கைதடி கலை நகரில் இயங்குவதாகவும் அதன் செயற்பாட்டிற்கு நோர்வேயில் வசிக்கும் ஆ திருநாவுக்கரசு என்பவரும், கைதடி மக்கள் நலன் பேணும் நட்புறவுக் கழகமும் உதவி வருவதாகவும் நிலையத்தின் தலைவர் சி. கந்தசாமி தெரிவிக்கின்றார். இதேவேளை தமது கல்விக் கழகத்திற்கென புதிய கட்டடம் கடந்த ஆண்டு அமைக்கப்பட்டதுடன் மாண வர்களின் தேவைக்கென குழாய்க் கிணறு ஒன்றும் உருவாக்கப்பட்டுள் ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை தமது விளையாட்டுச் செயற்பாடுகளுக்கு மைதானம் இல்லாதது பெருங்குறையாக இருப்பதனால் அதற்கான நடவடிக்கையைத் தாம் மேற் கொள்வதாகவும் இவர்கள் கூறுகின்றனர்.

தமது சனசமூக நிலையத்தைப் பொறுத்தவரை முன்னாள் கல்வி அமைச்சர் கௌரவ. எம். மன்சூர் இந்நாள் விஞ்ஞான தொழில் நுட்பத்துறை அமைச்சர். கௌரவ.எஸ்.திஸ்ஸ விதாரண, நாடாளுமன்ற உறுப்பினர்களான மறைந்த கௌரவ ந. இரவிராஜ், கௌரவ மாவை சேனாதிராசா, கௌரவ ஈ. சரவணபவன், பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் பசுபதி ஜீவரட்ணம், இலங்கை சுதந்திரக்கட்சியின் யாழ். மாவட்ட பிரதான அமைப்பாளர் இ. அங்கயன் ஆகியோர் நேரடியாக வந்து கால்பதித்தமை தமக்கு பெருமை சேர்ப்பதாகவும் அந்நிலைய இளைஞர்கள் மகிழ்ச்சி தெரிவிக்கின்றனர்.

"கைதடி மத்தி, கைதடி கலைநகர், கைதடி இராஜபுரி, கைதடி பண்டகவயல், கைதடி குமரநகர், கைதடி தங்கநகர், கைதடி வலந்தனை ஆகிய பிரதேசங்களில் 200 இற்கும் மேற்பட்ட அங்கத்தவர்களைக் கொண்ட தமது நிலையம் வெளிநாட்டில் வசிக்கும் தமது உறவுகளின் உதவியுடன் மேலும் வளரும் என்பதில் உறுதியாக உள்ளோம்" எனக் கூறுகின்றனர். இந் நிலைய அங்கத் தவர்கள். அவர்களின் கனவுகளும் இலட் சியங்களும் நனவாக மறவும் வளரவும் நாமும் வாழ்த்துவோம்.

**தயா**

(தொடரும்)

# புனர்நிர்மாணத்தால் புதுப்பொலிவு பெறும் கல்வயல் வேதவனப் பிள்ளையார் ஆலயம்

(சென்றவாரத் தொடர்ச்சி)

2000 ஆம் ஆண்டு நடைபெற்ற யுத்தத்தின் போது சேதமடைந்த கட்டடங்களைப் ஆலய நிர்வாகத்தின் முயற்சியினால் புனர் நிர்மாணம் செய்யப்பட்டு 2004 ஆம் ஆண்டு 17 குண்டம் அமைத்து மகா கும்பாபிஷேகம் நடத்தப்பட்டது.

இந்த விநாயகப் பெருமானின் அருளால் டாக்டர் ச.சி. அருளானந்தம் ஆலயத்தின் உட்பிரவாகத்தின் தெற்குப் புறத்தில் மண்டபம் அமைத்துக் கொடுத்ததுடன் ஆலயத்துக்கு ஒலி பெருக்கிச் சாதனங்களையும் வழங்கியுள்ளார்.

2007 ஆம் ஆண்டு இந்து கலாசார அமைச்சினால் வழங்கப்பட்ட நிதி உதவியுடன் வடக்குப்புற மண்டபத்துக்கான தூண்கள் அமைக்கப்பட்டன.

பண்டிதர் க. வேலுப்பிள்ளை என்பவர் ஆலயத்துக்குக் கோபுரம் அமைத்து அதற்கான காண்டாமணியினை லண்டனிலிருந்து வரவழைத்துப் பொருத்தினார். தேர் முட்டிக்குரிய படிகளை வா.கதிரேசபிள்ளை என்பவர் அமைத்துக் கொடுத்துள்ளார்.



ஆலயத்தில் பூசகர்களாகப் பணியாற்றுபவர்கள் வசிப்பதற்கான வசிப்பிடத்தினை ஆலய மேற்கு வீதியில் வே.சிவசுப்பிரமணியம் என்பவர் அமைத்துக் கொடுத்துள்ளார்.

ஆலயத்திற்கு சுமார் 50 ஆயிரம் ரூபா செலவில் ஐம்பொன்னாலான பிள்ளையார் சிலையொன்றினை வே.விநாசித்தம்பி என்பவரும் முருகன், தெய்வானை, வள்ளியம்மை ஆகிய உருவச் சிலைகளை திருமதி கதிர்காமர் மகேஸ்வரி என்பவரும் வழங்கியுள்ளார்.

செ. கதிரவேலு என்பவர் ஆலயத்துக்கு 1993 ஆம் ஆண்டு சகடையொன்றினை வழங்கியுள்ளார்.

பிள்ளையார் வெளிவீதி வருவதற்கான எலி வாகனத்தினை க. நடராசா என்பவரும், லிங்கத்தை துரைச்சாமி குடும்பத்தினரும் வழங்கியுள்ளனர்.

டாக்டர் சு.சி. அருளானந்தம் ஆலய வளாகத்தில் சந்தான கோபாலர் ஆலயத்திற்கென கட்டடம் அமைத்து பிரதிஸ்டை செய்வித்தார்.

ஒவ்வொரு பரீட்சை வேளையிலும் இந்த ஆலயத்துக்குப் பெரும் எண்ணிக்கையான மாணவர்கள் வந்து தீபம் ஏற்றியும் தேங்காய் உடைத்தும் வணங்கிச் செல்வதாகவும், இந்த ஆலயத்துக்கு வந்து செல்லும் மாணவர்கள் பரீட்சைகளில் சித்தி பெறுவதாகவும் ஆலயத்தினர் தெரிவித்தனர்.

**ஐயந்தன்**

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**விற்பனைக்கு**

கட்டுமண் 3 ரக்டர் 23000/=, 4 ரக்டர் 27000/=, பூச்சுமண் 3 ரக்டர் 24000 =, 4 ரக்டர் 28000/=, அரிகல் ஒன்று 40/ =, சல்லிபோட்ட கல் ஒன்று 44/= கொண்டு வந்து தரப்படும்.

தொடர்பு:- 0776253719

**விற்பனைக்கு**

பண்டத்தரிப்பு, சித்தன்கேணி பிரதான வீதியில் இந்துக் கல்லூரிக்கு அருகில் வீடும் காணியும் விற்பனைக்கு உண்டு.

T.P. 0776312118
M.SARAVANAMUTHU
(41)

**பணிப்பெண் தேவை**

வீட்டில் தங்கியிருந்து
வீட்டு வேலை
செய்யக்கூடிய
30 வயதுக்கு மேற்பட்ட
பணிப்பெண் தேவை.
சம்பளம் ரூபா 10,000/=
தொடர்பு:- 0750405723

# மரபுரிமையைப் பாதுகாத்தல் தொடர்பான கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஏப்.22

ஆறுதல் நிறுவனத்தின் அனுசரணையில் 'இலங்கையில் மரபுரிமைகளைப் பாதுகாத்தல்' தொடர்பான கருத்தரங்கு நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ்.இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இதில் கருத்துரையை யாழ்.பல்கலைக்கழக நுண்கலைத் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் பாக்கியநாதன் அகிலன் நிகழ்த்தவுள்ளார் என்று ஆறுதல் நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி சுந்தாம் [illegible]வகலாலா அறிவித்துள்ளார். (ம-313)

# தொழில்நுட்பப் பயிற்சி

யாழ்ப்பாணம், ஏப்.22

மாமரங்களைக் கத்தரித்தலும் சிறப்பாகப் பயன்பெறுதலும் தொடர்பான தொழில்நுட்பப் பயிற்சிநெறி நேற்று கைதடி போதனாசிரியர் பிரிவிலுள்ள யாழ்.சந்திபுரம் ஸ்கந்தவரோதய வித்தியாலயத்தில் நடைபெற்றது.

தற்போது மாம்பழங்களுக்கு ஏற்பட்டுள்ள வாய்ப்பும் வலையமைப்பும், பழங்களைச் சந்தைப்படுத்துவதில் பழமுதிர்சோலையின் பங்களிப்பு, மாமரங்களின் கத்தரிப்பு, நோய் மற்றும் பீடை முகாமைத்துவம், பசளைப் பாவனையும் நீர் முகாமைத்துவமும், அறுவடையும் அறுவடைக்குப் பின்னரான தொழில்நுட்பமும் போன்ற விடயங்கள் இந்தப் பயிற்சிநெறியில் உள்ளடக்கப்படுகின்றன. (313)

**LAUGFS LANKA GAS PLC**
**லா.'ஃப்ஸ் லங்கா காஸ்**

நிறுவனம் வழங்கும் புத்தாண்டு சலுகை




இன்றுமுதல் புதிதாகக் கொள்வனவு செய்யும் 5kg அல்லது 12.5kg காஸ் சிலிண்டர் வாங்கினால்

**காஸ்குக்கர் இலவசம்**

குறிப்பு:- எந்தவொரு லாப் காஸ் முகவரிடமும் பெற்றுக்கொள்ளமுடியும்.

பிரதம விநியோகத்தர்:
பிள்ளையார் டிஸ்றிபியூட்டர்
31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 0772640715.

# மண்டிகைக் குளத்தை புனரமைக்கக் கோரிக்கை

சங்கானை, ஏப்.22

சங்கானை மண்டிகைக் குளத்தை விவசாயிகள் பயன்படுத்த வழி ஏற்படுத்தித் தருமாறு கோரிக்கை விடுக்கப்படுகிறது.

சங்கானை மண்டிகைக்குளம் விவசாயிகளின் நீர்ப்பாசனக் குளமாகக் கடந்த காலங்களில் பயன்படுத்தப்பட்டு வந்தது. இந்த நிலையில் தற்போது இந்தக் குளத்தை தாமரைக்கொடிகள் ஆக்கிரமித்துள்ளதால் விவசாயத்துக்குத் தேவையான தண்ணீரைப் பெறுவதில் சிரமம் ஏற்படுகின்றது எனவும் விவசாயிகள் கூறுகின்றனர்.

இந்தக் குளத்தைப் புனரமைத்து வழங்குமாறு உரிய அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்தபோதும் அதற்கான நடவடிக்கைகள் இன்னும் எடுக்கப்படவில்லை என்றும் கூறப்படுகிறது. (ம)

### இரு மோ. சைக்கிள்கள் மோதியதில் நால்வர் காயம்

ஒழுங்கையொன்றிலிருந்து பிரதான வீதிக்கு வந்த மோட்டார் சைக்கிளை அவ்வழியே வந்த மற்றொரு மோட்டார் சைக்கிள் மோதியதில் அதில் பயணித்தவர் தூக்கி வீசப்பட்டுக் காயமடைந்தார்.

இந்தச் சம்பவம் கோப்பாய்ப் பகுதியில் இடம்பெற்றது. சாவகச்சேரியைச் சேர்ந்த எஸ்.ஸ்ரீகணேசன் (வயது 40) என்பவர் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார். மற்ற மோட்டார் சைக்கிளில் பயணித்த மூவரும் காயமடைந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (ம-207)

# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு:
27.02.1955

உதிர்வு:
14.05.2009





**திருமதி**
**கணேசராசா**
**சபாநாயகி (மலர்)**

திதி: 22.04.2011

பாசமலர் ஒன்று - இப்
பாரினை விட்டுச் சென்று
இரண்டு ஆண்டுகள்.
இரண்டு ஆண்டுகள் ஆகியும்
இதயம் ஏற்குதில்லையே - சகோதரியே
நீங்கள் எம்மை விட்டு
நிரந்தரமாகவே பிரிந்து விட்டீர்களே!

203/2, கண்டி வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்

(48,24,26)

இழந்த சக்தியை மீண்டும் பெற்றிடப் பாவியுங்கள்
**றோயல்**
குளுக்கோஸ்
100%சுத்தமானது
உங்கள் வியாபாரிகளிடம் நீங்கள் குளுக்கோஸ் வாங்கும் போது குளுக்கோஸ் என்று கேட்காமல்
றோயல் குளுக்கோஸ் தாருங்கள் என்று கேட்டு வாங்குங்கள்
PACKED BY:
ROYAL Industries
Colombo 12, T.P 0777277670
அனைத்துப் பார்மஸிகளிலும் கடைகளிலும் பெற்றுக் கொள்ளலாம்.




ஏக விநியோகஸ்தர்கள்:
சிவா
நறுமணப்
பூங்கா
288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

100 % டெக்றோஸ் மொனோகைட்றேட் (Dext rose Monohydrate) அடங்கிய சர்வதேச தரத்திற்கு நிகரான றோயல் குளுக்கோஸ் (100g) மிகக் குறைந்த விலையான ரூபா 31.90 இற்கு சந்தையில் கிடைக்கும்போது ஏன் மற்றைய குளுக்கோஸுக்கு அதிகவிலை கொடுக்கவேண்டும்?

**இலவசம்** அன்பார்ந்த வாடிக்கையாளர்களே!

எம்மிடம் 18 டசின் றோயல் குளுக்கோசினைக் கொள்வனவு செய்து 1000 ரூபாய் பெறுமதியான அழகிய வர்ண ரீ-சேட் ஒன்றினை முற்றிலும் இலவசமாய் பெற்றுக்கொள்ளவும்.

- தபால் மூலம் -

**ஆறு மாத கால டிப்ளோமா**

**Course Length - Six Month**

APRIL. 2011 TO SEPT.2011

20

*தமிழ் மொழி மூலம்*

| | |
|---|---|
| Dip. in Psychology | - உளவியல் டிப்ளோமா |
| Dip. in Office Administration | - காரியாலய நிர்வாக டிப்ளோமா |
| Dip. in Human Resources Management | - மனிதவள முகாமைத்துவ டிப்ளோமா |
| Dip. in Civil Engineering | - சிவில் எஞ்ஜினியரிங் டிப்ளோமா |
| Dip. in Business Management | - வியாபார முகாமைத்துவ டிப்ளோமா |
| Dip. in Banking Management | - வங்கி முகாமைத்துவ டிப்ளோமா |
| Dip. in Sales & Marketing Management | - விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் மு. டி. |
| Dip. in Health & Hospital Management | - சுகாதாரம் மற்றும் வைத்தியசாலை மு. டி. |
| Dip. in Nursing Administration | - தாதியர் நிர்வாக டிப்ளோமா |
| Dip. in Educational Management | - கல்வி முகாமைத்துவ டிப்ளோமா |
| Dip. in Montessori | - மொன்டிசூரி டிப்ளோமா |

**கற்கை முடிவில் பரீட்சை நடைபெறும் பிராந்திய நிலையங்கள்**

• கல்முனை • மட்டக்களப்பு • திருகோணமலை • புத்தளம் • வவுனியா • மன்னார் • யாழ்ப்பாணம் • கண்டி • கொழும்பு • ஹட்டன் • அனுராதபுரம் • நுவரெலியா

மேலதிக விபரங்கள் மற்றும் விண்ணப்பப்படிவம் பெற உங்களது பெயர், முகவரி, தெரிவுசெய்த கற்கைநெறி என்பனவற்றை கீழ் உள்ள கையடக்க தொலைபேசிக்கு SMS செய்து பெற்றுக்கொள்ளலாம்.

Mobile: **0777 140 844, 071 803 48 48**

விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி

Country Co-ordinator
MARUTHUR . A. HASSEN
(B.Sc. Psychology, M.Sc. Psychology)

**ALL INDIA INSTITUTE OF MANAGEMENT STUDIES**
24, 1st FLOOR, SUPERMARKET COMPLEX, MAIN STREET, SAINTHAMARUTHU-07.
Web: www.aiimas.com, www.iimat.com, www.aicomas.org
Tel: 067 2222917, 067 3671749, 067 3679688, 071 803 4848

விண்ணப்ப முடிவுத் திகதி : 28.04.2011

# 31 ஆம் நாள் நினைவுகளும் உயிர் அமைதி வழிபாட்டு அழைப்பும்



தாய் மடியில்:
1965.11.13

இறை அடியில்:
2011.03.23

**திருமதி**
**குணசேகரன்**
**சசீந்திராதேவி**

இல்லாள் இனிதிருக்க இல்லாததொன்றில்லை
இல்லாளும் இல்லாததாகி விட்டால்
இல்லில் விளக்கில்லை விருந்தில்லை
அன்பும் ஆறுதலும் காததூரம் சென்று விட்டதம்மா
உன் நினைவு எம்மை வாட்டி வதைக்குதம்மா
எம்மை ஆற்றுப்படுத்த உம் உயிர் அமைதிபெற
இறைஞ்சுகின்றோம் இறைவனை

அணைந்து விட்ட எம் இல்ல விளக்கு சசீந்திராதேவியின் இறுதி நிகழ்வுகளில் கலந்தும் மற்றும் பல வழிகளிலும் துயர் பகிர்ந்தும் ஆறுதல் தந்த நல்லுள்ளங் கொண்ட அனைவருக்கும் நன்றியைத் தெரிவிப்பதுடன் இன்று (22.04.2011) வெள்ளிக்கிழமை எமதில்லத்தில் நடைபெறும் உயிர் அமைதி வழிபாட்டிலும் மதிய உணவிலும் கலந்துகொள்ளும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அழைக்கின்றோம்.

இந்துக்கல்லூரி வீதி,
பண்டத்தரிப்பு.

சி.குணசேகரன் (கணவர்)
கு.மதுஷன் (மகன்)

(48,20,22)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தவக்காலச் சிந்தனை



## அர்த்தமுள்ள அருள் நிறைந்த பெரிய வெள்ளி

இன்று பெரிய வெள்ளிக்கிழமையாகும். இறைமகன் இயேசு இவ்வுலகை பாவ அடிமைத்தனத்திலிருந்து மீட்டெடுக்கத் தன்னுயிரையே சிலுவையில் பலியாக்கிய நாள். இது தமிழில் ''பெரிய வெள்ளிக்கிழமை'' எனவும் ஆங்கிலத்தில் "GOOD FRIDAY" எனவும் சாதாரண நாளாகிய வெள்ளிக்கிழமை விஷேட பெயருரிச் சொற்கள் (பெரிய - GOOD )கொண்டு அழைக்கப்படுவதற்கான காரணம். இந்த நாள் ஒன்று வரலாற்றில் நமக்கு இருந்திருக்காவிடில் எந்தநாளும் எமக்கு நல்ல நாளாக அமைந்திருக்காது. கிறிஸ்தவ விசுவாசத்தின் பிரகாரம் எமது ஆதி பெற்றோர்களான ஆதாமும் ஏவாளும் இறைவன் கட்டளைக்குக் கீழ்ப்படிய மறுத்து இந்த உலகுக்கு பாவம் நுழையக் காரணமானார்கள். அன்றிலிருந்து எமக்கு எல்லா நாளுமே பாவ இருள் நிறைந்த நாள்களாயின. நம்பிக்கையற்ற நாள்களாகின. அந்த நாள்கள் கடும் சினத்தின் நாள்கள் துன்பமும் துயரமும் நிறைந்த நாள் நம்பிக்கையற்ற நாள்களாகின. அந்த நாள்கள் கடும் சினத்தின் நாள். துன்பமும் துயரமும் நிறைந்த நாள். பேரழிவும் பேரிழப்பும் கொண்டும்வரும் நாள். இருட்டும், காரிருளும் கவிந்த நாள் (செப் 1:15). ஒளியும் இருள் போல் இருந்த நாள்கள் (யோபு 10:22). வாழ்நாள் முழுவதும் இருள், கவலை, பிணி, எரிச்சல், துன்பம் நிறைந்த நாள்கள். (சஉ 5:17). இந்த நாள்களைக் குறித்தே சங்கீத ஆசிரியர் புலம்புவார் ''ஆண்டவரே ஆயினும் நீர் எங்களைக் கொடிய பாம்புகள் உள்ள இடத்தில் நெருங்கும்படி விட்டுவிட்டீர்; சாவின் இருள் எங்களைக் கவ்விக்கொண்டது'' (தி.பா.44:19).

ஆகவே இவ்வாறு பாவத்தின் இருள் கவ்விக்கொண்டிருந்த இவ்வுலகை பாவ இருளிலிருந்து மீட்டு புதுவாழ்வும் வளமும் கொடுத்து எம்மை வாழ்வாங்கு வாழ வைக்கவே இறைமகன் இயேசு இன்று தனிமரமாக எல்லோருடைய பாவங்களையும் தன் தோளில் சுமந்து கொண்டு அடிப்போருக்கு தன் முகத்தையும், தாடியை பிடுங்குவோருக்கு தன் தாடையையும் ஒப்புவித்து, நிந்தனை செய்வோருக்கும், காறி உமிழ்வோருக்கும் தன் முகத்தை மறைத்துக்கொள்ளாமலும் (எசா 50:5-7) நிந்தை, அவமானம், நிஷ்டூரமாய் வழிய கல்வாரி நோக்கிப் பாரச்சிலுவையோடு தள்ளாடித் தள்ளாடிச் சென்று அதே சிலுவையில் அறையப்பட்டு மயிர் கத்தரிப்போன் முன் கத்தாத செம்மறியாகக் கொலைசெய்யப்படுகின்றார். எமக்கு எந்த நாளிலாவது தீங்கு நிகழ்ந்தாலோ அல்லது மரணம் சம்பவித்தாலோ நாம் அந்த நாளை தீய நாள் "Bad Day" என்று நிந்திப்போம். ஆனால் பரமன் இயேசு தன் வாழ்வை அழித்து எமக்கு வாழ்வு தந்ததன் காரணமாக இன்றைய நாள் பெரிய, Good என்று போற்றுகிறோம்.

ஆகவே எம் மீட்பராம் இயேசு தன்னுயிரை மண்ணுயிர்க்காய் தியாகம் செய்து மீட்பை இவ்வுலகுக்குக் கொண்டு வந்துள்ளார் என்று சொன்னால், ஆண்டவருடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படிய மறுத்து மனமாற்றமின்றி இனியும் நாம் வாழ முடியாது. எனவேதான் இந்தத் தவக்காலமானது மனமாற்றத்தின் காலமாக எமக்குக் கொடுக்கப்பட்டுள்ளது. எமது செபம், தவம், அறச்செயல்கள் (இரக்கச் செயல்கள்) மனமாற்றத்தின் படிக்கற்களாக அமைந்திருக்க வேண்டும். எமது தவக்கால வழிபாடுகள் எமது பாவங்களை புடமிட்டு நொறுங்கிய உள்ளத்தை உருவாக்கும் நெருப்பாக இருந்திருக்க வேண்டும். இன்று பெரிய வெள்ளிக்கிழமையில் இயேசுவோடு சேர்ந்து எமது பாவத்திற்கு நாம் அவரோடு இறக்கத் தகுதி பெற்றிருக்க வேண்டும்.

இன்றைய பெரிய வெள்ளி தியாகத்தின் வெள்ளி. புதுவாழ்வின் வெள்ளி. என்னையும் மீட்டிட எனது மனமாற்றம் எந்தளவும் உள்ளது என்று என்னையே நான் ஆராய்ந்தறிய வேண்டிய நாள். பெரிய வியாழனில் இயேசுவின் அன்பைச் சுவைத்து பெரிய சனியில் இயேசுவின் சமாதியருகில் சஞ்சலப்பட்டு, உயிர்ப்பு ஞாயிறில் உத்தான மகிழ்ச்சியில் திளைக்கும் நாள். பெரிய வெள்ளியில் இயேசுவோடு சேர்ந்து என் பாவங்களும் மரணிக்கவில்லையெனில், என்ன பயன்? இயேசு '' மனமாறுங்கள்'' (மத் 3:2 -லூக் 5:22-மாற் 1:15) என்று கிரேக்கத்தில் "Metanoia" எபிரேயத்தில் "Shuv" என்ற சொற்களையும் பாவித்தார். அதாவது (மனமாற்றம்) "Metanoia and Shuv" என்ற வார்த்தைகள் கடவுள்களை நோக்கிய தான மனமாற்றம், அயலானை நோக்கியதான மனமாற்றம், ஒருவனது தனிப்பட்ட உள்ளார்ந்த மனமாற்றம் என்னும் மூன்று அம்சங்களையும் தம்மகத்தே கொண்டதாக இருக்கின்றது. எனவே இயேசு இவ்விரு குறிப்பிட்ட எபிரேய Shuv கிரேக்க Metanoia என்ற இவ்விரு சொற்களையும் பாவித்து விடுக்கும் மனமாற்ற அழைப்பில் இந்த மூன்று அம்சங்களும் (மூன்று வகையான மனமாற்றமும்) இருத்தல் வேண்டும். நாம் எம்மையே ஆராய்வோம். பெரிய வெள்ளியாகிய இன்று இயேசுவோடு சேர்ந்து நான் எனது பாவங்களையம் இறக்க எனது மனமாற்றம் முழுமையாக்கிட இந்த மூன்று வகையான மனமாற்றங்களையும் தன்னகத்தே கொண்டுள்ளதா என்று சிந்திப்போம். அர்த்தமுள்ள அருள்நிறைந்த பெரிய வெள்ளி உங்களுக்கு ஆமென்.

**அருட்பணி ம.மக்மிலன் செ.தா.**

## தனியார் ஊழியர் ஓய்வூதியத் திட்டம்; சட்ட நடவடிக்கைக்கு சில கட்சிகள் முயற்சி

கொழும்பு,ஏப்.22

தனியார்துறை ஊழியர்களுக்கு ஓய்வூதியத் திட்டம் ஒன்றைக் கொண்டுவர உத்தேசிக்கப்பட்டிருப்பது தொடர்பாக சில அரசியல் கட்சிகள் தொழிற்சங்கங்கள் சிலவற்றுடன் சேர்ந்து சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு ஆயத்தம் செய்து வருகின்றன. இந்தத் தகவலை ஐ.தே.கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க தெரிவித்தார்.

இது தொடர்பான சட்ட முன்வரைவொன்று இம்மாத முற்பகுதியில் நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது. இம்மாதம் 27ஆம் திகதி இச்சட்டவரைவைச் சபையில் விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அரசு இந்த நடவடிக்கையின் மூலம் எழு லட்சத்து 50 ஆயிரம் தனியார் துறை ஊழியர்களை ஏமாற்றுவதற்கு முயற்சிசெய்து வருகின்றது என்று கருணாநாயக்க குற்றம் சாட்டினார். அரசு உண்மையில் ஊழியர்களுக்கு உதவி புரிய விரும்பினால் அது தன் சொந்தப் பணத்தை இதில் முத லீடு செய்யவேண்டும். சேமலாபநிதி மற்றும் ஊழியர் நம் பிக்கை நிதியம் ஆகியவற்றிலிருந்து பணத்தை எடுத்து ஊழியர்களுக்கு திருப்பிக்கொடுக்க அரசு முயற்சி செய்கிறது - என்றார் கருணாநாயக்க.

இந்தத் திட்டத்திலிருந்து நன்மை பெறுவதற்கு 10 வருடங்கள் காத்திருக்கவேண்டும். ஒன்பது வருடங்கள் காத்திருந்தாலும் நன்மை கிடைக்காது. இதனால்தான் இது ஒரு மோசடி என்று நாம் கூறுகிறோம் -என்று அவர் மேலும் கூறினார். (ப)

## சமய சந்நிதிகளில்

மந்திகை,ஏப்.22

மேலைப்புலோலி வாணர் குடியிருப்பு சொக்கன்கலட்டி முத்துமாரியம்மன் ஆலய அலங்காரத் திருவிழா எதிர்வரும் 28 ஆம் திகதி வியாழக்கிழமை ஆரம்பமாகித் தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறவுள்ளது. எதிர்வரும் மே மாதம் 7 ஆம் திகதி சங்காபிஷேகம் நடைபெறும். (ற-237)

* * *

வடமராட்சி,ஏப்.22

வடமராட்சி ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலயச் சுற்றாடலில் அமைந்துள்ள பெரியாழ்வார் ஆச்சிரமத்தில் வாரம் தோறும் நடைபெற்று வரும் ஆன்மீக நிகழ்வு வரிசையில் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணிக்கு ''சீதா கல்யாணம்'' என்னும் தலைப்பில் வில்லிசை நிகழ்வு நடைபெறவுள்ளது. இந்த வில்லிசையை நெல்லைநகர் சக்தி வில்லிசைக் குழுவினர் வழங்கவுள்ளனர். (ற-236)

* * *

சண்டிலிப்பாய்,ஏப்.22

கருகம்பனை கவுணாவத்தை வைரவர் ஆலயத்தின் மகா கும்பாபிஷேகம் அடுத்த மாதம் 6 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது. இந்த ஆலயம் கடந்த வருடம் ஆவணி மாதம் பாலஸ்தாபனம் செய்யப்பட்டு பல லட்சம் ரூபா செலவில் புனரமைக்கப்பட்டுள்ளது. (ற-115)

## மரண அறிவித்தல்

### திருமதி இரத்தினம் கோகிலாம்பிகை

(சின்னரத்தினம்)



கோயிற்குடியிருப்பு, சாவகச்சேரியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இரத்தினம் கோகிலாம்பிகை 19.04.2011 செவ்வாய்க்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பரமநாதன் - அன்னமுத்து தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான பொன்னையா - கோவிந்தம்மா தம்பதிய ரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற பொன்னையா இரத்தினம் அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற இராசலட்சுமியின் அன்புச் சகோதரியும் பத்மாவதி (ஓய்வுபெற்ற ஆசிரியை, சாவகச்சேரி மகளிர் கல்லூரி), வசந்தமல்லிகா, சிறீ இராசபாலன், இராஜினி, இரவீந்திரன், சுரேந்திரன் ஆகியோரின் பாசமிகு தாயும் சிவவர்மனின் பெரியதாயும், யோகராணி, சுகேன், சிவரஞ்சினி, பரிமளம் ஆகியோரின் அன்பு மாமியும் எல்மோ, சுஜீற்றா, யதுனா, அபிசன், சுரேஸ், சோபனா ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

இறுதிக் கிரியைகள் இன்று (22.04.2011) வெள்ளிக்கிழமை பி.ப. 2 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கோயிற்குடியிருப்பு,
சாவகச்சேரி.

(சி/574847)(41,22,19)

## கலாபூஷணம் விருதுக்கு விண்ணப்பிக்கலாம்

இந்த ஆண்டுக்கான கலாபூஷணம் விருதுக்கு கலைத்துறையில் விசேட பங்களிப்புச் செய்துவரும் முஸ்லிம் கலைஞர்கள் விண்ணப்பிக்கமுடியும் 60 வயதைப் பூர்த்தியானவர்கள் மட்டும் விண்ணப்பிக்கத் தகுதியானவர்கள்.

விண்ணப்பப் பத்திரத்தை முஸ்லிம் சமய பண்பாட்டுத் திணைக்களத்தில் பெற்றுக்கொள்ள முடியும். விண்ணப்பப்பத்திரத்தைப் பூர்த்தி செய்து பிரதேச செயலாளரின் சிபாரிசுடன் எதிர்வரும் ஜூன் மாதம் 30அம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்கப்படவேண்டும்.

விண்ணப்பிக்க விரும்புவோர் பணிப்பாளர், வை.எல்.எம்.நவவி, முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம், 180 டி.பி. ஜயா மாவத்தை, கொழும்பு என்னும் முகவரியுடன் அல்லது 01126 91874 என்னும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு விண்ணப்பப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்ள முடியும் (வ)

## பரிசுத்த ஆவிக்கு ஜெபம்

ஓ பரிசுத்த ஆவியே!
உமக்கு நன்றி

உலக இரட்சகரான இயேசுவே
நீசப்பாவிகளின் மேல்
அளவில்லா இரக்கம் உள்ளவரே
முடியாத காரியங்களை
கைகூடப் பண்ணியவரே
எங்கள் இயேசுவே
எங்கள் மன்றாட்டை கேட்டருளும்.

அடியான்.

வெளிக்கள நிலையம்
தொண்டைமானாறு
FWC ஆண்டுப் பொதுக் கூட்டம்

தொண்டைமானாறு வெளிக்கள நிலையத்தின் ஆண்டுப் பொதுக் கூட்டம் 30.04.2011 சனிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் நடைபெறும். அனைத்து உறுப்பினர்களையும் தவறாது சமூகம் கொடுக்கும் வண்ணம் வேண்டுகின்றோம்.

வெளிக்கள நிலையம்.
தொண்டைமானாறு. செயலாளர்

## வேலைக்கு ஆள்கள் தேவை

1) கணக்காளர்
2) விற்பனையாளர்
3) சிட்டை எழுதுநர்

(ஆண்கள் மட்டும்)

ஐமுனா ஸ்ரோர்ஸ்,
39, பிரதான வீதி, நெல்லியடி
தொ.பே.:
0212263970, 0777422604

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எகிப்தில் இடம்பெற்ற மக்கள் புரட்சியின்போது அவர்களைச் சுடுவதற்கு முபாரக்கே உத்தரவு

## உண்மை கண்டறியும் குழு அறிக்கை

கெய்ரோ, ஏப். 22

எகிப்தில் ஜனவரி மாதம் நடந்த மக்கள் புரட்சியின் போது, அவர்களைச் சுட்டுக் கொல்லும்படி அப்போதைய எகிப்து அதிபர் ஹோஸ்னி முபாரக்தான் உத்தரவிட்டார் என்பது தெரிய வந்துள்ளது.

உண்மை கண்டறியும் குழு வெளியிட்டுள்ள அறிக்கையில் இது குறித்துக் கூறப்பட்டுள்ளது.

எகிப்தில், ஜனவரி மாதம் 25 ஆம் திகதி முதல் 18 நாள்கள் அப்போதைய அதிபர் முபாரக்கிற்கு எதிராக மக்கள் புரட்சி நடந்தது.

அந்தப் புரட்சியை அடக்க துப்பாக்கிச் சூடு, தனது ஆதரவாளர்கள் மூலம் தாக்குதல் எனப் பல்வேறு வழிகளைக் கையாண்டும் இறுதியில் பதவியை விட்டு விலக வேண்டியவரானார் முபாரக்.

இந்தப் புரட்சியில் 846 பேர் பலியாயினர். அவருக்குப் பின் ஆட்சிப் பொறுப்பேற்றுள்ள ராணுவ அரசு, ஜனவரி 25 புரட்சிக் காலத்தில் மக்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல் பற்றிய உண்மையைக் கண்டறிய நீதிபதிகள் தலைமையில் குழு ஒன்றை அமைத்தது.

இந்தக் குழு, 17 ஆயிரத்து 58 அதிகாரிகள் மற்றும் சாட்சிகள், 800 வீடியோ காட்சிகள் மற்றும் புகைப்படங்கள் ஆகியவற்றின் மூலம் மக்கள் மீதான தாக்குதல் பின்னணியைக் கண்டறியும் முயற்சியில் ஈடுபட்டது. நேற்று முன்தினம் அக்குழு தனது அறிக்கையை அரசிடம் சமர்ப்பித்து வெளியிட்டது.

இது குறித்து குழுத் தலைவர் நீதிபதி ஒமர் மார்வான் கூறியதாவது:

* மக்கள் புரட்சியை நசுக்க வேண்டும் என்ற எண்ணத்தோடு முபாரக், பல்வேறு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளார்.

* தாரிர் சதுக்கத்தில் குவிந்திருந்த மக்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தும்படி அவர் உத்தரவிட்டார். பொலிஸார் மக்களின் தலை மற்றும் நெஞ்சுப் பகுதிகளைக் குறிபார்த்துச் சுட்டுத் தள்ளினர்.

* குண்டடி பட்டும் சாகாதவர்களின் முகத்தை சிதைத்து, கண்களைத் தோண்டி எடுத்துள்ளனர் பொலிஸார். குண்டடியில் தப்பிப் பிழைத்தோரில் பெரும்பான்மையோர் கண்களை இழந்திருப்பது இதற்குச் சாட்சி.

* பொலிஸ் துறையின் ஒரு பகுதியான பயங்கரவாத எதிர்ப்புப் படையினர் மக்களுக்கு எதிராகப் பயன்படுத்தப்பட்டுள்ளனர்.

* மக்களைக் கொல்ல வேண்டும் என்ற உள்நோக்கத்துடன் பொலிஸார் தங்கள் வாகனங்களை அவர்கள் மீது ஏற்றிக் கொலை செய்துள்ளனர்.

* ''மப்டி'யில் இருந்த பொலிஸார் மற்றும் அதிகாரிகள், ஒட்டகம் மற்றும் குதிரைகளில் ஏறி திடீரென தாரிர் சதுக்கத்திற்குள் புகுந்து மக்களைக் கண்மூடித் தனமாகத் தாக்கியுள்ளனர்.

* நாட்டின் 41 சிறைகளில் 11 சிறைகளில் இருந்து கைதிகள் தப்பியதில், பாலஸ்தீன நாட்டின் ஹமாஸ் இயக்கம் மற்றும் லெபனான் நாட்டின் ஹிஸ்புல்லா இயக்கம் இரண்டுக்கும் தொடர்புள்ளது. தப்பிய கைதிகள் எரிகிற தீயில் எண்ணெய்விட்டது போல் தாக்குதலில் இறங்கியுள்ளனர்.

* இந்தக் கைதிகள் கடைகளுக்குத் தீ வைத்துக் கொள்ளையிட்ட போது, முபாரக்கின் ஆலோசனைப்படி பொலிஸார் எந்த நடவடிக்கையிலும் ஈடுபடவில்லை. அதன் மூலம் மக்களிடையே பீதியை ஏற்படுத்தி புரட்சியை நசுக்கி விடலாம் என்று அவர் எண்ணியிருக்கிறார்.

* ஊழல், விலைவாசி உயர்வு போன்ற காரணங்கள் தவிர, முபாரக் தனது இளைய மகன் கமாலை அடுத்த அதிபராக்க முயன்றதும் மக்கள் புரட்சிக்கு முக்கிய காரணம்.- மார்வான் தெரிவித்தார்.

எகிப்து புரட்சியில் 846 பேர் பலியானதன் பின்னணியில் முபாரக் இருப்பது உறுதி செய்யப்படும் பட்சத்தில், அவருக்கு மரண தண்டனை அல்லது ஆயுள் தண்டனை கிடைக்க வாய்ப்பிருப்பதாக, மற்றொரு நீதிபதி ஜக்கரியா ஷலஷா தெரிவித்துள்ளார். (ம)

# பிரிட்டன் இராணுவ நிபுணர்களை அனுப்புவதைக் கண்டிக்கிறது லிபியா

லிபியாவுக்கு ராணுவ நிபுணர்களை அனுப்பி வைக்கத் தீர்மானித்துள்ள பிரிட்டனுக்கு, லிபியா கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

அதேநேரம், ''போரை தற்காலிகமாக நிறுத்தி விட்டு, ஐ.நா. மேற்பார்வையில் இன்னும் ஆறு மாதத்தில் தேர்தல் நடத்தவும், கடாபியின் எதிர்காலம் குறித்தும் விவாதிக்கவும் தயார்' என்று லிபிய வெளியுறவு அமைச்சர் கூறியுள்ளார்.

லிபியாவில் தொடர்ந்து நடந்து வரும் போரில், எதிர்த் தரப்பால் குறிப்பிடத்தக்க அளவு வெற்றி பெற முடியவில்லை. கடாபி படைகள் வான்வழித் தாக்குதல் மூலம் எதிர்த் தரப்பினரை பின்வாங்கச் செய்கின்றன.

பிரிட்டன் வெளியுறவு அமைச்சர் வில்லியம் ஹாக் புதன்கிழமை அளித்த பேட்டியில், ''லிபிய எதிர்த் தரப்புக்கு அவர்களின் ராணுவ பலத்தை அதிகரிப்பது, தொடர்பு மற்றும் போக்குவரத்து, மனிதாபிமான உதவிகளுக்கான நடவடிக்கைகள் ஆகியவை குறித்து ஆலோசனை வழங்க 10 பிரிட்டன் ராணுவ நிபுணர்கள் லிபியாவுக்கு விரைவில் அனுப்பி வைக்கப்படுவர்' என்று தெரிவித்திருந்தார்.

பிரான்ஸும் பிரிட்டன் குழுவோடு தனது நாட்டு நிபுணர்கள் 10 பேரை அனுப்பி வைப்பதாகத் தெரிவித்திருந்தது. அமைச்சர் ஹாக்கின் முடிவுக்கு அவரது கன்சர் வேடிவ் கட்சிக்குள்ளேயே அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இந்த நடவடிக்கை ஐ.நா. தீர்மானத்தை மீறிய தாகும் என்று கருதும் பிரிட்டன் எம்.பிக்கள், உடனடியாக நாடாளுமன்றத்தைக் கூட்டி, இது குறித்து விவாதிக்க வேண்டும் என்று கூறியுள்ளனர். (ம)



சீனாவின் தலைநகர் பீஜிங்கில் உள்ள ஷிங்கூவா பல்கலைக்கழகத்துக்கு வருகை தந்த அந்நாட்டு அதிபர் ஹூ ஜின்டாபோ அங்குள்ள இன்டர்நெட் பிரிவில் உள்ள வளர்ச்சிப்பணிகள் குறித்து ஆலோசனை நடத்தினார். (ம)

# அதிகளவு யுரேனியத்தை களஞ்சியப்படுத்தும் சுவீடன்

சுவீடன் வெளிநாடுகளில் அதிகளவு யுரேனியத்தை களஞ்சியப்படுத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

2009 ஆம் ஆண்டை விடவும் 2010 ஆம் ஆண்டில் சுவிடன் 40 வீதமான யுரேனியத்தை வெளிநாட்டு களஞ்சியங்களில் பேணி வருவதாகக் குறிப்பிடப்படுகிறது.

2009 ஆம் ஆண்டில் 124.9 தொன் ஆகக் காணப்பட்ட யுரேனியத்தின் அளவு 2010 ஆம் ஆண்டில் 204.9 தொன் ஆக உயர்வடைந்துள்ளது.

பிரான்ஸ், அமெரிக்கா, சுவீடன், ஜெர்மனி மற்றும் பிரிட்டன் ஆகிய நாடுகளில் உள்ள களஞ்சியங்களில் சுவிடன் யுரேனிய கையிருப்பைப் பேணி வருகின்றது.

சுவீடன் யுரேனியத்தை களஞ்சியப்படுத்தியுள்ள வெளிநாட்டு களஞ்சியங்கள் பற்றிய விவரம் முதல் தடவையாக 2005ம் ஆண்டு வெளியிடப்பட்டது. (ம)


சனிக்கிழமை அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இல. 2216 திகதி 20-04-2011

ஆங்கில எழுத்திற்கும் E

வெற்றி எண்கள் 04 19 26 36

போனஸ் இல: 43

ஜக்பொட் பரிசு ரூ. 20,688,325/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை | மொத்த பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 1 இல | 177214 | 20/- | 3,544,280/- |
| 2 இல | 12666 | 100/- | 1,266,600/- |
| 3 இல | 270 | 1,000/- | 270,000/- |
| 4 இல | 01 | 1,000,000/- | 1,000,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் | 7108 | 40/- | 284,320/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் | 499 | 1,000/- | 499,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் | 10 | 10,000/- | 100,000/- |
| 4 இல + ஆங்கில எழுத்திற்கும் | - | 20,688,325/- | - |
| 1 இல + போனஸ் இல | 8417 | 100/- | 841,700/- |
| 2 இல + போனஸ் இல | 380 | 500/- | 190,000/- |
| 3 இல + போனஸ் இல | 05 | 100,000/- | 500,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 341 | 200/- | 68,200/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 25 | 1,500/- | 37,500/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | - | 150,000/- | - |
| மொத்தம் | | | 8,601,600/- |
| வெல்லப்படாத டிக்கட்டுகளுக்காக கொடுக்கப்பட்ட பணப்பரிசுகளின் பெறுமதி | 10 | 60,000/- | 600,000/- |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | 206946 | | 9,201,600/- |

ரூ. 60,000/- வீதம் பணப்பரிசுகள் வெற்றிபெற்ற 10 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்.

| | |
|---|---|
| கொழும்பு | 203053789-4-07 |
| கம்பஹா | 203053294-9-38 |
| கம்பஹா | 203053316-5-48 |
| அம்பாந்தோட்டை | 203050928-4-23 |
| அம்பாறை | 203054024-2-11 |
| கேகாலை | 203053621-7-23 |
| கம்பஹா | 203053390-6-29 |
| பதுளை | 203056010-1-22 |
| பொலன்னறுவை | 203056127-0-40 |
| நுவரேலியா | 203052319-2-07 |

இந்த சனிக் கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசு

ரூ. 21,172,025/-

பச்சை நிற டிக்கட்டுகள் 2011 ஏப்ரல் 23 ஆம் திகதி சனிக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு

அபிவிருத்தி லொத்தர் சபை

356, கலாநிதி கொல்வின் அர் டி சில்வா மாவத்தை, யூனியன் பிலேஸ், கொழும்பு - 02

தொ.பே: 2333546/7



பிரதேச செய்தியாளர்

கீழ்க்காணும் பிரதேசங்களுக்கு செய்தியாளர்கள் இணைத்துக் கொள்ளப்படவிருக்கின்றனர்.
முன்னனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.



★புதுக்குடியிருப்பு ★வற்றாப்பளை
★மாங்குளம் ★பூநகரி
★முறிகண்டி ★மல்லாவி
★முள்ளியவளை ★விசுவமடு
★உருத்திரபுரம்

தகுதியானவர்கள் விவரங்களுடன் உடன் கீழ்க் காணும் விலாசத்துக்கு விண்ணப்பிக்கவும்.

பிரதம ஆசிரியர்

உதயன்

361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருத்துவ சிகிச்சைகளுக்காக இந்தியா செல்ல வேண்டாம் அமெரிக்கர்களைக் கேட்டுக்கொள்கிறார் பராக் ஒபாமா

குறைந்த செலவிலான மருத்துவ சிகிச்சைக்காக இந்தியாவுக்குச் செல்ல வேண்டாம் என்று அமெரிக்கர்களை அந்த நாட்டு ஜனாதிபதி பராக் ஒபாமா கேட்டுக் கொண்டுள்ளார்.

அமெரிக்காவில் மருத்துவ சிகிச்சை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. இருதய அறுவை சிகிச்சை, சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை உள்ளிட்ட நோய்களுக்கான மருத்துவ சிகிச்சைக்கான கட்டணம் மிகவும் அதிகமாகும்.

இதனால் அமெரிக்கர்கள் மருத்துவ சிகிச்சை குறைவாக உள்ள இந்தியா மற்றும் மெக்ஸிகோவுக்குச் சென்று சிகிச்சை பெறுகின்றனர்.

இது குறித்து கருத்து தெரிவித்துள்ள அதிபர் ஒபாமா கூறியதாவது:

அமெரிக்காவிலேயே தரமான சிகிச்சையை தனது குடிமக்களுக்குக் கிடைக்க வழி ஏற்படுத்தித் தரப் போவதாகக் கூறினார்.

வர்ஜீனியா மாகாணத்தில் உள்ள சமுதாயக் கல்லூரியில் வைத்து ஒபாமா இவ்விதம் கூறியவுடன் அதை பலத்த கரகோஷத்துடன் மக்கள் வரவேற்றனர்.

அமெரிக்காவில் மருத்துவ கட்டணங்கள் உயர்ந்து வருவது குறித்து பொதுமக்கள் கருத்து கேட்டதற்கு ஒபாமா இவ்விதம் பதில் அளித்தார்.

குடிமக்களுக்கு நல்ல உடல் ஆரோக்கியம் அளிக்க வேண்டும் என்பதற்காக அரசு திட்டமிடும் போது மக்கள் வேறு நாடுகளுக்கு சிகிச்சைக்காக செல்வது வேதனையளிக்கிறது.

இது தொடர்பாக கலந்துபேசி நல்ல முடிவு எடுக்கப் படும் என்று கூறினார். உள்நாட்டிலேயே உயர்தர சிகிச்சை பெறுவது மிகவும் சிறப்பானதாக இருக்கும் என்று தான் கருதுவதாகவும் அவர் கூறினார்.

அமெரிக்காவில் கண்டுபிடிக்கப் படும் மருந்துகளின் விலை பிற நாடுகளைவிட இங்கு அதிக விலைக்கு விற்பனையாவது ஏன் என்பது புரியவில்லை. இதற்கு இங்குள்ள மருந்து தயாரிப்பு நிறுவனங்கள்தான் காரணம்.

வெளிநாடுகளில் இது போன்ற நிலை கிடையாது. இதற்கு இங்குள்ள வரி விதிப்பு காரணமா அல்லது இதனால் அரசின் வரி வருவாய் குறையுமா என்பதை ஆராய்ந்து உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றார் ஒபாமா. (ம)

## சிரியாவில் போராட்டம் நடத்துவதற்கு தடைவிதிப்பு

### இராணுவம் சுட்டதில் நான்கு பேர் பலி

டமாஸ்கஸ், ஏப். 22

சிரியாவில் ஜனாதிபதி பஷார் அல்-ஆஷாத்துக்கு எதிராகப் பொதுமக்கள் போராட்டம் நடத்தி வருகின்றனர்.

கடந்த மாதம் 15ஆம் திகதி ஆரம்பித்த போராட்டம் 37 நாள்களாகத் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. போராட்டத்தை அடக்க இராணுவம் துப்பாக்கிச் சூடு நடத்தி வருகிறது. அதில் பலர் பலியாகியுள்ளனர்.

அமுலிலிருந்த அவசரச் சட்டத்தை அமுல்படுத்துவதற்கான மசோதாவுக்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இது போராட்டக்காரர்களின் முக்கிய கோரிக்கையாகும். இந்தச் சட்டத்தை இரத்துச் செய்த பிறகும் போராட்டம் இன்னும் ஓயவில்லை.

மக்கள் ஹோம்ஸ் நகரில் திரண்டு போராட்டம் நடத்தினர். அப்போது இராணுவம் துப்பாக்கியால் சுட்டதில் 4 பேர் பலியாகினர். அதேவேளையில் இங்கு நடந்த கலவரத்தில் இராணுவ அதிகாரிகளும், 3 குழந்தைகளும் பலியாகினர் என்று அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிரியாவில் போராட்டம் நடத்த அரசு தடைவிதித்துள்ளது. அரசிடம் அனுமதி பெறாமல், நாட்டின் எந்தப் பகுதியிலும் பேரணிகளும், போராட்டங்களும் நடத்தக்கூடாது என அறிவிக்கப்பட்டுள்ளது.


## பின்லாந்து நாடாளுமன்றில் பெண்களே ஆதிக்கம்

பின்லாந்தின் நாடாளுமன்றத்தில் பெண்களின் ஆதிக்கம் அதிகம் உள்ளது என சீன இணையத்தளம் சின்குவா தெரிவித்துள்ளது.

பின்லாந்தில் பெண்களுக்கான வாக்குரிமை 1906ஆம் ஆண்டு முதல் வழங்கப்பட்டு வருகிறது. அங்கு 1907ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் 19 பெண்கள் முதன்முறையாக நாடாளுமன்றத்துக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

2003ஆம் ஆண்டில் நடைபெற்ற தேர்தல் மூலம் அதிகபட்சமாக 75 பெண்கள் எம்.பிக்களாக தேர்வு செய்யப்பட்டனர். தொடர்ந்து 2007இல் இதன் எண்ணிக்கை 84 அதிகரித்து காணப்பட்டது. இது 42 சதவீத வளர்ச்சியாகும்.

மொத்தமுள்ள 200 இடங்களில் தற்போதைய பெண்களின் எண்ணிக்கை 86 ஆக உள்ளது.



பிரான்ஸ் வந்திருந்த கென்யா பிரதமர் ரெய்லா ஒடிங்கோ (இடது), அந்த நாட்டு பிரதமர் பிராங்கோயிஸ் பில்லான் ஆகியோர் பாரீசில் நடந்த நிகழ்ச்சியில் முக்கிய ஒப்பந்த ஷரத்துக்களை பரிமாறிக்கொண்டனர். (ம)

# சிரியாவில் உள்ள அவசர நிலைச் சட்டத்தை நீக்க வகை செய்த மசோதாவுக்கு ஒப்புதல்

டமாஸ்கஸ், ஏப். 22

சிரியாவில், கடந்த 63 ஆண்டுகளாக நடைமுறையில் இருந்த அவசரநிலைச் சட்டத்தை நீக்க வகை செய்யும் மசோதாவுக்கு, அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

இதற்கிடையில், சிரிய எதிர்க்கட்சித் தலைவர், நேற்று முன்தினம் அல் ஜசீரா தொலைக்காட்சிக்கு பேட்டியளித்தயுடனேயே கைது செய்யப்பட்டார்.

சிரியாவில், அதிபர் அசாத்தை உடனடியாகப் பதவி விலகக் கோரி, மக்கள் ஆர்ப்பாட்டம் நடத்தி வருகின்றனர்.

அவர்களின் கோரிக்கைகளில், 63 ஆண்டுகளாக அமுலில் இருந்து வரும் அவசர நிலைச்சட்டம் உடனடியாக ரத்து செய்யப்பட வேண்டும் என்பதும் ஒன்று.

செவ்வாய்க்கிழமை கூடிய சிரிய அமைச்சரவை, அந்தச் சட்டத்தை ரத்து செய்ய வழிவகுக்கும் மசோதாவுக்கு ஒப்புதல் அளித்தது.

இந்த மசோதா சட்டமாவதற்கு நாடாளுமன்ற ஒப்புதல் தேவை. மே 2 ஆம் திகதிதான் நாடாளுமன்றம் கூடும்.

இதேநேரம், இந்தச் சட்டத்துக்கு மாறாக, அந்த நாட்டு உள்துறை அமைச்சகம் மற்றொரு சட்டத்தை நிறைவேற்றியுள்ளது. இது பழைய சட்டத்திற்கு எவ்விதத்திலும் குறைந்ததல்ல என்ற கருத்து மக்களிடையே நிலவுகிறது. (ம)

# எய்ட்ஸ் நோய்த் தாக்கத்தால் சீனாவில் 68 ஆயிரம் பேர் பலி

### இரத்த விற்பனையே பிரதான காரணமாம்

பீஜிங், ஏப். 22

சீனாவில் எய்ட்ஸ் நோயால் இறப்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. தற்போதைய நிலைவரப்படி, இதுவரை எய்ட்ஸ் நோயால் 68 ஆயிரம் பேர் இறந்துள்ளனர்.

சீனாவில் எய்ட்ஸ் நோயால் பாதிக்கப்பட்டவர்கள் மொத்தம் 7 இலட்சத்து 40 ஆயிரம் பேர். இவர்களில், ஒரு லட்சத்து 40 ஆயிரம் பேர் அந்நோயின் இறுதிக்கட்டத்தில் இருப்பவர்கள்.

சீன கம்யூனிஸ்ட் அரசு, அந்நோயைக் கட்டுப்படுத்த பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. பல்வேறு கண்காணிப்புகள் இருந்தபோதிலும், எய்ட்சால் பாதிக்கப்பட்டோர் என்பது தெரிந்தால் சமூகப் புறக்கணிப்புக்கு ஆளாகி விடுவோமோ என்ற பயத்தால் பலர் தங்கள் உடல்நிலையை பற்றித் தெளிவாக வெளியில் சொல்வதில்லை.

கடந்தாண்டு, எச்.ஐ.வியால் புதிதாகப் பாதிக்கப்பட்ட 44 ஆயிரம் பேரில், 13 சதவீதம் பேர் ஆண் ஓரினச் சேர்க்கையாளர் என்பது குறிப்பிடத்தக்கது. இவ்வளவுக்கும், ஓரினச் சேர்க்கைக்கு சீனாவில் தடை விதிக்கப்பட்டுள்ளது.

கடந்தாண்டில் மட்டும் 7 ஆயிரத்து 700 பேர் எய்ட்ஸுக்குப் பலியாகியுள்ளனர். கடந்தாண்டோடு இதுவரை சீனாவில் மொத்தம் 68 ஆயிரம் பேர் பலியாகியுள்ளனர்.

சீனாவில் 1990களில் ஆரம்பிக்கப்பட்ட, 'இரத்த விற்பனை' திட்டத்தால்தான் இந்நோய் அதிகளவில் பரவி வருகிறது என சுகாதாரத் துறை அமைச்சகத்தின் நோய் தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டுக் குழுவின் துணை இயக்குநர் ஹாவோ யாங் கூறியுள்ளார்.

1990ஆம் ஆண்டு முதல் சீனாவில் இரத்த விற்பனைத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. அதன்படி, ஒருவர் தனது இரத்தத்தை உரிய முகவரிடம் விற்று அதற்கேற்ப பணம் பெற்றுக்கொள்ளலாம்.

கூடுதலாக, ஒருவரின் இரத்தத்திலுள்ள 'பிளாஸ்மா'வை மட்டும் எடுத்துவிட்டு, மீண்டும் அதே இரத்தத்தைக் கொடுத்தவர் உடம்பிலேயே செலுத்திவிடுவர். இம்முறையில் பாதுகாப்பற்ற நடைமுறைகள் பின்பற்றப்பட்டதால்தான் அதிகளவில் எய்ட்ஸ் பரவியது என்கிறார் யாங்.

நாடு முழுவதும் போலி முகவர்கள் அதிகரித்துவிட்டதால் இரத்த பரிமாற்றத்தில் என்ன நடக்கிறது என்பதே தெரியவில்லை என்கிறார் அவர். (ம)

# விபத்திலிருந்து தப்பினார் மிச்செல் ஒபாமா

வாஷிங்டன், ஏப்.22

அமெரிக்காவின் ஆண்ட்ரூஸ் விமானப்படைத் தளத்தில் நடைபெறவிருந்த விபத்தில் இருந்து தப்பியது மிச்செல் ஒபாமா பயணித்த விமானம்.

மேரிலேண்ட் மாநிலம் பிரின்ஸ் ஜார்ஜ் கவுன்டி பகுதியில் உள்ளது ஆண்ட்ரூஸ் விமானப் படை தளம். இந்த தளமானது தலைநகர் வாஷிங்டனில் இருந்து 13 கிலோ மீற்றர் தூரத்தில் உள்ளது.

ஒபாமா மற்றும் குடும்பத்தார் வெளியூர் செல்ல விமானம் ஏறுவதும், வந்திறங்குவதும் இங்குதான். அமெரிக்க ஜனாதிபதி ஒபாமாவின் மனைவி மிச்செல், துணை அதிபர் ஜோ பிடனின் மனைவி ஜில் ஆகியோர் நியூயோர்க்கில் நடந்த தொலைக்காட்சி நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

விழாவை முடித்துக் கொண்டு போயிங் 737 விமானத்தில் மிச்செல் செவ்வாய்க்கிழமை திரும்பிக் கொண்டிருந்தார். விமானம் தரையிறங்க ஆண்ட்ரூஸ் விமான தள தரைக்கட்டுப்பாட்டு அதிகாரிகள் முதலில் அனுமதி அளித்தனர்.

வேறொரு சரக்கு விமானம் ஒன்றும் தரையிறங்க தயாராவதை பின்னர் கவனித்தனர். விபத்து ஏற்படுத்தக்கூடிய வகையில் இரு விமானங்களும் அருகருகே பறந்தன. உடனே திசை திருப்பி பாதுகாப்பான தூரத்துக்கு விலகிச் செல்லுமாறு மிச்செல் விமானத்தை ஓட்டியவருக்கு உத்தரவிடப்பட்டது.

அந்த சூழ்நிலையில் தரையிறக்குவது ஆபத்து என்று கருதப்பட்டதால் விமானத்தை மீண்டும் மேலே எழுப்ப அவருக்கு உத்தரவிடப்பட்டது.

இதையடுத்து மீண்டும் உயர எழும்பிய விமானம் இன்னொரு முறை வட்டமடித்த பிறகு பத்திரமாக தரையிறங்கியது.

இதற்குத் தரை கட்டுப்பாட்டு அதிகாரிகளின் கவனக்குறைவே காரணம் என்று தெரியவந்துள்ளது. இதுதொடர்பாக விசாரணையும் நடந்து வருகிறது. (ம)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மஹிந்த அரசை சர்வதேச குற்றவாளிக் கூண்டில் நிறுத்தக்கோரி 25இல் தமிழகத்தில் ஆர்ப்பாட்டம்

## வைகோ, பழ.நெடுமாறன் அறிவிப்பு

சென்னை, ஏப். 22

இலங்கை அரசை சர்வதேச குற்றவியல் நீதிமன்றக் கூண்டில் நிறுத்துமாறு வலியுறுத்தியும் ஈழத்தமிழர்களுக்கு வலுவான ஆதரவை உலகுக்குக் காட்டவும் இலங்கைத் தமிழர் பாதுகாப்பு இயக்கத்தின் சார்பில் எதிர்வரும் 25 ஆம் திகதி சைதாப்பேட்டையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறும்.

- இவ்வாறு தமிழகத்தின் பழுத்த அரசியல்வாதிகளும், ஈழத் தமிழர் ஆதரவாளர்களுமான வைகோ, பழ. நெடுமாறன் ஆகியோர் தெரிவித்துள்ளனர்.

இதுதொடர்பில் அவர்கள் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு -

ஈழத் தமிழ் மக்களை ஈவிரக்கமின்றிப் படுகொலை செய்த இலங்கை அரசை போர்க்குற்றவாளியாக விசாரிக்கப்பட வேண்டும் என்று 2010 ஜனவரியில் அயர்லாந்து நாட்டின் டப்ளின் தீர்ப்பாயம் அறிவித்த பின்னணியில் ஈழத் தமிழ் இனத்தின் அவலம் மிக்க ஓலக்குரல் ஐ.நா.வின் மனச்சாட்சிக் கதவை ஓங்கித் தட்டியது. அதனால் ஐ.நா. பொதுச் செயலாளர் பான்-கி-மூன் இலங்கைத் தீவில் நடந்ததை விசாரிக்க மூவர் குழுவை நியமித்தார்.

அனைத்து நாடுகளுடைய நிர்ப்பந்தத்தால் மூவர் குழு இலங்கையை விசாரிக்க முடிந்தது. தமிழர்களின் கண்ணீர்ப் பிரதேசத்தில் அந்தக் குழுவினர் சரியான ஆய்வுநடத்தஇயலவில்லை. இருப்பினும் தற்போது ஐ.நாவின் பொதுச் செயலாளரிடம் அந்தக் குழு அறிக்கை சமர்ப்பித்துள்ளது.

அந்த அறிக்கையின்படி சர்வதேச மனிதநேயச் சட்டத்தையும், மனித உரிமைச் சட்டத்தையும் அப்பட்டமாக மீறியவாறு லட்சக்கணக்கான தமிழ் மக்களை இராணுவம் கொலை செய்திருக்கிறது. பத்திரிகை, ஊடகங்களின் குரல்வளையை நெரித்துள்ளது.

வெள்ளை வான்கள் எனும் எமன்களை அனுப்பி எண்ணற்றோரை இருக்கும் சுவடு தெரியாமல் ஆக்கியுள்ளது. தாக்குதல் நடைபெறாத பாதுகாப்பு வலயங்கள் என அறிவித்த அந்த இடங்களுக்குள் உயிர்பிழைக்க தஞ்சம் புகுந்த 3 லட்சத்து 30 ஆயிரம் தமிழ் மக்களில் பெருமளவு தமிழ் மக்களை சாகடிக்க இலங்கை அரசு தாக்குதல் நடத்தியுள்ளது.

சர்வதேச செஞ்சிலுவைச் சங்க அலுவலகம் உணவு விநியோகிக்கும் இடங்கள் அனைத்தும் குண்டு வீச்சுக்கு இலக்காகின. மருத்துவமனைகள் இருக்கும் இடங்கள் எனத் தெரிந்து கொண்டே அவற்றின் மீது இடைவிடாத குண்டுவீச்சை - வான்வெளித் தாக்குதலை இலங்கை விமானப் படை செய்துள்ளது.

2011 ஜனவரி முதல் மே மாதம் வரை பல்லாயிரக்கணக்கான தமிழர்கள் இராணுவத்தால் கொல்லப்பட்டனர். சித்திரவதை முகாம்களில் தமிழ் மக்களை அடைத்து குறிப்பாக இளைஞர்களைப் படுகொலை செய்ததோடு தமிழ் இளம் பெண்களை கற்பழித்துக்கொன்ற கொடுமைகளையும் செய்தது.





அரசுக்கு எதிரான ஊடகவியலாளர்களும், சமூக ஆர்வலர்களும் படுகொலை செய்யப்பட்டனர். மஹிந்த அரசின் போர்க்குற்றங்கள் குறித்து ஐ.நா. பொதுச் செயலாளர் தக்க விசாரணை நடத்த வேண்டுமென்று குழு பரிந்துரை செய்துள்ளது.

2006 ஆம் ஆண்டிலேயே சுவிட்ஸர்லாந்து, நியூஸிலாந்து நாடுகள் இலங்கை அரசுக்கு எதிராக ஐ.நாவின் மனித உரிமை ஆணையத்தில் தீர்மானம்கொண்டு வந்தபோது அதனை வரிந்து கட்டிக்கொண்டு இந்திய அரசு தோற்கடித்தது.

தமிழ் இனப்படுகொலை நடத்திட இலங்கை அரசுக்கு ஆயுத உதவியும், பண உதவியும் செய்த காங்கிரஸ் தலைமையிலான இந்தியாவின் மத்திய அரசு 2009 தொடக்கத்தில் அமெரிக்க, பிரிட்டன் உள்ளிட்ட நாடுகள் இலங்கையில் போர் நிறுத்தத்தைக் கொண்டு வர முயன்றபோது அதற்கு எதிர்ப்புத் தெரிவித்துத் தடுத்தது இந்திய அரசுதான்.

கூண்டில் சிறுத்தப்பட்டு தண்டிக்கப்பட வேண்டிய போர்க்குற்றவாளியான மஹிந்த ராஜபக்ஷவை திரும்பத் திரும்ப இந்தியாவுக்கு அழைத்து வரவேற்றுக் கொண்டாடிய இந்திய அரசு இன்னமும் இலங்கை அரசை ஆதரிக்கின்ற வேலையில் ஈடுபடுமானால் இலங்கை அரசின் போர்க் குற்றங்களுக்கு இந்தியாவும் பகிரங்கப் பங்காளி எனும் குற்றச்சாட்டுக்கு மேலும் உள்ளாகும்.

இலங்கை அரசுடனான இராஜதந்திர உறவுகளை இந்திய அரசு முறித்துக் கொள்ள வேண்டும். ஐ.நா. மன்றத்திலும் மனித உரிமை ஆணையத்திலும் இலங்கைக்கு எதிரான நிலையை எடுக்க வேண்டும். ஐ.நா. அறிக்கைக்கு எதிராக இலங்கையில் மஹிந்த ராஜபக்ஷ ஆள் திரட்டுகிறார், பேரணி என்று சவால் விடுகிறார்.

உலக நாடுகளின் கவனம் ஈழத் தமிழரின் அவலம் குறித்துத் திரும்பி இருக்கும் இந்தவேளையில் ஈழத் தமிழன் நாதியற்றுப் போய்விடவில்லை என்று அனைத்துலகிற்கும் அறிவிக்கும் வகையில் தாய்த் தமிழகத்து தமிழர்கள் ஆர்த்தெழ வேண்டியது தலையாய கடமையாகும்.

இலங்கை அரசைக் கூண்டில் ஏற்றவும், போர்க்குற்றங்களை விசாரித்து சர்வதேச குற்றவியல் நீதிமன்றக் கூண்டில் ஏற்றுவதற்கு வலியுறுத்தவும் ஈழத் தமிழர்களுக்கு வலுவான ஆதரவை உலகுக்குக் காட்டவும் இலங்கைத் தமிழர் பாதுகாப்பு இயக்கத்தின் சார்பில் ஏப்ரல் 25 (திங்கட்கிழமை) மாலை 4 மணிக்கு சைதாப்பேட்டை பனகல் மாளிகை அருகில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறும்.

பழ. நெடுமாறனும், நானும் இலங்கைத் தமிழர் பாதுகாப்பு இயக்கத்தின் முன்னணியினரும் பங்கேற்கும் இந்த ஆர்ப்பாட்டத்தில் பெருமளவில் கலந்து கொள்ள வேண்டுமெனக் கழக கண்மணிகளையும் தமிழ்ப் பெருமக்களையும் அன்புடன் கேட்டுக் கொள்கிறோம் - இப்படி அதில் தெரிவிக் கப்பட்டுள்ளது.

# 2 ஜி ஸ்பெக்ட்ரம் வழக்கில் சோனியா மீது வழக்குத் தொடர பிரதமரிடம் விண்ணப்பம்

## சுப்ரமணியசுவாமி தெரிவிப்பு

2 ஜி ஸ்பெக்ட்ரம் வழக்கில் சோனியா, கருணாநிதி, சிதம்பரம், கனிமொழி உட்பட 24 பேர் சேர்க்கப்பட உள்ளதாக சுப்ரமணியசுவாமி தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக சென்னையில் செய்தியாளர்களிடம் கூறியவை:

தமிழக அரசியலில் தி.மு.க.வை விட அ.தி.மு.க. அதிகளவான வாக்குகளைப்பெற்று பெரும்பான்மை பெறும்.

ஸ்பெக்ட்ரம் வழக்கு விவகாரத்தில் சோனியா மீது வழக்குத் தொடர பிரதமரிடம் அனுமதி கேட்டு விண்ணப்பித்துள்ளேன். 3 மாதத்தில் அனுமதி தராவிட்டால் ராசா விவகாரம் போல் உயர்நீதிமன்றத்தில் நேரடியாக வழக்குத் தொடருவேன்.



ஊழலுக்கு எதிராக அன்னா ஹஸாரே தொடங்கிய போராட்டம் நாடு முழுவதும் பெரிய எழுச்சியை ஏற்படுத்தியது. அன்னா ஹஸாரே தன்னுடன் அரசியல்வாதிகளையும் இணைத்துக் கொள்ள வேண்டும். அவரது போராட்டம் நேர்மையானது.

2 ஜி ஸ்பெக்ட்ரம் விவகாரத்தில் கனிமொழி, கருணாநிதி, சோனியா, சிதம்பரம் உட்பட 24 பேர் பெயர்களை மே 24 ஆம் திகதி விசாரணையில் சேர்க்க உள்ளோம். அதன் பின்னர் கைது நடவடிக்கைகள் தொடரும். இவ்வாறு தெரிவித்தார் அவர்.

# மரணித்த கிருஸ்ணமூர்த்திக்கு விடுதலைச் சிறுத்தைகள் அஞ்சலி

சென்னை, ஏப்.22

இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவாகத் தீக்குளித்த நெல்லை இளைஞர் கிருஷ்ணமூர்த்திக்கு விடுதலைச் சிறுத்தைகள் கட்சியினர் அஞ்சலி செலுத்தினர்.

இதுகுறித்து அந்தக்கட்சியின் சார்பில் நேற்று வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது:

ஈழத்தமிழருக்குத் தனி நாடு கோரிக் கடந்த திங்கட்கிழமை தீக்குளித்து உயிர் நீத்த பொறியியலாளர் கிருஷ்ணமூர்த்தியின் சொந்த ஊரான நெல்லை மாவட்டம், சங்கரன் கோவில் அருகேயுள்ள சீகம்பட்டிக் கிராமத்தில் அவரது உருவப்படத்திற்கு விடுதலைச் சிறுத்தைகள் கட்சி சார்பில் மலர் மாலை அணிவித்து வீரவணக்கம் செலுத்தப்பட்டது.

திருமாவளவன் டில்லியில் இருப்பதால் அவரது ஆணையின்படி கட்சியின் மாநில செய்தித்தொடர்பாளர் வன்னிஅரசு, முத்துக்குமார் பாசறையின் மாநிலச் செயலாளர் சங்கத்தமிழன், மதுரை மாவட்ட செயலர் எல்லாளன், ஊடகப் பிரிவின் மாநில துணைச்செயலர் அகரன், நெல்லை மாவட்ட செயலர் கார்த்திக் மற்றும் மாநில, மாவட்ட நிர்வாகிகள் [illegible] பலர் வீரவணக்கம் செலுத்தினர். இவ்வாறு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# 34 வருடங்களாக கம்யூனிஸ்ட் ஆட்சியில் முன்னேற்றம் இல்லை



## சோனியா குற்றச்சாட்டு

கொல்கத்தா, ஏப்.22

மேற்குவங்கத்தில் 34 ஆண்டு கால கம்யூனிஸ்ட் ஆட்சியில் எந்தவித முன்னேற்றமும் இல்லை என்று காங்கிரஸ் தலைவர் சோனியா குற்றம்சாட்டியுள்ளார்.

முர்ஷிதாபாத் மாவட்டத்தில் உள்ள சாலர் என்னும் இடத்தில், நேற்று முன்தினம் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் பேசும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் பேசியதாவது:

மத்திய அரசு கோடிக்கணக்கான ரூபா நிதியை மேற்கு வங்கத்துக்கு ஒதுக்கி வந்துள்ளது. ஆனால், கடந்த 34 ஆண்டுகளாகத் தொடர்ந்த கம்யூனிஸ்ட் ஆட்சியால் மாநிலத்தில் முன்னேற்றமே இல்லாமல் உள்ளது.

மத்திய அரசு ஒதுக்கிய நிதி எங்கே போனது என்பது தெரியவில்லை. இதற்கு இடதுசாரிகளே பொறுப்பு.

வளர்ச்சித் திட்டங்களுக்காக ஒதுக்கிய நிதியை வேறு பணிகளுக்குத் திருப்பிவிட்டுள்ளனர். இதனால் மாநிலம் வளர்ச்சி அடையாமலே உள்ளது. ஆனால், மாநிலத்தின் கடன்தொகை வளர்ச்சியடைந்துள்ளது. மேற்குவங்கத்தின் தற்போதைய மொத்தக் கடன் 2 லட்சம் கோடியாக உள்ளது.

இடதுசாரிக்கூட்டணியை இனியும் நம்பாதீர்கள். இந்தமுறை அவர்களுக்குச் சரியான பாடம் புகட்ட வேண்டும். இவ்வாறு அவர் குறிப்பிட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊழலுக்கு எதிராகத் துணிவுடன் போராட மத்திய அரசு உறுதி பூண்டுள்ளது

## பிரதமர் தெரிவிப்பு



டில்லி, ஏப்.22

ஊழலுக்கு எதிரான நடவடிக்கைகளை துணிச்சலுடன் மேற்கொள்ள மத்திய அரசு உறுதிபூண்டுள்ளது என்றார் பிரதமர் மன்மோகன் சிங்.

மேலும், லோக்பால் மசோதா வரும் நாடாளுமன்றத்தின் மழைக்கால கூட்டத் தொடரிலேயே தாக்கல் செய்யப்படும் என்று அவர் தெரிவித்தார்.

சிவில் சர்வீஸ் தினத்தையொட்டி, புதுடில்லியில் ஐ.ஏ. எஸ், ஐ.எப்.எஸ், ஐ.ப.எஸ் அதிகாரிகள் பங்கேற்ற சிறப்பு நிகழ் வில் பிரதமர் நேற்று கலந்து கொண்டு பேசுகையில் கூறியதாவது:

லோக்பால் மசோதாவை உருவாக்க அமைச்சர்கள் மற்றும் சமூக ஆர்வலர்களின் பிரதிநிதிகள் அடங்கிய கூட்டுக்குழு செயற்பட்டு வருகிறது.

இந்த மசோதா முழு வடிவம் பெற்று எதிர்வரும் நாடாளுமன்றத்தின் மழைக்கால கூட்டத் தொடரில் அறிமுகப்படுத்தப்படலாம். ஊழலுக்கு எதி ராக சகிப்புத் தன்மை மக்களிடையே வெகுவாகக் குறைந்து விட்டது.

ஊழலுக்கு எதிராக உறுதியான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று மக்கள் விரும்புகிறார்கள்.

மக்களின் விருப்பத்துக்கேற்ப, ஊழலுக்கு எதிரான நடவடிக்கைகளை மத்திய அரசு உறுதியுடன் எடுத்து வருகிறது.

தற்போதுள்ள சட்டங்கள் மற்றும் விதிமுறைகளால் ஊழலுக்கு எதிராகக் கடும் நடவடிக்கைகளை எடுக்க இயலவில்லை என்ற எண்ணம் மக்களிடையே அதிகரித்து வருகிறது.


ஊழலுக்கு எதிரான போராட்டத்தில் மக்கள் பெரும் பங்காற்ற வேண்டும். நாட்டில் வேகமான வளர்ச்சிக்கு ஊழல் பெரும் தடைக்கல்லாக உள் ளது.

இதன் கார ணமாக ஏழை கள் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர். ஊழலுக்கு எதிரான நடவடிக்கைகளை துணிச்சலுடன் எடுக்க வேண்டி யது அவசியம்.

நிர்வாகத்தில் நெறிமுறைகளை பின்பற்ற வேண்டும், வெளிப்படையான நிர்வாகம் இருக்க வேண்டும் என்ற விடயத்தில் அண்மைக்காலமாக ஒரு விழிப்புணர்வு ஏற்பட்டுள்ளது என்றார் பிரதமர்.

மேலும், உங்கள் உயர் அதிகாரிகளுக்கு, குறிப்பாக அரசியல் தலைவர்களுக்கு அறிவுரை வழங்குவதில் நேர்மையாகவும், அச்சமின்றியும் நடந்துகொள்ள வேண்டும், என்று ஐ.ஏ.எஸ், ஐ.எப்.எஸ், ஐ.பி.எஸ் அதிகாரிகளை அவர் கேட்டுக்கொண்டார். (வ)

# சாயிபாபா சிலையில் எண்ணெய் கசிந்தது புட்டபர்த்தியில் பரபரப்பு



புட்டபர்த்தி நகரில் உள்ள பக்தர் ஒருவரது வீட்டில் இருக்கும் சாயிபாபா சிலையில் எண்ணெய் தானாக வடிந்த சம்பவம் பக்தர்களிடையே பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

புட்டபர்த்தியில் ரஹீம் என்பவரது வீட்டில் 4 அடி உயர சாயிபாபா மெழுகு சிலை உள்ளது. அந்தச் சிலையின் கால்களிலிருந்து நேற்று முன்தினம் எண்ணெய் போன்ற திரவம் வடிய ஆரம்பித்தது. உடனே ரஹீமின் மனைவி அயலில் வசிப்பவர்களிடம் கூறினார். இதனால் வீட்டில் கூட்டம் கூடியது. அவர்கள் பக்திப் பரவசத்தோடு பாபாவை வணங்கினர்.

கடந்த நவம்பர் மாதம் எனது கனவில் சாயிபாபா வந்து அவரது சிலையை வழிபடச் சொன்னார். அதன்படி செய்து வணங்கி வந்தேன். இப்போது இந்த அதிசயம் நடந்துள்ளது. எண்ணெயை முகர்ந்து பார்த்தபோது மிகவும் வாசனையாக இருந்தது. இது, சாயிபாபா விரைவில் குணமாகி வருவார் என்பதன் அறிகுறியே என்றார் ரஹீம். இதேவேளை ஆந்திர மாநிலம் புட்டபர்த்தியில் சத்திய சாயிபாபா இதயம், நுரையீரல் பாதிப்புக் காரணமாக அங்குள்ள சத்யசாய் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

அவரின் உடல்நிலை தொடர்ந்து கவலைக்கிடமாக உள்ளது.

சாயிபாபா விரைவில் குணமாக வேண்டும் என்று நாடு முழுவதும் இருக்கும் பக்தர்கள் பிரார்த்தனை செய்து வருகின்றனர். சாயிபாபா சிலையில் இருந்து எண்ணெய் வடியும் அதிசயத்தை காண அப்பகுதியில் ஏராளமானோர் திரண்டதால் பொலிஸார் வந்து கூட்டத்தைக் கட்டுப்படுத்தினர். (வ)

## ஆர்ப்பாட்டம்...



தமிழக காங்கிரஸ் தலைவர் தங்கபாலுவை கட்சியை விட்டு நீக்க வலியுறுத்தி திருச்சி மாவட்ட விவசாய பிரிவு காங்கிரஸ் கட்சியினர் திருச்சி அருணாச்சலமன்றம் அருகே தங்கபாலு உருவபொம்மையை எரித்து ஆர்ப்பாட்டம் செய்தனர்.

# தமிழக சட்டசபை தேர்தல் வாக்கு எண்ணுவதற்கு புதிய நடைமுறை

தமிழக சட்டசபைக்கு கடந்த 13 ஆம் திகதி நடை பெற்ற தேர்தலில் 78 சதவீத வாக்குகள் பதிவாகின. வாக்கு எண்ணுகை மே 13 ஆம் திகதி இடம்பெற உள்ளது.

இந்த நிலையில் ஒவ்வொரு பகுதி மின்னணு இயந்திரங்களை 14 மேசைகளிலும் வைத்து எண்ணுவார்கள். 14 மேசை வாக்குகளும் எண்ணி முடித்த பிறகே அந்தச் சுற்று வாக்கு விவரத்தைப் பார்வையாளர் வெளியிடுவார். இந்தப் புதிய நடைமுறையால் வாக்கு முன்னணி விவரம் வெளியாவதில் சற்றுத் தாமதம் ஏற்படலாம் என்று தெரியவருகிறது.

தமிழ்நாடு முழுவதும் 234 தொகுதிகளில் பதிவான வாக்குகள் 91 நிலையங்களில் வைத்து எண்ணப்படுகின்றன.

வாக்கு எண்ணுகைக்கு இன்னும் 21நாள்கள் உள்ளதால் 4 அடுக்கு பாதுகாப்புப் போடப்பட்டுள்ளது. ஒவ்வொரு தொகுதி வாக்குகளும், ஒரு தேர்தல் பார்வையாளர் முன்னிலையில்தான் எண்ணப்படும். இதற்காக 234 பார்வையாளர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். அவர்கள் வாக்கு எண்ணுகையை நெறிப்படுத்துவார்கள்.

வாக்கு எண்ணுகையில் இந்தத் தடவை புதிய முறை கடைபிடிக்கப்பட உள்ளது.

கடந்த தேர்தல்களில் வாக்கு எண்ணிக்கை ஒவ்வொரு சுற்றாக முடிய, முடிய அதன் விவரம் வெளியிடப்பட்டுவிடும். இதனால் உடனடியாக முன்னணி நிலவரம் தெரிந்து விடும்.

ஆனால் இந்தத் தடவை ஒவ்வொரு வாக்கு எண்ணிக்கை முடிந்ததும், தேர்தல் பார்வையாளரிடம் தெரிவிக்கப்படும். அவர் ஒப்புதல் கொடுத்த பிறகே, வாக்குகளின் விவரத்தை வெளியிட முடியும். ஒவ்வொரு தொகுதி வாக்குகளும் தலா 14 மேசைகள் மீது வைத்து எண்ணப்படவுள்ளதாகக் கூறப்படுகின்றது. (வ)

# ஆதாரங்கள் இன்றி 5 வழக்குகளும் தள்ளுபடி வீரப்பனின் மனைவி விடுதலையானார்

மைசூர், ஏப். 22

சந்தனக்கடத்தல் வீரப்பனின் குற்றங்களுக்கு உடந்தையாக இருந்த காரணத்தால் கைது செய்யப்பட்ட அவரது மனைவி முத்துலட்சுமிமீது குற்றம் சாட்டப்பட்ட வழக்குகளுக்கு போதிய ஆதாரங்கள் இல்லாததால் அவர் மீது தொடரப்பட்ட 5 வழக்குகள் நிராகரிப்புச் செய்யப்பட்டுள்ளன.

இதனையடுத்து அவர் விடுதலை செய்யப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

சந்தன கடத்தல்காரன் வீரப்பன் சில வருடங்களுக்கு முன் தமிழக அதிரடிப்படை பொலிஸாரால் சுட்டுக் கொல்லப்பட்டார். அவர் மீது தமிழகம் மற்றும் கர்நாடகத்தில் 100 இற் கும் மேற்பட்ட கொலை வழக்குகளும், ஆயுதக் கடத்தல், வன விலங்குகளை வேட்டையாடிய வழக்குகளும் உள்ளன.

வீரப்பன் சுட்டுக்கொல்லப்பட்ட பின்பு அவனது மனைவி முத்துலட்சுமி மேட்டூரில் பெட்டிக்கடை வைத்து நடத்தி வந்தார். 2 மகள்கள் சென்னையில் விடுதியில் தங்கிப் படித்து வந்தனர். இந்த நிலையில் 3 வருடங்களுக்கு முன்பு முத்துலட்சுமியை கர்நாடகப் பொலிஸார் கைது செய்தனர்.

வீரப்பன் செய்த குற்றங்களுக்கு உடந்தையாக இருந்தது, மாதேஸ்வரன் மலையில் பொலிஸாரைத் தாக்கி ஆயுதங்களை பறித்தது உள்பட 5 வழக்குகள் அவர் மீது பதிவு செய்யப்பட்டன. மைசூர் சாம்ராஜ் நகர் தடா நீதிமன்றத்தில் முத்துலட்சுமி மீது வழக்குத் தொடரப்பட்டது.

இதில் கைதான முத்துலட்சுமி பெங்களூர் பரப்பன அக்ரகார சிறையில் அடைக்கப்பட்டு இருந்தார். பாலாறு குண்டு வெடிப்பு வழக்கில் முத்துலட்சுமி கடந்த மார்ச் மாதம் விடுதலை செய்யப்பட்டார். நேற்று முன் தினம் ஏனைய 4 வழக்குகள் நீதி பதி வித்யாதர் முன்னிலையில் விசாரணைக்கு எடுக்கப்பட்டன.

முத்துலட்சுமி தரப்பில் ஆஜரான சட்டத்தரணி, முத்துலட்சுமிக்கும் இந்தச் சம்பவத்துக்கும் தொடர்பு இல்லை. சம்பவம் நடந்ததாகக் கூறப்பட்ட நாளில் முத்துலட்சுமி மாதேஸ்வரன் மலையில் இல்லை என்று கூறி அதை ஆதாரத்துடன் நிரூபித்தார்.

இதையடுத்து முத்துலட்சுமி மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளுக்கு போதுமான சாட்சியங்கள் இல்லாததாலும், குற்றம் சரிவர நிரூபிக்கப்படாததாலும் அவர் மீது தொடரப்பட்ட வழக்குகளை நிராகரிப்புச் செய்வதாக நீதிபதி வித்யாதர் தீர்ப்பு வழங்கினார்.

விடுதலையான முத்துலட்சுமி கூறுகையில்:

எனது கணவர் (வீரப்பன்) அதிகமான குற்றங்கள் செய்து இருக்கிறார். இதற்கு நான் ஒரு போதும் உடந்தையாக இல்லை. அவருடன் கூட்டுச் சேர்ந்து குற்றங்களில் ஈடுபடவும் இல்லை. ஆனால் கர்நாடக பொலிஸார் எனது கணவருக்கு உடந்தையாகச் செயற்பட்டதாகக் கூறி கைது செய்து 3 ஆண்டுகளாக சிறையில் அடைத்து விட்டனர்.

இப்போது என் மீதான எல்லா வழக்குகளில் இருந்தும் நான் விடுதலை செய்யப்பட்டு விட்டேன் என்று மகிழ்ச்சியுடன் கூறினார். (வ)

# பழ.நெடுமாறன் மீது கருணாநிதி அவதூறு வழக்குத் தாக்கல்

சென்னை, ஏப். 22

பொதுமக்கள் மத்தியில் தமக்கு உள்ள நற்பெயருக்கு களங்கம் ஏற்படும் விதத்தில் பேசியுள்ளதால் உலகத் தமிழர் பேரவைத் தலைவர் பழ. நெடுமாறன் மீது சென்னை செசன்ஸ் நீதிமன்றத்தில் முதலமைச்சர் கருணாநிதி அவதூறு வழக்குத் தொடர்ந்துள்ளார்.

கருணாநிதி சார்பில் சென்னை நகர குற்றவியல் சட்டத்தரணி ஷாஜகான் தாக்கல் செய்த மனுவில் கூறி இருப்பதாவது:

பழ.நெடுமாறன் செய்தியாளர்களுக்கு பேட்டியளித்த செய்தி கடந்த 17 ஆம் திகதி காலை பத்திரிகை ஒன்றில் வெளியாகியது. அந்தச் செய்தியில், தேர்தல் ஆணையத்தை முதல்வர் தொடர்ந்து வசை பாடுவது ஜனநாயகத்துக்கு எதிரானது.

தேர்தல் ஆணைய நடவடிக்கையை எல்லோரும் பாராட்டுகிறார்கள். தேர்தல் ஆணையம் நேர்மையாகச் செயற்படுவதால், தில்லுமுல்லு எதுவும் செய்ய முடியாத கோபத்தில் முதல்வர் வசை பாடுகிறார் என்று கூறி உள்ளார்.

பழ.நெடுமாறனின் இந்தச் குற்றச்சாட்டுக்கள் அடிப்படை ஆதாரம் இல்லாதது. வேண்டும் என்றே திட்டமிட்டு முதல்வர் பெயருக்கு களங்கம் ஏற்படுத்தும் வகையில் வெளியிடப்பட்டுள்ளது.

பொதுமக்கள் மத்தியில் மக்களுக்கு உள்ள நற்பெயருக்கு களங்கம் ஏற்படுத்தும் விதமாக அவரது பேச்சு அமைந்துள் ளது. தேர்தல் முடிவு வெளிவருவதற்கு முன்பு மக்கள் மத்தியில் முதல்வரைப் பற்றி ஒரு தவறான எண்ணத்தை உண்டாக்கும் வகையில் பழ.நெடுமாறன் உள் நோக்கத்துடன் பேசி உள்ளார்.

தமிழக அரசு நிர்வாகத்தின் முதன்மையானவர் முதல்வர் என்பதை மறந்த நிலையில் நெடுமாறன் பேசி உள்ளார். இது அரசுக்கும், முதல்வருக்கும் களங்கம் ஏற்படுத்தும் வகையில் உள்ளது. எனவே பழ.நெடுமாறனை அவதூறுச் சட்டத்தின் கீழ் தண்டிக்க வேண்டும்.

இவ்வாறு அந்த மனுவில் கூறப்பட்டுள்ளது.

இதேவேளை ஜெயலலிதா மீது கருணாநிதி நேற்று முன் தினம் 2 அவதூறு வழக்குகள் தொடர்ந்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது பிரதேசங்களுக்கு ஏற்புடையதான இயற்கைக் கட்டடங்கள்

**இன்று புவி தினம்**

ஆதிகால மனிதன் இயற்கையோடு இணைந்து வாழ்ந்தான். அபிவிருத்தி அவாவும் நாகரிக மோகமும் அவனை இயற்கையை மாற்றியமைக்கத்தூண்டின. அதன் விளைவாக, இயற்கை, மாற்றங்களுக்குட்பட்டு பாதிப்புக்குட்பட்டது. இன்று அதன் விளைவை நாம் எல்லோரும் அனுபவித்துக்கொண்டிருக்கின்றோம். இன்று உலகளாவிய ரீதியில் ஏற்பட்டுள்ள பூகோளம் வெப்பமடை தல், காலநிலை மாற்றம், இயற்கை அனர்த்தம் என்பன மனிதனின் நடவடிக்கைகளாலேயே ஏற்பட்டுள்ளன என்பதை மறுப்பதற்கில்லை. இது எமது பிரதேசத்திலும் தாக்கத்தை ஏற்படுத்தத்தவறவில்லை.

காலம் தப்பிய அதிக மழை வீழ்ச்சி, வெள்ளப்பெருக்கு, வரட்சி, அதிகரித்த வெப்பநிலை என்பவற்றுடன் நிலத்தடி நீர் மாசடைதல், காற்றுமாசடைதல், திண்மக்கழிவினால் சூழல் மாசடைதல் என்பனவும் இன்று யாழ்குடாநாட்டில் ஏற்பட்டுள்ள மிக முக்கிய பிரச்சினைகளாக உள்ளன. இவை அனைத்தும் மனித செயற்பாட்டின் விளைவேயாகும்.

இப்பாதிப்புக்களிலிருந்து தம்மை விடுவித்துக்கொள்ள இன்று உலகின் பல நாடுகள் பல வழிகளை கையாண்டு வருகின்றன.

அதாவது சுவட்டு எரிபொருள்களின் பாவனையைக்குறைக்கும் தொழில்நுட்பங்கள், பசுமைச் சூழலைப் பேணும் நடவடிக்கைகள், திண்மக்கழிவுக்கான மீள் சுழற்சி நடவடிக்கைகள், நன்னீரை பாதுகாக்கும் நடவடிக்கைகள் போன்ற பல செயற்பாடுகளை கூறலாம்.

இவ்வாறான செயற்பாடுகள் மூலம் எமது சூழல் மூலக்கூறுகளான நீர், நிலம், காற்று என்பவற்றில் ஏற்பட்டுள்ள மாசுக்களை நீக்குவது மட்டுமன்றி இவற்றிலிருந்து எமது வாழ்வுக்குத் தேவையான சக்தியை பெற்றுக்கொள்ளவும் இதன் மூலம் நிலைத்து நிற்கக்கூடிய சூழலியல் சார் அபிவிருத்தியினை அடைவதுமே அந்த நாடுகளின் நோக்கமாகும்.

இவ்வாறான சூழல் பேண்தகு நடவடிக்கைகளில் இயற்கை கட்டடங்கள், வீட்டுத் தோட்டம், சாடிப்பயிர்ச்செய்கை என்பன அடங்குகின்றன. இவை சூழல் நிலைபேண்தகு அபிவிருத்திக்கு முக்கியமான காரணங்களாக உள்ளன.

எமது பிரதேசமும் இன்றைய சூழ்நிலையில் இவ்வாறான செயற்பாடுகளை மேற்கொள்வதன் மூலம் எமது சுற்றுச்சூழலில் ஏற்பட்டுள்ள மாசுக்களை ஓரளவு குறைக்க முடியும். இத்தொழில் நுட்பங்கள் எமது பிரதேசத்துக்கும் பொருத்தமானதாக காணப்படுகின்றமையும் சாதகமான விடயமாகும்.

இங்கு இயற்கைக் கட்டடங்கள் என்பது எமது பிரதேசத்துக்கு புதியதாக இருந்தாலும் இவ்வகையான கட்டடங்கள் எமது பிரதேசத்தின் தன்மைக்கு ஏற்பவும் பிரதேசத்தின் உள்ளீடுகளையும் கொண்டு அமைக்கப்படும் போது அவற்றின் மூலம் சிறந்த பயனைப் பெறமுடியும்

**இயற்கைக் கட்டடங்கள்**

இயற்கைக் கட்டடங்கள் என்ற எண்ணக்கரு 1990 களின் பிற்பகுதியிலேயே அமெரிக்காவில் எழுந்தது. இவ்வகை வீடுகள் வெப்பமான காலத்தில் குளிர்ச்சியையும் குளிர் காலத்தில் வெப்பத்தையும் தரும் வகையில் இயற்கையான பொருள்களையும் சக்திவளங்களையும் கொண்டு அமைக்கப்படுகின்றன. அமெரிக்க, ஐரோப்பிய நாடுகள் இந்தக் கட்டடங்களை தனிப்பட்ட வீடுகளிலும் அலுவலகங்களிலும் அமைத்து வருகின்றன. இயற்கைக் கட்டடங்கள் என்பது உண்மையில் எமது பழைய கால கட்டட அமைப்புக்களினடிப்படையிலேயே அமைந்துள்ளன. அதாவது களிமண் குடிசைகள், மர வீடுகள், உயிர் வேலிகள் போன்றவற்றின் புதிய திருத்தப்பட்ட வடிவமாகக் கொள்ளலாம்.

உள்ளூர் மூலவளங்கள், நீர், இயற்கை சக்திகள் என்பவற்றை திறமையாகப் பாவித்தல், தனிமனித ஆற்றலை அதிகரித்து உடல் நலத்தைப் பேணுதல். சூழல் மாசடைதல், திண்மக்கழிவு என்பவற்றை குறைத்தல் போன்றவற்றை இதன்மூலம் பேண முடியும். இந்த வகையில் ஓர் வீட்டினை அல்லது ஒரு அலுவலகத்தினை அமைக்கும் போது அதற்கான மூலப் பொருள்கள், வீட்டின் உட்புறம், வீட்டின் கூரை, வீட்டுச் சுவர், வீட்டின் வெளிப் புறம் என்பன திட்டமிட்டு அமைக்கப் படுகின்றன.

மூலப்பொருள்கள் - உள்ளூரில் கிடைக்கக்கூடிய பொருள்களான மணல், களி, மரப்பலகைகள், கொங்கிறீற், சாம்பல் என்பவற்றைக் கொண்டு கட்டப்படும். இவை சூரிய கதிர்களின் தாக்கத்திலிருந்து பாதுகாப்பதுடன் வீட்டுக்கு குளிர்ச்சியையும் வழங்குகின்றன. அத்துடன் இதன் கட்டுமானமானது சூரிய ஒளியைக் கொண்டு ஒளிபெறும் வகையிலும் குளிர்ந்த காற்று உள்வரும் வகையிலும் மழைநீரை சேமிக்கும் வகையிலும் இயற்கை சக்தி வளங்களை உள்வாங்கக்கூடிய வினைத்திறனான வடிவமைப்பைக் கொண்டு அமைக்கப்படுகின்றன.

உட்புறத்தில் வளரக்கூடிய செடிவகைகளை வளர்த்தல், குளிர்ந்த காற்று உள்வரும் வகையில் தளங்களை மற்றும் யன்னல்களை அமைத்தல் என்பன உட்புற வடிவமைப்பில் அடங்குகின்றன.

வீட்டின் கூரையில் சிறிய வகைப் புல்லினங்களை வளர்ப்பதன் மூலம் சூரிய வெப்பமானது வீட்டினுள் வராமல் பாதுகாப்பதுடன் வீட்டினுள் குளிர்ச்சியான காற்றினையும் பெற்றுக்கொள்ள முடியும். அத்துடன் மழை நீர் சேமிக்கும் குழாய்கள் மழை நீரை சேமிக்கும் வகையிலும் கூரைகளில் சூரிய மின்கலங்கள் பொருத்தப்பட்டு சூரிய சக்தியிலிருந்து மின்சாரம் பெறும் வகையிலும் அமைத்தல்.


சுவர்களிலும் செவ்வூதாக் கதிர்களை உறிஞ்சக்கூடிய தாவரங்களை வளர்த்து அவற்றிற்கு குளியலறை மற்றும் சமையலறையிலிருந்து வெளியேறும் கழிவு நீரைக் கொண்டு [illegible]

வெளிப்புறத்தரையானது மழை நீரை உட்புக விடும்படியாக மழைநீர் அதிகம் விழும் இடங்களில் கொங்கிறீற் கற்கள் பரப்பப்பட்டும் புற்றரைகளைக் கொண்டும் அமைத்தல்.

இந்த வகையில் அமைக்கப்படும் வீடுகள் மூன்று விதமான நன்மைகளை சூழலுக்கு வழங்குகின்றன.

* இயற்கை வளங்களைத் திறமையாகப் பயன்படுத்தல்.
* சூழல்நட்புறவு சார்ந்த தொழில் நுட்பம் என்பதால் சூழலுக்கு நன்மையாகக் காணப்படல்.
* மனிதனது நலனையும் திறனையும் பாதுகாத்தல்.

இயற்கை சக்தி வளங்கள் என்ற வகையில் சூரிய சக்தி, காற்று சக்தி, நீர் சக்தி என்பவற்றினை திறமையாகப் பாவிக்க முடிவதோடு உள்ளூரில் கிடைக்கும் பொருள்களைக் கொண்டு அதாவது மணல், கழி, மரம், மீள் பாவனைக்குரிய இரும்பு, மூங்கில் போன்ற பொருள்களை மட்டுமன்றி தகரங்கள், சாம்பல், பிளாஸ்ரிக் பொருள்கள் என்பவற்றினாலும் இந்த வீடுகள் அமைக்கப்படுகின்றன. இதனால் சூழலில் திண்மக்கழிவு வெளியேற்றம் குறைக்கப்படுகின்றது.




இங்கு நீரானது ஒப்பீட்டளவில் குறைவாகவே பாவிக்கப்படுகின்றது. குளியலறை மற்றும் சமையலறையிலிருந்து வெளியேறும் கழிவு நீர் வாகனங்களை கழுவுவதற்கும் மலசலகூடங்களுக்கு தண்ணீர் பாய்ச்சுவதற்கும் பாவிக்கப்படுகின்றது. அத்துடன் வேறு வகையில் வெளியேறும் கழிவு நீர் திரவ வளமாக்கியாக தாவரங்களுக்குப் பயன்படுத்தப்படுகின்றது. அத்துடன் மழை நீர் சேமிக்கப்பட்டு கொங்கிறீற் கற்கள் மூலம் வடிகட்டப்பட்டு தூய்மையான தரைக்கீழ் நீராக மாற்றப்படுகின்றது.

வீட்டின் உள்ளேயும் வெளியேயும் தாவரங்கள் வளர்க்கப்படுவதால் அவை வளியிலுள்ள காபனீரொட்சைட்டை உறிஞ்சி ஒக்சிஜனை அதிகரிக்கச்செய்கின்றது. இன்று அதிகமாக குளிரூட்டப்பட்ட வீடுகள் கட்டப்படுகின்றன. இவை குளிர் காற்றை உட்புகவிடாமல் செயற்கையான முறையில் குளிரூட்டப்படுவதால் மேலும் இது ரொக்சினை அதிகரிக்கச் செய்கின்றது.

இது மனித உடலில் தீவிரமான தாக்கத்தை ஏற்படுத்த வல்லது. அத்துடன் சுவர்களுக்கு பூசப்படும் வார்ணப்பூச்சு மற்றும் கார்பெட் விரிப்புக்கள் ஓசோன் [illegible] உருவாக்குகின்றது. இது [illegible] மற்றும் நைதரசனுடன் தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. உண்மையில் ஒரு மனிதன் தன் வாழ்நாளில் 90 வீதமான பொழுதை வீடுகளிலும் அலுவலகங்களிலும் ஏனைய கட்டடங்களிலுமே கழிக்கின்றான். அவ்வாறிருக்க கட்டடங்களில் ஏற்படும் இவ்வகை தாக்கம் மனிதனது ஆரோக்கியத்தை பாதிக்கின்றது.

இன்று எமது பிரதேசம் அதிக ச[illegible]த்தொகை கொண்டதாக மாறுகிறது. காணி துண்டாடப்படுதல், வீட்டுத்தோட்டங்களையோ பூந்தோட்டங்களையோ பெருமளவில் அமைக்க முடியாத நிலை, நகரப்பகுதியை அண்டி அதிகரித்த வெப்பம் காணப்படல், தோட்ட நிலங்கள் குடியிருப்பு நிலங்களாக மாற்றமடைதல், அபிவிருத்திப் பணிகள் மற்றும் வீடமைப்பு பணிகளுக்காக மரங்கள் அதிகளவில் வெட்டப்படுதல் என்பவற்றால் உள்ளூர் காலநிலையில் மாற்றம் ஏற்பட்டு வெப்பநிலை அதிகரித்து வருகின்றது.

அத்துடன் பூகோள ரீதியில் ஏற்பட்டுள்ள வெப்பநிலை அதிகரிப்பும் எமது உள்ளூர் காலநிலையில் தாக்கத்தினை ஏற்படுத்தியுள்ளன. இந்தநிலை தொடருமாயின் எமது பிரதேசம் எதிர்காலத்தில் பெரிய காலநிலை அனர்த்தத்தை எதிர்கொள்ள வேண்டி வரும். எனவே, இவற்றிலிருந்து எமது பிரதேசத்தைப் பாதுகாத்துக் கொள்ள இவ்வாறான இயற்கை கட்டடங்கள் எமது பிரதேசத்திலும் அமைக்கப்படுதல் அவசியமாகும்.

எமது பிரதேசத்தில் இவ்வகையான கட்டடங்களை அமைப்பது உடனடி சாத்தியம் குறைந்த செயற்பாடு. இவற்றுக்கான மூலப்பொருள்கள் உள்ளூரில் கிடைப்பனவாக இருந்தாலும் இக்கட்டடங்களை அமைப்பதற்கான.தொழில்நுட்பம் மற்றும் தொழில் நுட்பம் வாய்ந்த தொழிலாளர்கள், மூலதனம் என்பன அதிகமாகும்.

எனினும் உடனடி நடவடிக்கைகள், தொலை நோக்கு நடவடிக்கைகள் என்று வகைப்படுத்தி பின்பற்றுவதன் மூலம் எதிர்காலத்தில் எமது பிரதேசமும் பச்சைக் கட்டடங்களை மட்டுமே கொண்ட சூழல் நிலைபேண்தகு பிரதேசமாகமாறும்.

**செல்வி சசிகலா பத்மநாதன்**
*நிகழ்ச்சித்திட்ட உதவியாளர்,*
*பிரதேச செயலகம், நல்லூர்.*

* வீட்டினுள்ளே தாவரங்களை வள[illegible]பதன் மூலம் உடனடியாகவே வீட்டினுள்ளேயுள்ள வளியின் தரத்தினை பேண முடியும்.
* வீட்டின் கூரையிலும் சுவர்களிலும் தீவிர புறவூதாக்கதிர்களை உறிஞ்சக்கூடிய தாவரங்களை (தொட்டிகளில்) வளர்ப்பதன் மூலம் வீட்டினுள் குளிர்மையும் புறவூதாக்கதிர்களின் தாக்கத்திலிருந்து பாதுகாப்பும் பெற முடியும்
* மழை நீர் அதிகம் விழும் இடங்களில் கொங்கிறீற் கற்களைப் பரப்பி அல்லது குழிகளை வெட்டி மழை நீர் கழுவு நீரோட்டமாக ஓடுவதை தடுத்து தரைக்கீழ் நீர் மட்டத்தை பேண முடியும்
* யன்னல்கள், கதவுகள் யாவற்றையும் திறந்து வைப்பதன் மூலம் சுத்தமான காற்று உட்புகுந்து குளிர்ச்சியை ஏற்படுத்தும்
* மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தல்.

**தொலைநோக்கு நடவடிக்கைகளாக:**

* எதிர்காலத்தில் இயற்கைக் கட்டடங்களைக் கட்டுவதற்கு நடவடிக்கை எடுத்தல்.
* உள்ளூராட்சி மன்றங்கள் இவ்வகை கட்டடங்கள் கட்டுவதற்கே அனுமதி வழங்க நடவடிக்கை எடுத்தல்
* இக்கட்டுமான தொழில்நுட்பத்தினை பயிற்றுவித்தல்
* அரசு இவ்வகை கட்டடங்களை அமைப்பதற்கான சிறப்பு நிகழ்ச்சித்திட்டத்தை உருவாக்குதல்
* வீட்டுத்திட்டம் வழங்கும் நிறுவனங்கள் மேற்படி பச்சை வீட்டுத்திட்டங்களை வழங்குதல்

இது எமது பிரதேசத்தில் சாத்[illegible]மானால் எமது பிரதேசமும் தூய்மையான காற்று, தூய்மையான நீர், தூய்மையான சுற்றுச்சூழல், ஆரோக்கியமான மனிதர்கள் என்பனவற்றைக்கொண்டு ஒரு சிறந்த பிரதேசமாக நிலை பேண்தகு அபிவிருத்தியில் உன்னதமாக மிளிரும் என்பதில் ஐயமில்லை. ✱

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். பல்கலைக்கழக விளையாட்டு அலகில் தமிழகப் பேராசிரியர்களின் களப்பயிற்சி



பேராசிரியர் வி.கோபிநாத்

யாழ்ப்பாணம், ஏப். 22

யாழ்.பல்கலைக்கழக விளையாட்டு விஞ்ஞான அலகு மாணவர்களுக்கு தமிழக விளையாட்டுத்துறை சார்ந்த பேராசிரியர்கள் இருநாள் பயிற்சிகளை வழங்கியுள்ளனர்.

யாழ்ப்பாணம் பல்கலைக் கழக விளையாட்டு விஞ்ஞான அலகின் ஏற்பாட்டில் 'சுகாதார மான வாழ்விற்கு உடல் ஆரோக் கியம்' சம்பந்தமான இருநாள் பயிற்சிநெறி நேற்று முன்தினம் யாழ். பல்கலைக்கழகத்தில் ஆரம்பமானது.

நேற்றுமுன்தினம் ஆரம்ப நிகழ்வுகள் பல்கலைக் கழக கைலாசபதி கேட்போர் கூடத்தில் யாழ். பல்கலைக்கழக விளையாட்டு விஞ்ஞான அலகின் இணைப்பாளர் பேராசிரியர் எம்.நடராஜசுந்தரம் தலைமையில் ஆரம்பமானது.

இந்தியாவில் இருந்து வருகை தந்த அண்ணாமலைப் பல்கலைக்கழக உடற்கல்வி விளையாட்டு விஞ்ஞான அலகின் பேராசிரியர் வி.கோபிநாத், கலாநிதி எம். இளையராஜா ஆகியோர் விரிவுரைகளையும் களப்பயிற்சிகளையும் வழங்கினர்.

யாழ். பல்கலைக்கழக விளையாட்டு விஞ்ஞான அலகு மாணவர்கள், யாழ். மாவட்ட விளையாட்டு அலுவலர்கள், பயிற்றுநர்கள் உட்பட விளையாட்டுத் துறை சார்ந்த விற்பன்னர்கள் பலரும் பங்கு கொண்டனர்.

(ஐ-23)

# மின்னொளியில் நடந்த கரபந்தாட்டம்; நவஜீவன், ஆவரங்கால் இந்து சம்பியன்

யாழ்ப்பாணம், ஏப். 22

கரவெட்டி கிழக்கு வளர்மதி விளையாட்டுக் கழகம் மின்னொளியில் நடத்திய கரபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் 'ஓவர் கேம்' ஆட்டத்தில் நவஜீவன் வி.கவும் 'செற் அப் கேம்' ஆட்டத்தில் ஆவரங்கால் இந்து இளைஞர் வி.கவும் வெற்றிக்கிண்ணம் சுவீகரித்தன.

கரவெட்டி கிழக்கு அ.த.க. பாடசாலையில் இடம்பெற்ற ஆட்டத்தில் முதல் ஆட்டத்தில் நவஜீவன் வி.கவும் சிவகுமாரன் வி.கவும் மோதின. இதில் நவஜீவன் வெற்றி பெற்று சம்பியனானது.

மற்றைய ஆட்டத்தில் ஆவரங்கால் மத்தி வி.கவும் ஆவரங்கால் இந்து இளைஞர் வி.கவும் மோதியதில் ஆவரங்கால் இந்து இளைஞர் வி.க. வெற்றிபெற்றுச் சம்பியனானது.

இந்த ஆட்டங்களுடன் க.பொ.த. (சா/த) பரீட்சை 2010 இல் சித்திபெற்ற மாணவர் கௌரவிப்பு, பல்கலைக்கழகத்துக்கு தெரிவாகிய மாணவர் கௌரவிப்பு, கழகத்தின் தேசிய வீராங்கனை கௌரவிப்பு, பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வு, பட்டிமன்ற நிகழ்வு ஆகியனவும் இடம்பெற்றன.

இந்த நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராகப் பொது வைத்திய நிபுணர் வைத்திய கலாநிதி கி.சிவராமன், சிறப்பு விருந்தினராக நெல்லியடி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி காங்கா, கௌரவ விருந்தினர்களாக விளையாட்டு உத்தியோகத்தர் இ.அநுராகாந்தன், கிராம அலுவலர் க.பிரேந்திரா, அதிபர் கு.கண்ணதாசன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

(ஐ)

# தென்மராட்சிப் பிரதேசப் போட்டிகள்; மட்டுவில் வளர்மதி சாதனை படைத்தது

கைதடி, ஏப். 22

தென்மராட்சிப் பிரதேச செயலகத்தினால் அதன் எல்லைக்குட்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையே நடத்தப்பட்ட போட்டிகளில் மட்டுவில் வளர்மதி விளையாட்டுக் கழகம் போட்டிகள் பலவற்றில் முதலிடத்தைப் பெற்று சாதனை படைத்துள்ளது.

இந்தப் போட்டிகளில் பெண்கள் அணியினர் தாம் சளைத்தவர்கள் அல்லர் என்பது போல் ஆண் வீரர்களைவிடப் பல போட்டிகளில் முதலிடத்தைப் பெற்றுள்ளனர்.

மட்டுவில் வளர்மதி விளையாட்டுக் கழகம் பங்கு பற்றிய போட்டிகளில் வெற்றியீட்டிய போட்டிகளின் விவரம் வருமாறு:-

முதலிடம் - பெண்களுக்கான உதைபந்தாட்டம், பெண்களுக்கான கிரிக்கெட், ஆண்களுக்கான கிரிக்கெட், ஆண்களுக்கான எல்லே, பெண்களுக்கான எல்லே, பெண்களுக்கான கபடி,

பெண்களுக்கான கரபந்தாட்டம் - இரண்டாமிடம், பெண்களுக்கான 1500 மீற்றர் ஓட்டம் - மூன்றாமிடம், பெண்களுக்கான 100 மீற்றர் - முதலாமிடம், 4x100 மீற்றர் அஞ்சல் ஓட்டம் - இரண்டாமிடம், 4x400 மீற்றர் அஞ்சல் ஓட்டம் - இரண்டாமிடம், ஈட்டியெறிதல் - முதலாமிடம், மூன்றாமிடம்.



பெண்களுக்கான குண்டு எறிதல் - முதலாமிடம், பெண்களுக்கான முப்பாய்ச்சல் - முதலாமிடம், பெண்களுக்கான நீளம் பாய்தல் - இரண்டாமிடம், பெண்களுக்கான தட்டு எறிதல் - முதலாமிடம்.

ஆண்களுக்கான 100 மீற்றர் ஓட்டம் - முதலாமிடம், இரண்டாமிடம், மூன்றாமிடம், ஆண்களுக்கான 200 மீற்றர் ஓட்டம் - இரண்டாமிடம், மூன்றாமிடம், ஆண்களுக்கான 400 மீற்றர் ஓட்டம் - இரண்டாமிடம், ஆண்களுக்கான 800 மீற்றர் ஓட்டம் - இரண்டாமிடம், ஆண்களுக்கான 1500 மீற்றர் ஓட்டம் - இரண்டாமிடம், ஆண்களுக்கான 5000 மீற்றர் ஓட்டம் - முதலாமிடம், ஆண்களுக்கான 10000 மீற்றர் ஓட்டம் - முதலாமிடம்.

ஆண்களுக்கான 4x100 அஞ்சல் ஓட்டம் - முதலாமிடம், ஆண்களுக்கான 4x400 அஞ்சல் ஓட்டம் - முதலாமிடம், ஆண்களுக்கான முப்பாய்ச்சல் - முதலாமிடம், இரண்டாமிடம், ஆண்களுக்கான நீளம் பாய்தல் - முதலாமிடம், இரண்டாமிடம், ஆண்களுக்கான உயரம் பாய்தல் - முதலாமிடம்.

பிரதேச செயலகத்தினால் வருடாந்தம் நடத்தப்பட்டுவரும் இந்த விளையாட்டுப் போட்டியில் மட்டுவில் வளர்மதி விளையாட்டுக் கழகம் கடந்த எட்டு வருடங்களாகத் தொடர்ந்து முதலிடத் தைத்தக்க வைத்து வருகிறது. (ம-288)

# இறுதியாட்டம்

யாழ்ப்பாணம், ஏப். 22

கொக்குவில் மத்திய சனசமூக விளையாட்டுக் கழகம் 2010 ஆம் ஆண்டு நடத்திய கிரிக்கெட் சுற்றுப்போட்டித் தொடரின் இறுதியாட்டம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து யாழ்.பல்கலைக்கழக அணி மோதவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வைத்திய கலாநிதி ஆர்.விமலனும், சிறப்பு விருந்தினராக கொக்குவில் இந்துக்கல்லூரியின் முன்னாள் விளையாட்டுத்துறைப் பொறுப்பாசிரியர் எஸ்.உமாசுதனும் கலந்து கொள்ளவுள்ளனர். (ஐ-23)

# இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், ஏப். 22

யாழ். சென்றல் விளையாட்டுக் கழகத்தினால் வீ.டி. ஜெயரட்ணசிங்கம் வெற்றிக் கிண்ணத்திற்காக நடத்தும் 50 பந்து பரிமாற்றங்களைக் கொண்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் இன்றும், நாளையும் யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளன.

இந்த ஆட்டங்களில் பங்கு கொள்ளவுள்ள அணிகளின் விவரங்கள் வருமாறு:

* இன்று - அரியாலை சென்றல் வி.க., எதிர் வல்வெட்டித்துறை ஈகிள் வி.க.
* நாளை - தெல்லிப்பழை யூனியன் வி.க., எதிர் கலட்டி நியூஸ்ரார் வி.க. (ஐ-23)

# தெல்லிப்பழையில் புத்தாண்டு விழா

யாழ்ப்பாணம், ஏப். 22

தெல்லிப்பழைப் பிரதேச செயலகமும் தெல்லிப்பழை பொலிஸாரும் இணைந்து நடத்தும் புதுவருடக் கொண்டாட்டம் இன்றும் நாளையும் தெல்லிப்பழையில் இடம்பெறவுள்ளது.

இன்று காலை 8.30 மணியளவில் கோலம்போடுதல், மாலை கட்டுதல் போட்டிகள் பிரதேச செயலக மண்டபத்தில் இடம்பெறவுள்ளன.

நாளை சனிக்கிழமை பாரம்பரிய விளையாட்டு நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன. (ஐ-23)

# தென்மராட்சி வலயப் பாடசாலைகளின் மெய்வன்மைப் போட்டிகளின் முடிவுகள்

யாழ்ப்பாணம், ஏப். 22

தென்மராட்சிக் கல்வி வலயப் பாடசாலைகளுக்கு இடையிலான வலயமட்ட மெய்வன்மைப் போட்டியில் வெற்றியீட்டியவர்களின் விவரங்கள் தொடர்ந்து வெளிவருகின்றன.

முடிவுகள் வருமாறு:-

**19 வயதுப் பிரிவு - ஆண்கள்**

100 மீற்றர் ஓட்டம் - ம.ரசீகான் - சந்திரபுர ஸ்கந்தவரோதய ம.வி., வி.டினோஜன் - சாவகச்சேரி இந்துக் கல்லூரி, ஆ.சஜீவன் - சாவகச்சேரி இந்துக் கல்லூரி.

200 மீற்றர் ஓட்டம் - சு.ரெனிஸ்ரன் - சாவகச்சேரி இந்துக் கல்லூரி, ந.வினோதன் - சாவகச்சேரி இந்துக் கல்லூரி, இ.சுவின்சன் - மட்டுவில் சந்திரமௌலீச வித்தி.

400 மீற்றர் ஓட்டம் - க.ரெனிஸ்ரன் - சாவகச்சேரி இந்துக் கல்லூரி, ந.வினோதன் - சாவகச்சேரி இந்துக் கல்லூரி, நா.நதீசன் - கைதடி முத்துக்குமாரசாமி வித்தி.

800 மீற்றர் ஓட்டம் - சு.ரனிஸ்ரன் - சாவகச்சேரி இந்துக் கல்லூரி, கா.சுகாசன் - மீசாலை வீரசிங்கம் ம.வி., சி.சிறிகாந் - சந்திரபுர ஸ்கந்தவரோதய ம.வி.

1500 மீற்றர் ஓட்டம் - கு.தனோஜன் - உசன் இராமநாதன் ம.வி., து.நேசராஜ் - சாவகச்சேரி இந்துக் கல்லூரி, சி.சிறிகாந் - சந்திரபுர ஸ்கந்தவரோதய ம.வி.

5000 மீற்றர் ஓட்டம் - கா.[illegible]ரன் - சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி, த.பிருந்தாபன் - சாவகச்சேரி இந்துக் கல்லூரி, ஆர்.சந்திரமோகன் - வரணி ம.வி.

110 மீற்றர் தடை தாண்டல் - எஸ்.கலைஎழிலன் - கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி., ரி.மயூரராஜ் - சாவகச்சேரி இந்துக் கல்லூரி, அ.மைக்கல்ராஜ் - மிருசுவில் அ.த.க. பாடசாலை.

400 மீற்றர் தடைதாண்டல் - ம.ரஜீகரன் - சந்திரபுர ஸ்கந்தவரோதய ம.வி., இ.பசின்ராஜ் - நாவற்குழி ம.வி., த.சிந்துஜன் - கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி.

நீளம்பாய்தல் - த.நிரோஜன் - மிருசுவில் அ.த.க. பாடசாலை, வ.சுதர்சன் - மீசாலை வீரசிங்கம் ம.வி., [illegible] - சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி.

உயரம் பாய்தல் - த.நிரோஜன் - மிருசுவில் அ.த.க. பாடசாலை, கா.சுதேசன் - மீசாலை வீரசிங்கம் ம.வி., ப.சஜீவன் - சாவகச்சேரி இந்துக் கல்லூரி.

முப்பாய்சல் - ம.ரஜீகரன் - சந்திரபுர ஸ்கந்தவரோதய ம.வி., த.நிரோஜன் - மிருசுவில் அ.த.க. பாடசாலை, நா.நிதர்சன் - சாவகச்சேரி இந்துக் கல்லூரி.

கோல் ஊன்றிப் பாய்தல் - ச.வேணுகானன் - சாவகச்சேரி இந்துக் கல்லூரி, பி.சைனேஸ் - வரணி ம.வி., அ.ஆதவன் - உசன் இராமநாதன் ம.வி.,

குண்டு போடுதல் - ஆ.சஜீபன் - சாவகச்சேரி இந்துக் கல்லூரி, சி.கலைஎழிலன் - கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி., பே.அனோஜன் - கைதடி முத்துக்குமாரசாமி வித்தி.

தட்டு எறிதல் - ஆ.சஜீபன் - சாவகச்சேரி இந்துக் கல்லூரி, பே.அனோஜன் - கைதடி முத்துக் குமாரசாமி வித்தி, நா.விமல் - மிருசுவில் அ.த.க. பாடசாலை,

ஈட்டியெறிதல் - அ.மைக்கல்ராஜ் - மிருசுவில் அ.த.க. பாடசாலை, ச.திலக்சன் - நாவற்குழி ம.வி., செ.உஷாந்தன் - வரணி ம.வி.,

4x100 மீற்றல் அஞ்சல் ஓட்டம் - சாவகச்சேரி இந்துக் கல்லூரி, சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி, சந்திரபுர ஸ்கந்தவரோதய ம.வி.,

4x400 மீற்றர் அஞ்சல் ஓட்டம் - சாவகச்சேரி இந்துக் கல்லூரி, சந்திரபுர ஸ்கந்தவரோதய ம.வி., சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி. (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பும் நன்றி நவிலலும்

வேலணை வடக்கு, பள்ளம்புலத்தைப் பிறப்பிடமாகவும், இல.30, சீனியர் லேன், கலட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட

### ஆறுமுகம் சண்முகநாதன்

கடந்த 25.03.2011 அன்று இறைவனடி சேர்ந்த எமது குடும்பத் தெய்வத்தின் மரணச் செய்தி கேட்டவுடன் நேரில் வந்து பல வழிகளிலும் உதவிகள் புரிந்து இறுதிச் சடங்கில் கலந்துகொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் தொலைபேசி, அஞ்சலிப் பதாகைகள் மூலம் தங்கள் அனுதாபத்தைப் பகிர்ந்துகொண்ட அனைத்து அன்பு உள்ளங்களுக்கும் எங்கள் இதயம் கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அத்துடன் எமது குடும்பத் தெய்வத்தின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (23.04.2011) சனிக்கிழமை கீரிமலை தீர்த்தக்கரையிலும் நாளை மறுதினம் (24.04.2011) ஞாயிற்றுக் கிழமை அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் தொடர்ந்து மதியபோசன நிகழ்வும் அவரது இல்லத்தில் நடைபெற இருப்பதால் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இல. 30, சீனியர் லேன்,
கலட்டி, யாழ்ப்பாணம்.

(இந்த அழைப்பினை அனைவரும் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.)

குடும்பத்தினர்.


## குடா நாட்டில் சனி, ஞாயிறில் மின் தடை

யாழ்ப்பாணம், ஏப்.22

உயர் மின்மார்க்கக் கட்டமைப்பு, பராமரிப்பு வேலைகள் காரணமாக நாளை சனிக்கிழமை குறிப்பிட்ட இடங்களில் மின்தடை ஏற்படும் என்று இலங்கை மின்சார சபையின் யாழ். பிரதேச மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

நாளை சனிக்கிழமை காலை 8 மணியளவில் இருந்து மாலை 5 மணி வரை மின் வெட்டு இடம்பெறவுள்ளது.

உரும்பிராய், கோண்டாவில், மருத்துவபீடப் பிரதேசம், திருநெல்வேலிப் பிரதேசம், பட்டணப் பகுதி நீங்கலாக யாழ். மாநகரசபைப் பகுதி ஆகிய இடங்களில் மின் தடைப்பட்டிருக்கும். அத்துடன் கரந்தன், நீர்வேலி, சிறுப்பிட்டி, கோப்பாய், இருபாலை, கல்வியங்காடு, நல்லூர், அரியாலை, தென்மராட்சிப் பிரதேசத்திலும் மின் தடை இடம்பெறும்.

நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணி வரை கொட்டடி, நாவாந்துறை, மீனாட்சிபுரம், காக்கைதீவு ஆகிய இடங்களில் மின் தடைப்படும் என்று மேலும் கூறப்பட்டுள்ளது. (ம)

## இறுவட்டு வெளியீடு

வடமராட்சி, ஏப்.22

நெல்லை விஜயனின் கானங்கள் வரிசையில் '' அன்புள்ள மான் விழியே'' இறுவெட்டு வெளியீட்டு விழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பி.ப. 4 மணிக்கு நெல்லியடி முருகமூர்த்தி கோயில் திருமண மண்டபத்தில் பண்டிதர் பொன். சுகந்தன் தலைமையில் நடைபெறவுள்ளது. (ஒ-236)

## கொடிகாமத்தில் பயணி மயங்கி விழுந்து மரணம்

தென்மராட்சி, ஏப்.22

15 வருடங்களாக திருகோணமலையில் தங்கியிருந்து விட்டு வடமராட்சியில் உள்ள தனது சொந்த வீட்டைப் பார்வையிட மகனுடன் வந்தவர் கொடிகாமத்தில் பஸ்ஸிலிருந்து இறங்கும் போது மயங்கி வீழுந்து பின்னர் மரணமானார்

இந்தச் சம்பவம் நேற்று இடம்பெற்றது.

அல்வாய் வடக்கைச் சேர்ந்த சுப்பிரமணியம் வல்லிபுரம் (வயது-79) என்பவரே மரணமானவர் ஆவார்.

பஸ்ஸிலிருந்து இறங்கி சாவகச்சேரி வைத்தியசாலைக்குக் கொண்டு வரும் வழியில் மரணமானதாகத் தெரிவிக்கப்பட்டது.

இவரது சடலம் சாவகச்சேரி வைத்தியசாலை சவச்சாலையில் வைக்கப்பட்டுள்ளது. (ஒ-207)


UNIVERSITY OF JAFFNA, SRI LANKA
**Faculty of Medicine**

**Date of Commencement of Para Clinical Lectures for 32nd Batch**

The Para Clinical Lectures for the 32nd (2009) Batch of students will commence on 25th April 2011 as announced earlier.

21.04.2011 (C/577775) **Registrar.**

## பாராட்டுகின்றோம்



ஆசிய உதைபந்தாட்ட சம்மேளனத்தினால் கொழும்பில் நடத்தப்பட்ட 7ஆவது "B" தர உதைபந்தாட்ட பயிற்றுநர் பரீட்சையில் சித்தியடைந்த எமது கல்வி நிலையத்தின் நிர்வாகியும் தமிழ்ப் பாட ஆசிரியரும், புனித ஹென்றியரசர் கல்லூரி பழைய மாணவனுமாகிய பெரியவிளான் இளவாலையைச் சேர்ந்த **ம.டனிஸ்ரன் விஜயகுமார் (டனி)** அவர்களைப் பாராட்டி வாழ்த்துவதில் பெருமகிழ்வடைகின்றோம். தொடர்ந்து நடைபெறும் "A" தர பரீட்சையிலும் சித்தியடைய வேண்டுமென்று இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

ஆசிரியர்கள், மாணவர்கள்.
ஞானம்ஸ் கல்வி நிலையம், பண்டத்தரிப்பு.

பண்டத்தரிப்பு.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



அமரர்
**நாகமுத்து இளையதம்பி**
(ஓய்வுபெற்ற ஆசிரியர்)

தோற்றம்
1933.02.22

மறைவு
2011.03.23

2011.03.23 அன்று இறைபதம் அடைந்த எமது குடும்பத் தலைவர் நோயுற்றிருந்த வேளை, மருத்துவச் சேவையை வழங்கிய வைத்தியர்கள், தாதியர்களுக்கும் அன்னாரின் இழப்பில் கலந்து துயர் பகிர்ந்தோருக்கும் கண்ணீர் அஞ்சலி வெளியிட்டோருக்கும் மலர் வளையங்கள் சாத்தியோருக்கும் வெளிநாட்டிலிருந்து தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்தோருக்கும் மற்றும் அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் அனைவருக்கும் துயர் வேளையில் உணவு வழங்கியோருக்கும் எமது குடும்பத்தின் சார்பில் மனமுவந்த நன்றிகள்.

மேலும் இன்று (2011.04.22) அன்னாரின் மகளின் இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

இல.482, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

கிருபாநிதி சந்திரராஜா (மகள்)
விக்னேஸ்வரன் (மகன்)

(40)(3403)

## IMMEDIATE VACANCY

We need motivated and qualified personnel with experience to comply with our standards of Web development.
You need to develop and create web sites for our local & foreign clients

Web Developers :
PHP, MY SQL

Web Graphic Designers :
Adobe Dreamweaver, Photoshop, Flash

Please forward your CV for immediate consideration with the expected salary and the earliest starting dates. mail it to :
it@uthayan.com

The Manager
UTHAYAN IT ISLAND
359, Kasthuriyar Road, Jaffna
021 567 2222

## கண்ணீர்ப் பூக்கள்



எமது திணைக்களத்தில் கடமையாற்றும் செல்வி நிரஞ்சினி அவர்களின் அன்புத் தாய்

திருமதி
**தியாகராஜா ஆன் பிரான்சிஸ்கா புஸ்பரத்தினம்**

அவர்கள் 20.04.2011 அன்று இயற்கை எய்திவிட்டார். அவரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**பணிப்பாளர், உத்தியோகத்தர்கள், ஊழியர்கள்,**
பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, யாழ்ப்பாணம்.

## வீடு வாடகைக்கு உண்டு

யாழ்ப்பாணம், நல்லூர் வைமன் வீதியில் வீடு வாடகைக்கு உண்டு. 3 அறைகளுடன் கூடிய வீடு. உடனடியாகத் தொடர்பு கொள்ளவும்.
தொடர்பு:- 0783579334

## காணி விற்பனைக்கு

திருநெல்வேலி வடக்கு கலாசாலை வீதியில் கலாமன்றத்துக்கு அருகில் (2பரப்பு - 8.5 குளி) 635.70 சதுர மீற்றர் காணி விற்பனைக்குண்டு.

தொடர்பு: 0772984286

## பரிசுத்த ஆவிக்குச் செபம்

எனக்கு ஒளியாயிருந்து உன்னத நிலையை நான் அடைய வழிகாட்டும் பரிசுத்த ஆவியே! உமது திருநாமம் அர்ச்சிக்கப்படுவதாக, உமது அருட் கொடைகளின் மூலம் என்னுள்ளத்தைப் பக்குவப்படுத்தி எனக்குத் தீங்கு செய்தோரை நான் மன்னிக்க அருள் புரிபவரே என் வாழ்வின் எச்சந்தர்ப்பத்திலும் எனக்கு உற்ற துணையான உமக்கு இச்சிறிய செபத்தின் மூலம் நீர் செய்யும் சகலத்துக்கும் நன்றி கூறுகின்றேன். என் தேவைகள் எவ்வளவு முக்கியமாக இருப்பினும் எக்காரணம் கொண்டும் உம்மிலிருந்து விலகாமல் என்றும் உம்மில் நிலைத்திருப்பேனென உறுதி கூறுகிறேன். நானும் என்னால் நேசிக்கப்படும் அனைவரும் என்றென்றும் உமது முடிவில்லா [illegible]

நன்றி அடியாள்


## உத்தியோகபூர்வ முடிவுகள் - சுபிரி வாசனா சம்பத

சீட்டிழுப்பு இலக்கம் 602
திகதி 20/04/2011

சுப்பர் இலக்கம்: 15
வெல்லப்பட்ட இலக்கங்கள்: 07 27 53 56

| | கூட்டு | பரிசுத்தொகை | வெற்றிபெற்றவர் தொகை |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | சுப்பர் இலக்கம் மற்றும் நான்கு இலக்கங்கள் சரியாயின் | ரூ. 12,298,756.80 | - |
| முதலாம் பரிசு | நான்கு இலக்கங்கள் சரியா இருப்பின் | ரூ. 1,000,000.00 | 01 |
| இரண்டாம் பரிசு | சுப்பர் இலக்கம் மற்றும் 3 இலக்கங்கள் சரியா இருப்பின் | ரூ. 50,000.00 | 09 |
| மூன்றாம் பரிசு | 3 இலக்கங்கள் சரியா இருப்பின் | ரூ. 2,000.00 | 231 |
| நான்காம் பரிசு | சுப்பர் இலக்கம் மற்றும் 2 இலக்கங்கள் சரியா இருப்பின் | ரூ. 1,000.00 | 423 |
| ஐந்தாம் பரிசு | 2 இலக்கங்கள் சரியா இருப்பின் | ரூ. 100.00 | 10777 |
| ஆறாம் பரிசு | சுப்பர் இலக்கம் மற்றும் 1 இலக்கம் சரியா இருப்பின் | ரூ. 40.00 | 6282 |
| ஏழாம் பரிசு | 1 இலக்கம் சரியா இருப்பின் | ரூ. 20.00 | 156559 |
| எட்டாவது பரிசு | சுப்பர் இலக்கம் சரியா இருப்பின் | ரூ. 20.00 | 25036 |

இவ்வாரம் வெல்லப்பட்டுள்ள பரிசுத்தொகை ரூ. 7,295,880.00

வெற்றி பெறும் டிக்கட்டுகள் சீட்டிழுப்பு திகதியில் இருந்து 6 மாதங்கள் மட்டுமே செல்லுப்படியாகும் ஐந்து இலட்சம் அல்லது அதற்குக்கூடிய தொகைக்கான பரிசு அரசாங்க வரிசட்டத்திட்டங்களுக்கு உட்பட்டது பரிசைப் பெறுவதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

அடுத்த சனிக்கிழமை சுப்பர் பரிசு 12,484,322.40

தேசிய லொத்தர் சபை
இணையத்தளம் - WWW.nlb.lk

## ஜாதிக சம்பத Jathika Sampatha

சீட்டிழுப்பு இலக்கம் - 116
திகதி - 20.04.2011
உத்தியோகபூர்வ முடிவுகள்

வெற்றியீட்டும் ஆங்கில எழுத்து: B
அதிர்ஷ்ட இலக்கம்: 10
வெற்றி இலக்கம்: 0 5 2 8 7

வலமிருந்து இடமாக பரிசு அமைப்பு

| பரிசு | எழுத்து | அதிர்ஷ்ட இலக்கம் | இலக்கங்கள் | தொகை | பரிசுகள் |
|---|---|---|---|---|---|
| சுப்பர் பரிசு | B | 10 | 0 5 2 8 7 | ரூ. 14,660,780.00 | - |
| 1 பரிசு | | 10 | 0 5 2 8 7 | ரூ. 2,000,000.00 | - |
| 2 பரிசு | | | 0 5 2 8 7 | ரூ. 100,000.00 | 03 |
| 3 பரிசு | | | 5 2 8 7 | ரூ. 10,000.00 | 24 |
| 4 பரிசு | | | 2 8 7 | ரூ. 1,000.00 | 261 |
| 5 பரிசு | | | 8 7 | ரூ. 50.00 | 2557 |
| 6 பரிசு | | | 7 | ரூ. 20.00 | 24502 |

இடமிருந்து வலமாக பரிசு அமைப்பு

| பரிசு | எழுத்து | அதிர்ஷ்ட இலக்கம் | இலக்கங்கள் | தொகை | பரிசுகள் |
|---|---|---|---|---|---|
| 7 பரிசு | | | 0 5 2 8 | ரூ. 1,000.00 | 24 |
| 8 பரிசு | | | 0 5 2 | ரூ. 100.00 | 252 |
| 9 பரிசு | | | 0 5 | ரூ. 50.00 | 2587 |
| 10 பரிசு | B | | | ரூ. 20.00 | 10130 |
| 11 பரிசு | B | 10 | | ரூ. 100.00 | 1158 |

இம்முறை வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை ரூ. 1,915,840.00

வெற்றிபெறும் டிக்கட்கள் சீட்டிழுப்புத் திகதியிலிருந்து 6 மாதங்களுக்கு மாத்திரமே செல்லுபடியாகும். ரூ5 இலட்சம் அல்லது அதற்குக் கூடிய பரிசுத் தொகைகள் அரச வரிகளுக்கு உட்படும். பரிசைப் பெற்றுக்கொள்வதற்கு, தேசிய அடையாள அட்டையைச் சமர்ப்பிப்பது கட்டாயமானது.

தேசிய லொத்தர் சபை
234/2, காலி வீதி, கொழும்பு 03.
தொலைபேசி: 2470662, 2470663 அவசர அழைப்பிற்கு: 2473360, 2433631
இணையத்தளம்: www.nlb.lk

அடுத்த சனிக்கிழமை சுப்பர் பரிசு
ரூ.15,055,567.00

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.நா. நிபுணர் குழுவின் அறிக்கை குறித்து இந்தியா தொடர்ந்தும் மௌனம் காப்பது ஏன்?

## கம்யூனிஸ்ட் கட்சி கேள்வி

புதுடில்லி, ஏப்.22

இலங்கை போர்க்குற்றம் புரிந்ததாக ஐக்கிய நாடுகள் சபையின் நிபுணர் குழு வெளியிட்டுள்ள அறிக்கை தொடர்பில் இந்தியா மௌனம் சாதிப்பது ஏன்? என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய செயலாளர் டி.ராஜா கேள்வி எழுப்பியுள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

இலங்கையில் விடுதலைப்புலி களுக்கு எதிரான இறுதிப் போரில் ஆயிரக்கணக்கான பொதுமக்கள் கொல்லப்பட்டனர் என்று ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் பான் கீ-மூனினால் நியமிக்கப்பட்ட நிபுணர் குழு பரிந்துரை செய்துள்ளது.

இந்த அறிக்கை அனைத்து பத்திரிகைகளிலும், தொலைக்காட்சிகளிலும் வெளியாகி உள்ளது. இவ்வாறு வெளியாகியும் அது பற்றி இந்தியா இன்னும் எந்தவித கருத்தும் தெரிவிக்காமல் மௌனம் கடைப்பிடிக்கிறது. இறுதிக்கட்டப் போரில் இலங்கையுடன் இந்தியா இணைந்து செயல்பட்டதே இதற்குக் காரணமாகும்.

இலங்கைக்கு ஆயுத பலம், பண பலத்தை அளித்தது இந்தியா. அதன் மூலம் இலங்கை அரசு அப்பாவி தமிழ் மக்களைக் கொன்றுகுவித்து போரில் வெற்றி பெற்றது. இதனால், இந்தியா இப்போது சர்வதேச அரங்கில் குற்றவாளி கூண்டில் நிற்கிறது. ஐ.நா. சபைக் குழு அறிக்கை மீது இந்தியா இதுவரை கருத்துத் தெரிவிக்காதது ஏன்?

விடுதலைப்புலிகளுக்கு எதிரான போரில் இலங்கைக்கு உதவிய இந்தியா, இப்போது தனது நிலையை வெளிப்படுத்தாதது ஏன்? இலங்கையில் 30 ஆண்டுகளாக நடந்த இந்த உள்நாட்டுப் போரில் இறுதிக் கட்டத்தில் ஆயிரக்கணக்கான பொதுமக்கள் கொல்லப்பட்டனர்.

விடுதலைப்புலிகளுக்கு எதிரான போரில் இந்தியாவின் ஆதரவில்லாமல் வெற்றி பெற்றிருக்க முடியாது என்று இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஒப்புக்கொண்டிருந்தார்.

இலங்கையில் இவ்வளவு அதிக அளவில் பொதுமக்கள் இறப்பதற்கு இலங்கை அரசும், விடுதலைப்புலிகளுமே காரணம் என்றும், அங்கு மனித உரிமைகள் மீறப்பட்டுள்ளன எனவும் ஐக்கிய நாடுகள் நிபுணர் குழு அறிக்கை அளித்துள்ளது. இதில் இந்தியாவின் நிலை என்ன என்ற கேள்வி இப்போது எழுந்துள்ளது - என்றார் ராஜா. (ஒ-10)

## அறிக்கை வெளியாகும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெளியிடப்படும் என்று ஐ.நாவின் பிரதிப் பேச்சாளர் பர்கான் ஹக் தெரிவித்தார்.

நாளாந்த செய்தியாளர் சந்திப்பில் பேச்சாளர் இலங்கையின் கோரிக்கையை நிராகரித்தார். முன்னதாக நேற்றுப் பகல் செய்தியாளர்களைச் சந்தித்த வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ், நிபுணர் குழுவின் அறிக்கை இலங்கையின் நல்லிணக்க நடவடிக்கைகளைக் குழப்பும் என்பதால் அதனை வெளியிடக் கூடாது என்றார்.

''எவ்வளவு விரைவாக முடியுமோ அவ்வளவு விரைவாக அறிக்கையை வெளியிடுவதே எங்கள் நோக்கம். அறிக்கை தொடர்பான இலங்கை அரசின் கருத்துக்களையும் சேர்த்தே வெளியிடுவதற்கு நாங்கள் இன்னும் விரும்புகிறோம்'' என்றார் ஹக்.

அறிக்கையை வெளியிடுவது நல்லிணக்கத்தைப் பாதிக்கும் என்று இலங்கை வெளிவிவகார அமைச்சர் கூறி இருக்கிறாரே என்று கேட்கப்பட்டதற்கு, அந்த அறிக்கை எந்தவித திருத்தங்களும் இன்றி முழுமையாக வெளியிடப்படும் என்று தெரிவித்தார்.

''எமது உறுப்பு நாடு ஒன்று பதிலளிப்பதற்கான உரிமையை இதயசுத்தியுடன் ஏற்றுக் கொண்டே நாம் பணியாற்றுகிறோம்'' என்றார் அவர்.

இன்று அல்லது நாளை அறிக்கை வெளியாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (உ)

## செல்வா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தினத்தில் இடம்பெறும் இந்த நிகழ்வில் இரா.சம்பந்தன், எம்.ஏ.சுமந்திரன், மாவை சேனாதிராஜா ஆகியோர் கலந்துகொள்கின்றனர்.

அதிகாரப்பகிர்வு மூலம் நிலையான அரசியல் தீர்வு என்ற தலைப்பில் சுமந்திரன் எம்.பி.நினைவுப் பேருரை நிகழ்த்துவார்.

## விகாரை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பட்ட பயனாளி ஒருவர் தனது காணியில் விகாரை ஒன்றை அமைப்பதற்கு இணக்கம் தெரிவித்ததை அடுத்து அவரைப் பாராட்டி உடனடி ஊக்குவிப்புப் பணமாக 10 ஆயிரம் ரூபாவைத் தான் வழங்கினார் என்று ரவிக்குமார் மேலும் கூறினார்.

உடுவில் கிழக்கைச் சேர்ந்த சற்குணானந்தன் அதிஷ்டராஜா என்பரே முதலில் விகாரை கட்டுவதற்கு இணக்கம் தெரிவித்து 10 ஆயிரம் ரூபா ஊக்கத் தொகையைப் பெற்றுக் கொண்டுள்ளார். (உ-9)

## அறிக்கையை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெளியே கசிந்திருக்கலாம் என்றும் ஐ.நா. செயலகம் இலங்கை அரசிடம் தெரிவித்துள்ளது. ஏனெனில் எல்லா விடயங்களும் அங்கிருந்துதான் வெளியே கசிகின்றன'' என்றார் ஐ.நா.வுக்கான இலங்கையின் வதிவிடப் பிரதிநிதி பாலித ஹோகன்ன.

ஆனால், அவரது குற்றச்சாட்டை ஐ.நா. மறுத்துள்ளது. ''எமது செயலகத்தில் இருந்து அறிக்கை வெளியே கசிந்தது என்று நம்புவதற்கு எந்தவொரு காரணமும் இல்லை'' என்று தெரிவித்தார் ஐ.நா. பிரதிப் பேச்சாளர் பர்கான் ஹக்.

நிபுணர் குழுவின் அறிக்கை அடிப்படையற்றது, நம்பத்தகுந்த ஆதாரங்களைக் கொண்டு தயாரிக்கப்பட்டதல்ல என்று அரசு முன்னர் தெரிவித்திருந்தது. ஆனால், ''அறிக்கை அடிப்படையற்றது; நம்பகத்தன்மையற்றது என்று இலகுவாக மறுத்துவிடமுடியாது. ஏன் அது நம்பகத்தன்மையற்றது என்பதை நாம் உலகுக்குச் சொல்ல வேண்டும்'' என்றார் பாலித.

கடந்த திங்கட்கிழமை மாலை, ஐ.நா. அரசியல் துறைச் செயலாளர் லியன் பாஸ்கோ, பாதுகாப்புச் சபைக் கூட்டத்தில் நிபுணர் குழு அறிக்கையை பற்றிய சாராம்சத்தை எடுதுரைத்தது குறித்துத் தாம் கவலைப்படப் போவதில்லை என்றும் பாலித கூறினார்.

பாதுகாப்புச் சபைக்கு இலங்கை விவகாரத்தைக் கொண்டு வருவதற்கு எந்தவொரு திட்டமிட்ட நடவடிக்கைகளும் இல்லை என்று தெரிவித்த அவர், ''எங்களுக்கு வந்த நண்பர்கள் இருக்கிறார்கள்'' என்றும் கூறினார். (உ)

## ஐ.நா. அறிக்கையை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதிகாரம் இந்தக் குழுவுக்கு அறவே கிடையாது. நல்லிணக்கத்தைக் குழப்ப வேண்டாம்.

எமது நாட்டில் பயங்கரவாதம் ஒழிக்கப்பட்டு நாம் இன நல்லிணக்கத்தையும் பொருளாதார அபிவிருத்தியையும் நோக்கி பயணித்துக் கொண்டிருக்கின்றோம்.

நல்லிணக்க ஆணைக்குழு ஒன்று எம்மால் உருவாக்கப்பட்டு அது நாடு பூராகவும் விசாரணை நடத்தி அதன் பணியை நிறைவுசெய்யும் கட்டத்தில் உள்ளது. மே மாதம் நடுவில் அந்த ஆணைக் குழுவின் அறிக்கை முன்வைக்கப்படும்.

இந்த ஆணைக்குழுவின் செயற்பாடு வெற்றிகரமானதாகும். சர்வதேச தலைவர்கள் இதை ஏற்றுக்கொண்டுள்ளனர். இந்த ஆணைக்குழுவின் அறிக்கையின் படி நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்ப நடவடிக்கை எடுக்கப்படும்.

**அறிக்கையை வெளியிட வேண்டாம்**

ஐ.நா. நிபுணர்கள் குழுவின் அறிக்கையை வெளியிடப்போவதாக ஐ.நா. செயலாளர் நாயகத்தின் பதில் பிரதி பேச்சாளர் தெரிவித்துள்ளார். அவ்வாறு வெளியிடுவதை நாம் கடுமையாக எதிர்க்கின்றோம். அதை வெளியிட வேண்டாம் என்று நாம் ஐக்கிய நாடுகள் சபையைக் கேட்டுக்கொள்கிறோம். அவ்வாறு வெளியிட்டால் அது எமது நாட்டுக்கு ஆபத்தை ஏற்படுத்தும்.

இந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்கள் ஐ.நா. சபை முறைமைக்கு உட்பட்டதா என்று பான் கீ-மூன் மீள் பரிசீலனை செய்யவேண்டும். இலங்கையில் உள்ள இராஜதந்திரிகளைச் சந்தித்து நான் இந்த வேண்டுகோளை விடுத்தேன். இலங்கையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்காக எடுக்கப்படும் எந்தவொரு நடவடிக்கைக்கும் பாதிப்பை ஏற்படுத்த வேண்டாம் என்று நாம் கேட்டுக்கொள்கிறோம்.

**சிபாரிசுகளை நடைமுறைப்படுத்த வேண்டாம்**

இந்த அறிக்கையில் அடங்கியுள்ள எந்தவொரு சிபாரிசையும் நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கவேண்டாம் என்று நாம் ஐ.நாவிடம் கேட்கின்றோம்.

எமது நாட்டின் நீதித்துறை உள்ளிட்ட எந்த விடயத்திலும் தலையிட எவருக்கும் உரிமையில்லை, அதற்கு எவரையும் அனுமதிக்க முடியாது.

ஐ.நா. நிபுணர் குழுவில் அடங்கியுள்ள விடயங்களை நடைமுறைப்படுத்தவோ அவற்றை வெளியிடவோ ஐ.நா. சபை நடவடிக்கை எடுக்கக் கூடாது. இந்த நிபுணர் குழுவை எம்மால் ஒருபோதும் ஏற்கமுடியாது - என்றார்.

## 'சனல் 4' வெளியிட்ட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சுமத்துவதற்காக மேற்கொள்ளப்பட்ட பொய்ப்பிரசாரமே இதுவாகும். - இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் போர்க்குற்றம் தொடர்பான வீடியோ செய்தித் தொகுப்பில் நேற்றுமுன்தினம் சனல்-4இல் கூறப்பட்டிருப்பவை வருமாறு:-

யுத்தம் முடிவடைந்த பின்னரும், இந்தப் பகுதிக்கு வெளியார் மற்றும் ஊடகவியலாளர்கள் செல்ல முடியாது. அந்தப் பிரதேசம் முழுமையான இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ளது. அங்குள்ள மக்கள் அச்சத்துடனும் பீதியுடனும் வாழ்ந்து வருகின்றார்கள். இந்தப் பிரதேசத்துக்கு எமது சுதந்திரமான தொடர்பாளர்கள் தமது உயிரைப் பணயம்வைத்து இந்தக் காட்சிகளைப் படமாக்கியுள்ளார்கள்.

ஆயிரக்கணக்கான மக்கள் இன்னும் முகாம்களில் வாழ்வதையும், அங்கு திட்டமிட்ட வகையில் மக்கள் அடக்குமுறைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளமையையும், பெண்கள் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாக்கப்பட்டுள்ளதையும் உறுதிப்படுத்துவதற்கான ஆதாரங்களை இந்தக் காட்சிகள் காட்டுகின்றன.

இறுதி யுத்தம் நடைபெற்ற மாதங்களில் ஆயிரக்கணக்கான மக்கள் கொல் லப்பட்டுள்ளார்கள். பலர் இடம் பெயர்ந்துள்ளார்கள்.

இறுதி யுத்தத்தின் போது யுத்தப் பிரதேசத்தில் இருந்த மக்களில் ஒருலட்சம்பேருக்கு என்ன நடந்தது என்பது காட்டப்படவில்லை. இதற்கு ஆதாரமிக்க சான்றுகள் கிடைத்துள்ளன.

கடந்த 2008 ஆம் ஆண்டு இலங்கையின் வடக்கில் யுத்தப் பிரதேசத்தில் 4லட்சத்து 30 ஆயிரம் பொதுமக்கள் வசித்தனர் என அரச புள்ளிவிவரத் தகவல்கள் தெரிவித்துள்ளன.

இறுதிச் சண்டையின் கடைசி சில மாதங்களில் யுத்தப் பிரதேசத்தில் இடம்பெற்றிருந்த மோசமான நிலைமைகளின் போது 2 லட்சத்து 90 ஆயிரம் பொதுமக்கள் மட்டுமே இடம் பெயர்ந்து அரசால் அமைக்கப்பட்டிருந்த முகாம்களை நாடிச் சென்றனர் என ஐ.நா. அறிக்கைகள் தெரிவிக்கின்றன. மிகுதியான ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட பொதுமக்கள் எங்கு சென்றார்கள், என்னவானார்கள் என்பது தெரியவில்லை.

இப்போதும் அங்கு பலர், காணாமல் போயுள்ள தமது குடும்பத்தினரைத் தேடிக்கொண்டிருக்கின்றார்கள். 2006 ஆம் ஆண்டு தனது மகனை இராணுவத்தினர் சுட்டுக்கொன்றதைக் கண்ட டாக்டர் மனோகரன் உள்ளிட்ட பலர் தமக்கு நேர்ந்துள்ள அவலங்களுக்கு நீதிகேட்டுப் போராடிக்கொண்டிருக்கின்றார்கள்.

-இப்படித் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-சி)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு
26 ★ 10 ★ 1955



இறப்பு
22 ★ 04 ★ 2010

அமரர் **இரத்தினம் சந்திரகுமாரன்**

திதி: பூர்வபக்க நவமி
11.05.2011

ஆண்டு ஒன்று கடந்திட்டபோதிலும்
உங்கள் நீங்கா நினைவுகளுடன் வாழும்

குடும்பத்தினர்.

கரந்தன் சந்தி,
நீர்வேலி.

தகவல்:
ச.கணேஸ் (அத்தான்)

(சி/577780) (34)



## மரண அறிவித்தல்

### இராசையா இராஜசேகரம் (பரராஜசிங்கம்)

கொக்குவில் மேற்கு, மஞ்சவனப்பதியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இராசையா இராஜசேகரம் நேற்று இரவு (21.04.2011) வியாழக்கிழமை காலமானார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (22.04.2011) வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்,

தகவல்:
இ.சிவமயூரன்
(மகன்-யாழ்.நீதிமன்றம்)

(சி/577786)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன் தொடர்புகளுக்கு
ஆசிரியபீடம் : 021-2229933
தொலைநகல்: 021-2229944
செய்தி/படங்கள்:
021-5679933
021-5679944
விளம்பரம்: 021-5671111
விநியோகம்: 021-5677222
மின் அஞ்சல்
செய்தி : news@uthayan.com
கருத்து: admin@uthayan.com
விளம்பரம்:
advt@uthayan.com
இணைய முகவரி:
www.uthayan.com




அனைத்து மாவட்டங்களிலும் மழை பெய்வதற்கான சாத்தியம் உள்ளது.

# ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களில் கூட்டமைப்பினர் பங்குபற்றுவது ஏன்?

யாழ்ப்பாணம்,ஏப்.22

யாழ்ப்பாண மாவட்டத்தின் அபிவிருத்திக்கென தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமது பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத்திட்ட நிதியிலிருந்து 35 மில்லியன் ரூபாவை ஒதுக்கியுள்ளனர். அந்த நிதி உரியமுறையில் அபிவிருத்திக்காகப் பயன்படுத்தப்பட்டுள்ளதா என்பதை அறிந்துகொள்வதற்கும் ஆராய்வதற்குமே பிரதேச அபிவிருத்திக் குழுக் கூட்டங்களில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலந்து கொள்கின்றனர்.

நேற்று நடைபெற்ற வலி. கிழக்குப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் இவ்வாறு தெரிவித்தார்.

பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் இந்தக் கூட்டம் இடம்பெற்றது. இதில் பங்குபற்றிய ஒருவர், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு



நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்தக் கூட்டங்களில் பங்குபற்றுவதற்கான காரணம் என்ன எனக் கேட்டார்.

இந்த கேள்விக்குப் பதிலளித்துப் பேசுகையிலேயே நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் விளக்கமளிக்கும் போது தெரிவித்தவை வருமாறு:-

கடந்த நாடாளுமன்ற தேர்தலின் போது யாழ். மாவட்டத்திலிருந்து மக்களின் பிரதிநிதிகளாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்தே அதிக பிரதிநிதிகள் நாடாளுமன்றத்துக்கு தெரிவாகியிருந்தனர்.

அந்த அடிப்படையில் யாழ்ப்பாண மாவட்டத்தின் அபிவிருத்தி குறித்து அதிகம் அக்கறைகாட்ட வேண்டிய தேவை தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு உள்ளது. இந்த மாவட்டத்தின் அபிவிருத்திக்காக எமது நாடாளுமன்ற உறுப்பினர்களால் 35 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது. அந்த நிதி உரியமுறையில் அபிவிருத்திக்காக பயன்படுத்தப்படுகிறதா என்பது குறித்து அறிய வேண்டிய தேவை, ஆராய வேண்டிய தேவை எமக்குள்ளது.

கட்சி ரீதியாக எமக்குள் வேறுபாடுகள் உள்ளன. ஆனால் நாம் மக்களின் அபிவிருத்திக்காக இணைந்து செயற்பட வேண்டியுள்ளது. அதற்கு மேலாக மக்களின் உரிமைகளுக்காகவும் நாம் செயற்பட வேண்டியவர்களாக இருக்கி றோம் என்பதை புரிந்து கொள்ள வேண்டும் என்றார்.

அரசு கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின் தலைமையில் இந்தக் கூட்டம் இடம்பெறுவது வழமையாகும். இந்தக் கூட்டத்தில் அவர் சமுகமளித்த நிலையில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையிலேயே இந்தக் கூட்டம் இடம்பெற்றது. (ஒ-14)

# கட்டாக்காலி நாய்களுக்கும் தனி முகாம் டக்ளஸ் நடத்திய கூட்டத்தில் ஆலோசனை

யாழ்ப்பாணம், ஏப்.22

கட்டாக்காலி நாய்களுக்கும் முகாம் அமைக்கலாமே - இப்படி ஓர் அபூர்வமான ஆலோசனை நேற்று கோப்பாய் பிரதேச செயலாளர் அலுவலகத்தில் இடம்பெற்ற பிரதேச அபிவிருத்திக் கூட்டத்தில் முன்வைக்கப்பட்டது.

வலிகாமம் கிழக்கு - கோப்பாய் பிரதேச செயலாளர் பிரிவில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்பான அபிவிருத்திக் கூட்டம் நேற்று கோப்பாய் பிரதேச செயலகத்தில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் நடைபெற்றது.

பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்டுவரும் அபிவிருத்தித் திட்டங்கள் அவை தொடர்பான ஆலோசனைகள் மற்றும் குறைபாடுகள் தொடர்பாக ஒவ்வொன்றாக ஆராயப்பட்டன.

விவசாய நடவடிக்கைகள் தொடர்பாக கவனம் செலுத்தப்பட்ட போது ஒரு விவசாயி கட்டாக்காலி நாய்கள் தமது விவசாயப் பயிர்களை அழித்து நாசமாக்குவதாகவும் அதனைத் தடுப்பதற்கு ஏதும் வழி இல்லையா? என்றார்.

இதனைக் கேட்ட அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, பொது சுகாதாரப் பரிசோதகரை நோக்கி இந்த நாய்களை அழித்துக் கொல்ல என்ன நடவடிக்கை எடுக்கலாம்? என்று கேட்டார்.

கட்டாக்காலி நாய்களை அழிக்க முன்னர் பிரதேச சபையினர் ஒருவகை மருந்து வழங்கப்பட்டது. அது மிகவும் விலைகூடியது என்று சுகாதாரப் பரிசோதகர் கூறும்போதே இடைமறித்த அமைச்சர் பொது மக்களுக்குத் தீங்கு விளைவிக்கும் எதையும் விட்டு வைக்கக் கூடாது. மஹிந்த சிந்தனையின் ஒரு கட்டமே அபிவிருத்தி நடவடிக்கைகள். விவசாயிகளுக்கு தீங்கு விளைவிக்கும் நாய்களை ஒழித்தே ஆக வேண்டும் என்றார்.

அமைச்சரின் இந்தக் கட்டளையைக் கேட்டு மிரண்டு போன பொது சுகாதாரப் பரிசோதகர் '' ஐயா! எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் நாய்களைக் கொல்லக் கூடாது'' என்றார்.

அப்போது இப் பிரச்சினையை முன்வைத்த விவசாயி ''ஐயா! நாய்களைக் கொல்லக் கூடாது என்றால் கட்டாக்காலி நாய்களுக்கு ஒரு தனி முகாம் அமைக்கலாமே என்றார். இதனால் சபை யில் இருந்த அனைவரும் 'கொல்'லெனச் சிரித்து விட்டனர்.

அதனைச் சமாளிக்கும் வகையில் ஆமாம், அதுவும் நல்ல ஆலோசனை தான் பார்ப்போம் என்று கூறிவிட்டு பொது சுகாதாரப் பரிசோதகரைப் பார்த்து நான் அமைச்சர் கூறுகின்றேன். நீர் நான் கூறுவது போல் செய்யும். கட்டாக்காலி நாய்களை அழிப்பது தொடர்பாக விரிவான அறிக்கை ஒன்றை தயாரித்து சமர்ப்பியுங்கள். மேல் மட்டத்தில் நான் நடவடிக்கை எடுக்கின்றேன் என்று சற்றுக் கடுமையான தொனியில் கூறினார். பொது சுகாதாரப் பரிசோதகர் சரி ஐயா! என்று கூறிவிட்டு ஆசனத்தில் அமர்ந்து கொண்டார்.

# கிராம்புவில் வயலிலிருந்து மாயமான 'நெற்சூடு'

தென்மராட்சி, ஏப்.22

வயலில் வைக்கப்பட்டிருந்த நெற்குவியல் (சூடு) இரவோடு இரவாக மாயமாக மறைந்தது.

இந்தச் சம்பவம் அண்மையில் சாவகச்சேரி, கிராம்புவில் வயலில் இடம்பெற்றுள்ளது.

வயலில் அறுவடை செய்யப்பட்ட நெற்கதிர்கள் சூடு வைக்கப்பட்டிருந்ததாகவும் அருகில் உள்ள வயல்களில் சிறுதானியப் பயிர்கள் பயிரிடப்பட்டதால் அதன் அறுவடை முடிந்ததும் சூடு மிதிப்பதற்காக வைக்கப்பட்டிருந்த நெற்குவியலே திருட்டுப்போயுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

சாவகச்சேரி முத்துமாரி அம்பாள் ஆலய பிரதம குருவுக்குச் சொந்தமான வயலில் வைக்கப்பட்டிருந்த நெற்குவியலே மாயமாகி விட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-207)

# முள்ளிவாய்க்காலுக்கு 'அல்ஜசீரா' செய்தியாளர்

போர் முடிவுற்று 2 வருடங்களின் பின்னர் முள்ளிவாய்க்காலுக்குச் சென்றுள்ளார் அல்ஜசீரா செய்தியாளர்.

வெளிநாட்டு செய்தியாளர் ஒருவர் முள்ளிவாய்க்காலுக்குச் சென்று படம் எடுத்துள்ளது இதுவே முதல் தடவையாகும்.

மக்களைச் சந்தித்த செய்தியாளர், தம்மால் சுதந்திரமாக மக்களோடு பேசமுடியவில்லை என்பதனைத் தெரிவித்துள்ளார். சில மக்கள் புலிகள் தமது பிள்ளைகளை பலவந்தமாகப் பிடித்துச் சென்றனர் என்று கூறுகின்றனர். புலிகளிடம் இருந்து கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள் அடங்கிய கொள்கலன்களையும் (கொன்டேனர்களையும்) இராணுவம் காட்டியுள்ளது.

25 நிமிடம் நடைபெற்ற இந்த தொலைக்காட்சி நிகழ்ச்சியில் பல விடயங்கள் அல்ஜசீராவால் அலசி ஆரயப்பட்டுள்ளன. குறிப்பாக வைத்தியசாலை தாக்குதலுக்கு உள்ளான விடயம் குறித்த உண்மைச் செய்திகள் வெளியாகியுள்ளன. (ஒ-10)

# நிகழ்வுகள்

### தொழிற்சங்கக் கூட்டம்

அகில இலங்கை உப தபாலதிபர்களின் தொழிற்சங்க வடமாகாணக் கிளையின் விசேட கூட்டம் நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ்ப்பாணம் பிரதம தபாலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

தொழிற்சங்கத் தலைவர் எஸ்.சுப்பிரமணியம் தலைமையில் நடைபெறவுள்ள இந்தக் கூட்டத்துக்கு தலைமைச்சங்கத்தின் பிரதான தலைவர் விமலரத்ன தஹநாயக்கவும் முக்கிய பிரமுகர்களும் கலந்துகொள்ளவுள்ளனர். (ற)

### இன்றைய கருத்தரங்கு

'ஆறுதல்' நிறுவனத்தினால் நடத்தப்படும் கருத்தரங்கு இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ். இந்துக்கல்லூரியின் குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கருத்தரங்கின் போது இலங்கையில் மரபுரிமைகளைப் பாதுகாத்தல் என்னும் தலைப்பில் யாழ். பல்கலைக்கழகத்தின் நுண்கலைத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் பாக்கியநாதன் அகிலன் கருத்துரையை வழங்குவார். (ற)

### அபிவிருத்திக் கூட்டம்

பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையின் அபிவிருத்திச் சங்கக் கூட்டம் எதிர்வரும் 30ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் அதிபர் திருமதி செ.சுந்தரேசன் தலைமையில் நடைபெறவுள்ளது. (ற-313)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய உதவியுடன் தொழிற்பயிற்சி நிலையகள்

தொழிற் பயிற்சி நிலையங்களினூடாக இலங்கையின் பொருளாதாரத்தை முன்னேற்ற இந்தியா உதவும் என்று இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகள் அசோக் கே. காந்தா நேற்று வியாழக்கிழமை தெரிவித்தார்.

ஏற்கனவே பல உதவிகளை இலங்கைக்கு மேற்கொண்டுள்ள இந்தியா தொடர்ந்தும் உதவும் என அவர் குறிப்பிட்டார்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணத்திலுள்ள தொழிற் பயிற்சி நிலையங்களை அபிவிருத்தி செய்வதற்கு இந்திய அரசாங்கம் வழங்கவுள்ள 2375 மில்லியன் ரூபா நிதியுதவி தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடும் நிகழ்வில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இந்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் இளைஞர் விவகார மற்றும் திறன் அபிவிருத்தி அமைச்சர் டலஸ் அலகபெரும மற்றும் இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகள் அசோக் கே. காந்தா ஆகியோர் கைச்சாத்திட்டனர்.

2,670 மில்லியன் ரூபா தேவையான இத்திட்டத்துக்கு இந்திய அரசாங்கம் 2375 மில்லியன் ரூபா நிதியுதவி வழங்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.



இந்த திட்டத்தின் ஊடாக யாழ்ப்பாணம் மற்றும் வவுனியா ஆகிய மாவட்டங்களில் இரண்டு தொழிற்பயிற்சி நிலையங்கள் அமைக்கப்படவுள்ளதுடன் மட்டக்களப்பு, நுவரெலியா மற்றும் திருகோணமலை மாவட்டங்களிலுள்ள தொழிற் பயிற்சி நிலையங்களுக்கு தேவையான வசதிகள் செய்துகொடுக்கப்படவுள்ளன.

இதற்கிணங்க குறித்த தொழிற் பயிற்சி நிலையங்களில் புதிய கற்கைநெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளதுடன் கணினி அறைகள் மற்றும் வாகன வசதிகள் போன்ற பல்வேறு வசதிகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

இந்தத் திட்டத்தின் முதற் கட்டமாக 325 மில்லியன் ரூபா வந்தாறுமூலை மற்றும் ஒந்தாச்சிமடம் தொழிற்பயிற்சி நிலையங்களுக்கு ஒதுக்கப்படவுள்ளன. (ஒ-10) *(தமிழ்வின்)*

# வன்னியில் கிளஸ்டர் குண்டுகள் 'அல்ஜசீரா' ஒளிப்படக் காட்சிகள்

'அல்ஜசீரா' தொலைக்காட்சியில் மக்களும் சக்தியும் எனும் தலைப்புடைய நிகழ்ச்சியில் இலங்கையின் போர்க்குற்றங்கள், மக்கள் படுகொலைகள், மீள் குடியேற்றங்கள் மறுவாழ்வுகள் என பல முனைகளில் தமிழ் மக்களின் அவலங்களை படமாக்கியிருந்தனர். அதில் இலங்கை போர்க்குற்றம் பற்றியே அதிகம் பேசப்பட்டிருந்தது.

ஆனால் சிங்கள இராணுவ அதிகாரிகள் மற்றும் சிங்கள அரசியல்வாதிகள் அனைவரும் தாம் தமிழ் மக்கள் எவரையும் கொல்லவில்லை என்றே அதில் தெரிவித்திருந்தார்கள். இதில் கருத்து தெரிவித்த கோத்தபாய, புலிகளே போர் குற்றம் புரிந்ததாகத் தெரிவித்து, பதட்டமாகப் பேசி கடுமையான கருத்துகளை முன்வைத்திருந்தார்.

போர்குற்றம் போன்ற காணொளிகளை நீங்களே தயாரிக்க முடியுமே என, 'அல்ஜசீரா' நிருபரை நக்கலடித்தார் கோத்தபாய. வன்னி சென்ற அல்ஜசீரா நிருபர் சுயமாக யாரையும் பேட்டி காணலாம் என்ற வாக்குறுது கொடுக்கப்பட்டிருந்ததாகச் சொல்லப்பட்டபோதும், அங்கே சென்றபின்னர், இராணுவம் அனுப்பிய நபர்களையே பேட்டி எடுக்க அனுமதிக்கப்பட்டதாக அல்ஜசீரா தெரிவித்தது. இருப்பினும் இரகசியமாக அல்ஜசீரா, தமிழர் ஒருவரை தொடர்பு கொண்டு கருத்துக்களை கேட்டு அறிந்தது அப்பொழுதே அவர் சிங்கள இராணும் கிளஸ்டர் குண்டுகளை பாவித்ததாக சாட்சியம் வழங்கினார்.

மேலும் மருத்துவமனைகள் மீது தாம் தாக்குதலே நடத்தவில்லையென அழுத்தந்திருத்தமாக கோத்தபாய் கூறும்போது, கன்னத்தில் அறைந்தாற்போல் மருத்துவமனைகள் மீது தாக்குதல் நடத்திய காட்சிளை அல்ஜசீரா வெளியிட்டது பாராட்டத்தக்க விடயமாகும்.

(தமிழ்வின்) (ஒ-10)

## நாடுகடந்த தமிழீழ அரசும் நிபுணர்குழுவை நியமிக்க ஏற்பாடு

இலங்கை அரசினால் தமிழர் தாயகத்தில் மேற்கொள்ளப்பட்ட போர்க் குற்றங்கள் மற்றும் மானிடத்துக்கு எதிரான நடவடிக்கைகள் குறித்ததான ஐ.நா. நிபுணர் குழுவின் அறிக்கையை முன்நிறுத்தி நாடுகடந்த தமிழீழ அரசினால் நிபுணர் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

இன்னும் சில நாள்களில் உத்தியோகபூர்வமாக ஐ.நா. வினால் வெளிப்படுத்தப்படவுள்ள ஐ.நா. நிபுணர் குழுவின் அறிக்கையை முன்நிறுத்தி, தமிழர்களின் அடுத்தகட்ட நடவடிக்கை குறித்து ஆய்வுசெய்வதோடு, செயற்றிட்ட வரைவொன்றை நாடுகடந்த தமிழீழ அரசிடம் இந்த நிபுணர் குழு கையளிக்குமென போர்க்குற்றங்கள், மானுடத்துக்கெதிரான குற்றங்கள், இனப்படுகொலை தொடர்பிலான அமைச்சர் டிலக்சன் மொறிஸ் தெரிவித்துள்ளார்.

ஐ.நா. வின் நிபுணர்குழுவின் அறிக்கைக்கு எதிராகப் பதிலறிக்கையைத் தயார்படுத்துவதற்கு நிபுணர் குழுவொன்றை இலங்கை அரசாங்கம் நியமித்துள்ள நிலையில், அதற்கு சமாந்தரமாக நாடுகடந்த தமிழீழ அரசும் நிபுணர் குழுவொன்றை நியமித்திருப்பதாக அமைச்சர் டிலக்சன் மொறிஸ் நாதம் ஊடக சேவைக்கு தெரிவித்தார். (ஒ-10)

## இணையச் செய்திகள்

### இந்தியா வழங்கிய 500 உழவு இயந்திரங்கள் வட பகுதிக்கு!

வட மாகாணத்தில் உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்களுக்காக இந்திய அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட 600 மில்லியன் ரூபா பெறுமதியான 500 உழவு இயந்திரங்கள் வட மாகாணத்தின் பல இடங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என்று கொழும்பிலுள்ள இந்திய தூதரகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

நான்கு இணைப்பு கருவிகளுடன் 500 உழவு இயந்திரங்கள் வட மாகாணத்திலுள்ள கமநல சேவை நிலையங்களுக்கு விநியோகிக்கப்பட்டன என்பதை இலங்கை அரசு உறுதி செய்ததாக குறித்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன் முதற்கட்டமாக 52 உழவு இயந்திரங்கள் கடந்த நவம்பர் முதலாம் திகதி பொருளாதார அபவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷவிடம் இலங்கைக்கான இந்தியத் தூதுவர் அசோக் கே. காந்தா உத்தியோகபூர்வமாகக் கையளித்தார்.

இதேவேளை குறித்த உழவு இயந்திரம் வட மாகாணத்தில் உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்களுக்கு வழங்கப்படாமல் வேறு தரப்பினருக்கு வழங்கப்படுவதாக தமிழ்த் தேசிய கூட்டமைப்பு - நாடாளுமன்றத்தில் குற்றஞ்சாட்டியமை குறிப்பிடத்தக்கது.

(ஒ-10) *(தமிழ்வின்)*

# நாடு கடந்த தமிழீழப் பிரதிநிதிகளுடன் கூட்டமைப்பு எம்.பிக்கள் பேச்சு

## கருணா அம்மான் கூறுகிறார்



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள், நாடு கடந்த தமிழீழ அரசுப் பிரதிநிதி களை சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளதாக மீள்குடி யேற்ற பிரதி அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் தெரிவித்துள்ளார்.

தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வுத் திட்டம் முன்வைப்பது தொடர்பில் அண்மையில் சிங்கப்பூரில் நடைபெற்ற கருத்தரங்கின் போது கூட்டமைப்பு உறுப்பினர்கள் இவ்வாறு நாடு கடந்த தமிழீழ அரசுப் பிரதிநிதிகளைச் சந்தித்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஐந்து நாடாளுமன்ற உறுப்பினர்கள் இவ்வாறு குறித்த பிரதிநிதிகளைச் சந்தித்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இதற்கான ஆதாரங்கள் தமக்குக் கிடைக்கப்பெற்றுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார். தமிழர் பிரச்சினைக்கு தீர்வு காணும் கருத்தரங்கு என்ற போர்வையில் கூட்டமைப்பு உறுப்பினர்கள் இந்த சந்திப்பை நடத்தியுள்ளதாக அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு வரும் சந்தர்ப்பத்தில் கூட்டமைப்பு உறுப்பினர்கள் இவ்வாறு வெளி நாடொன்றில் நாடு கடந்த தமிழீழ அரசு உறுப்பினர்களைச் சந்தித்தமை ஆபத்தானது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நாட்டில் மீண்டும் பிரச்சினையை ஏற்படுத்திக் கொள்ள தமிழ் மக்களுக்கு எவ்வித அவசியமும் கிடையாது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

(ஒ-10) *(தமிழ்வின்)*

# எயிட்ஸ் நோய் தினமும் ஒருவருக்கு!

இலங்கையில், தினமும் குறைந்தபட்சம் ஒருவராவது எயிட்ஸ் நோய்க்கு ஆளாகி வருகிறார் என்று அரசு நேற்று அறிவித்தது.

இலங்கையில் 300 இற்கும் மேற்பட்ட எயிட்ஸ் நோயாளிகள் இருந்திருக்கின்றனர் எனச் சந்தேகிக்கப்படுகிறது. இதுவரையில் 1250 எயிட்ஸ் நோயாளிகள் கண்டறியப்பட்டுள்ளனர் என சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன கூறினார்.

நாட்டில் எச்.ஐ.வி. பரவல் வீதம் குறைவாகவே காணப்படுகிறது. எனினும் நாம் வினைத்திறனாணக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ளாவிட்டால் எதிர்காலத்தில் பெரும் பிரச்சினைகளை எதிர்கொள்ள வேண்டியிருக்கும் என அமைச்சர் கூறினார்.

எச்.ஐ.வி. எயிட்ஸ் பாதிப்புக்குள்ளானவர்களில் 61 சதவீதமானவர்கள் மேல் மாகாணத்தில் உள்ளதாக அமைச்சர் கூறினார்.

பெண் பாலியல் தொழிலாளர்கள், ஓரினச் சேர்க்கையில் ஈடுபடும் ஆண்கள், ஹெரோயின் பாவனையாளர்கள், கடற்கரைச் சிறுவர்கள், சிறைக் கைதிகள் ஆகியோரே அதிக பாதிப்புக்குள்ளாவதாக தேசிய பால்வினை எயிட்ஸ் நோய்க் கட்டுப்பாட்டுத் திட்டத்தின் பணிப்பாளர் டாக்டர் நிமல் எதிரிசிங்க கூறினார். நாட்டில் 40,000 பாலியல் தொழிலாளர்கள், 35,000 ஓரினச் சேர்க்கையில் ஈடுபடும் ஆண்கள், 40,000 ஹெரோயின் பாவனையாளர்கள் உள்ளனர்.



மேற்படி ஹெரோயின் பாவனையாளர்களில் ஒரு சதவீதமானோர் ஊசி மூலம் போதைப் பொருளை ஏற்றிக்கொள்கின்றனர். இவர்களுக்கு படிப்பினையூட்டி, எச்.ஐ.வி. சிகிச்சை அளித்தால் இந்நோய் பரவாமல் தடுக்கலாம் என டாக்டர் எதிரிசிங்க மேலும் கூறினார்.

(ஒ-10) *(தமிழ்மிரர்)*

## இராணுவத் தளபதியின் திகில் அனுபவ நூல்

இலங்கை இராணுவச் சேவையில் 30 வருட அனுபவத்தைக் கொண்டுள்ள, கிழக்குப் பிராந்தியக் கட்டளைத் தளபதி யாக இருந்த மேஜர் ஜெனரல் பொனிபஸ் பெரேரா, ஹவி பிமக ஹட கெஸ்ம (யுத்த களத்தின் நாடித்துடிப்பு) என்ற பெயரில் ஒரு நூலை எழுதியுள்ளார்.

இவர் 20 வருடங்கள் யுத்த சேவையில் இருந்தவர். தனது இராணுவ அனுபவங்களையே இவர் நூல் வடிவில் வெளியிட்டுள்ளார். படையினரின் உள்ளுணர்வுகளை வெளிப்படுத்தும் வகையில் அமைந்துள்ள இந்த நூலில், இரண்டாவது ஈழப்போரில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட சகல இராணுவ நடவடிக்கைகள் பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளது.

(ஒ-10) *(தமிழ்சி.என்.என்.)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய மீனவர் சித்திரவதை செய்யப்பட்டே கொலையுண்டார் என்பதற்கு சாத்தியக்கூறுகள்

## உடற்கூற்றுப் பரிசோதனை அறிக்கையில் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப்.22

நெடுந்தீவுக்கும் நயினாதீவுக்கும் இடைப்பட்ட கடற் பரப்பில் கடற்படையினரால் கடந்த 6ஆம் திகதி சடலமாக மீட்கப்பட்ட இந்தய மீனவர் சித்திரவதை செய்யப்பட்டு கொலை செய்யப்பட்டமைக்கான சாத்தியக் கூறுகள் காணப்படுகின்றன என்று அவரது பிரேத பரிசோதனை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இராமநாதபுரம் தங்கச்சி மடத்தைச் சேர்ந்த சேவியர் விக்ரர்ஸ் (வயது-41) என்ற இந்திய மீனவரின் உடற்கூற்றுப் பரிசோதனை அறிக்கையில் மேற்கண்டவாறு விவரிக்கப்பட்டுள்ளது.

நீதிமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ள அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளமை வருமாறு:-

தமிழகத்தில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு வருகைதந்த இறந்தவரின் சகோதரரான சேவியர் லூமன் சடலத்தை அடையாளம் காட்டியிருந்தார்.

இறந்தவரின் சேட், உள்ளாடை, இடுப்பு நாடா ஆகியவற்றையும் அவரது வலது பெருவிரலின் மேலாகக் காணப்பட்ட குருசு அடையாளம் போன்றவற்றைக்கொண்டு சகோதரர் சடலத்தை இனம் காட்டினார்.

தண்ணீரில் மூழ்கி இறந்தமைக்கான அறிகுறிகள் உடற்கூற்றுப் பரிசோதனையில் தெரிந்தபோதும் உடலின் மேற்பரப்பில் காணப்பட்ட காயங்கள் (முதுகில் காணப்பட்ட அடி காயங்கள்) மற்றும் இடது காலின் பெரு விரலில் செலுத்தப்பட்ட ஆணி வகையான இரும்பு (பெரும்பாலும் குண்டூசி) சேட்டின் பின்புறம் காணப்பட்ட கிழியல் அதில் காணப்பட்ட கறுப்பு நிறமான கை அடையாளங்கள் என்பன இவரை யாரேனும் அடித்த பின்னர் சுயநினைவு அற்ற நிலையில் கடலில் தூக்கி வீசியிருக்கலாம் என்று தோன்றுவதாலேயே உடற்பாகங்கள் சில பகுப்பாய்வுக்கு கொழும்புக்கு அனுப்பப்பட்டுள்ளன. அந்தப் பெறுபேறு உடற்கூற்றுப் பரிசோதனை முடிவுக்கு உதவியாக இருக்கும் என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

நீரில் மூழ்கி மூச்சுத் திணறலால் மரணமாகியிருப்பதாகவும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதேவேளை சடலத்தை இனங்காட் டுவதற்காக வந்த அவரது சகோதரர் மரண விசாரணையின் போது;

கடந்த ஏப்ரல் 2ஆம் திகதி மு.ப. 11 மணியளவில் 300 - 400 படகுகள் தொழிலுக்குப் புறப்பட்டுச் சென்றன. இவற்றுடன் சேர்ந்து எனது அண்ணனின் படகும் சென்றிருந்தது.

இரவு 10.45 மணியளவில் எனது அண்ணனின் படகு தனியாக தொழிலில் ஈடுபட்டுக்கொண்டிருந்தது. அப்போது இலங்கைக் கடற்படையின் பெரிய படகு அண்ணனின் படகுக்கு அருகில் மிக நீண்ட நேரமாக இருந்ததை அவதானித்தேன் என்று தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஒ-15)

## புலிகளுக்குளரிபொருள் விநியோகம்: சந்தேகத்தின் பேரில் ஒருவர்

கொழும்பு, ஏப்.22

யுத்த காலத்தில் விடுதலைப் புலிகளுக்கு எரிபொருள் விநியோகித்த குற்றச்சாட்டில் மன்னார் பஸ் டிப்போ முகாமையாளர் கைது செய்யப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இரகசியப் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலொன்றையடுத்து மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் பின்பே மேற்படி பஸ் டிப்போ முகாமையாளர் புதுக் குடியிருப்புப் பிரதேசத்தில் வைத்துக் கைது செய்யப்பட்டுள்ளார்.

இரகசியப் பொலிஸாரால் மன்னார் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்ட அவர் நீதிமன்ற அனுமதியுடன் விசேட புலன் விசாரணைகளுக்கென கொழும்புக்கு அழைத்து வரப்பட்டுள்ளார்.

## எரிபொருள் தாங்கிகள் இறக்குமதி

நாடு முழுவதும் எரிபொருளை விநியோகிக்கும் செயற்பாடுகளுக்காக24 புதிய எரிபொருள் தாங்கிகளை இறக்குமதி செய்யவதற்கு ரயில்வே திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

## பகிடி விபரீதத்தில் முடிந்தது

# நண்பர் இழுத்து விழுத்திய இளைஞர் யாழ். ஆஸ்பத்திரியில் நேற்றுச் சாவு

யாழ்ப்பாணம்,ஏப்.22

தரையில் அமர்ந்திருந்து உரையாடிக் கொண்டிருந்த நண்பர்களில் ஒருவர் விளையாட்டாக இன்னொருவரின் காலைப்பிடித்து இழுத்தனால் பின்புறமாக விழுந்து முள்ளந் தண்டு பாதிக்கப்பட்ட நிலையில் யாழ். ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றுவந்தவர் நேற்று மரணமானார். உயிரிழந்தவர் வல்வெட்டித்துறை மதவடியைச் சேர்ந்த தி.கணேசமயூரன் (வயது-24) என்பவர் ஆவார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது:

ஆலயத்தில் அலங்கரிக்கப்பட்டிருந்த மாலைகளைக் கழற்றிய பின்னர் அங்கு இளைஞர்கள் சிலர் உரையாடிக் கொண்டிருந்தனர். அப்போது நண்பர்களில் ஒருவர் விளையாட்டாக இவரின் காலைப் பிடித்து இழுத்தார். அவ்வேளை அவர் பின்புறமாகச் சரிந்து விழுந்து மயங்கினார்.

உடனடியாக ஊரணி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்திய சாலைக்கு மாற்றப்பட்டார்.

பின்புறமாக சரிந்து விழுந்ததால் பிரஸ்தாப இளைஞருக்கு முள்ளந்தண்டில் பாதிப்பு ஏற்பட்டது. அதைத் தொடர்ந்து உடல் உறுப்புக்கள் இயங்காத நிலையிலேயே வைத்தியசாலையின் அதிதீவிர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப் பட்டார். இந்த நிலையில் சிகிச்சைகள் பயனளிக்காததால் நேற்று போதனா வைத்திய சாலையில் உயிரிழந்தார். இவரின் முள்ளந்தண்டு பின்புறத்தில் முறிவு ஏற்பட்டுள்ளதாகவும் அவரது மூளையம், முன்னாண் என்பன அதிர்ச் சிக்குள்ளாக்கப் பட்டிருப்பதால் மரணம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ஒ-15-311-4)

# புகைமூட்டத்தால் நேற்று பதற்றம்

தென்மராட்சி, ஏப்.22

கொடிகாமம் சந்தைப் பகுதியில் நேற்றுக் காலை 6 மணிக்குத் திடீரென புகை மூட்டம் எழுந்ததால் சந்தைக்கு வந்திருந்த பொதுமக்களும் வியாபாரிகளும் பதற்றமுற்றனர்.

டெங்கு ஒழிப்புத் திட்டத்தின் ஓர் அங்கமாக சுகாதாரப் பகுதியினர் நேற்று கொடிகாமம் நகர்ப்பகுதி மற்றும் பொதுச் சந்தைகயில் டெங்கு ஒழிப்புக்கான புகையூட்டல் மேற்கொள்ள ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

கொடிகாமம் வர்த்தக சங்கமும் கொடிகாகமம் பொலிஸார் ஆகியோரின் அனுசரணையுடன் சாவகச்சேரி சுகாதாரத் திணைக்களத்தினர் மக்கள் சந்தையில் கூடுவதற்கு முன்னர் காலை வேளையிலேயே புகையூட்டலை மேற்கொண்ட சமயமே மக்கள் பதற்றப்பட்டு அங்கிருந்து ஓடியதாகத் தெரிவிக்கப்பட்டது.

புகையூட்டல் பணியே இடம் பெறுவதாகப் பின்னர் அறிந்துகொண்ட மக்கள் சந்தைக்கு மீண்டும் வந்தனர். (ஒ-207)

**தேவை**

தனியார் கல்லூரிநிறுவனத்துக்கு அலுவலக உதவியாளர்(Cleark) தேவை.
யாழ். மாநகரசபைக்கு உட்பட்ட கணினி அறிவுடையவர்கள் விரும்பத்தக்கது.
(c/577782)தொடர்பு:0774598440

THE SCIENCE CORNER
CLOCK TOWER LANE - JAFFNA
PHYSICS
HEAT
சனி,ஞாயிறு 6.30-7.30AM
ஆரம்பம்.23.04.2011 சனி
BY.அநபாயன்

**விற்பனையாகின்றன**

பட்டதாரிகளை ஆள்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சைக்குரிய புதிய விடயங்களை உள்ளடக்கிய நூல்கள் விற்பனையாகின்றன.
ஆல்சிலோன் டிஸ்ரிபியூட்டர்,
212, K.K.S.வீதி யாழ்ப்பாணம்.
T.P021 2225542 (c/577778)

LOGIC
A/L 2011
உண்மை விருட்ச முறை
விசேட வகுப்புகள்
Mon-8.00 -10.00Am
ஆரம்பம்:-25.04.2011(Mon)
8.00 Am
By:-P.கமல்தாசன்
NEC பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

வடமாகாண சபை
பட்டதாரி
ஆள்சேர்ப்பு
போட்டிப் பரீட்சை
வகுப்புகள்
ஆரம்பம்:
23.04.2011 சனி பி.ப. 3 மணி
(சனி முதல் வெள்ளி வரை 30 மணித்தியாலம்)
மேலதிக தொடர்பு:
0750469936
சீகேழ் கல்வி நிறுவனம்
கே.கே.எஸ்.வீதி,
இணுவில்.

**விசேட கருத்தரங்கு**

ஏப்ரல் 30ஆம் திகதி நடைபெறவுள்ள பட்டதாரிகளை ஆள் சேர்ப்பு செய்வதற்கான போட்டிப் பரீட்சை வழிகாட்டல் வகுப்பு.
பொது அறிவு நுண்ணறிவு
P உமாசங்கர் கமல்தாசன்
கட்டணம் 300/=
ஆரம்பம்:- 24.04.2011 (Sun-8.30-4.30Pm)
Note:- கையேடுகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால் பதிவுகளுக்கு முந்துங்கள்.
நாவலர் / பருத்தித்துறை வீதி. ஆனைப்பந்தி. யாழ்ப்பாணம்.

**வெளிவந்து விற்பனையாகிறது**

30.04.2011இல் நடைபெறவுள்ள பட்டதாரிகளை ஆள் சேர்ப்புச் செய்வதற்கான போட்டிப் பரீட்சை வழிகாட்டி நூல்கள்.
1) பரீட்சை வழிகாட்டி -
P. உமாசங்கர் - 450/=
2) பொது அறிவு-
P. உமாசங்கர் - 600/=
(நடைமுறை உலகின் அண்மைக்கால நிகழ்வுகள் யாவும் உள்வாங்கப்பட்ட 2011ம் ஆண்டுஏப்ரல் மாத வெளியீடு)
பூபாலசிங்கம் புத்தகசாலை
பஸ் நிலையம், யாழ்ப்பாணம். வேம்படிச் சந்தி, யாழ்ப்பாணம்.

**தமிழைப்போல ஆங்கிலம் பேச விரும்புகிறீர்களா?**

ஆசிரியர்கள், அலுவலர்கள், வங்கியாளர், பல்கலைக்கழக மற்றும் உயர்கல்வி மாணவர்கள், இளைஞர், யுவதிகளுக்கான
MyWay இன் இரண்டு மணிநேர இலவச ஆங்கில பயிற்சிநெறி
அமைப்புக்கள், பிரயோகங்கள் முழுமையாக கற்பிக்கப்படும்
காலம் : 22.04.2011 வெள்ளிக்கிழமை
பிரிவுகள் : காலை 8 – 10, 10 – 12 மாலை 3 – 5
ஏதாவதொரு பிரிவில் கலந்துகொள்ளலாம்
அனுமதி, கற்கை நூல், மற்றும் சான்றிதழ் இலவசம்
MyWay 182, Stanley Road, Jaffna
Opposite to Ceylinco Insurance
077 33 63 456, 021 2229505

**தொழிற்பயிற்சிகள்**

* Mobile Phone Repairing காலம்:-3 மாதம்
* Electronics
* Radio, T.V. DVD, Receiver மற்றும் இலத்திரனியல் பொருள்கள் திருத்துதல் பயிற்சியளிக்கப்படும். காலம்:-10 மாதம்
* ஏயர் கொண்டிசனிங்

சகல குளிர்சாதனங்கள் திருத்துதல் A/C சேவிஸ், பொருத்துதல் திருத்தம் செய்தல் பயிற்சியளிக்கப்படும். காலம்:-6 மாதம்
பயிற்சிகள் ஆரம்பம்:- 24.04.2011
சேர விரும்புவோர் நேரில் தொடர்புகொள்ளவும்.
JAFFNA TECHNICAL INSTITUTE
NO.45, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். T.P:- 0718561654.
கிளை NEW ASIAN CENTER NO.56/15B, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். T.P:- 0779254078.
வெளிமாவட்ட மாணவர்கள் தங்குவதற்கு வசதிகள் செய்து கொடுக்கப்படும். (577738)

**வேலை ஆள் தேவை**

பண்டத்தரிப்பில் இயங்கிவரும் ஸ்ருடியோ ஒன்றில் பணிபுரிவதற்கு கணினி வேலைகள் தெரிந்த பெண் பிள்ளைகள் தேவை.
(3407) தொடர்பு:0779785717

**வீடு வாடகைக்குத் தேவை**

சிறிய ஐயர் குடும்பம் ஒன்றுக்கு வீடு வாடகைக்குத் தேவை. (கொக்குவில், திருநெல்வேலி, கோண்டாவில், இருபாலை பகுதிகள் விரும்பத்தக்கது.)
தொடர்புகளுக்கு: 0776341552

**அனைவரும் கற்கக்கூடிய கற்கைநெறிக்கட்டணம் MCS ல்**

A/L ? Pass / Fail
CIMA-UK
Engineering-USA
BIT University of Colombo
Multimedia Adobe



நீங்களும் தகவல்தொழில்நுட்ப, வணிக துறையில் சாதனை படைக்கலாம்.
Government Scholarship.
Closing Date 23.04.2011
SMS your name & course to 772 395 895 & Get Schol.
USA, UK பல்கலைக்கழகங்களில் Master Degree
MCS Supported By UNDP/JRRP
புலமைப் பரிசிலுக்கும் மேலதிக விபரங்களுக்கும் நேரில்,
324, Palaly Road,Campus Junction,Jaffna
Free : BCS-UK, IELTS / TOEFL, CISCO-CCNA, Hardware, ICDL

**வீடு வாடகைக்கு**

நாவலர் வீதியில் சகல வசதியுடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு. அரச சார்பற்ற நிறுவனங்கள், கம்பனிகளுக்கு மட்டும் வழங்கப்படும்.
தொடர்பு: 0777 286050

வடமாகாண பட்டதாரிகளை ஆள்சேர்ப்பதற்கான போட்டிப் பரீட்சை விசேட கருத்தரங்கு
30.04.2011 சனிக்கிழமை நடைபெறும் பரீட்சைக்கானது
ஆரம்பம்: சனிக்கிழமை பி.ப. 1 மணி
சனி, ஞாயிறு கிழமைகளில் 1 மணிக்கு நடைபெறும்.
ஏனைய நேரங்கள் இந்த வகுப்பில் தீர்மானிக்கப்படும்
ஆசிரியர்: தவசேகர் | இடம்: DMI ஆரியகுளம் சந்தி அருகில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 22.04.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.